


# புரட்சித்தலைவரின் பொற்கால ஆட்சி சாதனைகள்

1977-87



சைதை சா. துரைசாமி







# புரட்சித்தலைவர் பொற்கால ஆட்சியின் சாதனைகள்


ஆசிரியர் :

**சைதை சா. துரைசாமி**



வெளியீடு :

**மனிதநேய அறக்கட்டளை**

ஒளி அச்சு :

**ஜெயம் ஸ்டுடியோ கணினி பிரிவு**

8122319027, 6379531301

வடிவமைப்பு :

**எஸ்.எஸ். பிரிண்ட்ஸ்**

9843534436

அச்சகம் :

**எஸ்.எம். பிரிண்ட்ஸ்**


8608811088

விலை :

**ரூ. 150.00**



# என்னை நன்றே எம்.ஜி.ஆர். படைத்தார்



இந்திய மக்களை இரண்டு விதமாக பிரிக்கலாம். ஒன்று, எம்.ஜி.ஆர். காலத்தில் வாழ்ந்தவர்கள். மற்றொன்று எம்.ஜி.ஆர். காலத்தில் இல்லாத வர்கள்!

எம்.ஜி.ஆர். காலத்தில் வாழ்ந்தவர்களையும் இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று அவரோடுநெருக்கமாக இருந்து அவரை சுவாசித்தவர்கள். மற்றொன்று தூரத்தில் இருந்து அவரை நேசித்தவர்கள்.

தூரத்தில் இருந்து அவரை நேசித்தவர்கள் கால சுழற்சியால் குறைந்து கொண்டே போகிறார்கள். நெருக்க மாக சுவாசித்தவர்களும் விரல் விட்டு எண்ணும் அளவு தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். வாழ்ந்த காலத்தில் பிறந்திராதவர்களுக்குக் கூட எம்.ஜி,ஆரைப் பற்றி எல்லாம் தெரியும். அவர் உருவாக்கிவிட்டுப் போன கட்சியின் ஆட்சிதான் தமிழகத்தில் தொடந்து நடந்தது. இன்னும் நடக்கிறது. எம்.ஜி.ஆர். மறைந்தாலும் அந்த மாமனிதரை இதயத்தில் சுமந்தே இன்னமும் வாழும் மனிதர்கள் அளித்த வாக்குச்சீட்டுளே அதற்குக் காரணம். எம்.ஜி.ஆர். என்ற மகாமந்திர சொல்லை உச்சரிக்காமல், அவர் தயாரித்த இரட்டைஇலை என்ற மந்திரத்தகட்டை பயன்படுத்தாமல் அ.இ.அ.தி.மு.க. அரியணை ஏறியதில்லை. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

புரட்சித்தலைவர் என்ற அந்தப்புனிதர் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

திரைத்துறையில் அவரது எழுச்சிமிக்கப் பாடல்கள், விழிப்புணர்வூட்டும் அவரது வசனங்கள், வன்மங்களை ஒழித்துக்கட்டும் காட்சிகள் இன்னும்கூட இந்த சமூக அமைப்பில் புரட்சி செய்துகொண்டுதான் இருக்கின்றன. எம்ஜி. ஆர். என்பவர் யார் என்பதை பின் வந்த இந்த மக்களுக்கும் சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றன.

அடுத்த தலைமுறை அதற்கடுத்த தலைமுறை என்று காலமாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழும்போதும் எம். ஜி. ஆரைப்பற்றி பின்வரும் சந்ததிகள் அறிந்து கொண்டும் தெரிந்துகொண்டும் இருக்க இன்னொரு நன்றிக்கடனும் செயல்வடிவம் பெற்று வருகிறது.

அதுதான், அவர் காலத்தில் அவரோடு நெருங்கி இருந்து அவரை சுவாசித்தவர்களின் கைமாறு அவர்களில்

வெகுசிலரே இன்று உயிரோடு இருக்கிறார்கள் என்றாலும் கூட, அவர்கள் எம்.ஜி.ஆருக்கு செய்யும் நன்றிக்கடன்கள் மூலமும், எம்.ஜி.ஆரின் பாசறையில் பயின்ற பண்புகள் மூலமாகவும் இந்த உலகில் எம்.ஜி.ஆர். என்ற மாபெரும் தலைவனின் மாண்புகளையும் மாபெரும் பண்புகளையும் ஏதாவது ஒரு வழியில், ஏதாவது ஒரு வகையில் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். எம்.ஜி.ஆருக்கு உண்மையான வாரிசுகள் அவர்கள்தான்.

இந்த வகையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15ந்தேதி, சென்னை பல்லாவரத்தில் அகில உலக எம்.ஜி.ஆர். பேரவை மாநாடு ஒன்றை தமிழக கவர்னர் அவர்கள் தலைமையில் வெகுசிறப்பாக நடத்தினோம். உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் ஏராளமானோர் வந்து கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, எம். ஜி. ஆரின் சாதனைகளையும் அவர் படைத்த சரித்திரங்களையும் நாடுமுழுவதும் பரப்பிக் கொண்டே இருக்க வேண்டும்; அதற்காக வருங்கால சந்ததிகள் அவரைப்பற்றி அனைத்தையும் அறிந்துகொள்ளும் வகையில் நிரந்தரமான ஒரு ஏற்பாட்டை செய்து வைக்கவேண்டும் என்பதாகும்.

என்னைப் பொருத்தவரையில். நான் நிறுவிய, என்னை தலைவராகக் கொண்டு இயங்கிவருகின்ற மனிதநேய அறக்கட்டளை மூலம் எம்.ஜி.ஆரின் புகழை தக்க வைக்கவும் எதிர்வரும் எல்லா காலங்களிலும் எல்லா தலைமுறை யினருக்கும் எட்டி வைக்கவும் என்னால் இயன்றதை செய்து கொண்டிருக்கிறேன்.

சென்னையில் உள்ள சென்னைப் பல்கலைகழகத்தில் எம்.ஜி.ஆர். இருக்கையை ரூ.25 இலட்சம் செலவில் அமைப்பதற்கான பணியை மனிதநேய அறக்கட்டளை செய்து முடித்தது.

கேரளமாநிலம் பாலக்காடு அருகே உள்ள வடவனூரில் எம். ஜி. ஆருக்கு சொந்தமான வீட்டை நினைவுச் சின்னமாக்கி, அங்கு ஒரு நூல்நிலையம் அமைக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். ஆட்சிகால சாதனைகளின் ஒளிப்பதிவுகளை திரையிட்டுப்பார்க்க அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்து. அவர் சம்பந்தப்பட்ட அரிய புகைப்படங்களின் கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது. திரைத்துறையைப் பொறுத்தவரை அவர் 1936 முதல் 1986 வரை நடித்து வெளியான 136 திரைப்படங்களை பார்வையிடும் நவீன வசதிகளையும் அமைத்து இருக்கின்றோம்

அவரது புகழ்பரப்பும் மற்றொரு பணியாக, அவர் ஆட்சிகால சாதனைகளை - அரும்பெரும் திட்டங்களை தொகுத்து புத்தகங்களாக வெளியிட்டு, அவற்றை அழியா ஆவணங்களாக உலகுள்ளவரையும் இந்த மண்ணில் உலாவிட ஒரு சிறப்பான ஏற்பாட்டையும் எமது மனிதநேய அறக்கட்டளை பெரும்சிரத்தையோடு மேற்கொண்டு வருகிறது. அதன் முதல்கட்ட வெளிப்பாடுதான் இந்த நூல்.

அ.தி.மு.க என்ற பேரியக்கத்தைத் தொடங்கிய பிறகு, அந்த இயக்கம் சந்தித்த முதல் பொதுத்தேர்தலிலேயே மாபெரும் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது என்றால் அது, இந்திய அரசியலில் எந்த ஒரு அரசியல் கட்சியும் செய்திராத, செய்ய முடியாத சாதனையாகும். 10 ஆண்டுகள் அவரது பொற்கால ஆட்சி தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் காலதேவன் அவரை கைப்பற்றிக்கொண்டான். அதாவது அவர் உயிர் உள்ளவரை ஆட்சியை - கட்சியை யாராலும் வீழ்த்த முடியவில்லை! முதலமைச்சராகவே மரணமடைந்தார். அதற்குப் பிறகும் அவர் தோற்றுவித்த அகிலஇந்திய அண்ணா தி.மு.க.வின் ஆட்சியே அவருக்காக தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது.

தி.மு.க.வின் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு முதல் பொதுத் தேர்தலிலேயே எம்.ஜி.ஆர். அமோக வெற்றிவாகை

சூடியதும், அதுபற்றி எதிர்கட்சிக்காரர்களெல்லாம் விமர்சனம் செய்தார்கள். “சினிமா மோகத்தில் அவரது ரசிகர்கள் அவர் கட்சிக்கு ஓட்டுப் போட்டுவிட்டார்கள்” என்று சொன்னார்கள்.

எம்.ஜி.ஆர். ஒரு கடைக்கோடி பாமரனாக இருந்த நிலையில் அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தில் வந்து சேரவில்லை. அந்த கட்சியினால் தனக்கு விளம்பரம் தேடிக் கொள்ளவில்லை. அவர் ஏற்கெனவே ஒரு அரசியல்வாதி. ஏற்கெனவே கலைத்துறையில் பிரபலமானவர். அவர் பேரறிஞர் அண்ணா அவர்களால் ஈர்க்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளும்போது, 1937-ல் வெளிவந்த சதி லீலாவதி படத்திலிருந்து ‘சர்வாதிகாரி’ படம் வரை 25 படங்களில் நடித்துப் புகழ்பெற்றிருந்தார். அப்படிப்பட்ட உயர்நிலைகளை யெல்லாம் உள்ளடக்கி இருந்ததால்தான், பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆரை தன் இதயக்கனி என்றார்.

தனது ஆட்சிகாலத்தில் 3 பொதுத்தேர்தலை அவர் சந்தித்து இருக்கிறார். அந்த காலங்களிலெல்லாம் அவர் கலைத் துறையிலும் இல்லை. ஆனாலும் ஒவ்வொரு முறையும் மகத்தான வெற்றியை அவர் பெற்றிருக்கிறார்.

இதற்கு என்ன காரணம்?

தி.மு.க.வில் ஊழலைத் தட்டிக்கேட்டதினாலேயே வெளியேற்றப் பட்ட அவர், தனது கட்சியில் ஊழல் என்ற சொல்லுக்கே இடமில்லாத நிர்வாகத்தை அமைத்தார். ஆட்சி நிர்வாகத்தையும் அவ்வாறே நடத்தினார். 10 வருடங்களாக தன் ஆளுமை காலத்தில் தமிழ் நாட்டு மக்களுக்காக சொல்லில் அடங்காத சேவைகளையும் சாதனைகளையும் செய்துகாட்டினார். அவைதானே அந்த தொடர்வெற்றிக்கு காரணம்!

அவரது அமைச்சரவையும் அந்த உத்தம அச்சாணியை விட்டு, ஒரு அணுவேனும் விலகிச் சுழலவில்லை. அந்த

கட்டுக் கோப்பான, கடமை உணர்ச்சிமிகுந்த ஆட்சி காலத்தில் என்னென்ன சாதித்தார் என்பதையெல்லாம், ஏதோ சத்துணவு திட்டம் கொண்டு வந்தார், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார், பல்பொடி கொடுத்தார், செருப்பு கொடுத்தார் என்று தலைப்புச் செய்திகள் வாசிப்பதுபோல் சொல்லிவிட முடியாது!

அவர் ஆட்சிகால சாதனைகளெல்லாம் இனிவரும் ஆட்சியாளர்களுக்கு ஒரு அரசியல் அரிச்சுவடியாக திகழ வேண்டிய அரிய பாடப்புத்தகம்! பக்கம்பக்கமாக எழுதிக்குவித்து, நூல்நூலாக தொகுக்க வேண்டிய நெடிய வரலாறு

விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், குடிசைவாசிகள், மீனவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், என்று எந்தவொரு வர்க்கத்தினரையும் விட்டு வைக்காமல் அனைவர் வாழ்விலுமே அவர் ஒளியேற்றி வைத்திருக்கிறார்.

தமிழ் தமிழ் என்று வாய்கிழிய பேசியவர்கள் எல்லாம் தமிழுக்காக செய்ததைவிட புரட்சித்தலைவரே தமிழுக்கு அதிகம் சிறப்பு சேர்த்திருக்கிறார்.

தமிழ் படைப்பாளிகளை பலப்படுத்தவும் தமிழ்சார்ந்த பெருமைகளை கட்டிக்காத்து வளப்படுத்தவும் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை என்ற ஒரு இலாகாவை நிறுவி, அதற்கென ஒரு அமைச்சரையும் நியமித்தார்.

தமிழுக்காக தஞ்சையில் தமிழ்பல்கலைகழகம், உலகத் தமிழ் மாநாடு, மகாகவி பாரதிக்கு இந்தியத் தலைநகரில் முழுஉருவச் சிலை, மதுரையில் உலகத் தமிழ்ச்சங்கம், இராஜஇராஜ சோழனுக்கு 1000மாவது முடிசூட்டுவிழா, பெரியார் கொண்டுவந்த தமிழ் எழுத்து சீர்திருத்தத்தைதான்

இனி பயன்படுத்த வேண்டும் என்ற அரசாணை வெளியீடு, தமிழ்அறிஞர்களுக்கு கௌரவம் என்று அன்னைத் தமிழுக்குஅவர் செய்த அரும்பெரும் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆளவந்தோர் என்னதான் அதிசயங்கள் செய்தாலும், உலகுள்ளவரை அழியாதபடி, ஆவணங்களில் இடம்பெறவல்ல அரிய செயல்கள் என்று சிலதான் உண்டு. அதற்கு பெயர்தான் “சாகா சரித்திரம்”.

கரிகால மன்னன் கல்லணை கட்டியது, பென்னிகுயிக் என்ற பெருந்தகை முல்லைப்பெரியாரில் சொந்த செலவில் அணை கட்டியது, இராஜராஜ சோழன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியது, இந்தியாவுக்கு புகழ்சேர்க்கும் வகையில் ஏழு அதிசயங்களில் ஒன்றாக ஷாஜகான் தாஜ்மகாலை உருவாக்கியது என்று அதுபற்றி சொல்வார்கள்.

அதே வரிசையில் இடம்பெறத் தகுதிவாய்ந்த ஒரு சாதனையை எம்.ஜி.ஆர் மட்டுமே தன் ஆட்சிகாலத்தில் அரங்கேற்றி, அந்த வரலாற்று பட்டியலில் தன் பெயரையும் இடம்பெற செய்து இருக்கிறார். அதுதான் “தெலுங்குகங்கை” திட்டம். ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்கு அதாவது தான் சார்ந்த தமிழ்மண்ணுக்காக நீண்ட நெடிய வாய்க்கால் வெட்டி குடிநீர் கொண்டுவந்த திட்டம்! தாகத்திற்கு தண்ணீர் அருந்தும் போதெல்லாம் ஒவ்வொரு தமிழனும் நன்றி சொல்ல வேண்டிய நற்செயலுக்கான திட்டம்அது!

அதுவும் எந்த எதிர்ப்பும் இல்லாமல் இந்த திட்டம் இனிதே நிறைவேற்றப்பட்டது. அதற்கு காரணம், ஆந்திர முதல்வராக இருந்த என்.டி.ராமாராவும் தமிழக முதல்வரான எம்.ஜி. ஆருக்கும் இடையே நிலவிய நட்பு, இரு மாநில மக்களிடம் அவர்கள் இருவருக்கும் இருந்த மகத்தான செல்வாக்கு. இப்படி தன் சொந்த செல்வாக்கை மக்களுக்கே பயன்படும் விதத்தில் மாபெரும் ஆக்கப்பணியாக மாற்றிய பெருமை

இந்தியாவில் வேறு எந்த அரசியல் தலைவர்களுக்கும் இல்லை என்பது வரலாற்றில் பதிவாகிவிட்டிருக்கிறது.

இப்படியாக எம்.ஜி.ஆர் தன் ஆட்சிகாலத்தில் செய்த அரிய செயல்பாடுகளையும் நிறைவேற்றி நடைமுறைப் படுத்திய அற்புத திட்டங்களையும் ஏடுகள் நிரம்பநிரம்ப எழுதிக்கொண்டே போகலாம்.

ஆனால் தற்கால அரசியலில் எதிர்கட்சியெல்லாம் எதிரிக் கட்சிகளாகிவிட்ட நிலையில், ஒருவர், தன் திறமையாலும் நேர்மையாலும் ஈட்டிய புகழையும் பெருமைகளையும் செயல் படுத்திய சாதனைகளையும் மற்றவர் அழித்துவிடும் அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது. சரித்திரங்கள் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்த காலம்போய் அழிக்கப்படும் காலம் அரங்கேறி நடைபெற்றுக்கொண்டிருப்பதை நான் என் அனுபவத்தில் நன்கு அறிகிறேன்.

எம்.ஜி.ஆர். ஆட்சிகாலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பற்றிய சிறப்புமிகு ஆவணங்களும் பொக்கிஷங்களும் அதுபற்றிய நீண்டநெடிய பட்டியல்களும் திட்டமிட்டே அழிக்கப்பட்டு விட்டதோ என்று ஐயுறுகிறேன்.

ஆனால் எம்.ஜி.ஆரின் கடைசித்தொண்டன் இருக்கும் வரை அவர் புகழையும் அவரது செயல்களையும் யாராலும் அழிக்கவே முடியாது. எனது தலைமையிலான மனிதநேய அறக்கட்டளை குழுவினர், மிகுந்த சிரமத்திற்குப் பிறகு, எம்.ஜி.ஆரின் 10 ஆண்டு கால சாதனை விவரங்களில் 50 சதவீதத்தை எடுத்துக் கொண்டுவந்து விட்டனர். மீண்டும் அது, சதிகார கும்பலின் அதிகார அறைக்கே சென்று அழிக்கப் பட்டு விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கிறது நமது மனிதநேய அறக் கட்டளையின் எம்.ஜி.ஆர். பாசறை!

கிடைக்கப்பெற்ற ஆவணங்களை நூல்வடிவாக்கி, நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லா நூலகங்களிலும்,

அனைத்து புத்தகக்கடைகளிலும் குவிக்க வேண்டும்; அவை வீட்டுக்கு ஒன்றாக ஒவ்வொரு வீட்டிலும் வேதநூல் போல் படித்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் மனிதநேய அறக் கட்டளையின் ஆசையும் அவாவும்.

அதன் விளைவாக எங்களுக்கு கிடைத்த 10 ஆண்டுகள் எம்.ஜி.ஆரின் ஆளுமை வல்லமையில் உருவான அநேகத் திட்டங்களையும், செயல்திறனில் சாதித்து காட்டிய முக்கிய காரியங்களையும் நூல் வடிவில் தொகுத்து வெளியிட முடிவுசெய்தேன். மிகவும் பிரயத்தனம் செய்து முயன்றதில் 50 சதவீத பொக்கிஷங்கள் கிடைத்தது. அவை அனைத்தையும் முதலில் ஒரு தொகுப்பாக வெளியிட முடிவு செய்தோம். அதன்படி இந்த நூல் வெளியிடப்படுகிறது.

தொடர்ந்து கிடைத்த மற்ற தகவல்களை தொகுத்து இரண்டாவது பகுதியாக வெளியிட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் அந்த இரண்டாம் பகுதியும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல் தொகுப்புப் பணிக்கு என்னோடு முழுமூச்சாக ஒத்துழைத்த நண்பர், மூத்தப் பத்திரிகையாளர், எழுத்தாளர் குலசை எம்.புதியவன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதநேயமுள்ள
**சைதை.சா.துரைசாமி**

# முன்னுரை

**அ**கில இந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆட்சியின் போது, அக்கட்சியின் நிறுவனரும் பொதுச் செயலாளருமான புரட்சித் தலைவர் எம்.ஜி-.ஆர் அவர்கள் முதலமைச்சராக பதவி வகித்து நல்லாட்சி நடத்தினார். இயற்கை அவரை மக்களிடம் இருந்து பிரிக்கும்வரை அவரை அப்பதவியில் இருந்து யாராலும் வீழ்த்த முடியவில்லை. இதற்கு காரணம் அவர் எல்லாமக்களும் பயன்பெறும் வகையில் லஞ்சம், ஊழலற்ற நேர்மையான, திறமையான, நல்லாட்சி நடத்திய தால்தான். 1977 முதல் 1987 வரை 10 ஆண்டுகாலம் தொடர்ந்த அவரது அந்த நல்லாட்சியின் போது நிகழ்த்தப்பட்ட அரும்பெரும் சாதனைகள் முடிந்தவரை இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். தனது ஆட்சி காலத்தில் நிகழ்த்திய அற்புதங் களை துறைவாரியாக முற்றிலுமாகத் தொகுத்து வெளியிட நினைத்தோம். ஆனால் அந்த ஆவணங்கள் அதற்குரிய அலுவலகங்களால் கடந்த சில காலங்களில் தக்க முறையில் பாதுகாக்கப்படவில்லை என்பது எங்களின் தேடுதல் முயற்சியின் போது தெரியவந்தது. அவர் செயல்படுத்தி வந்த சிறப்பான திட்டங்கள் பலவற்றை, பின் வந்த ஆட்சியாளர்கள் வேண்டு மென்றே தொடராமல் செயலற்றுப்போகச் செய்துவிட்டதால், கண்ணால்பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் ஆவணங்களை தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவை அனைத்தும் நமக்கு கிடைக்க வில்லை.

இருப்பினும் எம். ஜி. ஆருடைய தீவிர தொண்டர்கள், அவரின் விசுவாசிகள் அவருடைய ஆட்சி காலத்தில் அவருடைய திட்டங்களை கடின உழைப்போடு நிறைவேற்றிய திறமைமிக்க அதிகாரிகள், மூத்த பத்திரிகையாளர்கள் ஆகியோரிடமிருந்து ஓரளவு அதாவது 50 சதவிகித அளவு திரட்ட முடிந்தது. இதிலிருந்து ஒன்றை தெரிந்து கொண்டோம். அவரது ஆட்சிகாலத்தில் அரங்கேற்றப்பட்ட சாதனைகளை யார், எந்த சக்தி மறைத்தாலும் அழித்தாலும், ஆட்சியின் பலனை அனுபவித்த மக்களின் மனதிலிருந்து அவற்றை அழிக்கமுடியாது என்பதுதான், அது!

நமது தேடுதல் முயற்சியின் போது, சென்னை எழும்பூரில் உள்ள கன்னிமாரா நூல் நிலையம், தமிழக அரசு வெளியீடான "தமிழரசி" மாதஇதழ், சென்னை ஆவணக்காப்பகம், ஆகிய அரசு நிறுவனங்கள் எங்களுக்கு பெரிதும் உதவியாக இருந்தது.

எம்.ஜி.ஆரின் ஆட்சி கால செயல்பாடுகளின் புள்ளி விவரங்கள் எங்களுக்கு இந்த அளவுக்கு கிடைப்பதற்கு உதவிய மேற்கண்டோருக்கெல்லாம் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களுக்காக செயல்படுத்திய திட்டங்கள் இலாகாவாரியாகவும், பயனடைந்த வகையினர் வாரியாகவும் பிரித்து இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. இது, வாசகர்கள் தங்களுக்குத் தேவைப்படும் விவரத்தை எளிதாகப்பார்த்து அறிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். உதாரணத்திற்கு, "விவசாயம்" என்ற அத்தியாயத்தைப் புரட்டினால், பலதிட்டங்களின் வாயிலாக எம்.ஜி.ஆர். அரசு விவசாயிகளுக்கு செய்த நன்மைகளை எளிதாக படிக்கலாம். இவ்வாறாக வியாபாரம், மீனவ சமுதாயம், ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினர் நலன், கல்வி, மாணவர்கள், விதவைகள், பெண்கள், குழந்தைகள், மருத்துவம், தமிழ் வைத்தியங்கள், குடிநீர் என்று பல பிரிவுகளும் உள்ளன. அதற்கான பிரிவினர்

தங்களுக்காக எம்.ஜி.ஆர். என்னென்ன செய்துள்ளார் என்பதை தெரியலாம். ஆய்வு செய்ய விரும்புவோரும் அறிந்து கொள்ளலாம்.

இவை மட்டுமல்லாமல், தமிழ்மொழிக்காக, மறைந்த மாபெரும் தலைவர்களுக்காக, தியாகிகளுக்காக, கலைஞர் களுக்காக, கலைக்காக, இலக்கியங்களுக்காக எம்.ஜி.ஆர். என்ன செய்தார் என்பதையும் அதற்கான அத்தியாயங்களை பார்த்து தெரிந்து கொள்ளலாம். இருப்பினும் முதல்வர் எம்.ஜி.ஆர். தனது ஆட்சிகாலத்தில் இயற்றிய அத்தனை திட்டங்களும், அத்தனை செயல்வடிவங்களும் அப்படியே இந்த நூலில் இடம் பெற்றுள்ளது என்று கூறுவதற்கில்லை.

முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிகால சாதனைகளை சேகரிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தபோது அவர் ஆட்சிகால சாதனைப் பட்டியல்களும் அரிய புகைப் படங்களும் கிடைத்தன. அவைகளைக் கொண்டு இந்த நூல் வெளியிடும் பணிகள் முடிவடைந்தபிறகு மேலும் பல ஆவணங்கள், புகைப்படங்கள் கைக்குவந்து சேர்ந்தது அவற்றை இந்த நூலில் சேர்க்க முடியவில்லை. அந்த ஆவணங்கள் இந்த நூலில் இரண்டாம் பகுதியில் வெளியிட தீர்மானித்து உள்ளோம். அதற்கானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியவித்துக் கொள்கிறோம்.

# உள்ளே....

தனது ஆட்சிகாலம் பற்றி எம்.ஜி.ஆரின் முக்கிய பேச்சு ... 19

பேச்சுத் தொடர்கிறது, புத்தகமாக...! .................................. 23

சரித்திரம் போற்றும் சத்துணவுத் திட்டம் ............................ 25

கல்வியின் கண்கள் எம்.ஜி.ஆர்.அரசு ................................ 34

குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தின்
செயல்பாடுகளில் புயல்வேகம் .................................... 40

பல்லாயிரம்பேர் பயன்பெற்ற
விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம் ..................... 45

ஆதிதிராவிடர்களுக்கு
எம்.ஜி.ஆர். அளித்த சலுகைகள் ................................. 56

புதிய நகரங்கள் அமைப்பு ................................................. 75

தரணிப்போற்றும் "தன்னிறைவுத் திட்டம்"
தந்த எம்.ஜி.ஆர். அரசு ................................................ 77

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக சாதனைகளும்,
ஜப்பானில் கப்பல் வாங்கிய எம்.ஜி.ஆரும் ................. 81

தமிழுக்கு எம்.ஜி.ஆர். செலுத்திய
வரலாற்று காணிக்கை .................................................. 83

அனைவருக்கும் வேலைவாய்ப்பு திட்டம் ............................ 98

ஊனமுற்றோருக்கு,
எம்.ஜி.ஆர். அரசுதான் ஊன்றுகோல் ........................ 104

தாய்க்குல தவப்புதல்வன்
பெண்களுக்களித்த பரிசுகள் ........................................ 111

கைத்தறி. விசைத்தறி, நூற்பு ஆலைகளில்
வியத்தகு முன்னேற்றம் ............................................... 115

பட்டு உற்பத்தியில் பார்போற்றும்
சாதனை குவித்த எம்.ஜி.ஆர். அரசு ........................... 124

நூற்பு ஆலைகள் பெருகியது;
வேலைவாய்ப்பு அதிகரித்தது ...................................... 132

குடிநீர், பிரச்சினை தீர்ப்பதில்
வரலாறு படைத்தார், எம்.ஜி.ஆர்! ............................. 135

காவல்துறையின் கண்கள் எம்.ஜி.ஆர். அரசு ................... 151

விவசாயிகளின் தோழன் எம்.ஜி.ஆர்!
விவசாயிகளின் தொண்டன் எம்.ஜி.ஆர். அரசு!! ...... 163

அத்தியாவசிய மின்சாரத் தேவையை
அவசரமாக தீர்த்த எம்.ஜி.ஆர். அரசு ........................ 190

திரைப்படங்களுக்கு வரிவிலக்கு;
கலைஞர்களுக்கு கௌரவம் ........................................ 205

சாலவும் சிறந்த ஆலயப் பணிகள் .................................... 208

மீனவர்களுக்கு பொற்காலம் மீன்பிடி துறைமுகங்கள் ..... 223

ஈழத்தமிழர் நலன்காக்க இந்தியா, இலங்கை ஒப்பந்தம் .. 226

ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் ........................................... 233

அருந்தமிழ் நாட்டில் அற்புதத் தொழில்வளர்ச்சி ............... 262

நீதி நிர்வாகத்தில் எம்.ஜி.ஆர் அரசின் ஒழுக்கம் .............. 280

குடும்ப நலத்திட்டத்தின் வளர்ச்சி ...................................... 283

சித்தமருத்துவக் கல்வி சிகரத்தைதொட்ட வளர்ச்சி ......... 294

உணவுத்துறையின் ஒப்பற்ற பணிகள் ............................... 303

வருவாய் ஈட்டித்தருவதில் வணிகவரித்துறை சாதனை ...... 312

பிற்படுத்தப்பட்டோர்க்குப் பேருதவி .................................. 318

முதியோர் உதவித் தொகைத்திட்டம் ................................ 323

சிறப்பிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில்கள் ............... 324

போக்குவரத்துக் கழகங்களின்
ஒன்பது ஆண்டு வளர்ச்சி.......................................... 334

“ரிக்ஷாக்காரன்”தந்த ரிக்ஷாக்கள் .................................... 340

சுற்றுலா ........................................................................ 342

தமிழக அரசுக்கு “மத்திய திட்டக்குழு” பாராட்டு ............. 344



# தனது ஆட்சிகாலம் பற்றி எம்.ஜி.ஆரின் முக்கிய பேச்சு

*தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 30.06.87 அன்று ஆற்றிய உரை:*

*நான் வணங்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!*

*தமிழக மக்களாகிய நீங்கள் அளித்த மகத்தான தீர்ப்பை ஏற்று நான் முதலமைச்சராக பொறுப்பேற்று, பேரறிஞர் அண்ணாவின் அரசை அமைத்து, 10 ஆண்டுகள் அவரது கொள்கைளை நிறை வேற்றி பதினோராவது ஆண்டினைத் தொடங்கும் இந்த இனிய நன்னாளில் உங்கள் அனைவருக்கும் என் நன்றியினையும், வணக்கங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*அடக்கி வைக்கப்பட்ட மக்கள் சக்தி சுதந்திர வடிவம் பெற்று 1972—ல் அனைத்திந்திய அண்ணா திராவிட*

முன்னேற்றக் கழகம் என்ற ஒரு பெரிய இயக்கமாக மலர்ந்தது. நிறுவப்பட்ட ஐந்தாண்டுகள் முடியும் முன்பே, அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நிலை நிறுத்த இநத இயக்கத்திடம் நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தீர்கள். தொடர்ந்து நடைபெற்ற 3 பொதுத் தேர்தல்களின் முடிவும் என் மீதும், இந்த அரசின் மீதும் உங்களுக்கு உள்ள அசைக்க இயலாத நம்பிக்கையை ஆணித்தரமாக உலகிற்கு எடுத்துக் காட்டின.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினை மக்கள் கட்டளைப்படி நான் தலைமையேற்று நடத்தி வந்துள்ள 10 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறேன். மக்களின் பேராதரவு இருந்ததால்தான் தனித்தன்மை வாய்ந்த பல அரிய சாதனைகளைச் செய்ய முடிந்தது. ஏழைக் குழந்தைகளின் பசிப்பிணி அகல சத்துணவுத் திட்டம், கிராமங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்க தன்னிறைவுத் திட்டம், நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு வீடு வழங்கும் திட்டம், சிறு விவசாயிகளுக்கு இலவச மின் வசதி, தாய் சேய் நலத்திட்டங்கள், படித்து வேலையற்றோருக்கு நிவாரண உதவி, தொழிலாளர்கள் நலம் காக்கும் சட்டங்கள் இயற்றியது போன்ற திட்டங்களை இந்த அரசு முனைப்புடன் செயல்படுத்தியது.

கிராமமக்கள், நலிந்த பிரிவினர், தாய்மார்கள், உழைக்கும் தொழிலாளிகள் ஆகியோர் வாழ்க்கைத் தரம் மேம்பட, சிறப்புத் திட்டங்கள் பல தீட்டி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இலவசக் காலணித் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகும். இயற்கையன்னையின் சீற்றங்களும், தொடர்ந்த வறட்சியும் தமிழகத்தைத் தாக்கினாலும், கடந்த பத்து ஆண்டுகளாக உணவு உற்பத்தி

*பெருகிய தோடு, விலை வாசியும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.*

*பல்வேறு சோதனைகளுக்கு இடையே தளராத முயற்சியோடு மின் உற்பத்தியைப் பெருக்கி உள்ளோம். தொழில் துறை உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.*

*வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 1972—73ம் ஆண்டில் 59.7 சதவீதமாக இருந்தது. அரசின் முன்னேற்றத் திட்டங்களின் பயனால், அது 1983—84ல் 39.6 சதவீதமாக குறைந்துள்ளது.*

**கண்மூடித்தனமான எதிர்ப்புகள்!**
**காட்டு மிராண்டித்தனமான காழ்ப்புணர்ச்சிகள்!**
**தீய சக்திகளின் அறைகூவல்கள்!!**
**ஒற்றுமையை குலைக்கும் முயற்சிகள்!!**

*இவற்றை எல்லாம் எதிர்த்துப் போராடி, சட்டம்—ஒழுங்கு முழுமையாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. மத, சமூக ஒற்றுமைகளைக் கட்டிக் காத்து, பிறருக்கு முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது, இந்த அரசு.*

*தமிழகத்தின் உரிமைகளைக் காத்து மாநில முன்னேற்றத் திற்காகப் பல்வேறு நலன்களைப் பெற மத்திய அரசிடம் போராடும் அதேசமயம், தேசிய ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து, மத்திய மாநில நல்லுறவை இந்த அரசு வளர்த்து வருகிறது*

*எனினும் குறை கூறியே பழக்கப்பட்ட சில தீயசக்திகள், அரசின் கவனத்தைத் திசை திருப்ப சில விரும்பத்தகாத முறைகளைக் கையாள்கின்றன. அத்தகைய தீய சக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்*

*என்பதே இந்த 11—ம் ஆண்டு தொடக்க நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் உறுதியாகும்.*

*தமிழக மக்களே உங்களில் ஒருவனாகிய என்னை, உங்களிடம் இருந்து எந்த சக்தியாலும் பிரிக்க இயலாது எனும் உண்மை, வரலாற்றுப் பேருண்மையாகட்டும். எங்கள் பணி சிறக்க உங்கள் நல்லாசிகளை நல்கிடுவீர்.*

*அண்ணா நாமம் வாழ்க!*



## பேச்சுத் தொடர்கிறது, புத்தகமாக...!

**மா** மனிதர்... மக்கள் திலகம் பேசி முடித்து விட்டார்.

"என்னை உங்களிடமிருந்து எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது" என்ற தீர்க்கதரிசனமான வார்த்தைளால் தனது பேச்சை நிறைவு செய்திருக்கிறார்.

தமிழகத்திடமிருந்தும் தமிழக மக்கள் மனதிலிருந்தும் என்றுமே அவரது நினைவுகள் பிரியாது! எந்த நிலையிலும் யாராலும் பிரிக்க முடியாது!!

பிரிக்க முடியாத நிலையின் வெளிப்பாடுதான், இந்த நூல்!

எம்.ஜி.ஆர். குறுகிய நேர தன் பேச்சில், தனது 10 ஆண்டுகால ஆட்சிகாலத்தில் மக்களுக்காக செய்த அனேக சாதனை களையும், படைத்த சரித்திரங்களையும் சொல்ல முடியாது. அவரது பேச்சைத் தொடரும் வகையில் இந்த நூல் தொடங்குகிறது.

மேலும் எம்.ஜி.ஆர். தன் 10 ஆண்டுகால ஆட்சியில் என்னென்ன செய்தார் என்பதை அவர் சொல்லிக் காட்டு

*வதைவிட, அந்த பலன்களை பெற்று, அவர் காலத்திற்குப் பிறகும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்கள் சொல்லி நெகிழ்வதே, அவருக்கு செய்யும் மரியாதை!அவருக்கு செலுத்தும் நன்றிக்கடன்!!*

*அந்த வகையில் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல், பாரத் ரத்னா, டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பத்துஆண்டுகால ஆட்சியில் மக்கள் அடைந்து மகிழ்ந்த, இன்னும் நினைத்து நெகிழ்ந்து கொண்டிருக்கின்ற செயற்கரிய செயல்களை பட்டியலிடுகிறோம்.*



# சரித்திரம் போற்றும் சத்துணவுத் திட்டம்

*ஆயிரம் கைகள் மறைத்தாலும், ஆதவன் மறைவ தில்லை என்பது புரட்சித் தலைவரின் பாடல் வரிகளில் ஒன்று. எம். ஜி. ஆரின் மனிதாபிமானத்தை எத்தனை திரை போட்டும் மறைக்க முடியாது என்பதற்கு கட்டியங்கூறும் சத்துணவு திட்டத்தை தமிழக தன்னிகரில்லா முதல்வர் எம்.ஜி.ஆர். தான் கொண்டு வந்து நிறைவேற்றினார். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் ஆட்சி மகுடத்தில் மாணிக்க கற்கள் பதித்த திட்டமாகும், அது! பட்டினிக் கொடுமையால் படிப்பைத் துறந்து, சொற்ப கூலிக்கு கொத்தடிமையாய் வேலை பார்த்த குழந்தைகளை, பள்ளிகளின் பக்கம் கவனத்தை திருப்பி கரும்பலகையில் பதிந்திருந்த வெள்ளி எழுத்துக்களை வாசிக்க வைத்தது சத்துணவு திட்டம். தமிழகத்தை முழு கல்வி அறிவு பெற்ற மாநிலமாக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட முத்தாய்ப்பான திட்டம்தான் சத்துணவு திட்டம். இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும்*

*எம்.ஜி.ஆர். அரசு செலவு செய்த பணம் சுமார் ரூ. 175 கோடியாகும்.*

## சத்துணவு திட்டத்தின் முழுவிவரம்

*மாபெரும் சமுதாய புரட்சித் திட்டமான சத்துணவு திட்டம் 1982ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் 2 வயது முதல் 4 வயது வரை, 5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மதியம் சத்துணவு வழங்குவதே திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் கிராமப் பகுதிகளில் 1.7.1982 முதல் அமல்படுத்தப்பட்டது. நகர்ப்புற பகுதிகளில் 15.9.1982 முதல் தொடங்கப்பட்டது.*

*28 ஆயிரத்து 125 பாலர் பள்ளி மையங்களில் சுமார் ரூ. 21.55 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. 5 முதல் 9 வரை வயதுள்ள பள்ளி மாணவர் களுக்கு அவர்கள் படிக்கும் பள்ளிக் கூடத்திலேயே சத்துணவு வழங்கப்பட்டது. இத்திட்டம் 15.9.84 முதல், 15 வரை வயதுள்ள பள்ளி மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இதன்மூலம் 62 லட்சத்து 43 ஆயிரத்து 662 மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 978 ஆயிரத்து 634 பள்ளி குழந்தைகள் பயன் அடைந்தனர். சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு தாய் நாட்டுப் பற்று உண்டாக்கும் எளிய இனிய பாடல்களும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இதற்கான பொறுப்பு குழந்தைகள் நலக் காப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.*

## இருபெரும் பிரிவுகள்

*இந்த திட்டம் இரண்டு பெரிய பிரிவுகளாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஒன்று, 5 வயதுவரை உள்ள சுமார் 25 லட்சம் குழந்தைகளுக்கு கிராமங்களில் சத்துணவு வழங்கும் திட்டம் ஆகும்.*

*இதன் மிகப்பெரிய மற்றொருப்பிரிவு, 36 ஆயிரம் பள்ளிகளில் சுமார் 40 லட்சம் பிள்ளைகளுக்கு உணவளிப்பதாகும். இந்தத் திட்டம் முழுக்க முழுக்க பள்ளி கல்வித் துறையின் கணிகாணிப்பில், தமிழக ஆசிரிய பெருமக்களின் மேற்பார்வையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டு, அதன்படி செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் சமையலுக்கென்று தனியாக மகளிரும், அவருக்கு உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டனர்.*

## விடுமுறைநாளிலும் உணவு

*பள்ளி மாணவ, —மாணவிகள் உணவு அருந்துவதற்காக 40 லட்சம் குழந்தைகளுக்கும் இலவசமாக உணவுத் தட்டு, தம்ளர் போன்றவை அந்தந்த பள்ளிகளிலேயே வழங்கப் பட்டன. இவை தவிர சமையல் செய்யும் பாத்திரங்களும் அரசின் செலவில் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.*

*அரிசி, எண்ணெய், பருப்பு போன்றவை நுகர்பொருள் வழங்குதுறை, கூட்டுறவுத்துறை மூலம் வழங்க உத்தரவிடப் பட்டது. சமையலுக்கு வேண்டிய காய்கறி, மசாலா போன்றவற்றை வாங்குவதற்கு தலைமை ஆசிரியரிடம் முன்பணம் வழங்கப்பட்டது.*

*பள்ளி மாணவ, —மாணவிகளுக்கு உணவு வழங்கும் போது, அதற்கு பொறுப்பான ஆசிரியர் பெருமக்கள் மாணவ— மாணவியருடன் உணவு சாப்பிட வேண்டும் என்று புரட்சித் தலைவர் உத்தரவிட்டார். மேலும், பள்ளி விடுமுறை நாட்களிலும் சத்துணவு வழங்கும் திட்டம் செயல்படும் என்று அறிவித்து, அதன்படி செயல்படுத்திக் காட்டினார்.*

## பல்பொடி

*இதேபோல் சத்துணவு திட்டத்தின்கீழ் ஒரு குழந்தைக்கு மாதத்திற்கு 30 கிராம் வீதம் பல்பொடி வழங்கும்*

*திட்டமும், சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு திருக்குறள் கற்பிக்கும் திட்டமும் கொண்டு வரப்பட்டது.*

*இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான். அது மட்டுமின்றி, சாதி, மத பாகுபாடுகளை மறந்து குழந்தைகள் ஒருவரோடு ஒருவர் நன்கு பழகி, இரண்டற கலந்து விடுகின்றனர். சாதி, மத ஏற்றுத்தாழ்வு, பாகுபாடுகளை சிறுவயது முதற்கொண்டே கைவிட்டு தேசத்தின் உண்மை யான குடிமகன் என்ற பெருமையையும் இந்தத்திட்டம் பெற்றுத்தந்துள்ளது.*

## சத்துணவு கூடங்களுக்கு விசேஷ குடிநீர்வசதி

*சென்னை குடிநீர் வாரியம், சென்னை நகரில் 1609 சத்துணவு கூடங்களுக்கு குடிநீர் வசதி அளித்துள்ளது. இவற்றில் பல்வேறு கூடங்களுக்கு 671 குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட முடியாத 397 கூடங்களில் எஃகு தொட்டிகள் வைக்கப்பட்டு நாள்தோறும் லாரிகள் மூலம் அவற்றில் குடிநீர் நிரப்பப்படுகிறது. இது தவிர 395 குழாய் கிணறுகள், கழுவும் பணிகளுக்காக முடிந்த இடங்களில் நிறுவப் பட்டுள்ளன.*

## மாணவர்கள் வருகை அதிகரிப்பு

*பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் பள்ளிக்கு வந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது. இத்திட்டம் தொடங்கிய 5 மாத கால அளவில் 1982—83—ம் ஆண்டில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புகள் வரை 6 முதல் 11 வயது வரையில் உள்ள குழந்தைகள் 2 லட்சத்து 63 ஆயிரம் பேர் கூடுதலாக சேர்க்கப்பட்டனர். இதன்மூலம் பள்ளிக் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்கு வித்திட்டவர்*

*புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பது உறுதியாகிறது. குறிப்பாக பள்ளிக்கு வரும் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தை அதிகரித்திருப்பதாக புள்ளி விபரம் தெரிவித்துள்ளது.*

*புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் சத்துணவு திட்டம் உலக மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.*

## ஊட்டச்சத்து திட்டம்

*மூன்று வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், சோகை நிலையிலுள்ள சூலுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மேம்பாட்டிற்காக, ஊட்டச்சத்து திட்டம் 1982—ம் ஆண்டு தொடங்கப் பட்டது. சோதனை முறையில் சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியம், தென்னார்க்காடு மாவட்டம் மையல் ஒன்றியத்திலும் செயலாக்கப்பட்டது. தற்போது இந்தத் திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.*

## சத்துணவால் வேலை வாய்ப்பு

*சத்துணவு திட்டத்தின் மூலம் 1987 வரையுள்ள கணக்கெடுப்புப்படி ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 990 பேர் வேலைவாய்ப்பு பெற்றனர். அவர்களில் 38 ஆயிரத்து 193 பேர் விதவைகளும், ஆதரவற்றோரும் ஆவர். 37 ஆயிரத்து 906 பேர் ஆதி திராவிடர். அவர்களில் ஒரு லட்சத்து 78 ஆயிரம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

## சத்துணவு சாப்பிடும் மாணவர்களை ஆராய நிபுணர்கள்

*கோவை அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்களும் முதுகலைப் படிப்பு மாணவிகளும் 1983 ஜுன் தொடங்கி 1984 மே முடிய 12 மாதங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்த சிறுவர்கள்*

எந்த அளவிற்கு உடல் நலம் தேறியுள்ளனர் என்பதை ஆராய்ந்தனர். கோயம்புத்தூரிலும் அதைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும் உள்ள பாலர் பள்ளிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சிறுவர்களின் உடல்நலங்களைப் பற்றி ஆராய்ந்தனர்.

அந்த ஆய்வில் சிறுவர்களின் எடை 1.50 கிலோ கிராம் முதல் 2.63 கிலோ கிராம் வரையில் கூடியுள்ளது என்றும் சிறுமியரின் எடை 1.54 கிலோ கிராம் முதல் 2.71 கிலோ கிராம் வரை அதிகரித்துள்ளது எனவும் கண்டு பிடித்தனர்.

மேலும் முன்பு 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சிறார்களின் தலைமுடி பழுப்பு நிறமுடையதாக இருந்ததோடு முடி வளர்ச்சியும் குறைவாக இருந்தது. இத்திட்டத்தில் பயன் பெற்ற சிறுவர்களுக்கு முடி வளர்ச்சி கருமையாகவும் செழுமை யாகவும் மாறியுள்ளது. மேலும் கண் பார்வை, பற்கள், உதடுகள், ஈறுகள் ஆகியவை நல்ல நிலைமையில் இருக்கின்றன. சிறுவர்கள் சுறுசுறுப்பாகவும், தெம்பாகவும் காணப்படுகின்றனர். பள்ளிகளுக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இருமல், சீதளம், ஜுரம் முதலியவை குறைந்துள்ளன என்று தாய்மார்கள் கூறியுள்ளனர்.

## எதிர்கால மக்களின் நல்வாழ்வுக்காக

இந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள பாலர்பள்ளி மையங்களில் குழந்தைகள் உடல் நலத்தைக் கவனிப்ப தற்காக விரிவான உடல் நலத் திட்டம் ஒன்று வரையப் பட்டிருக்கிறது. அதன்படி, குழந்தைகளின் உடல்நலம் மற்றும் எடையைக் குறிக்கும் அட்டைகள் மையங்களில் பராமரிக்கப்படுகின்றன. UNICEF நிறுவனத்தின் உதவி மூலம் குழந்தைகளின் எடையைக் கணக்கிட அளவு சாதனங்கள் சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்பட்டன.

*இதே போன்று காந்தி கிராமம் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் (SCERT) இத்திட்டம் பற்றி ஆய்வு செய்து, சத்துணவினால் உடல் வலிமை, சமூக ஏற்றத் தாழ்வுகள் குறைதல், சாதி மனப் பான்மையில் மாறுதல் ஆகிய நன்மைகள் ஏற்பட்டுள்ளன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.*

*இந்த வகையில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் இந்நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்விற்குச் சீரிய அடித்தளமாக அமைந்துள்ளது. இவ்வாறு இத்திட்டம் மனித ஆற்றலின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் சிறந்த மூலதனமாகத் திகழ்வதால் நாடளாவிய தேசிய முழு வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு திட்டமாக உள்ளது.*

## சத்துணவு மையங்களின் எண்ணிக்கை

*முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்ட மையங்களின் மொத்த எண்ணிக்கை*

| | |
|---|---|
| பள்ளிக் கல்வி இயக்குநர் மூலம் | 35,477 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு இயக்குநர் | 1,053 |
| பிற்பட்ட வகுப்பு இயக்குநர் | 277 |
| வன தலைமைக் காப்பாளர் | 18 |
| மாநகராட்சி ஆணையாளர், சென்னை | 366 |
| மாநகராட்சி ஆணையாளர், கோயம்புத்தூர் | 95 |
| மாநகராட்சி ஆணையாளர், மதுரை | 90 |
| நகராட்சி நிர்வாக இயக்குநர் | 1,023 |
| சமூக நல இயக்குநர் | 28,105 |
| **மொத்தம்** | **66,504** |
| 2 முதல் 4 ஆண்டு | 22,88,111 |
| 5 முதல் 9 ஆண்டு | 45,59,732 |
| 10 முதல் 15 ஆண்டு | 18,40,259 |
| ஓய்வூதிய முதியோர் | 1,99,794 |
| **மொத்தம்** | **88,87,890** |

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவுத் திட்டம்

*உலக வங்கியின் முதலீட்டு உதவியுடன் ஊட்டச்சத்துக் குறைந்த மிகவும் நலிந்த பிரிவினரான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும், தாய்மார்கள், முன்பருவக்கல்வி பயிலும் குழந்தைகள் இவர்களுக்கு முறையான ஒருமுகத்தோடு ஊட்டச்சத்துடன் இணைந்த பணிகளைப் பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்யும் குறிக்கோளிற்கிணங்க உலகவங்கி முதலீடு ரூ. 55.78 கோடி உதவியுடன் முதற்கட்டப் பணியாக மதுரை மாவட்டம் கொட்டாம் பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடித் திட்டமாக 1980ம் ஆண்டு துவங்கப்பட்டு, பின்பு படிப்படியாக 9 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லாக்குழந்தைகளின் எடையும் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, அவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. வயிற்றுப் பூச்சிக்கு மருந்தும், தடுப்பு ஊசிகளும் கொடுக்கப்படுகின்றன. 5,000 மக்கட் தொகைக்கு ஒரு சுகாதாரத் துணை நல மையங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு, 1,071 மையங்கள் முடிக்கப்பட்டது.*

## ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

*தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 1975—76ஆம் ஆண்டு, முதல் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் படிப்படியாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.*

*குழந்தைகள் வருங்காலத்தில் நம்பிக்கை விளக்குகள், எனவே நாட்டிற்கு அவர்கள் உடல் நலத்துடனும், வளத்துடனும் இருத்தல் மிகவும் இன்றியமையாதது. உடலாலும், உள்ளத்தாலும் உறுதியாக உள்ள*

*குழந்தைகளை உருவாக்குதல் வலுவான நாட்டினை அமைக்கச் சிறந்ததொரு வழியாகும்.*

*இவ்வகையில் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் உடல் நலனும் முக்கியத்துவம் வாய்ந்ததே. இக்குறிக்கோள்களை அடைவதே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பாராட்டுவதற்குரிய நோக்கங்களாகும். இளஞ்சிறார்களிடையேயும், தாய்மார் களிடையேயும், ஊட்டச் சத்துக் குறைவினைப் போக்கு வதிலும், குழந்தைகள் சரியான மனவளர்ச்சி, உடல் வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி பெற உதவுவதிலும், இத்திட்டம் சிறப்பான சேவை புரிகிறது.*



# கல்வியின் கண்கள் எம்.ஜி.ஆர்.அரசு

## ஒரே ஆண்டில் 400 பள்ளிக்கூடங்கள் திறப்பு

*காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களை கல்விக்கண் திறந்தவர் என்று போற்றுவார்கள். அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டு அந்த மாமனிதரை கடைசிவரை மதித்துவந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.! மதித்ததோடு மட்டும் அல்ல; பேரறிஞர் அண்ணா சொன்னதுபோல, மாற்றான் தோட்டத்து மல்லிகையும மணக்கும் என்ற கொள்கைப் படி, அண்ணா, காமராஜரைப் பின்பற்றி லஞ்சலாவண்ய மற்ற ஆட்சியை நடத்தியதோடு கல்விக்கு கண்களாகவும் திகழ்ந்தார் எம்.ஜி.ஆர். அதன்படி அவர் ஏராளமான நல்ல நல்ல திட்டங்களை கல்விக்காக செயல்படுத்தினார். அந்த விவரங்களை பார்க்கலாம்.*

*1981ம் ஆண்டு மட்டும் தமிழகத்தில் மேலும் 400 உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டு, கல்வியறிவு மேலும் பரவலாக்கப்பட்டது. வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் மாநகராட்சிப் பள்ளிகள் சொந்தக் கட்டிடங்களில் மாற்றும்*

திட்டமும் இத்தோடு செயல்படுத்தப்பட்டது. இதற்காக தமிழகத்தில் 25 ஆயிரம் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 5 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்தது.

தொடக்கப் பள்ளிகளில் நர்சரி கல்வி தொடங்கப் பட்டது. அதன்படி குழந்தைகள் காப்பகங்கள் அனைத்தும் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்டன. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர் பதவியின் பெயரை கலை ஆசிரியர் என்று மாற்றி தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

## பாலர் பள்ளிகள்

கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை அரசு கொள்கையளவில் ஏற்று, படிப்படி யாகச் செயல்படுத்தி வருகிறது. 1982—83ம் ஆண்டில் 4, 343 நர்சரி பள்ளிகளும் 1983—84ல் 5,000 நர்சரி பள்ளிகளும் 1984—85ல் 5,000 நர்சரி பள்ளிகளும், 1985—86ல் 10,462 நர்சரிப்பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பாலர் பள்ளிகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு கல்வி உபகரணங்கள், விளையாட்டு கருவிகள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

## மருத்துவக் கல்லூரிகளில் புதிய இட ஒதுக்கீடு

தமிழகத்தில் மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்குவது குறித்து முதலமைச்சர் எம். ஜி. ஆர் தலைமையிலான அரசு ஆலோசனை நடத்தியது.

மாநிலத்தில் மொத்தம் 8 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அங்கு சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,125லிருந்து 1,015 ஆக, அரசு 1971ஆம் ஆண்டு குறைத்தது. அந்த மரபுப்படி, 1979ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் மருத்துவக் கல்லூரி களில் சேர்க்கப்பட்டார்கள். பல்வேறு தரப்பிலிருந்து வந்த

*மனுக்களின் அடிப்படையிலும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையையும் கருத்திற் கொண்டு, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவு 13.09.1979ஆம் நாள் பிறப்பிக்கப்பட்டது.*

*மத்திய அரசு நியமனங்கள் 9. ஜம்மு அண்டு காஷ்மீர் மாணவர்கள் 2, நேபாளம் 2. தமிழ் நாட்டைச் சேர்ந்த மலேஷிய மாணவர்கள் 8. ஸ்ரீலங்கா, பர்மா 5. வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா, பிஜி 4.985 இடங்கள் இதிலே விஞ்ஞான பட்டதாரிகளுக்கு 10 விழுக்காடு. மீதி 886 இடங்கள் புதுமுக வகுப்பு மாணவர்களுக்கு கொடுக்கப் படுகின்றது. விதவைகள் 10; உடல் ஊனமுற்றவர்களுக்கு 3; இராணுவத்திலே பணிபுரிந்து இறந்தவர்களுடைய குழந்தை களுக்கு 6; கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கு 6; சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 3; தமிழ்நாட்டைச் சேர்ந்த அமெரிக்காவில் இருப்பவர்களுக்கு 6; இதுதான் நிலை. இவ்வாறாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

## தொழில்கல்வியில் சாதனை

*தமிழகத்தை அறிவு சார் மாநிலமாக்க புரட்சித் தலைவர் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அதன்படி தொழிற்கல்விகளில் புதிய, புதிய கல்விப் பிரிவுகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் 1981 ம் ஆண்டு தொடங்கப்பட்டன. பாலிடெக்னிக்குகளில் புதிய கல்விப் பிரிவுகள் அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக அந்த ஆண்டு நிபுணர் குழு ஒன்றை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அமைத்தார். அவர்களின் ஆலோசனையை செயல் படுத்தினார்.*

## உதவித் தொகைபெறும் மாணவர்கள் அதிகரிப்பு

*1981—82ம் ஆண்டிற்கு முன்பு வரை மாணவர்கள் உதவித்தொகை பெற வருமான வரம்பு ரூ. 2,500 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1981—82ம் ஆண்டிலிருந்து வருமான வரம்பை ரூ. 5000 ஆக உயர்த்தி, மேலும் அதிக மாணவர்கள் உதவித்தொகை பெற்று பயன் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. 1977—78ம் ஆண்டு வழங்கிய உதவித்தொகை ரூ. 312.33 இலட்சமாகும். 1986—87ம் ஆண்டில் சுமார் 2,90,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 377.98 இலட்சம் செலவிடப்பட்டது. இவ்வரசு, கல்விக்குமிக முக்கியத்துவம் தருவதை இவ்வுயர்வு எடுத்துக்காட்டி வருகிறது.*

*சீர் மரபினர் மாணவர்களுக்காக 2 மேல்நிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப்பள்ளிகளும் 36 நடுநிலைப் பள்ளிகளும் 123 ஆரம்பப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மொத்தம் சுமார் 53,000 மாணவ—மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளிகளின் பராமரிப்பிற்காக 1986—87ம் ஆண்டு ரூ. 210.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

## பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்குதல்

*கற்பதற்கு கல்வியும், உண்ண உணவும் வழங்குவதோடல்லாமல் 1 முதல் 8ஆம் வகுப்புவரை படிக்கும் பள்ளி குழந்தைகளுக்கு, ஏறத்தாழ 16 கோடி ரூபாய் செலவில், இலவச சீருடை வழங்கும் திட்டத்தை 1985—86 ஆம் கல்வி ஆண்டு முதல், தமிழக அரசு துவங்கி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 59.43 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். சீருடை தைக்கும் பணி, மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர் மன்றம், சேவை நிறுவனங்கள் தொழில் வளர்ச்சித்துறை*

*தையல் தொழிற் கூடங்கள் மற்றும் சமூக நல வாரியத்தைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப் பட்டது. இப்பணியினால், 40,000 மகளிர்க்கு வேலை வாய்ப்புக் கிட்டியது.*

## ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்கள்

*தமிழ்நாட்டில் 65 இலட்சம் மாணவ மாணவிகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் இவர்களில் 1வது முதல் 8வது வகுப்புவரை படிக்கும் ஏழை மாணவர்களுக்குத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இலவசமாக நோட்டு, புத்தகம் வழங்கி வருகிறது. 1986 ஆம் ஆண்டு ரூ. 12 கோடிக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.*

*வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தை களுக்குத் தமிழ்ப்புத்தகங்கள் கிடைக்காததால், தமிழ் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருந்து வந்தது. இப்போது அந்தமான், பர்மா, பிஜித்தீவு ஆகிய வெளிநாடுகளுக்கும் இலவசமாகத் தமிழ் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதில் பிஜி தீவுக்கு மட்டும் ரூ. 85 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள் இலவசமாக அனுப்பப் பட்டுள்ளன.*

*தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் ஆண்டு தோறும் தனது நிதியில் இருந்து, நலிந்து போன பள்ளிக் கூடங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ. 25 இலட்சம் இலவசமாக வழங்குகிறது. அது இந்த ஆண்டு முதல், ரூ. 50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.*

## ஆசிரியர்களை மதித்த எம். ஜிஆர்

*ஆசிரியர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில், தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கமும், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணியும் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. இதற்கான அறிவிப்பை எம்.*

*ஜி.ஆரின் விருப்பப்படி அப்போதைய அமைச்சர் அரங்கநாயகம் 5.9.81 அன்று அறிவித்தார். 3முதல்5வயது வரையிலான குழந்தைகளுக்கு கல்வி கற்றுத் தரும் வகையில், அரசு சார்பில் நர்சரி பள்ளிகள் திறக்கப்படும் என்ற அறிவிப்பும் இந்த ஆண்டு வெளியிடப்பட்டது. பெரிய கோவில்களில் தமிழாசிரியர்களை நியமிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.*

## சகவர் சிறுவர் இல்லம்

*இந்தியப் பேரரசின் கல்வியமைச்சக நேரடிப் பார்வையில் 1956—ஆம் ஆண்டு புதுதில்லியில் தொடங்கப் பட்ட அமைப்பு சவகர் சிறுவர் இல்லமாகும் 5 முதல் 16 அகவைக்குட்பட்ட சிறுவர்களை கலை வல்லுநர்களாக வளர்ப்பதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.*

*தமிழகத்தில் 1974ஆம் ஆண்டு முதல், சவகர் சிறுவர் இல்லம் நேரு நினைவு நிதியிலிருந்து 16 இலட்சம் ஒதுக்கியதன் காரணமாக இராஜாஜி வளாகத்தில் இயங்கி வருகிறது. இதில் 400 சிறுவர்கள் பயிற்சி பெறுகின்றனர். திருச்சியிலும் புதுக்கோட்டையிலும் இதன் கிளைகள் இயங்கி வருகின்றன. மதுரை காந்தி நினைவில்லத்திலும் கிளை ஒன்று அமைக்கப்பட்டது.*

## ராக்கிங்

*கல்லூரிகளில் 'ராக்கிங்' செய்யும் பழைய மாணவர் களின் விளையாட்டு, கொடூர வன்முறைகளாக மாறி புதிய மாணவர்கள் பல மோசமான பாதிக்கப்பட்டதால் இந்த ராக்கிங் முறையை ஒழிக்கவேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர்கள் மத்தியில் எழுந்தது. இதனால் ராக்கிங் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க எம்.ஜி.ஆர். நடவடிக்கை மேற்கொண்டது.*



# குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தின் செயல்பாடுகளில் புயல்வேகம்

## குடிசைமாற்று வாரியத்தின் மறுமலர்ச்சி

**த**மிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1971ல் துவங்கப்பட்டு கீழ்க்கண்ட திட்டங்களை சென்னை நகரில் மட்டும் செய்து வந்தது.

1) வீட்டு வசதி

2) குடியிருப்புகள் கட்டும் திட்டம்

3) நகர்ப்புற வளர்ச்சி

விரைவுப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டம்.

## சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

1983—84 ஆம் ஆண்டில் இருந்து குடிசைப்பகுதி மாற்று வாரியம், தன் பணிகளை மாநிலத்தின் பிற நகரங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கியது. 1986வரை 43 நகரங்களுக்குப் பணிகள் இவ்வாறு விரிவுபடுத்தப்பட்டது.

## குடியிருப்புகள் கட்டும் திட்டம்

*1984—85 முடிய குடிசைப் பகுதிமாற்று வாரியம் 45,980 குடியிருப்புகளை ரூ. 4168.69 இலட்சம் செலவில் சென்னை நகரிலும், ஈரோட்டிலும் கட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு மானியமும் அட்கோ கடன் உதவியும் பெறப்பட்டது. 1985—86 ஆம் ஆண்டு ரூ.150 இலட்சம் அரசு நிதி உதவியுடனுடம் ரூ.188 இலட்சங்கள் அட்கோ கடனுதவியுடனும் 512 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டது.*

*1986—87ல் ரூ.200 இலட்சம் அரசு மானியம் பெற்றும் ரூ. 585 இலட்சம் அட்கோ கடனுதவி பெற்றும் 3570 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டது. ரூ. 100 இலட்சம் கடன் தொகை அட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தப் பட்டது. நலிந்த பிரிவினருக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள குடிசைவாசிகளுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் விலை குறைந்த தரமான— கட்டுமானப் பொருள்களைக் கொண்டு வீடுகள் கட்டப்பட்டது. 1985—86ல் மதுரை பெரியார் நகரில் ரூ. 231.931 இலட்சம் அட்கோ கடன் உதவியுடன் 2010 வீடுகள் கட்டப்பட்டது.*

## நலிந்தோர், உயர்ந்தோருக்கு 30 இலட்சம் வீடுகள்

*எம்.ஜி.ஆர். அரசின் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர்தர வருவாய்ப் பிரிவினர் வரை உள்ள பல்வேறு பிரிவினர்க்கு ஏற்றவாறு வீட்டுவசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது.*

*1987 வரை 1 லட்சத்து 47ஆயிரத்து 710 குடியிருப்புகள் ரூ. 409 கோடி செலவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அன்றய*

*காலகட்டத்தில் உள்ள கோட்பாட்டின்படி குடியிருப்புத் திட்டங்களில் 55 விழுக்காடுகள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான குடியிருப்புகளாக கட்டப்பட்டது.*

## நலிந்த பிரிவினருக்கு ஒரு நல்ல திட்டம்

*பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான திட்டத்தின் படி கைவினைஞர்கள், நெசவாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் மாத வருவாய் ரூ.700க்குள் பெறும் மக்கள் பயனடைந்தனர். அதிகபட்ச மதிப்பீடு ரூ. 15,000 ஆகும். இத்திட்டத்திற்கான நிதியுதவி அட்கோ நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது. மேலும் மனை மற்றும் மேம்பாட்டுப் பணிகள் பொருளா தாரத்தில் நலிந்த பிரிவினர்க்காக உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழக அரசு மூலம் செயல்படுத்தப் பட்டது.*

*இத்திட்டத்தின் கீழ் 5201 குடியிருப்புகள் கட்டப்பட்டன. ரூபாய். 5.50 கோடி இதற்கு செலவாகியது. வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1977 வரை 1987 வரை, 41, 332 குடியிருப்புகள் ரூ. 47 கோடி மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ளன.*

*குறைந்த வருவாய் பிரிவினர்க்கான குடியிருப்புத் திட்டம்— மாத வருமானம் ரூ. 701 முதல் ரூ. 1500 வரை பெறும் மக்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தின் படி ஒரு வீட்டின் அதிகபட்ச செலவு ரூபாய் 30,000 ஆகும். இத்திட்டம் அட்கோ நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப் பட்டு வந்தது. வீட்டுவசதி வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1977 வரை 7514 குடியிருப்புகள் ரூ. 15 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப் பட்டன. 1977 முதல் 1987 வரை 19,824 குடியிருப்புகள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.*

*அங்கீகாரம் பெறப்பட்டுள்ள நகர்ப்புற மனைகளில் குடியிருப்புகளைக் கட்டிக்கொள்வதற்காக அம்மனை களின் சொந்தக்காரர்களுக்குப் பண உதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டம் பெரும்பாலும் பொருளா தாரத்தில் நலிந்த பிரிவினர்க்காக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் படி கடனை எளிய தவணை முறையில் திருப்பிச் செலுத்த முடியும்.*

## ரூ. 86 கோடி செலவு

*எனவே, மேற்கூறிய திட்டங்களின்படி 1977 வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வாரியம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஏழை மக்களுக்காக 29163 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1977 முதல் 1987 வரை வாரியத்தால் 57806 குடியிருப்புகள் ரூ. 86 கோடி மதிப்பீட்டில் ஏழை மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.*

*ஏழை எளிய மக்களுக்காக சுமார் 30 இலட்சம் குடியிருப்புகளை அமைக்க எம்.ஜி.ஆரின் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருந்தது. இதை நிறைவேற்ற தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வந்தது. ஏழை எளிய மக்களுக்காகக் குடியிருப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு முழுவதும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக குடியிருப்புகளை அமைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முனைந்து செயல்பட்டது. அதன் பயனாக, பின்வந்த மூன்று ஆண்டில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 47,060 குடியிருப்புகளையும், குறைந்த வருவாய்ப் பிரிவினர்க்காக 5,212 குடியிருப்புகளையும் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டி முடித்தது. எம்.ஜி.ஆரின் லட்சிய கனவு இதன் மூலம் நிறைவேற்றிமுடிக்கப்பட்டது எனலாம்.*

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 6 திட்டங்கள்

*எம். ஜி. ஆரின் அரசின் "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்" ஆறு வகையான திட்டங்களைச் சென்னை மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்தி முடித்தது. அதன் விவரம்:*

*(1) குடியிருப்புகள் கட்டும் திட்டம்*

*(2) விரைவுப்படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்*

*(3) உலக வங்கி உதவியுடன் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்*

*(4) வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம்*

*(5) பெருமளவில் வீடு கட்டும் திட்டம்.*

*கடந்த பத்து ஆண்டுகளில் 1977 முதல் 1987 வரை 19,050 குடியிருப்புகள் ரூ. 1970.51 இலட்சங்கள் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1987—88ம் ஆண்டில், ரூ. 200 இலட்சங்கள் செலவில் மேலும் 1000 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன.*

*கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் தகுதி வாய்ந்த குடிசைவாசிகளுக்கு மாதவாடகை ரூ. 20க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தவணை முறை விற்பனைத் திட்டத்தின் கீழ் குடியிருப்பைப் பெற விரும்பும் குடிசைவாசிகளிட மிருந்து மாதாந்திரத் தவணைத் தொகை ரூ. 30 முதல் ரூ. 45 வரை 20 ஆண்டுகளுக்கு வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் குடும்பங்களிட மிருந்து ஏற்கெனவே முடிவு செய்தபடி, முன் பணத் தொகை ஏதும் பெறப்படவில்லை.*



# பல்லாயிரம்பேர் பயன்பெற்ற விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம்

## குடிநீர் குழாய், கழிப்பறை வசதி

*பல்லாயிரம்பேர் பயன்பெற்ற விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம் 1977ம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது, விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத்திட்டம். இதன்மூலம் 10 குடும்பங்களுக்கு 1 கழிப்பறையும், 20 குடும்பங்களுக்கு 1 குடிநீர்க்குழாயும், 40 மீட்டர் நீளமுள்ள பாதைக்கு ஒரு மின் விளக்கு என்றும் வசதிகள் செய்து கொடுக்கப்படடது. இந்த திட்டத்தின்படி, 1977—லிருந்து 1987 ஆண்டுவரை 64,618 குடும்பங்கள் பயன் பெற்றன. இதற்காக ரூ.524.20 இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் எம். ஜி.ஆர்.ஆட்சிக்கு வந்த 1977ம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், ரூ. 403.50 இலட்சங்கள் செலவில் 77 குடிசைப் பகுதிகளில் வாழும் 24,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.*

*இத்திட்டத்தின் 2—வது பாகம் 1981ல் துவங்கப்பட்டு 50,000 குடும்பங்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டதின் மதிப்பீடு ரூ. 27.80 கோடி ஆகும். 1986—87 வரை 218 குடிசைப் பகுதிகளில் வாழும் 49,000 குடும்பங்கள் பயன் பெறும்வகையில் ரூ. 1908.45 இலட்சங்கள் செலவிடப்பட்டு உள்ளது. 1980—ஆம் ஆண்டில் 10,000 குடும்பங்கள் பயன்பெற்று உள்ளன.*

*வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் குடிசை வாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் பட்டு, குறைந்த செலவில் குடியிருப்புகள் கட்டித் தரப் பட்டது. 1986—87ம் ஆண்டில் 2010 குடியிருப்புகள் ரூ. 219.30 இலட்சங்கள் செலவில் பணி மேற்கொள்ளப்பட்டு 1300 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டது.*

*குடிசைமாற்றுவாரியம், தன்னகத்தே இருந்த நிலத்தைச் சுகாதாரமான தனி வீடுகள் கட்டும் அளவு மேம்படுத்தப் பட்ட மனைகளாக்கி குடிசைவாழ் மக்களுக்கு அளித்தது. மேலும் வீடுகள் கட்ட கடன் பெறவும் வழிவகை செய்தது. 1986—87ம் ஆண்டில் 1052 மனைகள் ரூ. 44.79 இலட்சங்கள் செலவில் இது, நிறைவேற்றப்பட்டது. இதற்காக 27.15 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாண்டுக் கான நிதி ஆண்டில் மேலும் 873 மனைகள் ரூ. 35.88 இலட்சங்கள் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு 680 மனைகள் மேம்படுத்தப்பட்டது.*

*பெருமளவில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 50,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,500 வீதம் அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுக்கப் பட்டது. மேம்பாடு செய்யப்பட்ட இடங்களில் மாத வருமானம் ரூபாய் 350க்கு மேல் உள்ளவர்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ. 3,000 வீதம் வீடுகளைப் புதுப்பித்துக் கொள்ள கடன் உதவி வழங்கப்பட்டது. இதன் மூலம் 50,000*

குடும்பங்கள் பயன் பெறுவர். அட்கோ கடன் உதவியுடன் இத்திட்டம் செயலாக்கப்பட்டது. மேலும் 80.000 குடும்பங்கள் பயனடையும் வகையில் கூரையினை மாற்றி ஓடுகள் போடவும் அல்லது மண் சுவர்களை மாற்றி கற்சுவர் அமைக்கவும், ஒரு குடும்பத்திற்கு ரூ.1,500 வீதம் மானியம் வழங்கப்பட்டது. 1986—87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 145.20 இலட்சங்கள் செலவில் 11,620 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

## வீட்டு வசதியில் முன்னேற்றம்

உணவு உடைக்குப் பிறகு மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும் நீண்டகாலமாக வீட்டு வசதித்துறையில் முதலீடு செய்வதென்பது உற்பத்தி திறனில்லாதது என்று தவறான எண்ணப்போக்கைப் பொருளாதார திட்ட வல்லுநர்கள் கொண்டிருந்தனர். எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டுவசதி அளிக்காதவரை மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும் வலுப்படுத்த இயலாது. மிட்டு வசதிப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டாலொழிய, கட்டிடத்தொழிலினைச் சார்ந்த ஆக்கப்பொருள்கள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் வளர்ச்சி அடையாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்கநிலை ஏற்படும். மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான வருவாய் மூலம் வீடுகளைக் கட்ட இயலாது, எனவே, மாநிலத் திட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச்சமூகநல முதலீட்டில் ஏற்படும் பற்றாக் குறையை நிரப்ப வேண்டும். பொருளாதாரத்தில் நலிவுற்றோரின் செலவு செய்யும் சக்தியை மனதில் கொண்டு எல்லா பிரிவினருக்கும், வீட்டு வசதியினை செய்து கொடுப்பது

*தான் இந்த அரசின் அடிப்படை கொள்கை யாகும். இக் கொள்கைகளுக்கேற்ப தமிழ்நாடு வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், நகர்புற வளர்ச்சித்துறை ஆற்றிய 9 ஆண்டுச் சாதனைகளை இங்கு காண்போம்.*

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

*தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அதன் துவக்க காலத்திலிருந்தே 1985—86 ஆம் நிதியாண்டு முடியப் பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும், ஏழாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் கட்டி முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ள வீடுகளின் விவரமும் வருமாறு:*

*1960—61 ஆம் ஆண்டு முதல் 5ம் ஐந்தாண்டுத் திட்டம் (1979—80) முடிய குறைந்த வருவாய் பிரிவினருக்கு 1970 குடியிருப்புகளும் நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 8164 குடியிருப்புகளும் அரசு அலுவலர்களுக்கு 10,731 வாடகைக் குடியிருப்பகளும், தொழிலாளர்களுக்கு 2,490 மலிவு வாடகைக் குடியிருப்புகளும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்க்கு 9,046 குடியிருப்புகளும், குடிசைப் பகுதியினருக்கும் 14,956 குடியிருப்புகளும் என மொத்தம் 59021 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.*

*6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980—1981) குறைந்த வருவாயினருக்கு 10,917 குடியிருப்புகளும், நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கு 11,917 குடியிருப்புகளும் அரசு அலுவலர்களுக்கு 4,733 வாடகை குடியிருப்புகளும், தொழிலாளர்களுக்கு 636 குடியிருப்புகளும் பொருளா தாரத்தில் நலிந்த பிரிவினருக்கு 21,656 குடியிருப்புகளும், குடிசை பகுதியினருக்கு 4,576 குடியிருப்புகளும் என மொத்தம் 56,888 குடியிருப்புகளை அரசு கட்டித் தந்துள்ளது.*

*1986—87ம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள் — மனைகள் உருவாக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 3742.50 இலட்சம், அரசின் நிதி உதவி ரூ. 1567.50 இலட்சமாகும்.*

*இவை தவிர, குறைந்த வருவாய்த் தொகுதியினர் / நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கும் வீட்டு வசதி செய்து தருகின்ற திட்டமும் செயல்படுத்தப் பட்டது. 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 20,081 வீடுகள் (நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதி யினருக்குக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1985—86ம் ஆண்டு பிப்ரவரி முடிய 3,761 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மேலும் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்—1 மற்றும் 2 மூலமும் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.*

## முழு விவர அட்டவணை

| | பிரிவுகள் | குடியிப்பு எண்ணிக்கை ஒதுக்கீடு | 1986-87 ஆம் ஆண்டில் | அரசின் நிதி உதவி (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ்) | 7,200 | 700.00 | 600.00 |
| 2. | குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம் | 96 | 67.50 | 67.50 |
| 3. | குறைந்த வருவாய்ப் பிரிவினர் | 1,300 | 300.00 | 100.00 |
| 4. | நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் | 5,016 | 1875.00 | .. |
| 5. | அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் | 2,788 | 800.00 | 800.00 |
| | | | மொத்தம் | 16,400 |

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

*1971 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை மாநகரில் மூன்று குறிப்பிடத்தக்க திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

1. *குடிசை அகற்றுதல் மற்றும் குடியிருப்புகளை கட்டுதல்.*
2. *விரைவு படுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்.*
3. *சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள்.*

*1983—84 ஆம் ஆண்டு வரை குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்தில் மட்டும் நடைபெற்றது. பின்பு, இவ்வாரியத்தின் பணிகளைக் கட்டம் கட்டமாகப் பிற நகர்புற மையங்களுக்கு விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டது. தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் சென்னையைத் தவிர 43 நகரங்களுக்கு விரிவுப் படுத்தப்பட்டுள்ளன.*

*இது தவிர குறைந்த விலை வீட்டு வசதித் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.*

## குறைந்த விலை வீட்டு வசதித் திட்டம்

*குடியிருப்பின் விலை மிகவும் உயர்ந்த நிலையில் இந்த பிரச்சனையிலிருந்து மீள்வதற்கென நலிந்த பிரிவினருக் கான வீட்டு வசதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.*

*சென்னை மற்றும் வெளியூர்ப் பகுதிகளில் உள்ள குடிசை வாசிகளுக்கு நன்கு திட்டமிடப்பட்டுள்ளன வீட்டு மனைப் பிரிவு, வசதி செய்யப்பட்ட பகுதிகளில் வீட்டு வசதிகளையும், அடிப்படை வசதிகளையும்*

*அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் முடிந்தவரை உள்ளூரிலேயே கிடைக்கும் கட்டிடப்பொருட்களைப் பயன்படுத்தி, அதிகரித்து வரும் செலவைத் தடுத்து, குறைந்த செலவில் கட்டுவதற்கான தொழில் நுட்பம் மேற்கொள்ளப்பட்ட உள்ளது. இவ்வீடுகள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைப் போல் வாடகை முறையிலோ அல்லது நீண்ட காலத் தவணை முறையிலோ ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

*1985—86 ஆம் ஆண்டில், மதுரையில் பெரியார் நகரில், ரூ.232 இலட்சம் செலவில் 2,010 வீடுகளை, நலிவுற்ற குடிசைவாசிக்குக் கட்டுவதற்கான இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டம், 1986—87ம் ஆண்டில் முடிவு பெறும். 1986—87 ஆம் ஆண்டில் மற்ற இடங்களில் சுமார் 10,000 வீடுகளை அளிப்பதற்கெனக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டங்களுக்கான செய்முறைகளை வகுத்து வருகிறது.*

*குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் கைவசமுள்ள சில காலி நிலங்களில், தன்னிறைவு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது.*

## கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

*மாநிலம் முழுவதிலும் உள்ள 104 வட்ட மற்றும் கோட்ட அளவிலான பிரதம கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் வாயிலாக இம் மாநிலத்தில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. பிரதான சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இச்சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.*

*1.4.1984 முதல் கிராமப்புற வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் கட்டித் தரப்படும். குடியிருப்பு ஒன்றின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ. 6000 ஆக நிர்ணயிக்கப்பட்டது.*

*மலைப்பகுதிகளிலும் இராமேஸ்வரம் தீவிலும் கட்டப் படும் வீடுகளின் உயர்ந்த பட்சக் கட்டுமான மதிப்பு ரூ.7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.*

*ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தினால் மொத்தம் ரூ. 5,440 இலட்சம் கடனாக வழங்கப்பட்டு 1,86,523 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1,53,543 வீடுகள் ஆதிதிரா விடர்களுக்காகவும் 33,070 வீடுகள் மற்றவர்களுக்காகவும் கட்டப்பட்டுள்ளன.*

## நகர்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

*தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் நகர்புறங் களிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் கூட நிதி உதவி அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுகிறது. பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் பொருளாதார நிலையில் பின் தங்கிய பிரிவினர் குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருமானப் பிரிவினர் மற்றும் உயர்ந்த வருமானப் பிரிவினர் ஆகியோருக்கு ரூ. 10,000 முதல் ரூ. 80,000 வரை கடனாக வழங்குகின்றன. இத் தலைமைச் சங்கம் துவக்கப்பட்ட நாள் தொடங்கி பிரதான வீட்டுவசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியதன் வாயிலாக 1984—85 வரை, 59,490 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. இதற்காக தலைமைச் சங்கம் பிரதான சங்கங்களுக்கு ரூ. 16,671.35 இலட்சம் கடனாக வழங்கி யுள்ளது. 1985—86 ஆம் நிதி ஆண்டில் 1986 பிப்ரவரி மாதம் முடிய தலைமைச் சங்கம் பிராதன சங்கங்களுக்கு ரூ. 1,848.32 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. மேலும் 4,040 வீடுகள் கட்ட நிதியுதவி அளித்துள்ளது. 1985—86 ஆம் ஆண்டு நகர்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு ஆயுள் காப்புறுதிக் கழகம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு ரூ.13 கோடி கடனுதவி வழங்கியுள்ளது.*

## அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன் பணம்

*வீடு கட்ட முன்பணம் வழங்குத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஊழியர்களுக்குத் தந்த போது பொதுக்கடன் ரூ.1,75,000 வழங்கப்படுகிறது. இந்த உச்ச வரம்புக்குட்பட்டு வீட்டை விரிவுபடுத்த மற்றும் மேம்படுத்த ரூ. 75,000 வரை கடன் பெறலாம்.*

*1985—86 ஆம் ஆண்டில் வீடு கட்ட முன் பணம் வழங்க ரூ. 1,280 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*1986—87 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்க ரூ. 1,290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## வீடு கட்ட முன்பணம் தரும் குடும்ப நலநிதிச் சிறப்புத்திட்டம்

*வீடுகட்ட முன்பணம் வழங்க விதிகளின் படி, அரசு ஊழியர் வீடு கட்டுவதற்கு முன் பணம் பெற்று அக்கடனை முழுவதும் திரும்பச் செலுத்துவதற்கு முன் அகால மரணமே ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையுடன் வட்டியும் சேர்த்து அரசுக்கு அவரது குடும்பத்தினர் செலுத்த வேண்டும். மேற்கண்ட விதியினை நடைமுறையில் அமல்படுத்துவதால் பல குடும்பங்கள் மிகவும் அவதியுற்றன. அவ்வாறு அவதியுறும் குடும்பங்களின் அவலை நிலையைப் போக்க முன் பணம் பெற்ற அரசு ஊழியர்களும், ஓய்வு பெறுவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு மேல் பணிக்காலம் உள்ளவர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் மாதந்தோறும் செலுத்தும் கடன் தொகையில் தனி விழுக்காடு தொகையினை மேற்கண்ட குடும்ப நல நிதி திட்டத்திற்குத் தவணையாக செலுத்த வேண்டும்.*

இத்திட்டம் வீடுகட்ட முன் பணம் பெற்ற அரசு ஊழியர் அகால மரணமேற்பட்டு இறக்க நேரிட்டால் அவர் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்ய வழிவகை செய்கிறது. இதற்காகும் செலவினை அரசு ஊழியர் மாதந்தோறும் செலுத்தும் தொகையிலிருந்து ஈடுசெய்யப்படும். திட்டத்தை 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து அமல் படுத்த ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மாமன்றம் 1987 ஆம் ஆண்டை, வீடு இல்லாதவர்களுக்கு வீடு தரும் ஆண்டு என்ற இலட்சியம் கொண்ட ஆண்டாக அறிவித்துள்ளது.

வரும் ஆண்டுகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து மக்களும் அரசு ஆதரவுடன் சொந்தமாக வீடுகளைப் பெற வேண்டும் என்பதே தமிழக அரசின் கொள்கையாகும்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற இலட்சியத்தை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமை யிலான தமிழக அரசு நிறைவேற்றி வவருகிறது.

## கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் அமைப்பு

மாநில அரசு கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளா தாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு வீடுகட்டிக் கொள்ள பெருத்த அளவில் கடன் உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து அத்திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கிய வுடன் 1977—ஆம் ஆண்டிற்குப் பிறகு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் பணி மிகவும் சுறுசுறுப்படைந்தது. அரசின் முடிவுக்கிணங்க 1978—79 ஆம் ஆண்டில் வட்ட மற்றும் கோட்ட அளவிலான கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தொடங்கப் பட்டன.

*மாநிலம் முழுமையும் 100 கிராமிய வீட்டுவசதிச் சங்கங் களுக்கு மேலாகவே செயல்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற அதாவது ஒரு குடும்பத்தின் மாத வருவாய் ரூ. 700க்கு மிகையாகாமல் இருக்கும் மக்களுக்கு வீடுகட்டிக் கொள்ள நிதியுதவி செய்யப்பட்டது.*

## சங்கங்களினால் கிடைத்த பலன்கள்

*இத்திட்டத்தில் கடன் உதவி பெற்ற பயனீட்டாளர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பினைக் கொண்ட 201 சதுர அடி கட்டடப் பரப்பளவு உள்ள வீடுகளைக்கட்ட வேண்டும் என்ற விதிப்படி கட்டிக் கொண்டார்கள். வீட்டின் மதிப்பு சமவெளிப் பகுதிக்கு ரூ. 6000—ம் மலைப்பகுதி மற்றும் ராமேஸ்வரத் தீவில் ரூ. 7500 ம் ஆகும்.*

*இத்திட்டத்திற்குத் தேவையான நிதிஉதவி புதுடெல்லி யிலுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (அட்கோ) என்கிற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது. அந்த நிறுவனம் வீட்டுகட்ட செலவாகக் கூடிய உச்ச அளவு மதிப்பீட்டில் 50 சதவிகிதம் கடனாக ஒவ்வொரு பயனீட்டாளர் களுக்கும் கொடுத்தது. மீதியில் அரசு 25 சதவிகிதம் கடனாகக் கொடுத்தது. மீதி உள்ள 25 சதவிகிதம் பயனீட்டாளர்கள் உழைப்பின் மூலமாகவோ ரொக்க மாகச் செலவு செய்தோ, தேவையான கட்டடச் சாமான் கள் வாங்கியோ ஈடு செய்து வீடுகளை அவர்களாகவே கட்டிக் கொண்டார்கள்.1978—79 ஆம் ஆண்டிலிருந்து 31.3.87 வரை கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூ. 74.12 கோடி கடனாகவும் முதலீட்டு மானியம் மற்றும் வட்டி மானியமாக முறையே ரூ. 12.9661 கோடியும், ரூ. 14.49 கோடியும் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் கட்டப் பட்ட வீடுகள் 2,24,229 ஆகும்.*



# ஆதிதிராவிடர்களுக்கு எம்.ஜி.ஆர். அளித்த சலுகைகள்

## ஆதிதிராவிடர்களுக்கு வீடுவாங்க வட்டியில்லா கடன்

*பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலை வாழ் மக்கள், பழங்குடியினர் ஆகியோர், எல்லோருக்கும் இணையாக நிறைவான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் முதல்வர் எம்.ஜி.ஆர். தீவிர அக்கறை செலுத்தி வந்தார். அவரது ஆட்சி காலத்தில் அவர்களுக்காக பல சலுகைகளை செய்து சாதனை படைத்துள்ளார்.*

*1984—85ம் ஆண்டு வரை கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், ஆதி திராவிடரல்லாதோர் களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. கொடுக்கப்படும் மொத்தக்கடன் தொகை ரூ. 4,500—ல் ஆதி திராவிடர் பயனீட்டாளர்களுக்கு ரூ. 1,000 முதலீட்டு மானியமாகவும் மீதி ரூ.3,500 கடனாகவும் கொடுக்கப்பட்டது. இது தவிர ஆதி திராவிடர்கள் தாங்கள்*

*வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த வேண்டியது இல்லை. வட்டியை நிதி நிறுவனங்களுக்கு அரசே செலுத்தியது.*

*ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம், தேசிய கிராமிய வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராமிய நிலமற்றோர் வேலை வாய்ப்பு ஈட்டுறுதித் திட்டம் இவைகளின் மூலமாக ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடுகட்டித் தருவதால் 1985—86 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிடரல்லாத பொருளாதாரத்தில் நலிந்த பிரிவு மக்களுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்பட்டது. ஆனால் ஆதி திராவிடர்களுக்கு ஏற்கனவே 1984—85 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி மானியம் மட்டும் அரசு தொடர்ந்து வழங்கி கடனைத் தீர்த்தது.*

*தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியுதவியினைப் பெற்று நகரியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு அவைகளின் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்க நிதியுதவி அளித்தது. கிராமப் பஞ்சாயத்தில் உள்ளவர்களுக்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரையும், நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு ரூபாய் 25,000 முதல் ரூ. 80,000 வரையும் உறுப்பினர்களின் திருப்பி செலுத்தும் சக்திக்கேற்றவாறு கடன்கள் வழங்கப்பட்டன.*

## ஆதிதிராவிர்களுக்கு இலவச வீடுகள்

*1976—77 முதல் 1986— மார்ச் 31 வரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் மூலம் 65,855 வீடுகள் கட்ட ரூபாய். 159.32 கோடி வீடுகட்ட நிதியுதவி பெறப்பட்டது.*

*நகரிய வீட்டுவசதி திட்டத்தின் கீழும் இதுவரை அடைந்துள்ள சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும். ஆனால் கடந்த சுமார் பத்தாண்டுகளில் அதாவது 1976—77 முதல் 31.3.87 வரை 65.855 வீடுகள் கட்ட ரூபாய் 169.32 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1959ம்*

*ஆண்டிலிருந்து (அதாவது தமிழ்நாடு வீட்டுவசதிச் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து) 1976ம் ஆண்டு வரை அதாவது சுமார் பதினேழு ஆண்டுகாலத்தில் 22501 வீடுகள் கட்ட ரூபாய் 29.91 கோடிதான் கடனாகக் கொடுக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.*

## கணக்கெடுப்பு புள்ளிவிபரம்

*1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுக்கின் படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள்தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேர், இது மொத்த மக்கட்தொகையில் 18.35 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர், இம்மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் தொகை 46.76 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர்களில் 29.67 விழுக்காடும் பழங்குடியினரில் 20.45 விழுக்காடும் கல்வியறிவு பெற்றுள்ளனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தில் பல்வேறு பணிகள் கீழ்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

## கல்லூரி படிப்பு இலவசம்

*தமிழ்நாட்டில் 12வது வகுப்புவரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகளில் 19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*1985—86ஆம் ஆண்டுகளிலிருந்து முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவ மாணவியருக்கும் இலவசமாக பாடப் புத்தகங்கள் கல்வித்துறையால் வழங்கப்படுகின்றன. மெட்ரிக்*

*படிப்பிற்கு முந்தைய படிப்புப் பயில்கின்ற தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மாணவர்கட்கும் அவர்களது பெற்றோர்களின் வருட வருமானம் ரூ. 6,000த்திற்கு அதிகப் படாமல் உள்ளவர்கட்கு உதவித்தொகை வழங்கப் பட்டது.*

*தற்பொழுது ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு உதவித்தொகை பெறுபவர் ஆணா. பெண்ணா என்பதைப் பொறுத்தும் படிக்கின்ற படிப்பின் தன்மையைப் பொறுத்தும் உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு ரூ.250லிருந்து ரூ.350 வரை வழங்கப்படுகிறது.*

*முதுநிலைப் பட்டப்படிப்பு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலாத மாணவர்கள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் எந்த பாலினர் மற்றும் எந்த படிப்புப் பயிலுகின்றனர் என்பதைக் கணக்கில் கொண்டு பராமரிப்பு உதவித் தொகை மாதத்திற்கு முறையே ரூ.50லிருந்து ரூ.120 மற்றும் ரூ.75லிருந்து ரூ.200 வரை தற்போது தரப்படுகிறது.*

*மாநிலத் திட்டத்தின் கீழ் இவ்வுதவித் தொகை மாதத்திற்கு ரூ. 50 லிருந்து ரூ. 75 வரை கொடுக்கப்படுகிறது. மேற்கண்ட இவ்விரு திட்டங்களின் கீழ், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 62,000 ஆதிதிராவிட மாணவர்களும் 300 பழங்குடி வகுப்பு மாணவர்களும் பயனடைகிறார்கள்.*

## புத்தகம் வைக்க அலமாரி இலவசம்

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களில் 7 மாணவர்களுக்கு ஒரு ஜதைப் புத்தகம் என்ற விதத்தில் ரூ.2,300 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதோடு அலமாரி வாங்குவதற்கு*

*5 ஜதைப் புத்தகங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ரூ.1,000, இதர செலவுக்காக ரூ.100 வழங்கப்பட்டன.*

*1982—83ஆம் அண்டில் இது 4 ஆதிதிராவிடர். பழங்குடியினர் இன மாணவர்களுக்கு ஒரு ஜதை என்ற விகித்தில் ரூ. 5000 என்று உயர்த்தப்பட்டது. அது மேலும் 3 மாணவர் களுக்கு ஒரு ஜதை என்ற விகிதத்தில் ரூ. 5000 என்று 1985—86 லிருந்து மாற்றப்பட்டது. 1985—86—ல் இதற்காக ரூ. 28.75 இலட்சம் செலவிடப்பட்டது.*

## இலவசமாக 728 தங்கும் விடுதிகள்

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில், ஒன்று முதல் எட்டுவரை உள்ள வகுப்புகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக இரண்டு ஜதைச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. பழங்குடியினர் மாணவர்களின் பயன் கருதி அரசு 170 உண்டி, உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 10,795 பழங்குடியினர் மாணவர் களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் முதல்வரின் சத்துணவுத் திட்டமும் அமல்படுத்தப்பட்டு வருகிறது.*

*ஆதி திராவிட மாணவர்கள் இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கல்வி பயில ஆதி திராவிடர்களுக்கு 728 விடுதிகளும், பழங்குடியினர்களுக்கு 22 விடுதிகளும் அரசால் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகளில் 51,924 ஆதிதிராவிடர் மற்றும் பிற மாணவர்கள் தங்கிக் கல்வியைத் தொடருகிறார்கள்.*

*தங்கிப் படிப்பவர்களுக்காக எல்லா வசதிகளையும் கொண்ட விடுதிகள் படிப்படியாக கட்டப்பட்டன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக் காகச் செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டில் 50*

*விழுக்காடுகளுக்கு மேல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்விக்கெனச் செலவிடப்படுகிறது.*

## மாடுவாங்க மானியம்

*தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர்களில் சுமார் 7.40 இலட்சம் பேர் விவசாயிகள் ஆவர். இவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக, பாசனக் கிணறுகள், வெட்டுவதற்காக ரூ. 6000, உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ.600 மான்யமாக வழங்கப்படுகின்றது.*

*ஆதிதிராவிடர்கள் கறவை மாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவதாலும் பாலுக்கு அதிக தேவையிருப்பதாலும், பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் இவர்களுக்காக நிறுவப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கறவை மாடும் ரூ.2,500 விலையாகிறது. இதில் ரூ.833 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் மானியமாக வழங்கப்படுகிறது. எஞ்சிய ரூ.1,667 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் கடனாக வழங்கப் படுகிறது. ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு கறவை மாடு வாங்குவதற்கு தகுதியுடையவர் ஆவர்.*

## அரசு பணிக்கு சிறப்பு பயிற்சி

*தமிழ்நாடு தேர்வாணைக்குழுவால் நடத்தப்படும் தொகுதி—4 பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கு முன்பயிற்சி 1966ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்படுகிறது. வழக்கறிஞர் தொழில் செய்ய விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகளுக்குப் பதிவு செய்யவும், அறை வாடகை போன்ற செலவினத்திற்குக் கடனாக ஒவ்வொருவருக்கும் ரூ. 750,*

*சட்டபுத்தகங்கள், மரச் சாமான்கள் முதலியவை வாங்குவதற்கு ரூ. 750 அரசு மானியமாக வழங்குகிறது.*

## 10 லட்சம் பேருக்கு இலவச வீட்டுமனை

*ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் 3 சென்ட் நிலம் வீட்டு மனையாக ஒப்படைப்பு செய்யப்படுகிறது. இதுவரை 4,58,568 வீட்டு மனைகளுக்கு நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. இவற்றைச் சேர்த்து இதுவரை 10 இலட்சத்திற்கும் அதிகமான ஆதிதிராவிடர் குடும்பங் களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன.*

*ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 1974ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுவரை இக்கழகத்தின் மூலம் 57,884 வீடுகள் ஆதிதிராவிடருக்காகக் கட்டப் பட்டுள்ளன. தொடக்கச் செலவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பும் தாட்கோ விடமே விடப் பட்டிருந்தது. 1,51,276 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் தாட்கோ இதவரை ரூ. 662,26 இலட்சம் வழங்கியுள்ளது.*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் என்ற பிரிவின் கீழ், ஒரு கிணற்றுக்கு ரூ. 7,500 செலவு என்ற முறையில் குடிநீர் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ரூ. 13,000 செலவில் தரைமட்ட சென்டிரிபிகல் குழாய்க் கிணறுகளும் ரூ. 15,000 செலவில் ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டிருக் கின்றன.*

*இந்த அரசு, மாநிலத்தில் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. நடமாடும் காவல் படை பிரிவுகள் 1985 டிசம்பர் முடிய 11,531 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,134 வழக்குகள் நீதி மன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.*

## கலப்புத் திருமணத்திற்கு உதவி

*குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24ஆம் தேதி முடிய தீண்டாமைக் கொடுமை ஒழிப்பினைப் பிரச்சாரம் செய்வதற்காக "தீர்த்த யாத்திரை" என்ற செய்தித் திரைப்படம் தயாரிக்கப்பட்டு அதை கிராமங்களில் திரையிட்டுக் காட்ட கூண்டு உந்த வண்டி வாங்கப்பட்டிருக்கிறது.*

*கலப்பு மணம் புரிந்த தம்பதியருக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படு கின்றன. இவை தவிர, இத்தகைய தம்பதியரின் இணைந்த ஆண்டு வருமானம் ரூ. 6000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமணச் செலவிற்காக ரூ. 300 வழங்கப்படுகிறது.*

*கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒருங்கிணைந்த எம். பி. பி. எஸ். முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 12 இடங்களும், சித்த மருத்துவ கல்லூரியில் 2 இடங்களும் முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும், நாட்டுமுறை மருந்தாக்கப் பட்ட பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கல்வி நிலையங்களில் முறையாகப் பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் தொழில் கல்வி நிலையங்கள் உட்பட ஒவ்வொரு பிரிவிலும் 19 விழுக்காடு என இட ஒதுக்கீடு தற்பொழுது வழக்கத்தில் உள்ளது.*

## அரசு பணிகளில் 80 சதவீத இடஒதுக்கீடு

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்*

பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்கப் பல்வேறு குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர்களின் மேம் பாட்டைத் துரிதபடுத்துவதற்காக அரசு 1980—81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினைச் செயல்படத்தி வருகிறது.

ஆதிதிராவிட விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வு வளம்பெற 25 விழுக்காடு மானிய விலையில் விவசாய இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ், நிலமில்லாத ஆதிதிராவிடர்களுக்கு நிலங்களும் வழங்கப்படுகிறன. இந் நிலத்தை பண்படுத்தி சாகுபடிச் செய்ய ஒரு எக்டருக்கு ரூ. 2,500 நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1985—86—ஆம் ஆண்டில் சிறப்பு மத்திய உதவியாக அரசு ரூ. 13,39 கோடி அளித்துள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங் களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்காக உதவிகள் நல்கப்பட்டன.

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கட் தொகை 5.20 இலட்சமாகும். அவை மொத்த மக்கட்தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் அதிகமாக உள்ள ஒன்பது பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. கிட்டத்தட்ட 2,10 இலட்சம் தமிழகப் பழங்குடியினர் இந்த 9 பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களான தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, சிறு பாசனம், மண்வளப் பாதுகாப்பு, சிறு தொழில், தேனீ வளர்த்தல் போன்றவை செயல்படுகின்றன.

மேற்கண்ட தொழிலுக்குத் தேவையான இப்பொருள் கள் தென்னாற்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை தவிர (75 சதவீதம் மானியம் தரப்படுகிறது.) மற்றப்பகுதிகளின் பழங்குடியினருக்கு 50 சதவீதம்

*மானியமாகக் கொடுக்கப் படுகிறது. 1985—86ல் உயர்ரக விளைச்சல் தரக்கூடிய விதைகள் மற்றும் நாற்றுகள் வினியோகிக்கும் திட்டம் 3000 ஏக்கர் பரப்புள்ள பழங்குடியினர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டது.*

*பட்டுப்புழு வளர்க்கும் தொழிலில் 400 பழங்குடியினர் குடும்பங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 50 விழுக்காடு மானிய விலையில் 1332 பழங்குடியினர் குடும்பங்களுக்குக் கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 331க்கு மேற்பட்டபழங்குடியினர் குடும்பங்களுக்குத் தேனீ வளர்ப்புக்கூடுகள் வழங்கப்பட்டன.*

*ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் வாயிலாக 28,884 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினருடைய பொருளாதாரத்திற்குப் பாதிப்பு உண்டாக்கக் கூடிய இடைத் தரகர்களின் நடவடிக்கை களைத் தடுக்கும் பொருட்டு 12 பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப்ஸ்) இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*இருபது அம்சத் திட்டத்தில் ஏழாவது அம்சம் ஆதிதிரா விடர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதற்கு வழிவகைச் செய்கிறது. 1980—85 ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் 19,999 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறும் என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும் இத்திட்டக் காலத்தில் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளா தாரத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளன.*

## ஆதிதிராவிடர் நலம்பெற அரியதிட்டங்கள்

*பன்னெடுகாலமாக அல்லல்பட்டு வந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிகாலத்தில்தான் விழிப்புணர்ச்சி பெற்று, சமூகப் பொருளாதார முன்னேற்ற மடைந்தனர். அவர்களுக்காக அரிய பல திட்டங்களை வளரும் தமிழகத்தில் உருவாக்கி செயல்படுத்தினார்.*

*1977—78—ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது சுமார் ரூ.16 கோடியாகும். 1981 நிதியாண்டில் சற்றேறக் குறைய 48 கோடி ரூபாய் ஒதுக்கியதோடு மட்டுமல்லாமல், சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் நலத்துறை அல்லாது பிற துறைகளின் வாயிலாக ரூ.120 கோடியே 76 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அம்மக்களுக்காகப் பயன் நல்கிடும் பல திட்டங்கள் செம்மையாக செயல்படுத்தப் பட்டு வந்தன.*

*ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் வாழ்வு சிறப்பாக அமைய அவர்களுக்கு அடிப்படைத் தேவை கல்வியேயாகும். இத்துறையின் கீழ் 961 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளும் 170 பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும், 765 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் / மாணவியர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.*

*விடுதியில் தங்கிப்பயிலும் மாணவர்கட்கு அனைத்துச் சுகாதார வசதிகளும் கிடைக்கும் பொருட்டு வாடகைக் கட்டடங்களில் நடத்தப்படும் விடுதிகள் அனைத்தையும் அரசின் சொந்தக்கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. 1981 ல் இதற்காக ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் செலவிடப்பட்டது.*

*21 ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்*

பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் அரசு உயர்த்தியுள்ளதின் மூலம் இம்மாணவர்களுடன் மற்றைய மாணவர்களும் கணிசமான பலனை எய்திட வாய்ப்பளிக்கப்பட்டது. மேலும் இதற்காக முதல்வர் எம்.ஜி.ஆர். 81 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்.

இதே போல் 20 முதுநிலைப் பட்டதாரி பெற்ற ஆசிரியர் களையும் 45 பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் 45 பட்டம் பெற்ற ஆசிரியர்களையும் புதியதாக நியமிக்க உத்தரவு பிறப்பித்தார்.

சட்டப் படிப்பு முடித்த பிறகு மாணவர்கள் தொழிலில் ஈடுபடக் கடன் மற்றும் மானியத்தொகை வழங்கி வருகின்றோம். பல்வேறு சட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்க ஆண்டு தோறும் 20 சட்டப்பட்டதாரிகளுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க புரட்சித் தலைவர் அரசு தொடங்க ஆணைப்பிறப்பித்தது. பயிற்சி பெறுவோர் மாதம் ரூ.500ம் உதவித்தொகையும் பயிற்சி அளிப்பவருக்கு கௌரவத் தொகையாக ரூ.5000 வழங்கப்பட்டது.

அனைத்திந்தியப் பணிகளில் தமிழ்நாட்டிலிருந்து கணிசமான அளவு மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில்லை என்ற குறைபாட்டினைக்களைந்திட, சென்னையில் பட்டதாரி மாணவர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளித்து அனைத்திந்தியப் பணிகளில் சேர வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் முன்னோடி பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப் பட்டு நடைபெற்று வருகிறது. இது போன்ற முன்னோடிப் பயிற்சி நிலையங்கள் திருச்சியிலும் மதுரையிலும் அமைக்கப்பட்டது.

அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டு மனை பட்டா வழங்குதல் பாரதப்பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தை, புரட்சித் தலைவர் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. 1949 முதல் 1977 வரை 2

*இலட்சத்து 62 ஆயிரம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1977 முதல் 1986 மார்ச் வரை இதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரத்து 870 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டில் இதற்கென ரூ.1 கோடி செலவில் நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 25 ஆயிரம் குடும்பங்கள் வீட்டுமனைப்பெறுவர். இது மட்டுமல்லாமல் எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்களுக்கும் மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்துக் கொடுப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தியது. இவர்களுக்கு வீட்டுமனை மட்டும் அளித்தால் போதாது. அவர்களுக்கு வீடும் கட்டித்தரப்பட வேண்டும் என்ற அரிய நோக்குடன் "தாட்கோ" என்னும் நிறுவனத்தின் மூலம் ஒரு வீட்டிற்கு ரூ.6 ஆயிரம் செலவில் வீடுகள் கட்டித்தரப்பட்டன. மலைப்பிரதேசத்தில் ஒரு வீட்டிற்கு ரூ.9 ஆயிரம் செலவில் வீடு கட்டப்பட்டு உதவிகள் அளிக்கப்பட்டன.*

*இது மட்டுமல்லாமல் இதுவரை தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தின் மூலமும் மொத்தம் 38 ஆயிரத்து 560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 1981ல் 47 ஆயிரத்து 565 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

*ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கத் தேவையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொண்டது.*

## ஈமச்சடங்குக்கு உதவி

*எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஆதிதிராவிடர் குடும்பங்களில் யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால் அவர்களின் ஈமச் சடங்குக்காக இதுவரை ரூ.50 அளிக்கப் பட்டு வந்ததை நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ரூ.100 உயர்த்தி தந்துள்ளார்.*

*சாதி சமய பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என எம்.ஜிஆர்.அரசு தீவிரமாகச் செயல்பட்டு வந்தது. தீண்டாமை ஒழிப்பில் கலப்புத்திருமணம் ஒரு மனமாற்றத்திற்கு அடிகோலும் என்பதை உணர்த்த மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கலப்புத் திருமணத் திட்டத்தை அறிமுகப் படுத்தினார்.*

## பழங்குடியினர் நலன்

*பழங்குடியினர் நலனுக்காக, துணைத்திட்டம் வகுக்கப் பட்டு 1976—77—ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் ஒரு கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு ரூ.9 கோடியே 46 இலட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது. பல்வேறு அரசுத்துறைகள் மூலம் பலமுனைத் திட்டங்கள் பழங்குடியினர் திட்டத்திற்காகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பழங்குடி மக்கள் மீது அக்கறை கொண்டு அவ்வப்போது ஆய்வு செய்து இத்திட்டங்கள் செயல்படும் விதம் பற்றி நல்ல பல ஆலோசனைகளை வழங்கி எம்.ஜிஆர் வழங்கி வந்தார்.*

*மதுரை மாவட்டத்தில் தோப்பூர் என்கின்ற கிராமத்தில் கூட்டுறவு நூற்பாலை தொடங்கப்பட்டது. இதில் 225 ஆதிதிராவிடர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கென அரசு ரூ.1 கோடி 5 இலட்சம் செலவிட்டது.*

## ஆதிதிராவிடர்களுக்கு கூட்டுறவு நூற்பாலை

*மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்திய சத்துணவுத் திட்டம் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பல இலட்சக்கணக்கான*

*குழந்தைகள் பயன்பெற்று வருவதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் மட்டும் சுமார் 25 இலட்சம் பேர் பயனடைந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.*

*ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய மக்களும் சமூக பொருளாதார மேம்பாட்டை அடைந்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு அவர்களை அழைத்துச் செல்ல எம்.ஜி.ஆர்.அரசு முனைப்புடன் செயல்பட்டது.*

## ஆதிதிராவிடர் பகுதிகளில் தனிகோவில்

*தீண்டாமை ஒழிப்பில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். முனைப்போடு பல திட்டங்களை செயல்படுத்தினார். பெரியாரின் தீண்டாமை ஒழிப்பை கொள்கையைக் கொண்டு பேரறிஞர் அண்ணா வழியில் ஆட்சியை நடத்தியவர் எம்.ஜி.ஆர். அதற்கு ஒரு சான்றாகத்தான், ஆதிதிராவிட மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் கோவில்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி பல கோவில்கள் கட்டப்பட்டன.*

## ஆதிதிராவிடரின் ஒரு சோகப் பின்னணி ஒழிக்கப்பட்டது

*தன்னிறைவுத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுள் ஒரு அம்சமாக ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் மயானத் திற்கும் பாதை அமைத்தல் என்பதாகும். இது பற்றிய சோகப் பின்னணி அடியோடு ஒழிக்கப்பட்டதை இங்கே சொல்லியாக வேண்டும்,*

*பெரும்பாலான ஆதிதிராவிடர் குடியிருப்புகள் வயல் வெளியின் அருகிலேயே அமைந்து இருந்தன, மயானமோ வயல்களைத் தாண்டி அமைந்திருந்தது, ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்குச் செல்ல வயல் நடுவே செல்லும் வரப்புதான் ஒரே பாதை.*

*வயல்களில் பயிர் வளராத காலங்களில் பிணங்களைச் சுமந்துசெல்வதில் ஆதிதிராவிடர்களுக்குப் பிரச்சினை இருந்ததில்லை. ஆனால். பயிர் வளர்ந்துவிட்டால் பிணத்தைச் சுமந்து கொண்டு ஒற்றையடிப் பாதையான வரப்பு வழியே நால்வர் செல்ல முடியாது. மீறிச்சென்றால் பயிர்களை மிதித்துச் சென்று நிலச் சொந்தக்காரர்களின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதிக்க நேரிடும். இந்த அவலமான நிலைதான் நடைமுறையில் இருந்து வந்தது.*

*எனவே, பயிர் வளர்ந்து நிற்கும் காலங்களில், பிணத்தைத் தோளில்தான் தூக்கிச் சென்று புதைக்க வேண்டிய இக்கட்டான நிலையில், இருந்தனர், ஆதிதிராவிட மக்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஆதிதிராவிடர் மக்களின் இந்த அவல நிலையை முதலில் களைந்தது மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அமைந்த அரசு மட்டுமே.*

*மயானங்களுக்குப் பாதை அமைக்கும் திட்டத்தையும் தன்னிறைவுத் திட்டத்தில் ஓர் அம்சமாக இணைத்து ஆதிதிராவிடர் மக்களின் இந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.*

*அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும் தன்னிறைவுத் திட்டத்தை கிராமப்புறங்களில் நிறைவேற்றியதோடு இந்த அரசு திருப்தி அடைந்துவிட வில்லை.*

## வெற்றியின் விரிவாக்கம்

*கிராம மக்கள் பெற்றுள்ள இதே நன்மைகளைப் பேரூராட்சி களும்—ஏன் நகராட்சிகளும் பெற வேண்டும் என்பதற்காகத் தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூராட்சி களுக்கும். நகராட்சிகளுக்கும் எம்.ஜி.ஆர். அரசு விரிவுபடுத்தியது.*

*1982—83ஆம் ஆண்டில் 146 பேரூராட்சிகளிலும், 1983—84 ஆம் ஆண்டில் 200 பேரூராட்சிகளிலும். , 1984—85 ஆம் ஆண்டில் எஞ்சிய பேரூராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.*

*கிராமங்களின் வளர்ச்சிக்கென ஒவ்வொரு ஒன்றியத் திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஆண்டுதோறும் இந்த அரசு அதிகரித்துள்ளது. 1976—77 ஆம் ஆண்டு கிராம சமுதாய வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட தொகை ஓர் ஒன்றியத்திற்கு 31 இலட்சம் மட்டுமே.*

*இத்தொகையை 1980—81ம் ஆண்டிலேயே ஏறத்தாழ இரு மடங்காக உயர்த்தி அளித்துள்ளது, எம்.ஜி.ஆர். அரசு.*

## நியாய விலைக்கடைகளில் புகார்புத்தகம்

*ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனையில் புரட்சித் தலைவர் அரசு தனி அக்கறை செலுத்தி வந்தது. அதன்படி ஏழை எளிய மக்கள் பொருட்களை வாங்கி பயன்பெறும் நியாய விலைக் கடைகளில் தனி கவனம் செலுத்தி வந்தது. அதன்படி, நியாய விலை கடைகளில் குறைபாடுகள் இருந்தால், ஒவ்வொரு நியாய விலைக் கடைகளில் வைக்கப்பட்டுள்ள புகார் புத்தகத்தில் அதனை எழுதலாம் என்று அரசு அறிவித்தது.*

*தன்னிறைவுத் திட்டம், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டம் ஆகியவை சமுதாயத்தின் பொதுப்படையான தேவைகளைத் தீர்த்து வைக்க அதனைத் தொடர்ந்து சமுதாயத்தின் அங்கமாகிய சிறு, குறு விவசாயிகள் நிலமற்ற வேளாண்மைத் தொழில்கள் மற்றும் ஊரகக் கைவினைஞர்கள் ஆகியோரின் வாழ்வு வளம்பெறவும் எம். ஜி. ஆர் அரசு தளராது பாடுபட்டு வந்தது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் நன்மைக்கென சிறு, குறு விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் பெரும் திட்டம் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டது.*

## ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அரசு உதவி

*1983 சூலைத் திங்கள் முதல். தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வந்த இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூ. 5 லட்சம் அளிக்கப்பட்டது. இத்தொகையில் இருந்து சிறுபாசனக் கிணறுகள் தோண்டவும், நீர் ஏற்று இயந்திரங்கள் நிறுவவும், நிலத்தை வளப்படுத்தவும் எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் மட்டுமின்றி பழம் தந்து பணம் தரும் மரங்களை நடவும், வளர்க்கவும் சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு உதவி வழங்கப்பட்டது. இதோடு உரம் மற்றும் விதைகள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளை வாங்கவும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தக்க உதவிகள் அளிக்கப்பட்டன.*

*இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் பெரும் திட்டத்தின்கீழ் 1983—84ஆம் ஆண்டில் ரூ, 1468.52 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதில் 972.38 லட்சம் செலவழிக்கப் பட்டது. 1983—84 ஆம் ஆண்டில் ரூ1889.98 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதில் ரூ. 1431.46 லட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் சிறுபாசன வசதியின் கீழ் ரூ. 1983—84 ஆம் ஆண்டில் 27061 சிறு, குறு விவசாயிகளும் 1984—85 ஆம் ஆண்டில் 48551 சிறு குறு விவசாயிகளும் பயன்பெற்றுள்ளனர். இதன் விளைவாக 1983—84 ஆம் ஆண்டில் 30238 எக்டேர் நிலப்பரப்பும் 1984—85 ஆம் ஆண்டில் 56205 எக்டேர் நிலப்பரப்பும் பாசன வசதி பெற்றுள்ளன.*

## கிராம அதிகாரிகள் நியமனம்

*தமிழ்நாட்டில் பணியாற்றும் அதிகாரிகள் முழுமை யான நிர்வாகத் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அதிக*

அக்கறை காட்டினார். அதன் அடிப்படையில் கிராம அதிகாரிகளை தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்காக தமிழ்நாடு தேர்வாணையம் தேர்வுகளை நடத்தி கிராம நிர்வாக அதிகாரிகளை தேர்ந்தெடுக்கும் முறையை முதமலமைச்சர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்காக புதிதாக கட்டப்பட்ட அலுவலக கட்டிடத்தை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 8.12.80 அன்று திறந்து வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகே தப்பணம்பட்டி கிராமத்தில் 21 லட்சம் ரூபாய் செலவில் ஜம்புநதி அணைக்கட்டு மற்றும் நாராயணப்பேரி கால்வாய்திட்டங்களுக்கு 1980ம் ஆண்டு டிசம்பர் 12ந் தேதி அடிக்கல் நாட்டப்பட்டடது.

இந்தியாவிலேயே முதன் முறையாக திருப்பூரில் பனியன் தொழிலுக்காக சிட்கோ மூலம் தனியாக தொழிற் கூடங்கள்கட்டப்பட்டன.

## மலைவாழ் மக்களுக்கு கல்வி

உயர்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10ம் வகுப்புவரை படிக்கும் ஆதிதிராவிட மலைவாழ் மக்களின் பிள்ளை களுக்கு தினமும் மாலையில் பாட வேளைக்குப் பிறகு ஒன்றரை மணி நேரம் ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்கள் கற்று கொடுக்கும் திட்டத்தை முதலமைச்சர் எம். ஜி. ஆர் அமல்படுத்தினார்.

## கலப்பு மணம் – தாலிக்குத் தங்கம்

கலப்பு மணம் செய்வோருக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் 1981ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# புதிய நகரங்கள் அமைப்பு

## மறைமலை நகர்

*சென்னையிலிருந்து 43 கிலோ மீட்டர் தூரத்தில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 1375 எக்டேர் நிலப்பரப்பில் ஒரு இலட்சம் மக்களுக்கென எல்லா வசதிகளுடன் கூடிய மறைமலை நகர் என்ற புதிய நகர் ஒன்றை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கியது. ஏறக்குறைய 600 எக்டேர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டு 85 எக்டேர்களில் வீடுகளும், 202 எக்டேர்களில் தொழிற்சாலை மற்றும் அதைச் சார்ந்த பணிகளும் அமைக்கப்பட்டன. பின்னர், 24 எக்டேர்களில் வீடுகளும் 16 எக்டேர்களில் தொழிற்சாலைகளுமாக விரிவுபடுத்தப்பட்டது.*

*1987 வரை, 1282 மனைகளும், 1632 வீடுகளும் முடிக்கப்பட்டு மக்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. 820 மனைகளுக்கான வேலைகள் அதன்பின் மேற்கொள்ளப் பட்டன. 1986 முடிய ஏறக்குறைய 1300 குடும்பங்கள் இந்த இடத்தில் குடியேறியுள்ளன.*

## மணலியில் 75 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள்

*சென்னை பொன்னேரி சாலையில் சென்னையிலிருந்து 15 கி. மீட்டர் தூரத்தில் உள்ள மணலியில் ஏறக்குறைய 1000 எக்டேர் நிலப்பரப்பில் 75,000 குடும்பங்களுக்கான எல்லா வசதிகளுடன் கூடிய வீட்டு வசதி திட்டம் ஒன்றையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் உருவாக்கியது.. இதே பகுதியில் 60 எக்டேர்களில் உலக வங்கியின் உதவியுடன் தன்னிறைவுத் திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. மொத்தம் 3820 மனைகளும், 1760 வீடுகளும் இங்கு உருவாக்கப்பட்டன.*

## இரும்பு வியாபாரத்திற்கு தனிஇடம்

*பின்னர், ஜார்ஜ் டவுனில் போதுமான வசதிகளின்றி இயங்கிவந்து கொண்டிருந்த இரும்பு மற்றும் எஃகு வியாபாரத்தைச் சாத்தாங்காடு என்ற இடத்தில், 106 ஏக்கர் நிலப்பரப்பில் மேலான வசதியுடன் கூடிய நவீன மார்க்கெட் ஒன்றை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைத்தது.*

*65,000 குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டது. நில உரிமை மற்றும் வீடு கட்ட—மேம்பாடு செய்யக் கடனுதவி வழங்கப்பட்டது.*

*350 சிறுதொழிற்சாலைகள் மற்றும் 47 குடிசைத் தொழில் நிறுவனங்களின் மூலம், 9,000 ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டது.*

*350 பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் 22 மருத்துவ மையங்கள் மூலம் குடிசைப்பகுதியில் வாழ்ந்து வந்த தாய்மை எய்திய பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கு உடல் நலப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.*



# தரணிப்போற்றும் “தன்னிறைவுத் திட்டம்” தந்த எம்.ஜி.ஆர். அரசு

## மாற்றி அமைக்கப்பட்ட “பெருநகர்வளர்ச்சி குழுமம்”

*சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1972ஆம் ஆண்டு தற்காலிக அமைப்பாக நிறுவப்பட்டு 1975ஆம் ஆண்டு சட்டப்பூர்வ அமைப்பாக மாற்றப்பட்டது. நீண்ட காலத் திட்டமிடுதல், சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் போன்றவை இக்குழுமத்தின் முக்கிய பணிகளாகும்.*

*சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 1978ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. 2 பல்துறை சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை ஒருமுகப்படுத்தி கண்காணித்து வருவதற்காக இது, மாற்றி அமைக்கப்பட்டது.*

*அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர், முகப்பேர், மதுரவாயல் மற்றும் மணலிப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டங்கள் மூலம் 50,500 நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு மனை மற்றும் வீடுகள் வழங்கப்பட்டன.*

*65,000 குடிசைப் பகுதிவாழ் கும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டது. நில உரிமை மற்றும் வீடு கட்ட மேம்பாடு செய்யக் கடனுதவி வழங்கப்பட்டது.*

*350 சிறுதொழிற்சாலைகள் மற்றும் 47 குடிசைத் தொழில் நிறுவனங்களின் மூலம், 9,000 ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.*

*350 பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் 22 மருத்துவ மையங்கள் மூலம் குடிசைப்பகுதியில் வாழ்ந்து வந்த தாய்மை எய்திய பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கு உடல் நலப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.*

## சாலைவசதி, பாலங்கள், மிதிவண்டி தனிப்பாதையும்

*17.5 கிலோ மீட்டர் உள்வட்டச்சாலை, 14.5 கிலோ மீட்டர் வரை சென்னை திருவள்ளூர் சாலை அபிவிருத்தி, 9 சுரங்கப் பாதைகள் மற்றும் 7 பாலங்கள், இரண்டு நிலைப்பிரிவுகள், 200 கிலோ மீட்டர், மிதிவண்டிக்கான தனிப்பாதைகள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகரில் இந்த அரசு 102 பாலங்களையும் 8 பாதசாரிகள் சுரங்க நடை பாதைகளையும் கட்டி முடித்து திறந்து வைக்கப்பட்டது.*

*திருச்சியில் பாலக்கரையிலும், சென்னை மாநகரில் நெல்சன் மாணிக்கம் சாலையிலும் திருத்தணியிலும் ஏற்கெனவே அமைந்திருந்த இருப்புப் பாதைகளுக்குப் பதிலாக மூன்று வாகன சுரங்கப் பாதைகள் கட்டப் பட்டுள்ளன. இவற்றைத் தவிர 43.357 கி.மீ நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன.*

*1985—86 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின்கீழ் ரூ, 43.52 கோடியும், திட்டம் சாராப் பணிகளில் கீழ் ரூ. 46.33 கோடியும் செலவிடப்பட்டது.*

*மதுரை மாவட்டம், தேனி அருகே கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ரூ. 7 லட்சம் செலவில் பாலம் கட்டப் பட்டு மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.*

*தமிழ்நாட்டில் 1980—81ம் ஆண்டில் 120 ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்ற முடிவு எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.*

## 6014 கி.மீ. தூரம் சாலைகள்

*ஊரகச் சாலைகள் திட்டம் கட்டம் கட்டமாக நிறை வேற்றப்பட்டது. ரூ. 7567.19 இலட்சம் மதிப்பீட்டில் 6363.66 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளுக்கு 6 கட்டங்களாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. 31.3.1985 வரை 2248 பிரதான குடியிருப்புகளும் குறைந்த அளவு மக்கள் தொகையில் உள்ள 1977 இடைப்பட்ட கிராமங்களும் பயன்பெறும் வண்ணம் ரூ. 5831 இலட்சம் செலவில் 6014 கி. மீ. மொத்த நீளம் கொண்ட சாலைப்பணிகள் முடிவடைந்தன. ரூ.10 கோடி மதிப்பீட்டி லான 7வது கட்டப் பணிகளுக்கான புதிய பிரேரனைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து நிறைவேற்றப்பட்டது.*

*ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் 1984—85 ஆம் ஆண்டில். ஒதுக்கீடு செய்யப் பட்ட ரூ. 11.40 கோடி தொகை செலவிடப்பட்டது. 31.3.85 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 1940 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டன.*

## ஊரக வளர்ச்சித்துறையின் ஒப்பற்ற பணிகள்

*வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் வறுமைக் கோட்டின் பிடியிலிருந்து விடுபட்டு வளமைக் கோட்டையை அடைய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர் நமது அன்புக்குரிய முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் பதவி ஏற்று ஏறத்தாழப் பத்தாண்டுக் காலத்திற்குள் கிராமப்புற முன்னேற்றத்திற்கென மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றியுள்ள பணிகள், இதுவரை எந்த ஆட்சியாலும் செய்யப்படவில்லை என்பதை புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.*

## தன்னிறைவுத் திட்டம், தன்னிகரில்லாத்திட்டம்

*கிராமங்களின் நல்வாழ்விற்கென மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிமுகப்படுத்திய திட்டங்களுள் முதலில் குறிப்பிடத்தக்கது, தன்னிறைவுத் திட்டம் ஆகும். இதன் நோக்கம் கிராமப்புறங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பதுதான்.*

*அவைகள் பொருதாளாதார முன்னேற்றதிற்கு முதல் படியாக அமையும் என்ற சீரிய நாக்கு சிந்தனையோடு மாண்புமிகு முதல்வர்எம்.ஜி.ஆர். அறிவித்த இந்த திட்டம், இந்தியாவிலேயே இது போன்ற திட்டம் இதுவரை இயற்றப்படவில்லை என்ற தனிச்சிறப்பைக் கொண்டது.*

*இந்தியா விடுதலைப் பெற்று எத்தனையோ ஆண்டுகள் கழிந்தபின்பும் அடிப்படை வசதி இன்றித் தவித்த கிராமங்களுக்கு மிகக்குறுகிய காலத்தில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமையின் காரணமாகத் தன்னிறைவுத் திட்டம் தன்னிகரற்ற திட்டம் என மக்களின் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெற்றது.*

*குடிநீர்வசதி, சிறு பாலங்கள், பள்ளி கட்டடங்கள், ஊரக மருந்தகங்கள், இணைப்புச் சாலை வசதிகள், தாய் சேய் நல விடுதிகள், மயானங்களுக்குப் பாதை வசதி போன்ற பல்வேறு அடிப்படைத் தேவைகளைத் தன்னிறைவுத் திட்டம் தீர்த்து வைத்துள்ளது. ஏறத்தாழ முப்பதாண்டுக் காலத்திற்கு மேலாகத் தீர்க்கப்படாத பிரச்சனைகள் தன்னிறைவுத் திட்டம் மூலம் மூன்றே ஆண்டுகளில் தீர்த்து வைக்கப் பட்டுள்ளன.*

*1980—81 ஆம் ஆண்டு 69 ஒன்றியங்களிலும், 1981—82ஆம் ஆண்டு 150 ஒன்றியங்களிலும், 1982—83 ஆம் ஆண்டு 159 ஒன்றியங்களிலும் மூன்றே ஆண்டுகளில் மொத்தம் 115 கோடி ரூபாய் செலவில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.*



# பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக சாதனைகளும், ஜப்பானில் கப்பல் வாங்கிய எம்.ஜி.ஆரும்

### பயனற்ற கப்பல்கள் விற்பனை

*பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியைத் துரிதமாகவும், செம்மையாகவும் எடுத்துச் செல்வதற்காக 1974ம் ஆண்டு துவக்கப்பட்டது.*

*தமிழ் பெரியார் ஈ.வி.ஆர். மற்றும் தமிழ் அண்ணா ஆகிய இரு பழைய கப்பல்களை அக்கழகம் வாங்கியது. இவைகள் முறையே 1980 ஆம் ஆண்டும் 1981 ஆம் ஆண்டும் விற்கப் பட்டன. தூத்துக்குடி அனல் மின்நிலையம் ஏற்படுத்தப் பட்ட பின், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் பொறுப்பு அதிகமாகி, நிலக்கரியை எடுத்துச் செல்வதற் கான 20 ஆண்டு ஒப்பந்தத்தை அது தமிழ்நாடு மின்வாரியத் திடம் ஏற்படுத்திக் கொண்டது.*

*தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கல்கத்தாவிலுள்ள கால்தியா துறைமுகத்திலிருந்து தூத்துக்குடிக்குச் சொந்த கப்பல்கள் மூலம் மிகக் குறைந்த செலவில் துரிதமாகக் கொண்டு வரும் பொருட்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 40 ஆயிரம் டன் அதிக எடையுள்ள புதிய வடிவமைப்புள்ள மூன்று பெரிய கப்பல்களை வாங்க அனுமதிக்குமாறு எம்.ஜி.ஆர். அரசு, மத்திய அரசை 1982 ஆம் ஆண்டு கேட்டுக் கொண்டது.*

## ஜப்பானில் எம்.ஜி.ஆர். வாங்கிய கப்பல்கள்

*1983 ஆம் ஆண்டு டிசம்பரில் ஒரு கப்பல் வாங்க மத்திய அரசு அனுமதியளித்தது. அக்கப்பலைக் கட்டியமைக்கும் பணியை ஜப்பானிலுள்ள "உறிட்டாச்சி ஜோசன்" எனும் கப்பல் கட்டும் நிறுவனம் மேற்கொண்டது. அக்கப்பல் கட்டி முடிக்கப் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் 2.8.1985 அன்று ஜப்பான் நாட்டில் முறைப்படி பெற்றுக் கொள்ளப்பட்டது.*

*அக்கப்பலுக்கு, "தமிழ் அண்ணா" என்று பெயர் சூட்டப் பட்டது. இக்கப்பலின் விலை 4991 மில்லியன் ஜப்பான் "யென்" களாகும்.*

*1985 ஜூலை மாதத் துவக்கத்தில் மேலும் இரு கப்பல்கள் மத்திய அரசு அனுமதியுடன் வாங்கப்பட்டது. அவ்விரு கப்பல்களும் மேற்கூறிய கப்பல் தளத்திலேயே கட்டப் பட்டன.*



# தமிழுக்கு எம்.ஜி.ஆர். செலுத்திய வரலாற்று காணிக்கை

**த**மிழ் மக்கள் மீது பற்றும் பாசமும் வைத்து, "இரத்தத்தின் இரத்தங்களே" என்பதையே தனது முதல் முழக்கமாக முன்வைக்கும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ் மீதும் அலாதி பிரியம் வைத்திருந்தார். இதை தன் சொந்த வாழ்க்கையில் கூட வெளிப்படுத்தி வந்துள்ளார். தான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் பல முறைகளிலும், பல வகைகளிலும், பல வழிகளிலும் சிறப்புச் சேர்த்தார் அவர். இதற்கு முன் ஆளவந்தோரும், அவருக்குப் பின் ஆண்டோரும் தமிழுக்கு அவர் சேர்த்த சிறப்பைப் போல சிறப்புச் சேர்க்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. சிகரத்தைத் தொட்ட அவர் தமிழ் உணர்வை விரிவாகப் பார்க்கலாம்.

## மதுரையில் உலக தமிழ் மாநாடு

மதுரை மாநகரில் 5வது உலக தமிழ் மாநாட்டை நடத்தினார். ஆன்றோரும், சான்றோரும், புலவர்களும்,

*கவிஞர்களும், இலக்கிய மேதைகளும் பெருந்திரளாக அதில் கலந்து கொண்டனர்.*

## மதுரையில் தமிழ்சங்கம்

*மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார். மதுரை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கோலாகலமாக இதற்கான விழா நடைபெற்றது.*

## சங்கப்புலவர்கள் நினைவுத்தூண்

*உலகத்தமிழ்ச் சங்கத்தை தொடங்கி வைப்பதற்கு முன் சங்கப்புலவர்கள் நினைவுத் தூணை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார். புலவர்கள் வாழ்ந்த இடத்தில் அவர்களுக்கு நினைவுத்தூண் எழுப்பப்பட வேண்டும் என்பது அவரது குறிக்கோளாக இருந்தது. அறுபட்டை வடிவம் கொண்ட இந்த நினைவுத் தூணில் மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர் 62 பேர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டன. அவர்களுள் பத்துப் புலவர்கள் பாடல்களில் சில வரிகளும் அந்த நினைவுத்தூணில் இடம் பெற்றிருந்தன. தமுக்கம் கலை அரங்கின் தலைவாயிலில் உள்ள தமிழ் அன்னை சிலைக்கு வலப்புறத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த நினைவுத்தூண் 14 அடி உயரமும் 5 அடி அகலமும் கொண்டதாகும்.*

## அமைச்சர்கள் புகழாரம்

*தொடக்க விழாவில் பேசிய கல்வி அமைச்சர் செ. அரங்க நாயகம், “மதுரை மாநகரில் 5 ஆம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தி, தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் தொடங்கி வைத்துள்ளார். உலகத் தமிழ்ச் சங்கம் நூல்களை ஆராயும்*

*நிறுவனமாகசெயல்படும். அதுமட்டுமல்லால் தமிழை உலக மொழியாக ஆக்குகின்ற அந்தஸ்தை இந்த தமிழ்சங்கம் பெற்றுத்தரும். தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்க தமிழர்களிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் இது பயன்படும். இதன் மூலம் தமிழை உலக மொழியாக ஆக்குகின்ற அந்தஸ்தை மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் வழங்கியுள்ளார்" என்றார்.*

## தஞ்சையில் "தமிழ் பல்கலைக்கழகம்"

*தமிழே என் மூச்சு, தமிழே என் பேச்சு என்று மேடைகளில் முழங்கியவர்களும் செய்ய மறந்ததை செய்து, தமிழுக்கு எம்.ஜி.ஆர். மேலும் சேர்த்த பெருமைகளை தமிழுலகம் என்றுமே மறக்க முடியாது. புதைத்த விதைகள், நிலத்தைப் பிளந்து எழுந்து, கதிர்களாய் விளைந்து குனிந்து, நெல்மணிகளாய் கொட்டிக்குவிக்கும் தஞ்சை தரணியில், தமிழுக்கென்று தமிழ்ப் பல்கலைகழகம் அமைத்தார், அந்த மாமனிதர்! உலகலாவிய அதிசயமாய், செதுக்கப்பட்ட தமிழாய், தனியொரு அதிசயமாக வியப்பின் உச்சாணியாக நிமிர்ந்து நிற்கும் "பெரியகோயில்", தமிழ்பல்கலைக் கழகத்தை வாழ்த்தி வரவேற்கும் புதுமை 1981 ம் ஆண்டு அரங்கேறியது. தமிழினம் போற்றும் தலைவராக வாழ்ந்து மறைந்த அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15ந் தேதி அந்த தமிழ் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.*

*தமிழ் பல்கலைக் கழகத்தை புரட்சித் தலைவர், தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திறந்து வைத்தார். கோலாகலமாக நடைபெற்ற தஞ்சை தமிழ் பல்கலைக் கழக விழாவில், பேசிய ஆளுநர் சாதிக் அலி, "தமிழ் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அயல்நாடுகளில் இருந்து வரும் அறிஞர் பெருமக்களுக்கும், மாணவர் களுக்கும் இப்பல்கலைக் கழகம் துணை புரியும்" என்றார்.*

*முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசும்போது, ”அறிவியல் பொருளாதாரம், மருத்துவம் போன்ற பல துறைகள் இந்தப் பல்கலைக் கழகத்தில், ஆராய்ச்சிக்காக கற்கப்பட வேண்டும் என்ற என் ஆசை இன்று நிறைவேறுகிறது என்றார். மேலும் , எல்லா நிலைகளிலும், தமிழால்தான் எதையும் செய்ய முடியும் என்பதை எடுத்துக்காட்ட இந்த பல்கலைக் கழகம் பயன்படும்” என்ற தனது கருத்தையும் பதிவு செய்தார்.*

## தமிழ்வளர்க்க தனித்துறை

*4.7.81 அன்று “செய்தி சுற்றுலா மற்றும் தமிழ்பண்பாடு” என்ற தனித்துறை உருவாக்கப்பட்டது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இந்த துறைக்கு ஒரு அமைச்சரும் நியமிக்கப்பட்டார்.*

## காவல்துறையில் தமிழ்

*காவல்துறையில் இருந்து கடிதப்போக்குவரத்துக்கள் தமிழில்தான் இருக்க வேண்டும்; குறிப்புகள் கூட தமிழில் தான் இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது*

## மகாகவி பாரதிக்கு மாபெரும் மரியாதை

*தேசிய கவிஞன், தெய்வீக கவிஞன் மகாகவி பாரதியாரின் பெயரில், எட்டையபுரத்தில் கட்டப் பட்டுள்ள மணி மண்டபத்தை தமிழக அரசு தனது சொந்த பொறுப்பில் ஏற்றுக் கொண்டது. இதைவிடவும் மேலாக, அந்த தேசிய கவிஞனுக்கு — சுதந்திரப் போராட்டித்தில் தனது பேனாமுனையையே பீரங்கியாக்கி போரிட்ட பாரதிக்கு, “இவரை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று மகாத்மாகாந்தி, யாருக்காக உத்தரவிட்டாரோ அவருக்காக இந்தியத் தலைநகராம் டெல்லியில் சிலைவைத்தவரும் எம்.ஜி.ஆர்.தான். அதுபோல்,*

*பாரதியாரின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடி, பாரதியை கௌரவித்தது. 376 ஒன்றியங்களிலும் பாரதி விழா, பாரதியாரின் லட்சியத்தை நிறைவேற்றும் விழாவாக நடத்தப்பட்டது. எம்.ஜி.ஆர் அரசு மகாகவி பாரதியை கௌரவித்ததுபோல் இதற்கு முந்தைய காங்கிரஸ் அரசுகூட செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 'எட்டய புரத்தில் பாரதியார் பெயரல் கூட்டுறவு நூற்பாலை தொடங்கப்பட்டது.*

## கம்பனுக்கு சிறப்பு சேர்க்க கம்பன் கோட்டம்

*கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு அவர் பிறந்த ஊரான தேழுந்தூரில் கோட்டம் அமைக்கும் பணி 1984ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி, 1984ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிக்கப்பட்டு, அதே மாதம் 10ந் தேதி திறந்து வைக்கப் பட்டது.*

*திருவரங்கம் திருக்கோவிலில் கம்பர் எழுதிய 3 பாடல்கள், புதிய கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டு நிறுவப்பட்டது. இது மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது.*

*கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்துடன் இணைக்கவும், வடக்கெல்லையை மீட்கவும் பாடுபட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு தமிழக அரசு நிதிஉதவி செய்து உதவியது. கன்னியாகுமரி போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கினார்.*

## கவியரசர் கண்ணதாசனுக்கு மணிமண்டபம்!

*திரையுலகிலும் ஆன்மீக உலகிலும் கொடிகட்டிப்பறந்து, தமிழர்களின் நெஞ்சிலும் நினைவிலும் நீங்கா இடம் பெற்றவர் கவியரசர் கண்ணதாசன். அவர் எழுதிய கவிதைகள், பாடல்கள், நூல்கள் அனைத்தும் வெறும் ரசனைக்கு உரியது மட்டுமல்ல. வாழ்வியல் சிந்தனைக்கும்*

*தமிழின் பெருமையை பதிவு செய்வதற்கும் உரியதுமாகும். தான் ஆட்சிப் பொருப் பேற்ற உடனேயே கவியரசர் கண்ணதாசனை அரசவைக் கவிஞராக்கி அழகு பார்த்தார், எம்.ஜி.ஆர். அதுமட்டுமல்ல, மறைந்த அரசவை கவிஞர் கண்ணதாசனுக்கு காரைக்குடியில் மணி மண்டபம் கட்டிவைத்தார்.*

## தேவநேயப்பாவாணர் பெயரில் நூல் நிலையம்

*முதலமைச்சர் எம். ஜி. ஆர் உத்தரவுபடி, சென்னை அண்ணாசாலையில் உள்ள சென்னை மாவட்ட மத்திய நூலகத்திற்கு “தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகம்“ என்று பெயர் சூட்டப்பட்டது.*

## “தமிழ்நாடு” என பெயர்வைக்க பாடுபட்ட தியாகிக்கு சிலை

*புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் உத்தரவின்பேரில், சென்னை மாநிலம் என்பதை மாற்றி, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று வற்புறுத்திய தமிழ்த் தியாகி சங்கரலிங்கனாருக்கு அவரது சொந்த ஊரான விருதுநகரில் மணி மண்டபம் கட்டப்பட்டது. அத்துடன் அவரது உருவச்சிலை அமைக்கப்பட்டது.*

## தமிழ் பட்டொளிவீசும் பண்பாட்டுத்துறை

*மக்கள் நலம் பேணும் நல்லரசு தன் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மக்களுக்கும் தெளிவாக விளங்கும் வகையில் தனது கருத்துக்களை, அரசியல் நடைமுறைகளைப் புலப்படுத்த வேண்டும். அவ்வாறே மக்களின் கருத்தையும் நேரடியாக அரசு புரிந்து கொள்ள வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் இடையிலமைந்த நெருக்கமான உறவு, நாட்டின் ஆக்கமான அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையாகும். இத்தைகைய மூலமான இறுக்கமான இணைப்பை ஒரு நாட்டில் வழங்கும் மக்கள் மொழியே*

*தாய்மொழியே நல்க முடியும். இவ்வுண்மையை நன்கறிந்த தமிழக அரசு வளர்ச்சி பண்பாட்டுத்துறை என்னும் புதிய துறை ஒன்றைத் தோற்றுவித்தது. நாட்டு முன்னேற்றத் திற்குத் வழிகாட்டும் வெற்றிப் பணியைச் செய்து வருகின்றது.*

## தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத்துறையின் தோற்றம்

*இந்தியப் பேரரசின் மதிப்பு மிக்க பிரமதர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாட்டின் பல துறைகளையும் சீர்திருத்தவும் கண்காணிக்கவும் செய்தார்கள். கல்வி என்பது மனித ஆற்றலை மேம்படுத்தும் பணிக்குரியதே என்ற வகையில் தனது அமைச்சகத்தில் மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறையை* Human Resource Development Dept. *உருவாக்கி னார்கள். அத்துடன், கல்வி, மக்களின் கலை, நாகரீகம், பண்பாடு, தழுவி வளர வேண்டும். என்ற உணர்வில் இத்துறையின் எல்லை விரிந்தது. பாரத தலைமை யமைச்சரின் கருத்திற்கேற்பப் பல மாநில அரசுகளும், தம் தலைமைச் செயலகத்தில் மொழி—பண்பாட்டுத் துறைகளைத் தோற்றுவித்தன.*

*தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாரதப் பிரதமர் இப்பண்பாட்டுத்துறையை உருவாக்குவதற்கு முன்னரே தமிழகத்தில் தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறையைத் தோற்றுவித்து, இந்திய பேரரசுக்கே முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்கள் என்று குறிப்பிடுவதில் நாம் பெருமை கொள்ளலாம்.*

*19.4.1984 லிருந்து கல்வித்துறையில் இணைந்திருந்த மேற்குறித்த துறைகள் யாவும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் தலைமையில் புது வேகத்துடன் செயல் புரிந்து வருகின்றன.*

*தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் பல துறைகளின் பயன்மிகு பணிகளைச சுருக்கமாகத் தமிழக மக்கள் அறிந்து கொள்வது மகிழ்ச்சியைத் தரும்.*

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

*தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதை முதன்மை நோக்க மாகக் கொண்ட தமிழ் வளர்ச்சி இயக்ககம் அதற்கேற்ப மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உதவி இயக்குநர் ஒருவரைக் கொண்டு பணிபுரிந்த வருகிறது. இவ்வுதவி இயக்குநர்கள் மாவட்ட, வட்ட, அரசு அலுவலகங்களில் தமிழை அட்சி மொழியாக்கு வதற்கு வழிகாட்டியும் நெறியுரைத்தும் துணைபுரிந்து வருகின்றார்கள்.*

*தமிழ் நாட்டரசு அலுவலகங்களில் தமிழிலேயே ஆணைகள், மடல் போக்குவரவுகள் அனைத்தும் தகுந்த கலைச் சொற்கள் கொண்டு இயங்கி வருவதால் அரசின் செயற்பாடுகளையும், நடைமுறைகளையும் மக்கள் நேரடியாகப் புரிந்து கொள்கிறார்கள்.*

*தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் தலைமை அலுவலகம் குறளகத்தில் முடுக்கமான பணிகளைச் செய்து வருகின்றது. தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் பல வழிகளில் அளிப்பதென்றும் அரசின் அடங்காத ஆர்வத்தின் பேரில் ஆண்டுதோறும் இத்தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழில் வெளி வரும் சிறந்த நூல்கட்குப் பரிசளித்தும், சிறந்த நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்தும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கும், பிற மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களுக்கும், தமிழ் நிறுவனங்களுக்கும் நிதியுதவியும் நிரம்பிய பணிகளைச் செய்து வருகின்றது. தமிழை முழுவதுமாக ஆட்சி ஆக்குவதற்கான முனைப்பான திட்டமொன்றையும்*

*இத்துறை விரைந்து செய்து வருகின்றது. தமிழ் தட்டச்சுப்பொறிகளை ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளுக்குப் பதிலாக அரசு அலுவகங்களில் பயன்படுத்தப் பரவலாக்குகிறது. மூன்றாண்டுகட்குள் 75 விழுக்காட்டளவுக்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைப் பயன்படும்படிச் செய்வது ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.*

*தமிழ் நலமும் இனநலமும் கருதி வாழ்ந்த உழைத்த சான்றோர்களின் நினைவாக விருதுகளைத் தோற்றுவித்து தக்கோர்க்கு அவற்றை வழங்கிச் சிறப்பிக்கிறது. திரு.வி.க. விருது, பாவேந்தர் விருது, திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது ஆகியன குறிப்பிடத் தக்கதாகும். சென்ற ஆண்டு, திருவள்ளுவர் விருதை தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும், பேரறிஞர் அண்ணா விருதை மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் பெற்றார்கள்.*

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

*உலகளாவிய நிலையில் தமிழையும், தமிழ் தழுவிய சிந்தனைகளையும் கொண்டு ஓரமைப்புச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய நோக்கத்தின் அடிப்படையில், 1970ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப் பெற்றது. வெளிநாட்டினர் பலர் இந்நிறுவனம் வந்து தமிழ் பயின்று செல்கிறார்கள். பழந்தமிழர் ஓலைச் சுவடிகள் பலவற்றை நிறுவனம் அச்சேற்றி வருகிறது. இலக்கியம், இலக்கணம், கலை நாகரீகம் உள்ளிட்ட துறைகள் சார்ந்து ஆங்கிலத்திலும், தமிழிலுமாக நூற்றுக்கும் மேலான நூல்களையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. தமிழர் மரபுச் செல்வம் என்ற வரிசையில் ஆண்டுதோறும் இலக்கியம், இலக்கணம், தத்துவம், கட்டடக்கலை, மருத்துவம், கோயிற்கலை ஆகியன பற்றிக் கருத்தரங்கம்*

*நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் நூலாக்கி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழியல் என்னும் ஆங்கில அரையாண்டு இதழொன்றையும் வெளியிட்டு வருகிறது.*

## மொழிபெயர்ப்புத் துறை

*ஆங்கிலேயர் காலத்திலிருந்து அரசின் நடைமுறைகள் ஆங்கிலத்தில் வெளிவந்ததை முறை மாற்றி அருந்தமிழ்ப் படுத்தி வெளிவருமாறு செய்வது. இவ் மொழிப்பெயர்ப்புத் துறையின் முதன்மையான பணியாகும். அரசையும் மக்களையும் நெருக்கமாக இணைக்கும் மையத்துறையாக இத்துறை இயங்கி வருகிறது.*

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்

*உலக மொழிகளில் மூத்ததும், இயற்கையாக எம்மொழித் துணையின்றியும் வளர்ந்த செந்தமிழ் மொழியின் சொற்கள் ஒவ்வொன்றிற்கும் உள் தோற்ற வரலாற்றைப் பெருமையுடன் வெளியிட வேண்டும் என்ற அரசின் உயர்ந்த குறிக்கோளுக்கேற்ப மொழிஞாயிறு தேவநேயப் பாவணராவர் முதல் இயக்குநராக வீற்றிருக்கும் முதன் மடலத்தை எழுதி முடித்தார்கள். இம்முதன் மடலத்தை தமிழக அரசு வெளியிட்டு பெருமை கொண்டது.*

*மொழி ஞாயிறு பாவணர் அவர்கள் மறைவிற்குப் பிறகு பேராசிரியர் இரா.மதிவாணனைப் பொறுப்பு இயக்குநராகக் கொண்டு சொற்பிறப்பகர முதலித்துறை இயங்கி வருகிறது.*

## தொல்பொருள் ஆய்வுத்துறை

*தமிழகத்தில் வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றை அறிவதற்கு மிகவும் அடிப்படையான துறையாக*

இத்தொல்பொருள் ஆய்வுத்துறை திகழ்ந்து வருகிறது. மாவட்டந்தோறும் தொல்பொருள் ஆய்வு அதிகாரிகளை அமர்த்தி, ஊர்தோறும் உள்ள பழமையான மரபுச் செய்திகளைச் சேகரித்துப் புதிய வேகத்தில் செயல்பட்டு வருகிறது.

வரலாற்று முதன்மை வாய்ந்த இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைத்தும் அகழ்வாராய்ச்சி செய்தும், தமிழக வரலாற்றை ஒரு புதிய மறுமலர்ச்சியை இத்துறை தோற்றியுள்ளது.

சோழ மாமன்னன் முதலாவது இராசராசனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழா இத்தொல் பொருளாய்வுத் துறை சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழா சிறப்பிக்க அந்நாட்டு பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரை அழைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அணி செய்து மகிழ்ந்தார்கள்.

இடைக்காலத் தமிழகத்தில் நீண்ட நாளைய தலைநகராக விளங்கிய கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ மாமன்னர்கள் வீற்றிருந்து ஆண்ட மாளிகைப் பகுதிகளை அகழ்வாய்வு செய்து வெளிக் கொணர்ந்து, புதிய சாதனையை இத்துறை செய்தது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இம்மாளிகைப் பகுதியில் கிடைத்த பொருள்களைக் கொண்டு அருங்காட்சியகம் வைப்பதற்காக அடிக்கல் நாட்டியதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## அருங்காட்சியகம்

வரலாற்றுப் பழமை மிக்க தமிழர்களின் வாழ்க்கை முறையை நேரில் ஒரு சேரக் காண்பது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் தமிழகத்தில் தலைநகரில் அருங்காட்சியகம் திகழ்ந்து வருகிறது. பண்டைய காலம் முதல் இன்று வரை பல்வேறு பண்பாடு

கலை, அறிவியல் ஆகிய துறைகளில் தமிழினம் கடந்து வந்த பாதையை இங்கு கண்டு பெருமூச்செறியலாம். தமிழகஅரசு இத்துறையை மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் சிறுவர் அருங்காட்சியகமும் வளர் கலை அருங்காட்சியகமும் புதிதாகக்கட்டியுள்ளது.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அருங்காட்சியகத்தை கண்டு மகிழ்கின்றார்கள். சென்னைக்கு வரும் அயல்நாட்டார்க்கும் அருங் காட்சியகம் சிறந்த காட்சி விருந்தளிக்கிறது.

## திருக்குறள் நெறிபரப்பு மையம்

தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்பிய திருக்குறளின் நெறிமுறைகளை முறையாகப் பரப்புவதற்குப் புரட்சித் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட புதிய துறையே "திருக்குறள் நெறி பரப்பு மையம்" ஆகும் கடந்த அறை நூற்றாண்டாகத் தமிழகம் முழுவதும் திருக்குறட் சொற்பொழிவாற்றி வள்ளுவர் கருத்துக்களை மக்கள் மனங்களிலெல்லாம் விதைத்து வரும் திருக்குறளார் வீ.முனுசாமி அவர்களையே இயக்குநராகக் கொண்டு இம்மையம் இயங்கி வருகிறது. திருக்குறளின் பெயரால் பரிசுத் திட்டங்கள் பல வகுத்தும் நாடாப் பதிவு செய்த திருக்குறள் சொற்பொழிவுகளைப் பல்வேறிடங்கட்கு வழங்கியும் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையெல்லாம் திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் இம்மையம் தன் பணியைத் தொடர்கிறது.

## கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்

ஆங்கிலேயர் காலத்திலிருந்தே நாட்டில் பல இடங்களில் இருந்தும் கிடைத்த பல்வேறு மொழிகளிலும் அமைந்த ஓலைச் சுவடிகள் தொகுக்கப்பட்டன. கர்னல் மெக்கன்சி, கிழக்கிந்திய கம்பெனியார். பிரவுன் போன்ற பெரு

மக்களின் அரிய தொகுப்புகளும் இங்கு உள்ளன. இங்குள்ள பல்லாயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளையும் பேணிப் பாதுகாத்து அச்சேற்றியும் வருகின்ற பெரும் பணியை இந்நூலகம் செய்தது. தமிழக அரசு இத்துறையில் தனிக் கவனம் செலுத்தி ஊக்கப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## இயலிசை நாடக மன்றம்

முத்தமிழை வளர்க்கும் கலைஞர்களுக்கு கலை மாமணிப் போன்ற விருதுகளை வழங்கியும், பழந்தமிழர் மரபுப்படி புதிய நாடங்களை நடத்தி இம்மன்றம் பணி செய்து வருகிறது. தமிழக அரசின் அரசவைக் கலை மன்றமாக இம்மன்றம் பெருமையுடன் இயங்குகிறது.

## பழங்கலை இயக்ககம்

புதுப்புது மரபுகட்கு மூலமாக விளங்கும் பழங் கலையைக் வெள்ளத்தில் கரைத்துவிடாமல் தொட்டெடுத்துப் பேணிக் காக்கத் தமிழக முதல்வரால் மீண்டும் உருவாக்கப்பட்ட புதுத்துறையே பழங்கலை இயக்கமாகும். கவிஞர். புத்தனேரி சுப்பிரமணியம் இதன் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

## அகமுக வளர்ச்சியில் ஆர்வம்!

ஒரு மனிதனுக்கு உள்ளமும் உணர்வும் அகமாக இருந்து அவனின் புறச் செயல்களைத் தூண்டி இயக்குதல் போல் ஒரு பண்பாடும் வரலாறும் கலையும் நாடி நரம்பாக நின்று புறநிலை வளர்ச்சிகள் அனைத்தையும் பீடுநிறைந்ததாக ஆக்க வல்லமையை வழங்கும் வேண்டும். அத்தகைய வல்லமை வழங்கும் வளஞ்சால் துறைகளையே தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை இன்று கட்டி காத்து ஊக்கி வருகிறது.

*உள்ளார்ந்த அடிப்படையே எத்துணைப் பெரிய புற வளர்ச்சியையும் தாங்க முடியும். வழி வழியாகப் பல்லாயிரமாண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழகத்தின் மூலவூற்றை அடிக்கடி வீசி வீசி ஓயும் புறநிலைப் புழுதிகள் அடைத்துவிடக் கூடாதென்பதற்காகவே தமிழக அரசு இன்று இத்துறையில் தனிக்கவனம் செலுத்தி பேணி வருகிறது.*

*தமிழ் வளர்ச்சி—பண்பாடுத்துறை மேற்குறித்த பல்வேறு துறைகளையும் கட்டமைத்து இயக்குவதுடன், தமிழ், தமிழர் பண்பாடு தொடர்பாகத் தோன்றும் புதுபுது அமைப்பு களையும், விழாக்களையும் கைநீட்டித் தாங்கி அதனை முடிக்கிவிடும் பணியையும் செய்து வருகிறது.*

## தென்னகப் பண்பாட்டு மையம்

*அப்போதைய பாரத பிரதமர் மாண்புமிகு ராஜீவ்காந்தி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தென்னக பண்பாட்டு மையத்தில் தொடக்க விழாப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவரால் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் மாமதுரையில் ஏப்ரல் 14 இல் தொடங்கப்பெற்ற உலகத் தமிழ்ச் சங்கம் தொடர்பான பணிகளையும் தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறையே பொறுப்பேற்று நெறிபடுத்தியது.*

*தமிழகத்தை எல்லா நிலைகளிலும் புத்தொளி நிரம்பிய புதுமை நிலமாக ஆக்க வேண்டும் என்ற முனைப்பில் சோர்வின்றி அதற்கான பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழக அரசின் தலையாய சாதனைகளில் தமிழ் வளர்ச்சி—பண்பாடுத் துறையின் மூலம் ஆற்றும் பணிகள் ஆணிவேராக வரலாற்றில் நிலைப்பனவாகும். இத்துறையின் பணிகள் தலைக்குடியாகிய தமிழ்குடிக்குத்*

*தகுதியான தடம் காட்டும் வல்லமை மிக்கதாகும். இத்துறையின் பணி மேலும் ஓங்குக!*

## இசைக்கல்லூரி

*தமிழோடு ஒன்றாகக் கலந்த இசையைத் தனித்த ஒரு சிலரின் குடும்பச்சொத்தாக இருக்க வைக்காமல் தமிழகமெங்கும் வாழும் எல்லாநிலை மக்களும் இசை பயிலும் வாய்ப்பைப் பெற இவ்விசைக்கல்லூரி மூலம் அரசு செய்து வருகிறது. தமிழகத்தின் முக்கியமான தலைநகர்களிலும், இசைக்கல்லூரிகள் அமைக்கும் திட்டத்தை அரசு முடுக்கி வருகிறது. சென்னையில் அமைந்துள்ள இசைக்கல்லூரியின் முதல்வராக திருமதி டாக்டர் பானுமதி இராமகிருஷ்ணா அவர்கள் விளங்கி வருகிறார்கள்.*

## ஓவிய நுண்கலைக்குழு

*நுட்பமான மனவுணர்வில் வளரும் அரிய கலையான ஓவியக்கலையை வளர்ப்பதிலும், தமிழகஅரசு தனிப் பொறுப்புக் கொண்டுள்ளது. இந்திய அரசு ஓவியக் கலையை லலிதகலா அகாடெமி வாயிலாக வளர்ப்பது போன்றே தமிழக அரசு இவ்வோவிய நுண்கலைக் குழு மூலம் கலையைப் போற்றி வளர்த்து வருகிறது. நாட்டின் பல்வேறிடங்களில் ஓவியக் கண்காட்சியை நடத்துதலும், வளரும் ஓவியக் கலைஞரை ஊக்குவித்தலும், ஆண்டுதோறும் ஓவியக் கண்காட்சியை தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் நடத்துதலும் பிற மாநில ஓவியக் கண்காட்சிகளைத் தமிழ் நாட்டில் நடத்துதலும் ஆகிய வகையில் அவ்வமைப்பின் பணிகள் அமைந்துள்ளன.*



# அனைவருக்கும் வேலைவாய்ப்பு திட்டம்

**எம்.**ஜி.ஆர்., தன் ஆட்சியை கைப்பற்றியபோது, முதல் ஐந்தாண்டில் 11 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உண்டாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் புள்ளிவிவரங்களின்படி, முதல் 9 மாதத்திலேயே, அதாவது 31.12.1978 வரை இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த தகவலை முதல்வர் எம்.ஜி.ஆரே வெளியிட்டார். இதன் பின்னர் வந்த காலகட்டங்களிலும் வாக்குறுதிக்கு அதிகமாகவே வேலைவாய்ப்பளித்து, எம்.ஜி.ஆர். புரட்சி செய்தார் என்பது வரலாறு.

பட்டு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 29 ஆயிரம் பேர்களுக்கும், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 9 ஆயிரம் 58 ஆயிரம் பேர்களுக்கும் ஆக 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் உர விலை தள்ளுபடி திட்டம், அனைவருக்கும் வேலை

*வாய்ப்பை உருவாக்கும் வகையில் புதிய தொழிற் பேட்டைகள், மீனவர்கள் நலன் காக்க வித விதமான, வித்தியாசமான திட்டங்கள் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனிதாபிமானத்தையும் சமூகமேம்பாட்டுச் சிந்தனையையும் செயலாக்கும் வகையில் பல திட்டங்கள் 1981ல் நிறைவேற்றப் பட்டது.*

## வேலைகிடைக்காதவர்களுக்கு மாதந்தோறும் பண உதவி

*உதகையில் மலைவாழ் மக்கள் நல்வாழ்விற்காக ஒரு தனி வழிகாட்டி நிலையமும், திருச்சி மாவட்டத்ததில் தொழில் நுட்பப் பிரிவிற்காக ஒரு தனி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகமும் 1980 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.*

*கஷ்டப்பட்டு கூலி வேலை பார்த்து படிக்க வைத்த பிள்ளைகள் வீட்டில் வேலை இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டம் 80 ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பு படித்தவர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், தொழிற்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பொறியியல் பட்டயப் படிப்பு படித்தவர்கள், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவேட்டில் தொடர்ந்து காத்திருப்போர்களுக்கு மாதம் ரூ. 50 உதவித் தொகை 3 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது.*

*அது மட்டுமின்றி அரசிடம் பொருள் உதவிபெறும் அனைத்துத் தனியார் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு, அதன் மூலம் பல இளைஞர்கள் பயன்பெற்றனர்.*

## புதிய தொழில்மையங்கள்

*சென்னை அடையாறில் உள்ள ஆந்திரமகிளா சபாவில் ஊனமுற்றோர் தொழிற் பயிற்சி காப்பகம் கட்டப்பட்டது. தமிழக அரசின் உதவியுடன் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது.*

*தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்மிடிப்பூண்டி ஆகிய ஊர்களில் 5 புதிய தொழில் மையங்கள் திறக்கப்பட்டன. இந்த தொழில் மையங்களுக்கு ஓராண்டுக்கு தடையற்ற மின்சாரம், வருமானவரி பாக்கி உச்சவரம்பு அதிகரிப்பு போன்ற சலுகைகள் வழங்கப்பட்டன.*

## தொழிலாளர்கள் நலன்

*மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முதலமைச்சர் எம். ஜி. ஆர் உத்தரவின்பேரில் 46 லட்சத்து 45 ஆயிரத்து 600 ரூபாய் நிதியுதவி வழங்கப் பட்டது.*

*தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்குவதற்கென்று சென்னை தேனாம்பேட்டையில் ஜீவா இல்லம் கட்டப்பட்டது. இந்த கட்டிடத்திற்காக 5 கிரவுண்ட் நிலமும், 2 லட்சம் நிதியும் அளித்தவர் புரட்சித் தலைவர்.*

*தொழிலாளர்களுக்கு பணிப்பாதுகாப்பு அளிக்கவும், நீண் நாள் தற்காலிகமாக இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டு பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் தரவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு புதிய சட்டம் ஒன்றை உருவாக்கியது. 1981ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம் ஆகும். இது தொழிலாளர் நலன் கருதி*

இயற்றப்பட்ட முற்போக்கான சட்டம் என்று புகழப் பட்டது.

இந்த சட்டத்தின் மூலம் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ந்து பணி புரிந்துள்ள தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள். 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தக் கூடிய இந்த சட்டம் 1.1.82ம் ஆண்டு முதல் அமலுக்கு வந்தது.

இந்த வகையில் மற்றொரு சட்டமும் 1981ம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன்பெயர், தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கும் சட்டமாகும். தொழிலாளர்களின் தற்காலிக வேலை நாட்களிலும் அவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இந்த சட்டம் வகை செய்கிறது.

இப்படியொரு சட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாக கொண்டு வரப்பட்டது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் பெருமைக்கு மற்றொரு மணி மகுடமாகும்.

மேலும் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிலைமைகள் ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 1982 என்று அழைக்கப்படும் சட்டமாகும். உடல் உழைப்புத் தொழிலாளர்கள் தங்கள் தேவைகளுக்காக போராடும் முறைப்படுத்தப்படாத தொழில்களில் பெரும் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இந்த அரசு அவர்களுக்கும் அவர்களின் பணி நிலைமைகளை உயரவும், நல்வாழ்வுச் சலுகைகள் பெருகவும் இந்த சட்டத்தை இயற்றியது.

1977ம் ஆண்டுக்குப் பிறகு 23 தொழில்களை குறைந்தப் பட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் முறைப்படுத்தப்படாத தொழில் இனத்தைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். இதன் மூலம் பாரம் ஏற்றி இறக்கும் தொழில், ஆட்டோ

*மொபைல், பணிமனை, அச்சுத் தொழில், ஆட்டோ ரிக்ஷா உள்ளிட்ட தொழில் செய்வோருக்கு குறைந்தப்பட்ச ஊதியம் உறுதி படுத்தப்பட்டது.*

*முறைப்படுத்தப்படாத கிராமப்புற தொழிலாளர்கள் விபத்துக்குள்ளானால் நிதி உதவி பெறும் திட்டம் ஒன்றும் புரட்சித் தலைவர் ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் சிறிய மற்றும் சாதாரண உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் 15.9.84 முதல் அமலுக்கு வந்தது. அதன்படி பல்வேறு தொழிலாளர்கள் 58 வது வயதில் மொத்தமாக ஓய்வூதியம் கிடைக்க வகை செய்யப்பட்டது. ஆகியோருக்கு உதவும் விபத்து நிவாரணத் திட்டம் அண்ணா பிறந்தநாளான 15.9.84 முதல் அமல்படுத்தப்பட்டது.*

*ஆயுள் ஈட்டுறுதிப் பணி ஓய்வு கால பயன்கள் நலச் சிறப்புத் திட்டம் 15.9.84 முதல் அமலுக்கு வந்தது. அதன்படி பல்வேறு தொழிலாளர்கள் 58 வது வயதில் மொத்தமாக ஓய்வூதியம் கிடைக்க வகை செய்யப்பட்டது.*

## 5 ஆயிரம் பேருக்கு ஊதிய உயர்வு

*டான்சியில் பணிபுரியும் 5 ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை அறிவித்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றி வைத்தார். இதற்காக ஊழியர்கள் புரட்சித் தலைவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்று குதூகலத்துடன் கூறினர்.*

## பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு சலுகை

*தமிழ்நாட்டில் குறிப்பிட்ட பல பகுதிகளில் பீடி சுற்றும் தொழில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. பல்வேறு மாவட்டங்களில் குடும்பத்தின் முக்கிய வருமானமாக பீடி சுற்றும் தொழில் உள்ளது. பெண்களே*

*இந்தத் தொழிலை செய்து வருவாய் ஈட்டி குடும்பத்தை காப்பாற்றி வருகின்றனர்.*

## வேலை இல்லை என்றாலும் சம்பளம்

*அவர்களின் நலன் காக்கும் வகையில், பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் சில சூழ்நிலைகளில் வேலை கொடுக்க முடியாமல் போனலும் குறைந்தப்பட்ச அளவு கூலி கொடுத்தாக வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உத்தரவின்பேரில் அரசு ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் லட்சக் கணக்கான பீடிசுற்றும் பெண் தொழிலாளர்களுக்கு குறைந்தப்பட்ச வருவாய் உறுதி செய்யப்பட்டு, அவர்களுக்கு குடும்ப வறுமை விரட்டப்பட்டது.*

## குறைந்தப்பட்ச ஊதியம்

*கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு குறைந்தப் பட்சம் ஊதியம் நிர்ணயம் செய்து அரசு அறிவிப்பு வெளியிட்டது. இதனால், 3 லட்சம் ஊழியர்கள் பயன் அடைந்துள்ளன.*



# ஊனமுற்றோருக்கு, எம்.ஜி.ஆர். அரசுதான் ஊன்றுகோல்

***ஊ***னமுற்றவர்கள் மீது எம்.ஜி.ஆர். வைத்திருந்த அதீத கருணை சாதாரணமானது அல்ல. தன் மறைவுக்கு பிறகு அந்த கருணைத் தொடரும் வகையில் காதுகேளாதோர், வாய் பேசமுடியாத குழந்தைகளுக்கு என்று ஒரு பள்ளியை நிறுவும் படி எம்.ஜி.ஆர். தனது உயிலில் குறிப்பிட்டிருந்தார். அந்த உயிலின் படி அவர் மறைந்த காலத்திலிருந்து "காதுகேளாதோர் வாய் பேசமுடியாதோர் பள்ளி" ஒன்று அவர் வாழ்ந்த இராமபுரம் தோட்டத்திலேயே நடைபெற்று வருகிறது. எல்.கே.ஜி. இருந்து +2 வரை படிப்பதற்கான இந்தப் பள்ளிக்கூடத்தில் 300க்கும் மேலான மாணவ, மாணவிகள் எந்தக் கட்டணமும் இன்றி இலவசமாக படித்துவருகிறார்கள். இந்த நேரத்தில் இது நினைவுக்கூறத் தக்கது.

## செயற்கை உறுப்பு தயாரிப்பு விரிவாக்கம்

ஊனமுற்றோருக்காக பல்வேறு திட்டங்கள் உருவாக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டது. அதன்படி, தமிழகத்தில்

*சென்னை, கோவை, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் மட்டுமே இருந்து வந்த செயற்கை கால், அவையங்கள் பொருத்தும் திட்டம், நெல்லை, கடலூர் மாவட்டங் களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டது.*

*நெல்லை, தஞ்சை, கோவை ஆகிய 3 பொது மருத்துவ மனைகளில் புதிய செவிப்புலன் மருத்துவ பிரிவுகள் தொடங்கப்பட்டன.*

*ஒன்றாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை படிக்கும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*காதுகேளாதவர்களுக்கு பொறியியல் பணிகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கிண்டி, மதுரை ஆகிய இடங்களில் அரசு தொழில் பயிற்சி நிலைங்களில் தனிப்பிரிவு தொடங்கப்பட்டது. பார்வையற்றவர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக பதிவு செய்து காத்திருப்பவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

*ஊனமுற்றோருக்கு உதவி செய்பவர்களுக்கு விருது வழங்கும் திட்டமும் தொடங்கப்பட்டது.*

## உடல் ஊனமுற்றோர் நலம்

*ஊனமுற்றோர் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதி ஆவர். இவர்களில் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைக் கருதி, கல்வி, தொழிற்பயிற்சி, மருத்துவ உதவி போன்ற பல்வேறு திட்டங்களாகத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின் நலனுக்காக 1977—78 ஆம் ஆண்டில் 26.67 இலட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடு 1986—87ம் ஆண்டில் 201.51 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.*

*சுமார் 4500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன் சிறப்புக் கல்வி*

*பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு தலா இரண்டு கோடி இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன.*

*பார்வையற்ற பெண்களுக்கென்றே தனியாக, 1985—86 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் பள்ளியொன்று தொடங்கப் பட்டுள்ளது.*

*மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக சென்னை குரோம்பேட்டையில் 1984—ல் மனவளர்ச்சி குன்றியோர் நிறுவனம் அரசால் துவங்கப்பட்டது.*

## பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி

*பார்வையற்றவர்களுக்குத் தகுந்த தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்குப்போதுமான திறமை ஏற்படவும் வேலைவாய்பை அளிக்கவும். ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் பொறியியல் பயிற்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.*

## காது கேளாதோர்க்குத் தொழில் பயிற்சி நிலையம்

*சென்னை (கிண்டி) மற்றும் மதுரையில் உள்ள தொழிற் பயிற்சி மையங்களில் முழுவதும் காது கேளாதோர்க்குப் பொறிப் பகுதி பொருத்துதல் மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய தொழில்களில் பயிற்சி கொடுக்க 1981—82ம் ஆண்டில் இரண்டு சிறப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு 1982—83ம் ஆண்டுகளில் காது கேளாதோர் 30 பேருக்கு 2 ஆண்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

## ஊனமுற்றோருக்கு சுயவேலை வாய்ப்பு

*வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சென்னை நகரம் மற்றும் பிற மாவட்டங்களிலும் பெட்டிக்கடைகள்*

*அமைக்க ரூ. 250 முதல் ரூ. 500 வரை மானியமாக அரசு வழங்குகிறது. இதுவரை 1240 நபர்கள் பயனடைந்துள்ளனர்.*

*உடல் ஊனமுற்றோர்க்கு (பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்) தனிக்கவனிப்பும் கல்வி வசதியும் தேவைப் படுவதால் அவர்களைப் பயிற்றுவதற்கு சிறப்பு செய்முறை நுட்பம் நிறைந்த ஆசிரியர்களைக் கொண்டு 22 சிறப்புப் பள்ளிகளையும் ஒரு பயிற்சிப் பள்ளியையும் அரசு நடத்தி வருகிறது.*

| | |
|---|---|
| *பார்வையற்றோர் பள்ளி* | *11* |
| *காதுகேளாதோர் பள்ளி* | *9* |
| *மனவளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி* | *1* |
| *உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளி* | *1* |
| *பார்வையற்றோர்க்குப் பயிற்சி பள்ளி* | *1* |

## பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல்

*1979—80ம் ஆண்டு முதல் துவங்கப்பட்ட சிறப்புத் தொழில் பழகுவோர் திட்டத்தின் படி வேலைவாய்ப் பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்கள் மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் அரசு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கப்பட்டு, ஓராண்டிற்கு தொழில் பழகுவோராக அமர்த்தப்படு கின்றனர். இத்திட்டத்தில் 1,327 உடல் ஊனமுற்றோர். பயனடைந்துள்ளனர்.*

## பார்வையற்ற மகளிர்க்கு மறுவாழ்வு இல்லம்

*1978ஆம் ஆண்டு முதல், பார்வையற்ற மகளிருக்கான உறைவிட வசதிகளுடன் கூடிய ஒருமறுவாழ்வு இல்லம்*

*சென்னையில் இயங்கி வருகிறது. ஆதரவற்ற 40 வயதுக்குக்குக் குறைந்த பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் சேர்க்கப்பட்டு, நெய்தல், சாக்குக்கட்டி செய்தல் போன்றவைகளில் தொழில் பயிற்சி அளிக்கப் படுகின்றனர். பயிற்சி காலத்தில் அரசு உதவித் தொகை யாக நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 50 வழங்கப்படுகிறது. . இதுவரை இத்திட்டத்தின் கீழ், பார்வையற்ற மகளிர் 260 பேர் பயனடைந்துள்ளனர்.*

## வேலையற்ற பார்வையற்றோர்க்கு நிவாரணம் வழங்குதல்

*எஸ்.எஸ்.எல்.சி. ஐ.டி.ஐ. படித்த பார்வையற்றோர் வேலை வாய்ப்பகத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகள் பதிவு செய்து 40 வயதுக்கு குறைந்தவராயின் அவர்களுக்கு மாதம் ரூ. 50 நிவாரணத் தொகையாக வழங்கும் திட்டம் 1981 ஆம் ஆண்டு உலக ஊனமுற்றோர் ஆண்டின் திட்டங்களில் ஒன்றாக துவங்கப்பட்டது.*

*ஊனமுற்றோர்களின் தன்மைக்கேற்ப முச்சக்கரம் வண்டிகள், மற்றும் காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. 1984—85ல் 135 ஊனமுற்றோர்க்கும் முச்சக்கர வண்டிகள் வழங்கப் பட்டுள்ளன. இதேபோல், 1984—85ல் 4581 காது கேளா தோருக்கும், 1985—86ல் 10,419 காது கேளாதோர்க்கும், காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊனமுற்றோருக் கென, சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 1981—82ல் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு 100 ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.*

## ஏனைய திட்டங்கள்

*காது கேட்காத, பார்வையற்ற, கைகால் ஊனமுற்ற குழந்தைகள், தொழு நோயாளிகளின் குழந்தைகள் ஆகியோர்களைப் பராமரிப்பதற்குத் தொண்டு நிறுவனங்*

*களுக்கு பராமரிப்பு மானியமாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் அரசால் வழங்கப்பட்டன.*

## உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை

*உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு வீட்டிலிருந்து பள்ளி மற்றும் மருத்துவமனை சென்று வர வழங்கப்பட்ட இலவசப் பயணச் சலுகைத் திட்டத்தினால் 13,130 ஊனமற்ற குழந்தைகள், மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.*

## ஊனமுற்றோர் வாரியம்

*உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டோர்களின் மணவாழ்விற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் 1971ல் சமூக நலத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் தற்போது சங்கங்கள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டு சமூக நல அமைச்சரின் தலைமையின் கீழ் 1984ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது.*

## பார்வையற்றோருக்கான திருமண உதவி

*கலப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதிகளுக்கு வழங்கப்படும் சலுகை பார்வையுள்ளவர், பார்வை யற்றோரை மணந்து கொள்வதற்கும் நீட்டிக்கப்படுகிறது. இத் திட்டத்தினால் பயன்பெறுபவர் ரூ. 6,000 பெறுவர்.*

## சீர்திருத்தப் பள்ளிகள்

*சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழ் இராணிப்பேட்டையில் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளிகளில் ரூ. 5.34*

*இலட்சம் செலவில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தித் தொழிற் கூடம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒழுக்க நெறி தவறியவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க தமிழ்நாட நல நிதி ஒன்று துவங்கவும், 1984—85 ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறும் இத்திட்டம் 1986—87ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

## ஊனமுற்றோர் நல கூட்டுறவு சங்கங்கள்

*உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய 1981 ஐக் கொண்டாடும் தருணத்தில் 1981—ஆம் ஆண்டில், மாநிலத்தில் ஐந்து உடல் ஊனமுற்றோர் நலக்கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது மாநிலத்தில் ஐந்து உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. சென்னை மற்றும் திருச்சிராப் பள்ளியில் உள்ள இரண்டு சங்கங்களுக்கு 1985 —86 ஆம் ஆண்டில் அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1986—87ம் ஆண்டில் மேலும் இரண்டு சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.*

## ஊனமுற்றோருக்கு உதவித்தொகை

*1981ம் ஆண்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஊனமுற்றோருக்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டன. ஊனமுற்றோர் களை பொருளாதார நிலையில் உயர்த்துவதற்காக ஒவ்வொரு ஊனமுற்றோருக்கும் ரூபாய் ஆயிரம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்து செயல்படுத்தினார்.*



# தாய்க்குல தவப்புதல்வன் பெண்கள் நலனுக்கு அளித்த பரிசுகள்

*பெண்களின் நலனுக்காக தாய்குலத்தின் தலைமகன் என்று பெயரெடுத்த பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். , தான் ஆட்சிப்பொருப்பேற்றது முதல், தான் தெய்வமாய் மதித்த தாய்குலத்திற்கு செய்த நன்மைகளை மறக்கவே முடியாது. அந்த சரித்திரம் என்றும் அழியாத ஒரு வேதநூல். அந்த வேதநூலை இங்கு வாசிப்போம்.*

## பெண் அறங்காவலர்

*மாநிலத்தில் உள்ள அனைத்து ஆலய அறங்காவலர் குழுக்களிலும் ஒரு பெண் அறங்காவலர் இடம்பெற வேண்டும் என்ற திட்டம் இந்த ஆண்டு உதயமானது.*

## பெண் போலீஸ்

*அநீதிகளால் அவமானமுற்று, அடக்குமுறைகளால் அழியாத தழும்புகள் இதயத்தில் உறுத்த, வெளியில் சொல்ல முடியாத வேதனைகளோடு தவித்த பெண்களின்*

*துயர் துடைக்க தமிழகத்தில் முதன்முதலில் அதிக காவலர்களைக் கொண்ட மாபெரும் பெண் காவல் படை உருவாக்கப் பட்டது. பெண் காவலர்கள் அணியும் சட்டையை, கால சட்டைக்குள் போடும் நிலையை மாற்றி, மேலே கோட்டு போல அணியும் வசதி செய்து தர முதலமைச்சர் உத்தரவிட்டார்.*

*தமிழ்நாடு காவல்துறை —பெண்காவல்படை என்று இதற்கு பெயர் சூட்டப்பட்டது. இதற்கு முன் 1973—ம் ஆண்டு ஒரு சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 20 காவலர்கள் அடங்கிய சிறு படை இருந்தது. அதனை மாற்றி, 60 சார்பு ஆய்வாளர்கள், 60 தலைமைக் காவலர்கள், 600 காவலர்கள் கொண்ட மிகப்பெரிய பெண் காவல்படை அமைக்கப் பட்டது. ஆணுக்குப் பெண் சமம், அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு உரிமை உண்டு என்பதை நிலை நாட்டியவர், எம்.ஜி.ஆர். அதன் பரிணாம வளர்ச்சியாகத்தான், மகளிர் காவல் நிலையங்களில் ஒவ்வொரு காவல்நிலையத்திலும் பெண் காவலர்கள் தடம்பதித்த நிகழ்வு அமைந்துள்ளது. இப்போது சட்டம் — ஒழுங்கு, குற்றப் பிரிவுகளிலும் பெண்கள் தடம் பதித்து சாதனை நிகழ்த்தவும் அதுவே அடித்தளமாகும்.*

## பெண் போலீஸ் ஏன்?

*காவல் நிலையங்களில் கைது செய்யப்பட்ட பெண்களை சோதனை செய்தல், பெண் கைதிகளை நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் செல்லுதல், புகைவண்டி நிலையங்களில் தனியாக வரும் பெண்களுக்கு உதவி செய்தல், விமான நிலையம் விபச்சார விடுதிகளில் சோதனை செய்தல், இளம் பெண்களை காப்பாற்றுவது போன்றவை இவர்களது பணிகள். இளம் குற்றவாளிகளையும், குழந்தைகளையும் விசாரணை செய்வதும அறிவுரை வழங்கவும் இவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டது.*

## பனை ஏறும் பெண்கள்

*கடலூரில் 24 லட்சம் ரூபாய் செலவில் பனை பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அரசு திட்டம் தீட்டியது. அதைத்தொடர்ந்து, "தமிழ்நாடு பனை வெல்லம் மற்றும் பனைபொருட்கள் தயாரித்து விற்பனை செய்யும் கூட்டுறவு சங்கம்" அமைக்கப்பட்டது. பெண்களின் வீரத்தையும் பெருந் தகுதிகளையும் உலகுக்கு நிரூபிக்கும் வகையில் பெண்கள் பனை மரம் ஏறுவதற்கு அந்த கூட்டுறவு சங்கம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு தயார்படுத்தப்பட்டனர்*

*மாநிலத்தில் உள்ள அனைத்து ஆலய அறங்காவலர் குழுக்களிலும் ஒரு பெண் அறங்காவலர் இடம்பெற வேண்டும் என்ற திட்டம் இந்த ஆண்டு உதயமானது.*

## புகையில்லா அடுப்புகள்

*பெண்ணுரிமைக்காக போராடிய மகாகவி பாரதி, அவர்களின் அவலங்களைக் குறிப்பிடும் போது, "அடுப்பூதும் பெண்கள்" என்றான். ஆமாம் அந்த அடுப்பூதும் பெண்களை அடுத்த முன்னேற்றத்திற்கு கொண்டுசெல்லும் முன்பாக, புரட்சித்தலைவர் முதலில் அடுப்பூதும் பெண்களின் அவஸ்தையை போக்கிட நினைத்தார்.*

*தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் புகையில்லா அடுப்புகளை அமைக்கும் திட்டம் 1983—84ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு, ஆண்டுக்கு ஆண்டு இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் அடுப்புகளின் எண்ணிக்கையும் பெருமளவு ஏற்றம் கண்டு வருகிறது.*

*1986—87ம் ஆண்டில் தமிழகத்தில் 1,16,971 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் சுமார் 17 ஆயிரம் அடுப்புகள் அதிகமாகும்.*

*விறகுகளைப் பயன்படுத்தி பெண்கள் சமையல் வேலை செய்வதால் பெருமளவு புகை வெளியாகி பெண்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சமையலறை, சமையல் பாத்திரங்களில் கரி பிடிக்கிறது. ஓரளவு வசதி கொண்டவர்கள் விறகுகளை விலைக்கு வாங்குகின்றனர். பலர் விறகு தேடி அலையும் நிலை உள்ளது. இவ்வாறு விறகுகளைத் தேடி அலைய ஆண்டொன்றுக்கு 200 முதல் 300 நாட்கள் செலவழிக்கப் படுவதாக ஒரு புள்ளி விபரம் தெரிவித்தது.*

*அதனை கருத்திற் கொண்டும், பெண்கள் நலனை கருத்திற் கொண்டும் புகையில்லா அடுப்பு அமைக்கும் திட்டத்தை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அரசு கொண்டு வந்தது. இந்த திட்டம் இல்லத்தரசிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.*

*புகையில்லா அடுப்புகளை அமைப்பதில் 1984——85—ம் ஆண்டில் இந்தியாவிலேயே தமிழகம் 2—வது இடத்தைப் பிடித்தது. இதற்காக கேடயமும், சான்றிதழும் பெற்றது. அதைத் தொடர்ந்து 2 இரண்டு ஆண்டுகள் இந்தச் சாதனையை புரிந்தது. 1987—ம் ஆண்டு தமிழகம் முதலிடம் பெற்றது. இதற்கான சான்றிதழ் மற்றும் பாராட்டுப் பத்திரத்தை மத்திய அரசிடம் இருந்து தமிழகம் பெற்றுள்ளது.*

*சாண எரிவாயு திட்டத்தின் கீழ் 13 ஆயிரத்து 120 கலன்களை நிறுவ வேண்டும் என்ற மத்திய அரசின் இலக்கை மிஞ்சி 19 ஆயிரத்து 335 கலன்களை அமைத்துள்ள தமிழக அரசு. இதேபோன்று 50 ஆயிரம் புகையில்லா அடுப்புகள் அமைக்க வேண்டும் என்ற இலக்கை மிஞ்சி ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 971 அடுப்புகளைக் கட்டி சாதனை படைத்தது தமிழக அரசு.*



# கைத்தறி. விசைத்தறி, நூற்பு ஆலைகளில் வியத்தகு முன்னேற்றம்

## மகத்தான சாதனை

*நெசவாளர்களின் வாழ்வாதாரத்தில் ஒளியேற்ற பல திட்டங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது. அதன்படி தமிழ்நாடு கைத்தறி வாரியம் அமைக்கப்பட்டது. அதற்கு போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன*

*கைத்தறிதோன்றி, இதுகாலம்வரை அத்துறையில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது இல்லை. ஆண்டாண்டுகாலம் ஆண்ட அரசாங்கங்கள் எல்லாம் அத்தொழிலில் நிலைத்திருந்த வெறுமையையும் அத்தொழிலாளரிடம் மண்டிக்கிடந்த வறுமையையும் நிரந்தரமாக நீக்கியதில்லை. ஆனால் எம்.ஜி.ஆர்தான் அப்படிப்பட்ட நீடித்த ஒரு நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். கைத்தறி விற்பனையில் 1981ம்*

*ஆண்டு 47 கோடி விற்பனை செய்து புரட்சித் தலைவர் அரசாங்கம் மகத்தான சாதனை புரிந்தது.*

## நித்தமும் வளரும் கைத்தறித் தொழில்

*நெசவாளர் துயர்துடைக்க, எம்.ஜி.ஆர். மிகுந்த அக்கறை செலுத்தினார். அதனால், கைத்தறி, விசைத்தறிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதைத்தொடர்ந்து, உற்பத்தியும் அதிகரித்து விற்பனையும் அதிகரித்தது. இவ்வாறாக இத்துறையில், ஒரு மந்திரகாலம் உருவானது, எம்.ஜி.ஆர். ஆட்சிகாலத்தில்தான்.*

*நீண்ட காலமாக இயங்கிவரும் கிராமியத் தொழில் களில் ஒன்றான கைத்தறித் தொழில், வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 5.36 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இதன்மூலம் 13.34 இலட்சம் நெசவாளர்கள் பிழைத்து வருகிறார்கள். 1984—85 ஆம் ஆண்டு முடிய 68 சதவிகித நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டனர். தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டிய அளவுக்கு தமிழ்நாட்டில் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.*

## கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறி உற்பத்திப் பெருக்கம்

*கடந்த பத்தாண்டுகளிலும் அதற்கு மேற்பட்ட கால அளவிலும் நாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிக அளவுக்குக் கொண்டு வருவதுதான் அத்துறையை மேன்மைப்படுத்து வதற்கான தீர்வு என்பதை அரசு உறுதிசெய்தது.*

## சாதனையின் புள்ளிவிவரம்

*31.12.1985ல் தமிழ்நாட்டில் 1600 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 3.70 இலட்சம் தறிகளுடன் இயங்கி வந்தன. 1985—86ல் மொத்தம் 10,000 கைத்தறி நெசவாளர்கள், நெசவாளர் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கூட்டுறவு அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டனர். இதற்காக 1985—86ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசின் பங்கு மூலதன உதவியாக ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1984—85ல் கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறித் துணியின் உற்பத்தி 159.31 மில்லியன் மீட்டர்களாக இருந்தது. 1985—86ல் உற்பத்தியை 175 மில்லியன் மீட்டர்களுக்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 31.12.85 முடிய 129.30 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.*

*தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நெசவாளருக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காகப் பருத்தித்தறி ஒன்றுக்கு ரூ. 250 பாலியஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ.500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டுக் கடன் உதவி அளிக்கப்பட்டது.*

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி

*கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டுத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் மறு நிதிஉதவி அளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்நிறுவனம் வங்கி விகிதத்தை விட 21% குறைந்த வட்டி விகிதத்தில் கடன் உதவி அளித்தது. இச்சலுகையின் மூலம் தலைமை (கோ—ஆப்டெக்ஸ்) மற்றும் பிரதம நெசவாளர்*

*கூட்டுறவுச் சங்கங்கள் 71% வட்டியில் நடைமுறை மூலதனம் பெற்றனர்.*

*இத்திட்டம், 1985—86 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு 1985—86ஆம் ஆண்டுக்கு 139.24 கோடி ரூபாய் கோ—ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனமாக வழங்க அனுமதித்தது.*

## கூட்டுறவு நூற்பாலைகளின் முன்னேற்றம்

*தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 6.33 இலட்சம் கதிர்கள் திறனைக் கொண்டு ஆண்டிற்கு சுமார் 1.44 இலட்சம் பேல்களைப் பலதரப்பட்ட வகைகளில் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவு நூற்பாலைகளில் அவ்வாறு தயாராகும் நூல்கள் கோ—ஆப்டெக்ஸிற்கு விற்கப்பட்டு, அவை தமிழ்நாட்டில் முக்கிய நெசவாளர்கள் மையங்களில் அமைந்துள்ள கோ—ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் மூலம் ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, தமிழ்நாட்டில் புதிய கூட்டுறவு நூற்பாலைகள் ரூ. 21 கோடி மூலதனச் செலவில் அமைக்கப் பட்டுள்ளன.*

## மாவட்ட வாரியாக விவரம்

*ஊத்தங்கரை, அறந்தாங்கி, தேனீ, எட்டையபுரம் கமுதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தியை ஆரம்பித்தன. இவற்றுள், எட்டைய புரம் கூட்டுறவு நூற்பாலை செயற்கை இழை நூல் போன்ற ரகங்களை உற்பத்தி செய்வதற்கான நூல்களை உற்பத்தி செய்து வருகின்றது. கமுதியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலை, ஆதி திராவிடர்கள் நலனுக்காகவே அமைக்கப்பட்ட ஒன்றாகும். கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரைத் தலைவ ராகக் கொண்ட நூல் விலை*

*நிர்ணயக் குழு, நூற்பாலைகள் கோ—ஆப்—டெக்ஸிற்கு வழங்கும் நூல்களின் விற்பனை விகிதங்களை வரையறுக்கிறது. ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் தேவைப்படும் நூலின் அளவுகளுக்கேற்பக் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், அவற்றிற்குப் பலதரப் பட்ட எண்ணிக்கையில் நூல் ஒதுக்கீடு செய்து வருகிறார். தனிப்பட்ட நூற்பாலைகள், இந்த ஒதுக்கீடுகளை கோ—ஆப்டெக்ஸின் பல்வேறு விற்பனை நிலையங்களுக்கும் வழங்குகின்றன. இதனால் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் தாராளமாகக் கிடைப்பதுடன், சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப் பினையும் நல்கி வருகிறது.*

## கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கான உதவிகள்

*இந்திய அரசின் நிதியுதவியைக் கொண்டு தமிழ்நாடு அரசு கூட்டுறவு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களைக் காஞ்சி புரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களில் நிறுவி யுள்ளது. மேலும், இரண்டு கூட்டுறவுக் கைத்தறி ஏற்றுமதித் திட்டங்களை, கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் நிறுவி யுள்ளது. இத்திட்டங்களின் மூலம் இதுவரையும் 18,330 கைத்தறிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் 1983—84 ஆம் ஆண்டில் 31.12.85 வரை ரூ. 522 இலட்சம் மதிப்புள்ள 63.60 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 595.40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

## தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோ—ஆப்டெக்ஸ்)

*கோ—ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கபடும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம், தமிழ்நாட்டில் உள்ள 1500 பிரதம நெசவாளர்கள்*

*சங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.*

*இச்சங்கம் கடந்த 1986—88 ஆம் ஆண்டில் ரூ. 66.34 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, ரூ. 89.33 கோடி மதிப்புக்கு விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேஷ்டிகள் மற்றும் சேலைகள், லுங்கிகள் போன்றவை கிடைத்தன. அரசுப்பணியாளர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் திட்டத்தையும் கோ—ஆப்டெக்ஸே தொடர்ந்து செயல்படுத்திவர உத்தரவிடப்பட்டது.*

## கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சாதனை

*கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர் களுக்குக் கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான கடன் வசதித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசும் தம் பணியாளர்களுக்கும் இத்திட்டத் தினைக் கொண்டுவர, மத்திய அரசு கேட்டுக் கொள்ளப் பட்டது.*

*கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதிக்கென்று ஒரு தனி அமைப்பினை "கோ—ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்" என்ற பெயரில் ஏற்படுத்தி விற்பனையைப் படிப்படியாக அதிகரித்து வந்தது. 1985—86ஆம் ஆண்டில் குறைந்த அளவு இரண்டு கோடி ரூபாய் அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி பாதுகாப்புத் துறைக்கும், துணை இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதித் துணிகளை*

*கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் அவர்களுக்கு விற்பனை செய்தது. முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தும் பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்குக் கைத்தறிச் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டது.*

## நெசவாளர்நல சேமிப்புத்திட்டம்

*நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெச வாளர்களின் நலனுக்காகக் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் பாதுகாப்பு மற்றும் சேமிப்புத் திட்டம்' என்ற நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் கூட்டுக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் மொத்தமாக அனைத்து நெசவாளர்களும் கொண்டுவரப் பட்டனர். இத்திட்டத்தின் கீழ் சுமார் 1,02,000 கைத்தறி நெசவாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளியும் தன்னுடைய கூலியில் ஒரு ரூபாய்க்கு 6 காசு தருகின்றனர். அரசு ஒரு ரூபாய்க்கு 3 காசு வீதம் மானியம் அளிக்கிறது. இதன் மூலம் சேரும் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7 சத விகிதம் வட்டி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி இறக்க நேரிட்டால் அந்த நெசவாளியின் சேமிப்பில் உள்ள தொகையும், அரசு மானியமும் அதற்குண்டான வட்டியுடன் ரூ. 3000 ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டது.*

*மொத்தத்தில் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் நித்தமும் வளர்ச்சிபெற்று வருகிறது என்று சொல்வது சாலப் பொருந்தும்.*

## கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடி

*கைத்தறித் துணியின் விற்பனையினைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் நுகர்வோருக்கும் கைத்தறித்துணி வாங்குவதன் மீது தள்ளுபடி அளிப்பதும்*

*ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படும் மானியத் தொகையினை மைய அரசும், மாநில அரசும் 55. 58 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் 1962—63 ஆம் ஆண்டிற்கு 45 நாட்களுக்கு 23 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அளிப்பதற்கு முன் வந்தது. மேற்படித் திட்டத்தின் கீழ் 1984—85 ஆம் ஆண்டில் அரசு ரூ. 14 கோடி அளவிற்கு அனுமதி வழங்கியது. மேலும் இத்திட்டத்திற்கு 1983—84 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டது. மேலும் நிதியுதவி கோரியதன்பேரில் ரூ. 2.60 கோடி வழங்கி உள்ளது. எனவே இதுவரை ரூ. 12.40 கோடி இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.*

## நெசவாளர் வீட்டுவசதித் திட்டம்

*1982ஆம் ஆண்டிற்குப் பின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெசவாளர் வீட்டுவசதித் திட்டம் மீண்டும் கொண்டு வரப்பட்டு 1980—81ஆம் ஆண்டிலிருந்து மாற்றி அமைக்கப் பட்ட நெசவாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு ரூ. 12,000 செலவானது. இதில் அரசு ரூ. 1,000 அளித்தது. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகமும் பெரும் அளவிற்கு கடன் உதவி அளித்தது. மீதித் தொகையை பயனடையும் நெசவாளர் செலுத்த வகைசெய்யப்பட்டது. கூட்டுறவுத் துறையின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு 31.12.85 முதல் 2439வீடுகள் கட்டித்தரப்பட்டன. இத்திட்டத்திற்கு 85—86ஆம் நிதி ஆண்டில் ரூ. 18 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டது.*

## தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் கடன்

*கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும், அதன் துணைத் தொழில்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் கடன் உதவி*

*அளித்தது. இக்கழகம் 2026 தனி கைத்தறி நெசவாளர் களுக்கு நடைமுறை மூலதனத்தில் கடனாக ரூ. 196.55 இலட்சம் அளித்துள்ளது.*

## காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சரிகை நிறுவனம்

*காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் பிரதம பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை நிவர்த்தி செய்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் அதன் சரிகை உற்பத்தியை மாதம் ஒன்றுக்கு 500 மார்க்குகளிலிருந்து சுமார் 1000 ஆக உயர்த்தியது.*

*கைத்தறித்துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை நிறவப்பட்டது. இந்த ஆலை மாதம் ஒன்றிற்கு சுமார் 10 லட்சம் மீட்டர் கைத்தறித் துணிகளுக்கு வெளுக்கப் படுதல், பிரிண்ட் செய்தல், சாயம் போடுதல், பளபளப் பாக்குதல் முதலிய பதனிடும் வசதிகள் செய்து கொடுக்கும் திறனுடையது. இவ்வாலையில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குத் தேவையான நூலும் சாயமிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.*

## ரூ.10 கோடியில் நூல்பதனிடும் ஆலை

*பவானிசாகரில் 10 கோடி ரூபாய் செலவில் நூல் பதனிடம் ஆலை அமைக்கப்பட்டது. தமிழகத்தில் மேலும் 8 ஆப்செட் அச்சகங்கள் அமைக்கப்பட்டன.*



# பட்டு உற்பத்தியில் பார்போற்றும் சாதனை குவித்த எம்.ஜி.ஆர். அரசு

## அதிக வேலைவாய்ப்பளிக்கும் தொழில்

*விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குறைந்த மூலதனத்தில் கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப் பளிக்கக் கூடிய தொழில் பட்டுத் தொழிலாகும். 1977ஆம் ஆண்டு தொழில் வணிகத்துறையில் ஒரு அங்கமாக பட்டு வளர்ப்பு பிரிவு செயல்பட்டு வந்தது.*

*தமிழக அரசின் ஆக்கமிக்க திட்டங்களால் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த வேண்டிய தருணத்தில் தமிழக அரசு பட்டுவளர்ச்சித்துறை, தனியாக சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித்துறையாகச் செயல்பட 1979 ஆம் ஆண்டு ஆணை யிட்டது. பட்டுவளர்ப்புத் தொழில் ஓசூர், தாளவாடி ஆகிய மலைப்பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது. தமிழக அரசின் தளராத முயற்சியின் காரணமாக, சமவெளிப் பகுதிகளிலும் பட்டு வளர்ப்புத் தொழில் 1977ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது*

*அனைத்து மாவட்டங்களிலும் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதுடன் நல்ல பணப்பயிராக விவசாயிகளின் பொருளாதாரத்தை மேற்படுத்தியுள்ளது.*

*மாநிலத்தில் 1977 ஆம் ஆண்டு 15382 ஏக்கரில் விவசாயி களால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு வந்தது. 1986ஆம் ஆண்டு முடிய கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு திட்டங் களைச் செயல்படுத்தி 72,662 ஏக்கர் மல்பரி நடவு செய்யப் பட்டு 3,76,368 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றனர். நடப்பு 1986—87ம் ஆண்டில் மேலும் புதிதாக 5 ஆயிரம் ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.*

*தமிழக அரசின் ெருமைக்குரிய சாதனை, மாநிலத்திற்குத் தேவையான பட்டு வளர்ப்பு முட்டைகள் தயாரிக்க நமது மாநிலத்திலேயே தேன்கனிக் கோட்டைப் பகுதியில் தமிழ்நாட்டின் விதைப்பகுதி, 1978ஆம் ஆண்டிலேயே அரசின் சீரிய திட்டங்களால் நிறுவப்பட்டது.*

## பட்டுமுட்டை தயாரிப்பில் முன்னேற்றம்

*நாம் கடந்த காலங்களில் அண்டை மாநிலமான கர்நாடகத்தையே நாட்டின் விதைக்கூடுகளுக்கு அணுக வேண்டியிருந்தது. இந்நிலை 1978 ஆண்டிலேயே மாறி சுயதேவை பூர்த்தி செய்யப்பட்டது. மாநிலத்தில் தர்மபுரி மாவட்டம் ஒசூர் மற்றும் ஈரோடு மாவட்டம் தாளவாடிப் பகுதிகளில் மட்டுமே முட்டை தயாரிப்பு வித்தகம் செயல் பட்டு வந்தது. தற்போது பட்டு வளர்ப்பு தொழில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் விவசாயிகளின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, பட்டு முட்டை வித்தகங்கள் கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், வாணியம் பாடி, திண்டுக்கல், கும்பகோணம், தென்காசி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.*

*மத்திய பட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் 3 வித்தகங்கள் ஒசூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவைத்தவிர தனியார் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு அரசு கண் காணிப்பில் முட்டை விற்பனையகங்கள் ஒசூர் மற்றும் தாளவாடிப் பகுதிகளில் செயல்படுகின்றன. 1977 ஆம் ஆண்டில் 16.05 இலட்சம் முட்டைகள் மாநிலத்தில் வளர்க்கப் பட்டன. தற்போது 130 இலட்சம் முட்டைகள் ஆண்டிற்கு வளர்க்கப் படுகின்றன. இந்த முட்டை வளர்ப்பு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.*

## விற்பனை செய்யும் அங்காடிகள் பெருக்கம்

*விவசாயிகள், உற்பத்தி செய்தப்பட்டுக்கூடுகளை விலை நிர்ணயம் செய்யவும், கொள்முதல் செய்யவும் மாநிலத்தில் 1977ல் 3 பட்டுக்கூடு அங்காடிகள் மட்டுமே இருந்தன. தற்போது 29 அங்காடிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.*

*கூடுகளிலிருந்து பட்டினை எடுப்பதற்குப் பட்டு நூற்பு நிறுவனங்கள் மாநிலத்தில் 1977ஆம் ஆண்டில் 93 செயல்பட்டு வந்தன. பல திட்டங்களால் மாநிலத்தில் தற்போது அவை 188 என்ற அளவில் உயர்த்தப் பட்டுள்ளது. தனியார் துறையில் பட்டு நூற்பு தொழில் ஆரம்பகாலத்திலேயே அதாவது 1978ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு அரசினரால் சலுகைகள் வழங்கப்பட்டு, தற்போது 2699 ஏனங்கள் தனியார் நிறுவனங்களில் செயல்பட்டு வருகின்றன. மல்பரி சாகுபடி செய்வோர்களை உறுப்பினராகக் கொண்ட 68 பட்டு நூற்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் அமைக்கப்பட்டு, 303 ஏனங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.*

## பட்டுக்கூடுகள் தயாரிப்பில் சாதனை

*பட்டுத் தொழில் நூற்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அரசினரால் உதவிகளும் வழங்கப் பட்டுள்ளன. மாநிலத்தில் 1977ம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோ கிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. தற்போது மாநிலத்தில் 1985—86ம் ஆண்டில் 100 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. கிருஷ்ணகிரி நீர்தேக்கத் திட்டத்தின் அருகே ஒரு சிறிய பட்டு நூற்பாலை ரூ. 25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு 1981ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதுபோன்ற சிறிய நூற்பாலை வடஆற்க்காடு, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்த திட்டம் தீட்டப்பட்டது.*

*பட்டு வளர்ப்பு விரிவடைவதற்கும் விவசாயிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யவும் இத்தொழிலுக்கு வேண்டிய உள்ளமைப்புகள், அதாவது மல்பரி விதைக் குச்சுகள் வழங்குவதற்கு மாநிலத்தின் ஆங்காங்கே பண்ணைகளும் விவசாயிகளுக்கு, மல்பரி சாகுபடி முறை, புழு வளர்ப்பு முறை ஆகியவற்றில் பயிற்சி வழங்குவதற்கும் மாவட்டங்களில் செயல் விளக்கப்பண்ணைகளும், மாவட்டப் பட்டு வளர்ப்பு மையங்களும் நிறுவப்பட்டுள்ளன.*

## பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்.

*இவை தவிர, நலிவடைந்த மலைவாழ் மக்கள் மேன்மை யடைய கல்ராயன் மலை, கொல்லி மலை, சித்தேரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் முன்னோடிப் பயிற்சி பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. சீரிய வளர்ச்சிக்கும் அதிக மகசூலுக்கும் விவசாயிகளுக்கு முட்டைகள் வழங்குவதற்குப் பதிலாக இளம்புழுக்கள் வழங்கத் திட்டங்கள் செயல்படுத்தி,*

*தற்போது தமிழ்நாட்டில் 115 கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

## கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி

*"வறட்சிக்கு இலக்காகும் பகுதி" மாவட்டங்களான தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராம லிங்கம், விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுதியதால் கிராமப் பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைந்துள்ளது.*

*மேலும் பட்டு உற்பத்தியை பெருக்க எம்.ஜி.ஆர். அரசு ஆக்கமிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப் போதிய தொழில் நுணுக்கம் தெரிந்த நபர்களின் தேவை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அரசின் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு முன்கூட்டியே திட்டமிட்டு 1981—ஆம் ஆண்டில் ஒசூரில் பட்டு வளர்ப்புப் பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்த நபர்களுக்குப் பயிற்சி வழங்கி பின்னர் இத்துறையில் சேர்ந்துப் பணியாற்றித் திட்டங்களைச் செயல்படுத்த வழிமுறை செய்துள்ளது.*

## பட்டு மேம்பாட்டுக்கு தனி பட்டப்படிப்பு

*மேல்மட்டத் தொழில்நுட்ப வல்லுநர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய விவசாயப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் இதற்கென ஒரு பட்ட மேற்படிப்பைத் துவக்கிச் செயல்படுத்தி வருகிறது.*

*உற்பத்தி செய்த பட்டினை விற்பனை செய்வதற்குக் காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் 1979ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்குத் தமிழக அரசின்*

*கூட்டுறவு வளர்ச்சிக்கழகம் மற்றும் மத்திய பட்டு வாரியம் ஆகியவை வேண்டிய நிதி உதவி வழங்கி, கச்சாப் பட்டு கொள்முதல் செய்வதற்கு வழி வகை செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் கிளைகள் சேலம். கோவை, தர்மபுரி, மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு தனியார் கூட்டுறவுத் துறை மற்றும் அரசுத்துறைப் பட்டினைக் கொள்முதல் செய்து வருகின்றன. 1985—86ம் ஆண்டில் காஞ்சிபுரம் பட்டு இணையம், ரூ.5.92 கோடி மதிப்புள்ள 1.08 இலட்சம் கிலோ பட்டுக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.*

## பட்டு பயிரிட மானியம், கடன்

*பட்டுத் தொழில் மேற்கொள்ள எம்.ஜி.ஆர். அரசு உயர் ரக எம். 5 இன விதைக் குச்சிகள் நடவு செய்வதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானியமாக வழங்குகிறது. பட்டுப்புழு வளர்ப்புக்குத் தேவையான புழுவளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும் புழு வளர்ப்பு மனை கட்டவும் கடனாக ரூ. 5000 வங்கிகள் மூலம் பெற்று விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியது. மேலும், இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 25% மானியம் வழங்கப்படுகிறது.*

## எம்.ஜி.ஆர். அரசின் பட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் விவரம்

*1977—ஆம் ஆண்டு முதல், தமிழக அரசின் ஆக்கமிகு திட்டங்களால் பட்டு வளர்ச்சித்துறை அடைந்த சாதனைகள் எண்ணிலடங்கா! அவை வருமாறு:*

*மல்பரி பரப்பு 1977ம் ஆண்டில் 15,382 ஏக்கர் இருந்தது. 1985—86ம் ஆண்டில் 72,622 ஏக்கராக அதிகரித்துள்ளது. பட்டு முட்டை உற்பத்தி 1977ம் ஆண்டில் 16.05 இலட்சம் இருந்தது. 1985—86ம் ஆண்டில் 130 இலட்சம் முட்டைகளாக அதிகரித்துள்ளது.*

*பட்டுக்கூடு உற்பத்தி 1977ம் ஆண்டில் 16.05 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985—86ம் ஆண்டில் 100 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது.*

*கச்சாப் பட்டு உற்பத்தி 1977ம் ஆண்டில் 0.28 இலட்சம் கிலோவாக இருந்தது. 1985—86ம் ஆண்டில் 3 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது. புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்குவதற்கான மானியம் 1977ம் ஆண்டில் 531 ஆக இருந்தது. 1985—86ம் ஆண்டில் 1,4824 ஆக அதிகரித்துள்ளது. புழுவளர்ப்பு மனை கட்ட மானியம் 1977ம் ஆண்டில் 431 ஆக இருந்தது. 1985—86ல் 12969 அக அதிகரித்துள்ளது.*

## பட்டுசார்ந்த வேலைவாய்ப்பு பெருகியது

*வேலை வாய்ப்புப் பெருக்கம் 1977ம் ஆண்டில் 76910 ஆக இருந்தது. 1985—86ல் 3,76,368 ஆக அதிகரித்துள்ளது.*

*பட்டு வித்தகங்கள் 1977ம் ஆண்டில் 1 ஆக இருந்தது. 1985—86ம் ஆண்டில் 8 ஆக அதிகரித்துள்ளது.*

*பட்டு நூற்பு நிலையங்கள் 1977ம் ஆண்டில் 4 ஆக இருந்தன. 1985—86ம் ஆண்டில் 22 ஆக அதிகரித்துள்ளது.*

*அரசு பட்டுக்கூடு அங்காடிகள் 1977ம் ஆண்டில் 3 ஆக இருந்தது. 1985—86ம் ஆண்டில் 23 ஆக அதிகரித்துள்ளது.*

*மாவட்ட பட்டு வளர்ச்சி மையம் 1977ம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985—86ம் ஆண்டில் 4 பட்டு வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்டது.*

*கிராமிய நூற்பு மற்றும் பயிற்சி மையம் 1977ம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985—86ம் ஆண்டில் 7 உருவாக்கப் பட்டது.*

*கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் 1977ம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985—86ம் ஆண்டில் 115 உருவாக்கப் பட்டது*

*தொழில்நுட்ப சேவை மையங்கள் 1977ம் ஆண்டில் ஒன்றும் இல்லை. 1985—86ம் அண்டில் 34 உருவாக்கப்பட்டுள்ளது. முன்னோடி சேவை மையங்கள் 1977ம் ஆண்டில் ஒன்று மில்லை. 1985—86ம் ஆண்டில் 10 உருவாக்கப்பட்டுள்ளது. பட்டு வளர்ச்சி முன்னேற்ற மையங்கள் 1977ஆம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985—86ம் ஆண்டில் 15 உருவாக்கப்பட்டது.*

## பயிற்சி மையங்கள்

*விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள் 1977ம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985—86ம் ஆண்டில் 11 உருவாக்கப்பட்டது.*

*மல்பரி நாற்றங்கால்கள் 1977ம் ஆண்டில் ஒன்றுமில்லை. 1985—86ம் ஆண்டில் 5 உருவாக்கப்பட்டுள்ளது.*

*மாதிரி மல்பரி பண்ணைகள் 1977ம் ஆண்டில் ஒன்றுமில்லை 1985—86ம் ஆண்டில் 13 உருவாக்கப் பட்டுள்ளது.*

*பட்டு விற்பனை இணையம் 1977ம் ஆண்டில் ஒன்று மில்லை. 1985—86ம் ஆண்டில் 1 உருவாக்கப்பட்டுள்ளது.*

*“பட்டுதனைப் பெருக்கிடுவோம்” பாரெல்லாம் அனுப்பிடு வோம் என்ற கொள்கையின் அடிப்படையில் எம்.ஜி.ஆர். அரசு, தமிழ்நாட்டில் பட்டு தொழில் முன்னேற்றம் அடைந்தது.*



# நூற்பு ஆலைகள் பெருகியது வேலைவாய்ப்பு அதிகரித்தது

## புதிய நூற்பு ஆலைகள் உதயம்

புதிய நூற்பு ஆலைகள் என்ற குறிப்பில், 1978—1979ம் ஆண்டு தருமபுரி மற்றும் இராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில், புதிய ஆலைகள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வரும் கதிர் திறன்களை விரிவாக்கவும் அரசு பரிந்துரை செய்ததன் பேரில், பஞ்சாலை ஆணையாளர் உரிமம் வழங்கி இருக்கிறார்கள்.

கோயம்புத்தூரில் 1978—1979ம் ஆண்டில் 5, தருமபுரியில் 1978—1979ம் ஆண்டில் 2; 1979—1980ஆம் ஆண்டில் 6 என்பதைக் ஆகும். இராமநாதபுரத்தில் 1978—1979ம் ஆண்டில் 4 ஆலைகள்; 1979—1980ம் ஆண்டில் 4 ஆலைகள்; கோயம்புத்தூரில் 1978—1979ல் 12 ஆலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன;

1979—1980ல் 11 ஆலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக் கின்றன. அதே ஆண்டு மேலும் 22 புதிய ஆலைகள்

*நிறுவப்பட்டும், 29 ஆலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டும் உள்ளன. புதிய ஆலைகளில் 5,37,700 கதிர்களும், விரிவாக்கத்தின் மூலம் 6,28,468 கதிர்களும் நிறுவப்பட்டன. இதனால் 22,600 பேர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைத்தது.*

## அதிக கதிர்கள் சேர்ப்பு

*கோயம்புத்தூரில் புதிய ஆலைகள் 5; விரிவாக்கம் செய்யப்பட்டது 12; ஆக மொத்தம் 17; சேலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டது 3; புதிய ஆலைகள் இல்லை; ஆக மொத்தம் 3. தருமபுரியில் விரிவாக்கம் இல்லை; புதிய ஆலைகள் 2; ஆக மொத்தம் 2. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் 3; புதிய ஆலைகள் 4; ஆக மொத்தம் 7. அங்கே விரிவாக்கம் போதுமான அளவிற்கு உருவாக்கப்பட்டிருக் கிறது. 1979—1980ம் ஆண்டுகளில், கோயம்புத்தூரில் விரிவாக்கம் 11; புதிதாக 1; மொத்தம் 12. சேலத்தில் இல்லை. இராமநாதபுரத்தில் புதிய ஆலைகள் 4; மொத்தம் 4, இதே போல் கதிர்களின் எண்ணிக்கையை விரிவாக்கியதன் மூலம், 2,80,000 கதிர்கள் கோயம்புத்தூரில் புதிய ஆலைகளின் மூலம் 1,25,200 கதிர்கள். சேலத்தில் விரிவாக்கியதன் மூலம் 61,652 கதிர்கள் உருவாகியுள்ளன.*

## வேலைவாய்ப்பு பெருகியது

*அதுபோல் தருமபுரியில் புதிய ஆலைகளின் மூலம் 50,000 கதிர்கள் இயங்குகின்றன. சேலத்தில் 61,652; தருமபுரியில் 50,000, இராமநாதபுரத்தில் 1,81,260 கதிர்கள் உயர்ந்துள்ளது.*

*வேலைவாய்ப்பு — விரிவாக்கத்தின் காரணமாக கோவையில் 3,804 பேர்களுக்கும் புதிய ஆலைகளின் மூலமாக 2,767 பேர்களுக்கும் வேலை கிடைத்துள்ளது. ஆக மொத்தம் 6,571 பேர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைத்தது.*

*சேலத்தில் புதிய ஆலைகளில் விரிவாக்கத்தின் மூலம், வேலைவாய்ப்பு 1,134 பேர்களுக்கு, தருமபுரியில் புதிய ஆலைகளின் மூலம், 925 பேர்களுக்கு வேலை. இராமநாத புரத்தில் 1,334 பேர்களுக்கு விரிவாக்கத்தின் மூலம் வேலை; புதிய ஆலைகள் மூலம் 1,852 பேர்களுக்கு வேலை. ஆக மொத்தம் 3,186 பேர்களுக்கு வேலை. ஒட்டுமொத்தமாக, 11,816 பேர்களுக்கு வேலை கிடைத்தது.*

*அதேபோல் 1979—1980ம் ஆண்டில் விரிவாக்கத்தின் மூலம், கோவை மாவட்டத்தில் 2,35,476 கதிர்கள், .*

*முதலில் சொன்னது கதிர்கள் — இப்போதுச் சொல்வது வேலைவாய்ப்பு. விரிவாக்கத்தின் மூலம், 4,246 பேர்களுக்கு வேலைவாய்ப்பு, புதிய ஆலைகள் மூலம், 603 பேர்களுக்கு வேலை. மொத்தம் 5,849 பேர்களுக்கு வேலை.*

*தருமபுரி மாவட்டத்தில் புதிய ஆலைகள் மூலமாக. 1,37,000 கதிர்கள். அதனால், 2,981 பேர்களுக்கு புதிய ஆலைகள் மூலமாக வேலைவாய்ப்புகிடைத்தது. இராமநாதபுரத்தில் புதிய ஆலைகளின் மூலம், 2,523 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது.*

*ஆக, 1979—1980ம் ஆண்டில், விரிவாக்கத்தின் மூலம் 4,649 பேர்களுக்கு வேலை; புதிய ஆலைகளின் மூலம் 6,104 பேர்களுக்கு வேலை; ஆக மொத்தம் 10,753 பேர்களுக்கு வேலை. இரண்டையும்சேர்த்து, 22,569 பேர்களுக்கு புதிதாகத் தொழிற்சாலைகள் மூலம் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.*



# குடிநீர் பிரச்சினை தீர்ப்பதில் வரலாறு படைத்தார், எம்.ஜி.ஆர்!

## சரித்திர புகழ்பெற்ற "தெலுங்கு கங்கை" திட்டம்

*ஆளவந்தோர் என்னதான் அதிசயங்கள் செய்தாலும், உலகுள்ளவரை அழியாதபடி, ஆவணங்களில் இடம் பெறவல்ல அரிய செயல்கள் என்று சிலதான் உண்டு. அதற்கு பெயர்தான் "சாகா சரித்திரம்".*

*கரிகால மன்னன் கல்லணை கட்டியது, பென்னிகுக் என்ற பெருந்தகை முல்லைப்பெரியாரில் சொந்த செலவில் அணை கட்டியது, இராஜராஜ சோழன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டியது, இந்தியாவுக்கு புகழ்சேர்க்கும் வகையில் ஏழு அதிசயங்களில் ஒன்றாக ஷாஜகான் தாஜ்மகாலை உருவாக்கியது என்று அதுபற்றி சொல்வார்கள்.*

*அதே வரிசையில் இடம்பெறத் தகுதிவாய்ந்த ஒரு சாதனையை எம்.ஜி.ஆர் மட்டுமே தன் ஆட்சிகாலத்தில்*

*அரங்கேற்றி, அந்த வரலாற்று பட்டியலில் தன் பெயரையும் இடம்பெற செய்து இருக்கிறார்.*

*அதுதான் "தெலுங்கு கங்கை" திட்டம். ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்திற்கு அதாவது தான் சார்ந்த தமிழ்மண்ணுக்காக நீண்ட நெடிய வாய்க்கால் வெட்டி குடிநீர் கொண்டுவந்த திட்டம்! தாகத்திற்கு தண்ணீர் அருந்தும் போதெல்லாம் ஒவ்வொரு தமிழனும் நன்றி சொல்ல வேண்டிய நற்செயலுக்கான திட்டம்அது!*

*ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா நதியிலிருந்து தமிழ்நாடு எல்லை வரை நீண்ட நெடிய கால்வாய் வெட்டி அந் நதியிலிருந்து தமிழகத்திற்கு குடிநீர் கொண்டுவரப் பட்டது.*

*அதுவும் எந்த எதிர்ப்பும் இல்லாமல் இந்த திட்டம் இனிதே நிறைவேற்றப்பட்டது. அதற்கு காரணம், ஆந்திர முதல்வராக இருந்த என்.டி.ராமாராவும் தமிழக முதல்வரான எம்.ஜி. ஆருக்கும் இடையே நிலவிய நட்பு, இரு மாநில மக்களிடம் அவர்கள் இருவருக்கும் இருந்த மகத்தான செல்வாக்கு. இப்படி தன் சொந்த செல்வாக்கை மக்களுக்கே பயன்படும் விதத்தில் மாபெரும் ஆக்கப்பணியாக மாற்றிய பெருமை இந்தியாவில் வேறு எந்த அரசியல் தலைவர்களுக்கும் இல்லை என்பது வரலாற்றில் பதிவாகிவிட்டது.*

## குடிநீர் திட்டங்கள்

*அனைத்து மக்களுக்கும் நல்ல குடிநீர் கிடைக்கச் செய்வதே எனது லட்சியம் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 30.06. 1977ல் பொறுப்பேற்றவுடன் கூறினார். அந்த உறுதிமொழியை நிறைவேற்றிக் காட்டுவதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தன.*

*கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. கடலோரத்தில் நல்ல குடிநீரை எடுக்கும் திட்டத்தில் புதிய குழாய் அமைப்பு திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டப் பணிகளை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நேரில் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்தத் திட்டம் வேறு சில மாவட்டங் களுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்பட்டது குறிப்பிடத் தக்கது.*

*செயற்கை மழை பெய்ய வைப்பதற்காக ஒரு தனி விமானம் புரட்சித் தலைவர் ஆட்சியில் வாங்கப்பட்டது. அவ்விமானம் மூலம் சோழவரம் பகுதியில் 7.5 மி. மீட்டர் மழை பெய்விக்கப்பட்டது.*

*ரூ. 60 கோடி செலவில் பாலாற்றில் இருந்து சென்னை நகருக்குத்தண்ணீர் கொண்டு வரும் திட்டம் புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது.*

*குடிசை வாழ் மக்கள் தண்ணீர் சேகரித்து வைப்பதற்காக பிளாஸ்டிக் குடங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.*

*சென்னையில் 2 ஆயிரம் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

## தமிழக அரசுக்கு “மத்திய திட்டக்குழு’ பாராட்டு

*திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழக அரசு செயல்படுவதாக மத்திய திட்டக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது. மற்ற மாநிலங்களில் இல்லாத கிராமப்புற குடிநீர் திட்டத்தை இக்குழு வெகுவாக பாராட்டியது. 1984ம் ஆண்டுக்குள் எந்தவொரு குடியிருப்பிலும் குடிநீர் வசதி இல்லை என்ற*

*நிலை இருக்காத அளவு தமிழக அரசு செயல்படுவதாகவும் இக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது.*

## வாரியங்களின் நடவடிக்கைகள்

*அனைத்து மக்களுக்கும் நல்ல குடிநீர் கிடைக்கச் செய்வதே எனது லட்சியம் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் 30.06.1977ல் பொறுப்பேற்றவுடன் கூறினார். அந்த உறுதி மொழியை நிறைவேற்றிக் காட்டுவதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தன.*

## சென்னைக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

*குடிநீர் தட்டுப்பாட்டால் அவதிப்பட்ட சென்னை மாநகர மக்களுக்காக புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தாமரைப்பாக்கத்தில் இருந்து நிலத்தடி நீரை எடுத்து, ராயபுரம் அண்ணா பூங்கா அருகில், கட்டப்பட்ட இரு தரைமட்டடித் தொட்டிகளில் தேக்கி விநியோகிக்கும் திட்டமாகும். இதற்காக ராயபுரம் அண்ணா பூங்காவில் ஒன்றரை கோடி லிட்டர் தண்ணீர் தேக்கி வைப்பதற்கான தொட்டிகள் கட்டப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டன. இதன் மூலம் சுமார் 16 விழுக்காடு குடிநீர் விநியோகம் அதிகரித்து பெருமளவு நிலவிய குடிநீர் தட்டுப்பாடு நீக்கப்பட்டது. மேலும், புழலேரியில் இருந்து கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுரங்க கால்வாய்கட்டப்பட்டது. அதன்படி பருவமழை தவறியதால், ஏற்பட்ட தண்ணீர் பிரச்சனையை சமாளிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் நிறுவனம் வழங்கிய ஒரு லட்சம் ரூபாய் நிதியில் சென்னை நகரில் 20 குடிநீர் தொட்டிகள் திறந்து வைக்கப்பட்டன.*

இவை தவிர மேலும் 50 குடிநீர் தொட்டிகள் திறக்கப் பட்டன. தெலுங்கு கங்கை திட்டம் 1977ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 847 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் மூலம் சென்னை மக்களின் தாகத்திற்கு இப்போதும் தண்ணீரை கிடைத்து வருகிறது.

முட்டுக்காட்டு சாலை வழியாக ஆழ்குழாய் கிணறு மூலம் நீரேற்றி, தென் சென்னை பகுதிக்கு தண்ணீர் வழங்கும் திட்டத்திற்குத் தமிழக அரசு இரண்டரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. நடைபாதை வாசிகள் பயன்பெறுவதற்காக சென்னை நகரில் சுமார் 100 இடங்களில் குளுகுளு குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டன.

## கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்

கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. மற்றும் கடலோரத்தில் நல்ல குடிநீரை எடுக்கும் திட்டத்தில் புதிய குழாய் அமைப்பு திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டப் பணிகளை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார். இந்தத் திட்டம் வேறு சில மாவட்டங்களுக்கும் பின்னர் விரிவு படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

செயற்கை மழை பெய்ய வைப்பதற்காக ஒரு தனி விமானம் புரட்சித் தலைவர் ஆட்சியில் வாங்கப்பட்டது. அவ்விமானம் மூலம் சோழவரம் பகுதியில் 7.5 மி.மீட்டர் மழை பெய்விக்கப்பட்டது.

ரூ. 60 கோடி செலவில் பாலாற்றில் இருந்து சென்னை நகருக்குத்தண்ணீர் கொண்டு வரும் திட்டம் புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது.

*குடிசை வாழ் மக்கள் தண்ணீர் சேகரித்து வைப்பதற்காக பிளாஸ்டிக் குடங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.*

*சென்னையில் 2 ஆயிரம் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

## சிறுவாணிகுடிநீர் திட்டம்

*தென்னகத்தின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சிறுவாணி குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டது. இதற்காக ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் ரூ. 16.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*சிறுவாணி அணையில் தேக்கப்படும் நீர், சுரங்கப்பாதை வழியாக தமிழக எல்லையில் உள்ள ஆணையாற்றுக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, குழாய்மூலம் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கோவை மற்றும் திருப்பூர் சுற்றுப்புற பகுதிகள், பல்லடம் அவினாசி போன்ற 31 பேரூராட்சிகள் மற்றும் 48 ஊராட்சிப் பகுதிகளிலுள்ள மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.*

## சாயர்புரம் குடிநீர் திட்டம்.

*தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 53 கிராமங்களுக்கு 43 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் சாயர் புரம் குடிநீர் திட்டம் 1981 ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.*

## மக்கள் கேட்ட குடிநீர்

*குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்த அரசு காட்டியுள்ள ஆர்வமும் அக்கறையும் குறிப்பிட்டுக்*

*கூறப்பட வேண்டியவை. நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர்—நல்ல தண்ணீர்தான் கேட்டார்கள். எனவே, குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலும் தீர்ப்பதுதான் இந்த அரசின் முதல் இலட்சியம் என மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பதவி ஏற்ற முதல்நாள் குறிப்பிட்டார்கள்.*

*குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் எம்.ஜி.ஆர். அரசு அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டு முனைப்புடன் செயலாற்றியது. 31.3.1975 முடிய மொத்தம் 79460 குடிநீர்க் கிணறுகளும், 6796 மேல்நிலை தானியங்கித் தொட்டிகளும் மட்டுமே தமிழகக் கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வாயில்களாக அமைந்திருந்தன.*

*இவைகளால் குடிநீர்ப் பிரச்சினையைத் தொட முடியுமே தவிர, தீர்க்க முடியாது என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர். அரசு, முதற்கண் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் அம்சமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தது.*

*1982—83ம் ஆண்டிலேயே தன்னிறைவுத் திட்டம் நிறைவு பெற்றுவிட்டது என்றாலும் கூட குடிநீர் வழங்கும் அம்சம் மட்டும் 1982—83ம் ஆண்டிற்குப் பின்பும் தொடரப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவு திட்டத்தில் இதற்கென கணிசமான நிதியை அரசு ஒதுக்கீடு செய்தது.*

## 90 கோடியில் குடிநீர், ஆயிரக்கணக்கில் ஆழ்துளை கிணறுகள்

*தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி நிலையின் காரணமாக, மாநிலத்தில் சில இடங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டது. அப்படிப்பட்ட குடியிருப்புகளுக்கு*

*தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அரசு குடிநீர் வழங்கியது. 6 வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூ. 89.84 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப் பட்டன.*

*இத்துடன் ரூ. 24.7 கோடி செலவில் வறட்சி நிவாரணப் பணியில் 21,992 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப் பட்டன. 6வது ஐந்தாண்டு திட்டத்தில் 7226 பிரச்சினை (மக்கள் தொகை கிராமங்களுக்கு ஒருசில பாதியளவில்) 108.19 கோடி செலவில் குடிநீர் வழங்கட்டது. ஒரே வரியில் சொல்வதானால் 6வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 7226 பிரச்சினை கிராமங்களுக்கு குறுகிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் 4வது முறையாக வழங்கப் பட்டது. எனவே, அரசு தேவையான நடவடிக்கைகளை எப்போதும் எடுத்து வந்ததுபோல் 1985—86 ஆம் ஆண்டிலும் சராசரி 250—300 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புக்கும் ஒரு கையுறை பொருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தது. 1985—86 ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் ரூ. 24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும், ஊரக குடிநீர் விரைவுத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் ரூ. 18 கோடி மத்திய அரசு வழங்கியது. ஊரகக் குடிநீர்த் திட்டத்தை நன்முறையில் செயலாக்கியதற்கு ஊக்கத்தொகையும் எம். ஜி. ஆர் அரசுக்கு கிடைத்தது. 1985—86ல் இருபத்து ஐந்து லட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2 ஆயிரம் குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது.*

*குடிநீர்ப் பிரச்சினையுள்ள பகுதிகளை இனம் கண்டு கொள்ளவும் தற்போதுள்ள குடிநீர் மூலங்கள் போது மானவையா என்பதைக் கண்டறியவும் எல்லாக் குடியிருப்பு களையும் உடனடியாக மறுகணக்கெடுப்புச் செய்தது, அரசு. போதுமான குடிநீர் உள்ள இடங்களில்*

*மக்கள் தொகைக் கேற்ப குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மறு கணக்கெடுப்பின் முடிவிற்கேற்ப பிரச்சினைக் குடியிருப்புகளுக்குப் படிப்படியாக அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ், குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.*

## மக்கள் தேவைக்கேற்ப சேவை அதுவே சென்னை குடிநீர்

*சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்று வாரியம் 1.8.1978 அன்று சட்டப்படி தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாக அமைக்கப்பட்டது.*

## இதன் நோக்கம்

*சென்னைப் பெருநகர் பகுதியின் பொதுச் சுகாதாரத்தை பேணிக் காத்து நகர மக்களின் வளர்ந்து வரும் தேவைகளைக் கவனித்து குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்றுதல் ஆகியவையே ஆகும்.*

*இவ்வாரியம் தொடங்கி எட்டு ஆண்டுகளுக்குள் சேவை மனப்பான்மையில் திறம்படப் பணி புரிந்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளது.*

*1981 முதல் 1983 வரையிலான 3 அண்டுகள் நிலவிய கடுமையான வறட்சி நிலைமையை இவ்வாரியம் ரூ. 10 கோடி செலவிட்டு வெற்றிகரமாக சமாளித்தது.*

## நிதி

*மாநில அரசின் உதவியோடு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் பிரிவின் கீழ் ரூ. 37,84 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 31 திட்டங்கள் 18 திட்டங்களும் கழிவு நீரகற்று பிரிவின் கீழ் ரூ. 33.53 கோடி செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு 21 திட்டங்களின் 7 திட்டங்களில் 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.*

## உலக வங்கித் திட்டம்

*நிலத்தடி நீரை எடுத்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 15 கோடி வழங்கி ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டுள்ளன.*

## குடிநீர் வழங்குதல்

*1978ம் ஆண்ட நாளொன்றுக்கு வழங்கப்பட்ட குடிநீர் சராசரியாக சராசரியாக 48 மில்லியன் காலன் (215) பயன் பெற்றோர்—25.39 இலட்சம் மக்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியதால் இன்று நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் சராசரியாக 54 மில்லியன் காலன் (245) பயன் பெறுவோர்: 33.35 இலட்சம் மக்கள்.*

*இதைத் தவிர மீஞ்சூர், பஞ்சட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளிலிருந்து நாள் ஒன்றுக்கு 53 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு மணலி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*1978ம் ஆண்டில் 12 ஊராட்சிகள் சென்னை மாநகரோடு இணைக்கப்பட்டு, திருவான்மியூர், கோடம்பாக்கம், சாலிகிராமம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, வில்லிவாக்கம், ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விரைவில் வழங்கப்படும்.*

## கழிவு நீரகற்றல்

*சென்னைப் பெருநகர் 5 மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் கழிவுநீர் சுத்திகரிக்கப் பட்டு அந்நீர் புல் வளர்ப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது.*

*1978ம் ஆண்டு நிலவரப்படி கழிவுநீரகற்று நிலையங்களின் திறன் நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டராகும் ஆனால் இப்பொழுது பல்வேறு திட்டங்களை மேற்கொண்டதால் ஏற்பட்டுள்ள திறன் 220 மில்லியன் லிட்டராகும். மேலும்*

*புதிதாக 6 கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. பெருங்குடி, கோயம்பேடு ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படத் தொடங்கி ரூ. 12 கோடி செலவில் சின்னமலை, வேளச்சேரிசாலை, அரும்பாக்கம், அமைந்தகரை ஆகிய பகுதிகளில் புதிதாக கழிவுநீரகற்று அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 10 நிலையங்கள் புதிப்பிக்கப்பட்டுள்ளன.*

## கழிவுநீர் சுத்திகரிப்பு சாதனங்கள்

*கழிவு நீரகற்றுப் பணிகளை நவீனப்படுத்துவதற்காக, ஆழமான, சிக்கலான கழிவுநீர் அடைப்புகளை அகற்ற வதற்காக "மான்ஸ்ட்டர் 2000" என்னும் சாதனம் ஒன்று ரூ. 40 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.*

## குடிசைகளுக்கு குடிநீர்—கழிவுநீரகற்று வசதி

*இவ்வாரியம் 225 குடிசைப்பகுதிகளுக்கு குடிநீர் வசதியும் 35 குடிசைப்பகுதிகளில் கழிவுநீரகற்று வசதிகளும் செய்து கொடுத்துள்ளது.*

## ஏழாவது ஐந்தாண்டு திட்டம்

*ஏழாவது திட்டக்கால முடிவில்—நாள் ஒன்றுக்கு குடிநீர் சுத்தப்படும் திறனளவு மேலும் 90 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்பட்டது.*

*நிலநீர் திட்டத்தின் மதல் கட்டப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சென்னைக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்படும். கொடுங்கையூரில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன் மேலும் அதிகரிக்கப்படும். பள்ளிப்பட்டு, மேல்பட்டடை, கோட்டூர், மாம்பலம் ஏரிக்கரை, திருவான்மியூர்,*

*வில்லிவாக்கம் ஆகிய பகுதிகளில் புதிதாக கழிவு நீரகற்று வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.*

## ஊரக குடிநீர்த் திட்டம்

*மத்திய அரசுநிதியுதவியுடன் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டம், மாநில அரசு நிதியிலிருந்து செயலாக்கப்படும் குறைந்த பட்சத் தேவைத்திட்டம், டேனிடா, யுனிசெப், ஐரோப்பிய பொருளாதாரக்குழுமம், போன்ற பன்னாட்டு அமைப்புகள் மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன் நிறைவேற்றப் பெறும் குடிநீர்த் திட்டங்கள், உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப் பட்டுவரும் குடிநீர்த்திட்டங்கள், இவை அனைத்தையும் ஒரு முனைப்படுத்திப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மாநிலத்தில் அனைத்த மக்களுக்கும் முழுப் பயன் அளிக்கும் வகையில் “மக்கள் நல்வாழ்வே மாநிலத்தில் பெரு வாழ்வு” என்ற இலட்சிய நோக்குடன் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.*

*தமிழகத்தில் முதன்முறையாக 1976—77ல் அனைத்துக் குடியிருப்புகளிலும் உள்ள நீர் ஆதாரம், நீரின் தன்மை, நீர் பற்றாக்குறை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாநிலத்தில் உள்ள 18.167 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெறாத பிரச்சினைக் குடியிருப்புகளாக அறுதியிடப்பட்டு, அவைகளுக்குத் திட்ட செயலாக்கத்தில் மன்னுரிமை கொடுக்கப்பட்டது. 1977—78ஆம் ஆண்டு 1140 குடியிருப்பு களில் ரூ.7.15 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.*

## குடியிருப்புகளுக்கு 26 கோடியில் குடிநீர்

*ஆறாவது ஐந்தான்டு திட்டக் காலத்தில் (1980—85) 3,465 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கு ரூ.25.97 கோடி செலவில் குடிநீர்த் திட்டஙங்கள் நிறைவேற்றப்பட்டன. 31.3.1985—வுடன் முடிவு பெற்ற ஆறாவது ஐந்தாண்டு திட்டக்*

*காலத்தில் 11.614 பிரச்சினைக் குடியிருப்புகளுக்கும் மற்றும் புதிதாகத் தோன்றிய குடியிருப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் 16,505 குடியிருப்புகளுக்கு ரூ.198.03 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.*

*புதிதாகத் தோன்றிய 2,486 குடியிருப்புகளையும், ஏற்கனவே குடிநீர் வசதி பெற்றிருந்தும் நீர் ஆதாரங்கள் வறண்டு போய் விட்டதால் பிரச்சினை குடியிருப்புகளாக மாறியுள்ள 12,340 குடியிருப்புகளையும் சேர்த்து நடப்பிலுள்ள ஏழாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பத்தில் 13,023 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியளிக்கப்பட வேண்டியிருந்தது. அவற்றில் 10,900 குடியிருப்புகளில் குடிநீர்திட்டங்களை நிறைவேற்ற அரசு முடிவெடுத் துள்ளது. இதற்கான தமிழக அரசின் நிதி ரூ.175 கோடி ஒதுக்கீட்டுடன், மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப் படும் மான்யம் ரூ.100— கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.275 கோடியாகவும் 4 அதிக சக்தியுள்ள ஆழ்துளைப் பான்களையும், 75,000 மீட்டர் அளவு நீளம் பெரும் குழாய்களையும் அளித்துள்ளது. இதுவரை 2,300 பழைய கையிறைப்பான்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.*

*கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் 726 குடியிருப்புகளில் உடல் நலத்துக்கேடு விளைவிக்கக்கூடிய அளவுக்குக் குடிநீரில் ஃபுளோரைடு கலந்து இதனால் 40 லட்சம் மக்கள் பாதிக்கபட்டுள்ளனர். அவர்களுக்கு வெகு தூரத்தில் இருக்கும் நல்ல நீர் கொண்டு வந்து வழங்க ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதியுதவியுடன் 15.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

## கோவை பெரியார் மாவட்டம்

*கோவை, மதுரை சேலம் மூன்று நகரங்களிலும் 740 கரையோர ஊரக கிராமங்களிலும் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.*

ஆக, 1977—78ம் ஆண்டில் 1,140 குடியிருப்புகளில் ரூ.7.15 கோடி செலவில் சுமார் 3 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1985—86ல் முடிவுற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 92.8 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 16.505 குடியிருப்புகளுக்கு ரூ.198.03 கோடி செலவில் குடிநீர் வழங்கப்பட்டது.

யுனிசெப் மற்றும் டேனிடா நிறுவனங்களின் உதவியோடு ஊரகப்பகுதிகளில் கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை யுனிசெப் நிறுவனம் 20 ஆழ்துளையிடும் கருவிகளையும் 46 ஊர்திகளையும், 6615 கையிறைப்பான் களையும் தந்துள்ளது. அத்துடன் நம் மாநிலத்தில் உள்ள பழைய கையிறைப்பான்களுக்குப் பதிலாகப் புதிய இந்திய மார்க்—2 கையிறைப்பான்கள் அமைக்க டேனிடா நிறுவனம் ரூ.72 இலட்சம் நிதி உலக வங்கியின் ரூ.149.42 கோடி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் வரும் கையிறைப்பான் களும், விசையிறைப்பான்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் கருதி இதுவரை ரூ.20.70 லட்சம் அளவிலேயே இருந்த அரசு மானியம் ரூ.375 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றிக் குடிநீர் வழங்கப்பெற எந்த ஒரு கையிறைப் பானும் 7 நாள்களுக்கு மேல் பழுதடைந்த நிலையில் இருக்க கூடாது என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். துருபிடித்து பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலை இரும்பு (எஃகு) தொட்டிகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக சிமென்ட் தொட்டிகளை அமைக்க

*1986—87ம் ஆண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.*

## ஊரக பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள்

*1982—83 மற்றும் 1983—84ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சி யாகப் பருவமழை பொய்த்ததன் காரணமாகத் தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலை கடுமையாகியது. அப்போது ஏற்பட்ட குடிநீர் பஞ்சத்தைப் போக்க ரூ.43.95 கோடி செலவில் ஊரகப் பகுதிகளில் 22,230 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.*

*1985—86ல் கோயம்புத்தூர், அண்ணா, சேலம், திருச்சி, மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மிகவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிய பகுதிகளில் 571 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. தற்போது 11 மாவட்டங்களில் நிலவி வரும் கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் மற்றும் லாரிகள் மூலமாகத் தண்ணீர் விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*தமிழகத்தில் தற்போதுள்ள 652 பேரூராட்சிகள் 413 ஊரகப் பேரூராட்சிகள் என்றும் வகைப்படுத்தப்பட்டு, ஊரகப் பேரூராட்சிகளில் முழு மானிய அளவில் குடிநீர்த்திட்டங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் இவற்றில் குடிநீர்த்திட்டங்கள் எதுவும் இல்லாத 277 ஊரக பேரூராட்சிகள் குடிநீர்த்திட்டங்கள் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அத்துடன் குடிநீர்த் திட்டங்களுக்கு முன் பணமாகப் பேரூராட்சிகளிடமிருந்து பெறாமல் வடிவமைப்புப் பணிகளைக் குடிநீர் வாரியம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு அணை பிறப்பித்துள்ளது.*

*சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் சென்னை நகரின் குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று அமைப்பின் அபிவிருத்திக்காகப் பல பணிகள் விரைவு படுத்தப் பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இவ்வாரியம் குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 1,543 இலட்சம் செலவிலும் கழிவு நீரகற்றுவதற்காக ரூ.2,018 இலட்சம் செலவிலும் பணிகளைச் செயல்படுத்தியுள்ளது.*

*சென்னை நகரில் குடிநீர் மற்றும் தொழில்களின் தேவைக்காக ஒன்றுக்கு மொத்தம் 23 மில்லியன் லிட்டர் அவுக்கு வழங்கப்பட்டது, நாள் ஒன்றுக்கு 298 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.*

## 1 கோடி பேருக்கு குடிநீர்

*தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், நகர்ப்புற, நகராட்சி, மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் பகுதியிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகத் திட்டமிட்டுத் தொடர்ந்த பணியாற்றி வருகிறது.*

*1977—78 முதல் 1986—87 ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் அரசு மேற்கொண்ட பலமுனை நடவடிக்கை களின் பயனாக 100 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினைப் பெற்று வந்தனர்.*



# காவல்துறையின் கண்கள் எம்.ஜி.ஆர். அரசு

## போலீசாருக்கு குடியிருப்புகள்

*நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் காவல்துறை யினரை தன் கண்கள்போல் கருதினார், எம்.ஜி.ஆர்.! எனவே அவர், காவலர்களின் நலனுக்காக எம். ஜி. ஆர் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார்.*

## குடியிருப்புகள் கட்ட உத்தரவு

*திருச்சி, சேலம், உதகையில் புதிய குடியிருப்புகளை கட்ட அவர் உத்தரவிட்டார்.*

## காவல்துறைக்கு கௌரவம்

*1982ம் ஆண்டு பொங்கல் திருநாளில் தமிழகம் முழுவதும், மாவட்டந்தோறும் 1500 காவலர்களுக்கு முதலமைச்சர் விருதும், பரிசுகளும் வழங்கப்படும் என்று, வீரச் செயல்கள் புரிந்த காவலர்களுக்கு பரிசளிக்கும் விழாவில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்தார்.*

காவலர்கள் நேர்மைக்குப்பதக்கம் அளிக்கும்போது, சம்பளத்தோடு, கூடுதலாக 20 ரூபாய் அல்லது 25 ரூபாய்கூடுதலாக வழங்கப்படும் என்ற கோரிக்கை ஏற்கப்படுவதாக முதலமைச்சர் அறிவித்தார். மேற்கண்ட அறிவிப்புகள் உடனடியாக அமுலுக்கு வந்தது

சொந்த வீடுகளில் குடியிருக்கும் முன்னாள் படை வீரர்கள், விதவைகள், வீடு இருக்கும் இடம், வீட்டின் மதிப்பு, வீட்டு எண், செலுத்தும் வரி முதலிய விபரங்களை அந்தந்த மாவட்டத்திலுள்ள முன்னாள் படை வீரர் நல உதவி இயக்குநர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஆணை பிறப்பித்தார். இதன்மூலம் தேசத்திற்காக தியாகம் செய்த குடும்பத்தினருக்கும் பல்வேறு உதவிகள், சலுகைகள் வழங்கப்பட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மிகச் சிறந்த தேசியவாதியாகவும திகழ்ந்தார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

## கடமையில் சிறந்த காவல்துறை

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த திறமையும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்தும் பாரபட்சமுமின்றிச் செயல்படும் காவல்துறைக்கு ஊக்கமும் உரிய சாதனங்களும் அளிப்பது அரசின் கடமை என்பதை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த பத்தாண்டுகளில் வியத்தகு முறையில் கூடுதல் பணியாளர்களையும் சாதனை வகைகளையும் உரிய அளவில் வழங்கி உள்ளார்.

தமிழகத்தில் பெருநகரங்களை ஒட்டியுள்ள இடங்களில் குடியிருப்புகள் மிக அதிகமான முறையில் ஏற்பட்டு அந்தப் புதிய நகர்களில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்படவேண்டிய நியாயத்தை உணர்ந்த தமிழக அரசு, இந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்தது. 1976ல் 873 காவல் நிலையங்களும், 181 புறக்காவல்

*நிலையங்களும் இருந்த நிலைமாறி, 984 காவல் நிலையங்களும், 167 புறக்காவல் நிலையங்களும் இருக்கும் நிலை ஏற்பட்டது. மொத்தம் கூடுதலாக 14,207 காவலர் களையும் நியமனம் செய்தது.*

## மாவட்டங்கள் பிரிக்கப்பட்டது ஏன்?

*நிர்வாக வசதிகருதி மிகப்பெரிய மாவட்டங்கள் பிரிக்கப் பட்டன. அதில் காவல்துறை வசதி என்பதும் அடங்கும், காவல்துறை நிர்வாக நலன் கருதிதான் பெரியார், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன.*

*காவல்துறையில் பெண் குற்றவாளிகளைக் கையாளு வதற்கும், திருவிழாக் காலங்களில் பெண்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அரசு மருத்துவமனைகளில் வேலை செய்யவும் பெண்களே தகுதி உடையவர்களாக இருப்பார்கள் எனக் கருதிய அரசு 1980ல் 62 பெண் சார்பு ஆய்வாளர்களையும், 66 பெண் தலைமைக் காவலர் களையும், 624 பெண் காவலர்களையும் நியமித்துள்ளது.*

*1976க்கு முன்பு ஐந்து அணிகள் தான் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்தன. கடந்த பத்து ஆண்டுகளில் இவர்களின் செயல்திறனையும், நேர்மையையும், பணியில் காட்டிய செம்மையையும் கருத்தில் கொண்டு ஒரு அணி டெல்லியிலேயே மறுபணியில் முக்கியத் தலைவர்களின் பாதுகாப்புக்காகப் போடப்பட்டு உள்ளனர்.*

## தீவிரவாதிகளை தடுக்க...

*நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில் தமிழக எல்லையில் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கையை ஒடுக்கவும் நான்கு கூடுதல் அணிகள்*

*2,880 காவலர்கள் அதிகாரிகள் ஒப்பளிக்கப்பட்டு சேவை செய்து வருகின்றனர்.*

*சிறப்புக் காவல் படையில் 17 ஆண்டுகள் பணிபுரிந்தால் தான் மாவட்டத் தாலுகா காவல் நிலையங்களுக்கு மாற்றுவதற்குத் தகுதி பெற்றவராய்க் கருதப்பட்டனர். 1985ல் இந்த விதி தளர்த்தப்பட்டு 10 ஆண்டுகள் பணிபுரிந்தாலே அவர்கள் மாறுதலுக்குத் தகுதி ஆக்கப்பட்டார்கள்.*

*மக்களின் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த காவல் குதிரைப் படைப் பிரிவு சென்னையில் மட்டுமே இருந்தது. இதனைப் புதிதாக மதுரை, கோயம்புத்தூர் நகரங்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது.*

## துப்பறியும் நாய்ப்பிரிவு அதிகரிப்பு

*சென்னையில் மட்டும் இருந்த காவல் துப்பறியும் நாய்ப் பிரிவு திருச்சி, மதுரை, கோயம்புத்தூருக்குப் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.*

*குற்றவாளிகளைப் பிடிப்பதற்கும், இரவு ரோந்து போவதற்கும் சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்தவும் மிகவும் இன்றியமையாதது ஊர்திகள் ஆகும்.*

*1976ல் மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 1,790 ஆக இருந்தது. 1986ல் 2,618 ஆக உயர்ந்தது. இந்த உயர்வு 46 விழுக்காடு ஆகும். மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 13,61,99,400,26.*

*சென்னையில் இருந்து ஓடிக் கொண்டிருக்கும் வாகனத்தில் இருந்து கொண்டு நாகர்கோவிலுக்கும் அப்பால் உள்ள ஊரில் போய்க் கொண்டிருக்கும் வாகனத்தில் உள்ள அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு நொடிப்பொழுதில் தகவல்களைத் தெரிவிக்க இயலும்.*

*இந்தச் சாதனங்கள் காற்றிலும் கடிதாகச் செல்ல நினைக்கும் சமூக விரோதிகளை மின்னலெனு வளைத்துப் பிடிக்க உதவுகின்றன.*

## அதிநவீன கனினி வசதி

*தமிழகத்தில் உள்ள குற்றங்களும், குற்றவாளிகளின் விவர ஏடுகள் குற்றம் செய்த விவரம் முதலியன கனனி இயந்திரத்தில் (கம்ப்யூட்டர்) சேமிக்கப்பட்டு தமிழகத்தின் எந்த மூலையில் உள்ள காவல்நிலையத்தில் இருந்து நுண்அலை கொண்ட தனித்தனி மாவட்ட முடுக்கு முனையிலிருந்து கேள்வி கேட்டபின் சென்னை கணினி இயந்திரம் முழு விவரத்தையும் அச்சுப் பதித்து குற்றவாளிகளின் பட்டியல், குற்றத்தன்மை ஆகியவற்றை நொடிப்பொழுதில் தந்துவிடுகிறது.*

*அதேபோல் குற்றம் நடந்த இடத்தில் இருந்து கிடைக்கும் கைரேகை தமிழகத்தின் எந்த மூலையில் கிடைத்தாலும் உடன் சென்னையில் உள்ள இந்த இயந்திரத்தில் ஒப்பு நோக்கப்பட்டு குற்றத்தில் சம்பந்தப்படாத சந்தேக நபர்கள் உடனுக்குடன் வெளியே அனுப்பப்பட ஏதுவாகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த இயந்திரங்களுக்கும் மற்றும் அதற்குரிய தளவாடங்களுக்கும் தமிழக அரசு செலவிட்ட தொகை ரூபாய் ஒரு கோடியாகும்.*

## பதக்கத்தோடு பணம்

*பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று காவல் துறையில் வீர தீரச் சாகசச் செயல்கள் புரிந்த காவலர்கள் அதிகாரிகளுக்குத் தகுதியின் அடிப்படையில், ஆண்டுதோறும் 'அண்ணா பதக்கம்' வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 40 முதல் 60 வரை பதக்கங்கள்*

*பெற்ற அளவில் இதுவரை 524 பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதக்கங்கள் பெற்றவர்களுக்குப் பணஊதியமும் தரப்படுகிறது. இந்தியா விலேயே பணஊதியம் அடங்கிய பதக்கம் இது ஒன்றுதான்.*

*1982ல் ஒவ்வொரு பொங்கல் நாளன்றும் தமிழகக் காவல் துறையில் தண்டனை ஏதும் பெறாமல் பத்து ஆண்டுக்காலம் சிறப்பாகச் சேவை செய்துள்ள தலைமைக் காவலர்கள் — காவலர்கள் மற்றும் இதே தகுதியுள்ளவர்களுக்கு ஆண்டுக்கு 1500 எண்ணிக்கைக்கு மேற்படாமல் பதக்கமும், மாதம் ரூ. 20 தலைமைக் காவலர்களுக்கும், ரூ. 25 நாயக் முதல் அவில்தார் வரை வழங்கப்படுகிறது. 1985ல் 1262 பேருக்கும், 1986ல் 1359 பேருக்கும் இப்பதக்கமும், படியும் வழங்கப்பட்டன.*

*1982 முதல் சீருடை, ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 25 இலட்சம் ஆகும்.*

## "டெரிக்காட்டன்"சீருடைகள்

*1984—85ல் காவலர்கள்—அதிகாரிகளின் தோற்றம் எழிலோடும் மிடுக்கோடும் இருப்பதற்காக டெரிக்காட்டன் சீருடைகள் வழங்கப்பட்டன. இதற்கு ஆண்டுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 75 லட்சமாகும்.*

*1984ல் புயலிலும் மழையிலும் பணிபுரியும் காவலர் களுக்கு 5,000 மழைக்கோட்டும், 3,500 இணை மழை புதைமிதியடிகளும் வழங்க ரூ. 7½ லட்சம் வழங்கப்பட்டது.*

*1985—86ல் காவலர்கள் மற்றும் ஊர்க் காவலர்களின் சீருடைகளைக் கொள்முதல் செய்து வழங்குவதற்காக ரூ. 3.18 கோடி செலவிடப்பட்டது.*

*காவல்துறையில் 1976க்கு முன்பு சூரியனையே பார்க்காத அமைச்சுப் பணியாளர்கள் இருந்தனர். காரணம், அவர்கள் வேலைப்பளுவின் காரணமாக சூரிய உதயத்திற்கு முன்பே அலுவலகம் வந்து இரவே வீட்டிற்குத் திரும்புவர். அவர்களின் துயர் துடைக்கத் தாயுள்ளம் படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் 690 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களை வழங்கி, அமைச்சுப் பணியாளர்களின் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கச் செய்தார்.*

## காவலர் வீட்டு வசதிக் கழகம்

*10 ஆண்டுகளில் காவலர் குடியிருப்பு என்று எடுத்துக் கொண்டால் ரூ. 13.40 கோடிக்குக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளன என்பது தெளிவாகும்.*

*தமிழக அரசின் காவல்துறையில் நீதியுடனும் நேர்மையுடனும் பணியாற்றிய காவலர்கள் — அதிகாரிகள் பணி ஓய்வு பெறும்போது தங்க வீடு இன்றி அவதியுறும் நிலையைப் போக்க 1980ல் ரூ. 1 கோடி மூலதனத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டது.*

*திருச்சி மாவட்டம் நாவற்பட்டு கிராமத்தில் 670 வீடுகள் ரூ. 1.61 கோடியில் கட்டப்பட்டு 15.9 1985ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். அனைத்து வீடுகளும் ஒதுக்கப்பட்டுவிட்டன. கோவை மாவட்டம் கணபதி என்னுமிடத்தில் 432 வீடுகள் ரூ. 1.94 கோடி செலவில் கட்டப்பட்டன. வேலூர் தொரப்பாடியில் ரூ. 35 லட்சம் செலவில் வீடுகள் கட்டப்பட்டன.*

*அரசு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி காவல்துறைக்கு வழங்கி, தகுதியுள்ள காவலர்களுக்கு இந்த வீடுகளை வாங்க முன்பணமாக வழங்கப்பட்டது. எல்லா மாவட்டங் களிலும் வீடுகள் கட்டுவதற்காக நிலங்களைத் தேர்ந்*

*தெடுத்து அந்த நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

## அத்தியாவசிய பொருட்கள் வாங்க உதவித்தொகை

*தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரை இன்றியமையாப் பண்டங்களான அரிசி, எண்ணெய், சர்க்கரை, பருப்பு, மைதா, கோதுமை போன்றவை களைக் குடும்பத்தில் ஒரு வயது வந்த நபருக்கு ரூ. 21.11 வரை ஊக்க ஆதரவுத் தொகையாக அரசு அளித்து இப்பண்டங்களை வாங்கி விநியோகம் செய்தது.*

*இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும்பொழுது 1,88,308 பேர் பயனடைந்து ஆண்டுக்கு ரூ. 2 கோடி செலவானது. தற்பொழுது காவலர்களின் எண்ணிக்கை உயர்வால் 2,27,020 பேர் பயனடைந்து செலவு ஆண்டுக்கு ரூ. 3 கோடியை எட்டியுள்ளது. பணியின் நிமித்தம் காவலர்கள் வெளியூர் சென்றாலும் அவர்கள் குடும்பத்தினர் இந்த இன்றியமையாப் பண்டங்களை உரிய நேரத்தில் பெறுவதால் அவர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கதாக உள்ளது.*

## பணியின்போது பாதிப்படையும் காவலருக்கு நிதிஉதவி

*பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து உயிரையும் துச்சமென மதித்து சமூக விரோதிகளை/குற்றவாளிகளைக் கைது செய்யும்போது உயிர் மற்றும் உடல் உறுப்புகளை இழக்கும் காவலர்களின் பணியைப் பாராட்டியும், அவர் களுக்கு நிதி உதவி அளிக்கவும் ஒரு திட்டத்தைத் தமிழக அரசு 1979ல் அமல்படுத்தியது. அதன்படி 1979 முதல் 1986 (31.3.86) வரை 156 பேருக்கு ரூ. 10.37 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.*

*பணியில் உள்ள காவலர்கள் அவர்கள் குடும்பங்களின் நலனுக்காகக் குழந்தைகளின் பட்டப்படிப்புக்கு நிதி உதவி,*

*நீண்ட நாள் நோயில் இருப்பவருக்கு, இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய இன்னும் மற்ற சேமநலத் தேவைகளுக்காக, தமிழ்நாடு காவல் சேமநலநிதி ஏற்படுத்தப்பட்டது.*

*ஒவ்வொரு ஆண்டும் அரசு இந்த நிதிக்கு அளித்து வந்த மானியத்தை அதிகப்படுத்தியது விவரம் வருமாறு: 1983ல் 1.5 இலட்சத்திலிருந்து 2.5 லட்சம் வரை, 1984ல் 2.5 இலட்சத்திலிருந்து 3.5 லட்சம் வரை, 1985ல் 3.5 இலட்சத்திலிருந்து 5.0 லட்சம் வரை.*

## காவல்துறைக்கு எந்திரப்படகுகள்

*இது தவிர அரசு, 1978 ஆம் ஆண்டு கடல் ஓரப் பகுதிகளில் வாழும் மக்கள் துயர்துடைப்புப் பணிக்காக 10 இயந்திரப் படகுகளை வழங்கியது. அவைகள் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்கள் அலுவலகங்களிலும், சென்னையைப் பொறுத்தவரையில் ஆணையர் அலுலகத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வடமேற்குப் பருவகாலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

*இது தவிர துயர்துடைப்புப் பணிக்காக 1983ல் அரசு 12 தனிவாகனங்களையும், ஜீப்புகளையும் வழங்கியுள்ளது. ஊர்க்காவல் படையினை நல்லமுறையில் ஊக்குவிக்கும் வகையில் அரசு சமீபத்தில் அவர்களின் பணி அழைப்புப் படியை ரூ. 6 லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தியிருக்கிறது.*

## ஊர்காவல்படை விரிவாக்கம்

*தமிழ்நாட்டில் ஊர்க்காவல் படையில் 10,010 ஆண் ஊர்க்காவல் படையினரும் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 550 பெண் ஊர்க்காவல் படையினரும் இருக்கின்றனர். இந்த*

*ஊர்க்காவல் படையினர் முதலில் 45 நாட்கள் கவாத்து ஆயுதங்களைக் கையாளுதல் ஆகிய பயிற்சிகளுக்குப் பிறகு மாதம் 4 முறை அல்லது சிறப்பு அழைப்பின்பேரில் அந்தந்த நிலைமைக்குத் தக்க பணிகளுக்கு அழைக்கப்படுகின்றனர்.*

*தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஊர்க்காவல் படை அமைப்பு, காவல்துறை அமைப்புக்கு ஒரு துணை அமைப்பாக இயங்குகிறது. 1978ல் அரசு ஊரகக் காவல்படையைக் கடற்கரை ஓரப் பகுதிகளில் ஏற்படுத்தியது. அவர்களின் முக்கியப்பங்கு புயல், மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்திற்குக் கடற்கரை ஓரத்தில் வசிக்கும் மக்கள் உள்ளாகும்போது அரசு நிர்வாகத்திற்கு உறுதுணையாக நின்று வேகமாகச் செயல்பட்டு மக்களின் இன்னல் களை நீக்குவது அந்த வகையில் இந்த அமைப்பு தமிழ் நாட்டுக்குப்பெரிய அளவில் நல்ல பெயரைத் தேடித் தந்திருக்கிறது.*

## ஊர்காவல் படைக்கும் சிறப்புப்பதக்கம்

*இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர், "மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புப் பதக்கம்" வழங்கும் முறையைக் காவல் துறையினருக்கு வழங்குவது போன்று ஊர்க்காவல் படையினருக்கும் 1982லிருந்து வழங்க ஆணை பிறப்பித்தார்.*

*இந்தத் திட்டத்தின் கீழ் இந்தப் பதக்கத்தைப் பெறுகிறவர்களுக்குப் பண முடிப்பு வழங்கப்படுவதால், அவர்கள் அவ்வகையில் பயனடைந்து இக்களச் சேவையில் குறிப்பாக வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்திற்கு மக்கள் உள்ளாகும்போது மிகுந்த ஆர்வத்துடன் துயர் துடைப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் வீரச்செயல்கள் புரிந்துள்ளனர்.*

## விபத்துக்களை குறைக்க புதிய திட்டம்

*நெடுஞ்சாலைகளில் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கவும், விபத்துக்களால் அவதியுறும் பொதுமக்களுக்கு உடனுக்குடன் உதவி செய்யவும் தமிழக அரசு 1983—ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைப்போக்கு வரத்து ரோந்து அமைப்பினையும், விபத்துக்குள்ளான மக்களுக்கு உதவும் வகையிலும் நெடுஞ்சாலைகளில் குறிப்பாக சென்னை திண்டுக்கல் நெடுஞ்சாலைகளில் 10 அமைப்பு களை ஏற்படுத்தியுள்ளது.*

*1981ல் 23 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் அகில இந்தியக் காவல் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்டன. அகில இந்திய அளவில் தமிழகக் காவல் துறையினர் மாநிலங்களுக்கிடையில் நடந்த போட்டிகளில் தங்கள் முத்திரையைப் பதித்து பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.*

*1976ல் ரூ. 30 கோடியாக இருந்த காவல்துறைச் செலவு. 1986ல் ரூ.100 கோடியை எட்டிவிட்டது. இருப்பினும் காவலர்கள் எண்ணிக்கை தமிழ்நாட்டு மக்கள் தொகையுடன் ஒப்பு நோக்குமிடத்து 1:1000 என்ற விகிதத்தில் இருப்பதால், காவல்துறையினர் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றனர்.*

*குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதிலும் 'தமிழக காவல்துறை' இந்தியா விலேயே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், தமிழக மக்கள் பயமின்றி அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது!*

## குடிமைப்பாதுகாப்பு

*குடிமைப் பாதுகாப்பு என்ற தத்துவம், போர்க் காலங்களில் மக்களே நிர்வாகத்திற்கு உதவும் வகையில்*

*தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் உணர்வு பெற வேண்டு மென்ற அடிப்படையில் தோன்றியது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த அமைப்பு 1976ல் தான் முதன் முதலில் தோன்றினாலும், 1978 வரையில் அதற்கு உரிய சிந்தனைகளோ, செயல்களோ ஏற்படவில்லை.*

*1978க்குப் பிறகுதான் மாநில அரசின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மத்திய அரசு சென்னை நகரை இந்தத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட நகரமாக ஆக்கியது. அந்த வகையில் அதற்குரிய செயல் திட்டங்களுக்கு வடிவு கொடுத்து சென்னை மற்றும் புறநகர்ப்பகுதிகளிலுள்ள முக்கியமான ஆலைகள், உதாரணமாக மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கல்பாக்கம் அணு மின் உற்பத்தி ஆலை மற்றும் மீனம்பாக்ம் விமானநிலையம் போன்ற அமைப்புகளுக்குப் பாதுகாப்பு தரும்வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அந்தந்த அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.*



"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?!"

## விவசாயிகளின் தோழன் எம்.ஜி.ஆர்!
## விவசாயிகளின் தொண்டன் எம்.ஜி.ஆர். அரசு!!

*எம்.ஜி.ஆர். திரைத்துறையில் மன்னாதி மன்னாக விளங்கிய காலத்திலும் பாடலின் மூலமாக, கதைகளின் மூலமாகவும் விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டிய வர்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்டவர் ஆட்சி அதிகாரத்திற்கு வரும்போது அவர்களை விட்டுவிடுவாரா என்ன! அவர்களுக்கு நண்பனாகவும், தோழனாகவும் இருந்து ஏராளமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். அவற்றுள் மகத்தானது குரும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது ஆகும். இவ்வாறு அவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியதால் அந்த விவசாயிகளின் விளை நிலங்களில் இருந்து மின் அளவுகாட்டிக் கருவியைக் கூட (மீட்டர்) அப்புறப்படுத்தபட்டது.*

## விவசாயிகளுக்கு 93 கோடி ரூபாய் சலுகை

*1982ல் விவசாயிகளுக்கு 93 கோடி ரூபாய் அளவுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு சலுகைகளை வழங்கி யுள்ளது. கடன் ரத்து, வெவ்வேறு தேதிகளில் அபராத வட்டி தள்ளுபடி, செலுத்தப்பட்ட அபராத வட்டியை திருப்பிக் கொடுத்தது, தவணையை நீட்டித்து மற்ற கடன்கள்மீதான சாதாரண வட்டியை தள்ளுபடி செய்த வகையில் 92 கோடியே 68 லட்சம் ரூபாய் அளவிற்கு இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 4 லட்சத்து 52 ஆயிரம் சிறு விவசாயிகள்பயன் அடைந் துள்ளனர்.*

*மேலும் உரிய காலத்தில் பயிர் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அவர் அறிவிப்பு வெளியிட்டார். இதனால் ஏற்படும் செலவை அரசே ஏற்றுக் கொண்டது. இதனால், லட்சக்கணக்கான விவசாயிகள் பயன் அடைந்தனர். விவசாய கூலித் தொழிலாளர்கள் உள்பட 28 ஆயிரம் பேருக்கு முதலமைச்சர் எம். ஜி. ஆர் உத்தரவின் பேரில் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டது.*

*ஏழை விவசாயிகளுக்கு பயன்தரும் முயற்சியாக, குத்தகையை 40 சதவிகிதத்திலேயிருந்து 25 சதவீதமாகக் குறைக்க திட்டம் கொண்டுவரப்பட்டது. உபரி நிலங்களை குத்தகைக்கு உழுபவர்கள், நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் இப்போது முற்றிலும் இழந்தவருக்கு ஏக்கருக்குக் குறைவாக குத்தகை நிலம் உள்ளவர்கள், பர்மா, சிலோனிலிருந்து வந்த அகதிகள், நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர் களைக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள். மேலே, குறிப்பிட்ட விதிப்படி நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் ஆக, உபரி நிலங்கள் இந்த வரிசைக் கிரமப்படி கிடைக்கும்.*

*இன்னும் சில திட்டங்களாக, விவசாயிகளுக்கு மொத்த விளைச்சலில் 75 சதவிகித விவசாய வாரம் என்று பிடித்துக் கொள்ளவும், 25 சதவிகித நிலச் சொந்தக்காரருக்கு குத்தகைத் தொகையாக நிர்ணயிக்கவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது.*

## விவசாயிகளிடம் “ஜப்தி”க்குத் தடை

*சிறிய ஏழை—எளிய விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு தடை விதித்து வரலாற்று சிறப்பு மிக்க உத்தரவை பிறப்பித்தது.*

*தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் துணைப் பதிவு அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. விவசாயி களுக்கான மின் கட்டணம் குறைக்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 5 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் விவசாயிகளின் நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்தார். பாசன இணைப்புகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பெற்ற ஆண்டு தமிழ்நாடுதான் என்பது புள்ளிவிவர ஆய்வுப்படி அறியப்பட்டது.*

## நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்

*விவசாயிகள் தங்கு தடையின்றி அரசு அல்லது வங்கிக் கடன் பெறும் வகையில் நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் கூட்டுப் பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக மாற்றப் பட்டன. சிட்டா போன்ற கிராமக் கணக்குகளில் நில உரிமையாளர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டன. விற்பனை, பாகப்பிரிவினை, நிலங்களை மாற்றிக் கொள்ளுதல் போன்ற மாறுதல்களைச் சரியான முறையில் கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப் பட்டன. இதனால் விவசாயிகள் பெரும் பயன் அடைந்தனர்.*

## வேளாண் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை

*வேளாண்மை ஒரு முழு நேர தொழிலாக அல்லாமல் பகுதி நேர தொழிலாகவே இருந்து வந்தது. உழவு நாட்கள் தவிர இதர நாட்களில் உழவர்கள் கூலி வேலை செய்தே பிழைப்பை நடத்தி வந்தனர். பலர் வேளாண் தொழிலை அடியோடு விட்டு, நிரந்தர வேலை தேடி நகர்புறங்களுக்கு படையெடுக்கத் தொடங்கினர். இதனை தடுத்து நிறுத்தி, தமிழகத்தின் வேளாண் உற்பத்தியைப் பெருக்க முதலமைச்சர் எம். ஜி. ஆர் பல்வேறு வடவடிக்கைகளை மேற்கொண்டார்.*

## 37 கோடி ரூபாயில் வேளாண்மை வளர்ச்சி திட்டம்

*நாட்டின் முதுகெலும்பான வேளாண் தொழிலை மேம்படுத்தவும், ஊருக்கெல்லாம் உணவு உற்பத்தி செய்யும் விவசாயி பட்டினி கிடக்கும் அவல நிலையைப் போக்கவும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் பல்வேறு திட்டங்களை அறிவித்தார். அதன்படி, 1981—ம் ஆண்டு விவசாயத்திற்குத் தேவையான உர விலை தள்ளுபடி திட்டத்தை அறிவித்தார். இதன்படி தள்ளுபடி விலை 10.08.81—ம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.*

*வேளாண்மையை ஊதியம் தரும் தொழிலாக ஆக்கும் நோக்கத்தோடு, உலக வங்கியிடம் 36 கோடியே 90 லட்சம் ரூபாய் நிதியுதவி பெற்று, 1.9.1981 முதல் பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டத்தை* (Training and visit system) *புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தொடங்கினார்.*

## சிறந்த பயிற்சி

*இந்த திட்டம் தமிழகத்தின் 15 மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டது. பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டத்தின் மூலம் 800 வேளாண் குடும்பங்களுக்கு ஒரு கிராம விரிவாக்க அலுவலர் வீதம் நியமிக்கப்பட்டனர்.*

ஒவ்வொரு கிராம விரிவாக்க அலுவலரும் நாள்தோறும் 100 வேளாண் குடும்பங்களைச் சந்தித்து, அவர்களுக்கு நவீன சாகுபடி முறைகளைப் பற்றி எடுத்துக் கூறியும், செயல் விளக்க முறையில் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை விளக்கிக் காட்டியும், வேளாண் பொருட்கள் உற்பத்தியை அதிகப்படுத்த பயிற்சி அளித்தனர். இந்த திட்டம், வேளாண் பெரு மக்களுக்கு கூடுதல் வருவாய்க்கும் வழிகாட்டும் திட்டமாகும். இதன் மூலம் உழவர் பெருமக்கள் உற்பத்தியைப் பெருக்கி, அதிக வருவாய் பெற்று வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5 துறைகளாக வேளாண்மை பிரிப்பு

வேளாண்மைக்கு மேலும் ஊக்கமூட்டும் வகையில் வேளாண்மைத்துறை பிரிக்கப்பட்டது, எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான். அதன்படி வேளாண்மை விளைபொருள் துறை, எண்ணெய் வித்துத்துறை, விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை என 5 துறைகளாக பிரிக்கப்பட்டது

இடைத்தரகர்களின் இரும்புப் பிடியில் சிக்கிக்கிடந்த உழவர்களைப் பாதுகாப்பதற்காக விளைபொருள் விற்பனைக்கு என்று தனியாக புதிய துறை உருவாக்கப் பட்டதும் எம். ஜி. ஆர் ஆட்சிக் காலத்தில்தான்.

கிராமப்புறங்களில் விளைப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான 99 கிடங்குகள் சுமார் 500 லட்சம் செலவில் கட்டப்பட்டன.

## நிலக்கடலை சாகுபடியும் எண்ணை ஆலைகளும்

உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருந் தாலும் சமையல் எண்ணெய் உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலமாக இருந்ததைக் கருத்தில் கொண்டு எண்ணெய்

*வித்துக்களின் உற்பத்தியை பெருக்குவதற்காக தனித்துறை 1981ம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. இதனால் நிலக் கடலை சாகுபடி பரப்பு 2.66 லட்சம் ஹெக்டேரில் இருந்து 3.40 ஹெக்டேர் என்ற அளவு உயர்ந்தது. தென்னாற்க்காடு, வட ஆற்க்காடு ஆகிய 3 மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தியை பெருக்குவதற்காக எண்ணெய் வித்துக்களைப் பயிரிடுவோர் கூட்டுறவு இணையம் அமைக்கப்பட்டது. வேளாண் தொழில் வாரியத்தின் சார்பில் 5 ஆயிரம் டன் எண்ணெய் தயாரிப்பதற்காக ஆலை அமைக்கப்பட்டது.*

## தோட்டக்கலை துறை

*வெப்ப மண்டலத்தில் பயிராகக்கூடிய வாழை, மா. பலா ஆகிய முக்கனிகளும், மித சீதோஷ்ண மண்டலத்தில் வளரக்கூடிய ஆப்பிள், பிளம், பேரி, பீச்சஸ் ஆகிய கனிகளும், காபி, தேயிலை, மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய் ஆகிய மலைப் பயிர்களும், ஆந்திர பிரதேசத்தில் வளர்க்கூடிய மலர் வகைகளும் தமிழக மலைகளில் ஒரு சேர பயிராவதால், இவ்வளங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரால் தொடங்கப் பட்டதுதான் தோட்டக்கலைத் துறை. 1979ம் ஆண்டு இந்த துறை தொடங்கப்பட்டது. குறுகிய காலத்திலேயே இந்தத்துறை 40 புதிய திட்டங்களை தொடங்கி செயல் படுத்தியது. தரமான வித்துக்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்காகப் புதிதாக உருவாகிய விதைச் சான்றிதழ் வழங்குதுறை உருவாக்கப்பட்டது. பனை மரங்களை பயன் படுத்துவது தொடர்பான ஆராய்ச்சிக்காக திருச்செந்தூர், முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய 3 இடங்களில் ஆராய்ச்சிக் கூடங்கள் உருவாக்கப்பட்டன.*

## நெல் உற்பத்தியில் பெரும்புரட்சி

*புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசின் அயராத சிந்தனையால் 17 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுவந்த*

*நெல்,81ம் ஆண்டு 71 லட்சம் ஏக்கராக அதிகரித்தது. 19 லட்சம் டன்களாக இருந்து வந்த நெல் உற்பத்தி 62 லட்சம் டன்களாக அதிகரித்தது.*

## விவசாயிகள் கண்ணீரைத் துடைத்த எம்.ஜி.ஆர்.

*தஞ்சாவூரில் நெல் விலையில் பெரும் சரிவு ஏற்பட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இது முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் கவனத்திற்கு வந்தது. உடனடியாக வெளி மார்க்கெட்டை விட கூடுதல் விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று எம்.ஜி.ஆர். அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு, ஏழை விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்தார்.*

## பருத்தி

*எம்.ஜி.ஆர். அரசில் பொறுப்புணர்வோடும், கடமை யுணர்ச்சியோடும் அதிகாரிகள் செயல்பட நேர்ந்ததால் சரியான யுக்திகளோடு பருத்தி 2.80 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டது. அதன்மூலம் 6 இலட்சம் பொதிகள் பஞ்சு உற்பத்தியானது. மானாவாரி மற்றும் இறவைச் சாகுபடிக்கு ஏற்ற எல். ஆர். ஏ 5166 என்ற இரகப் பருத்தி சுமார் 1.20 இலட்சம் எக்டேரில் பயிரானதுதான் அதிக உற்பத்திக்கு காரணம்.*

*கோடைச் சாகுபடியில் 2.75 இலட்சம் எக்டேரில் நெல் 2.76 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்கள் 3.01 இலட்சம் எக்டேரில் பயிறு வகைகள் மற்றும் 79 ஆயிரம் எக்டேரில் பருத்தி ஆகியவைப் பயிரிடத் தொடர்ந்து முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன, அதற்கான இடுபொருட்கள் வழங்கப் பட்டன.*

## உற்பத்தி ஊக்கமளிப்பு

*தஞ்சை மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி, தென் ஆற்காடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகள்*

அடங்கிய காவிரி ஆற்றுப் படுகை விவசாயிகளுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் விற்கப்படும் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 35 பெறுமான உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இதற்காக ரூ. 10 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. இது அகில இந்திய ரீதியில் செயல்படும் ஓர் புதிய திட்டம், உழவர்களால் விரும்பி வரவேற்கப்படும் திட்டம் என்றும் பெயர்பெற்றது.

மைய அரசு உதவியுடன் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு சென்ற ஆண்டு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் சுமார் 6 கோடி பழ மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இது அகில இந்திய அளவில் பாராட்டப்பட்ட திட்டமாகும். இந்த திட்டம் பின்வந்த ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது.

## உழுபவருக்கு கோவில் நிலம்

கோவில் நிலங்களை எடுத்து உழுவோருக்கு, அதனை சொந்தமாக்குவது பற்றி அரசு பரிசீலனை செய்தது. பின்னர் இத்திட்டம் செயல்வடிவமானது.

## விதைகள், கன்றுகள் உருவாக்குதலில் வியத்தகு சாதனை

தெரிந்தெடுத்த விதைகளை மக்கள் மத்தியிலே விரைவாகப் பரப்புவதற்காக 45 விதை அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டது. இதை அரசுப் பண்ணைகளில் விதைகளை அதிகப்படுத்தி மீண்டும் நல்ல தெரிந்தெடுத்த விவசாயிகளுக்கு வழங்கி அவர்கள் நிலத்தில், மேலும் அதிகமாக நல்ல விதைகளைத் தயார் செய்து, அந்த விதைகளை விதை சுத்திகரிப்பு நிலையங் களில் பதப்படுத்தி, விதைச் சான்றளிப்புத்துறை மூலமாகச்

*சான்றிதழ் பெற்று அதிக அளவிலே விவசாயிகளுக்கு வேளாண் டோக்கன் மூலமாக வழங்கப்பட்டது.*

*ஆண்டொன்றுக்கு சுமார் 40 ஆயிரம் டன் சுத்தமான தரமான சான்றிதழ் பெற்ற விதையை வழங்கிய ஒரே மாநிலம் இந்திய துணைக் கண்டத்திலேயே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலான தமிழ்நாடுதான்.*

*அதேபோல தரமான பழக்கன்றுகள், காய்கறி விதைகள் வழங்குவதற்காகத் தமிழக அரசு 54 தோட்டக்கலை பண்ணைகள் அமைத்து அவற்றின் மூலமாக ஆண்டொன்றுக்கு 6 மெட்ரிக் டன் காய்கறி விதைகளையும் 30 இலட்சம் பழக்கன்றுகளையும் வழங்கி வந்தது.*

## எண்ணெய் வித்து உற்பத்தி

*தானிய உற்பத்தியில் தன்னிறைவு கண்ட தமிழகம் எண்ணெய் வித்திலும் தன்னிறைவு அடைந்திட பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வந்தது. இந்த ஆண்டு 15.14 இலட்சம் எக்டேரில் எண்ணெய்வித்து பயிர்செய்து 15.75 இலட்சம் டன்கள் உற்பத்தியை அடைந்தது. இதற்காக கருவித்து பண்ணை, ஆதார வித்துப் பண்ணை அமைத்தல் — சோயா மொச்சை தீவிரச் சாகுபடி திட்டம் — எள் மற்றும் ஆமணக்கு அபிவிருத்தி திட்டம் ஆகியவை செயல்படுத்தப் பட்டது. 1985—86ம் ஆண்டு 36 இலட்சம் உயர் விளைச்சல் தரும் தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன.*

## இடுபொருள் மானியம்

*இடுபொருள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இடு பொருள் மானியமும் குவிண்டாலுக்கு ரூ. 20 லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள விலைகளுக்கும் மேலாக இடுபொருள் மானியம் வழங்கப்பட்டது.*

| ரகம் | குவிண்டால் நெல்லுக்கு | |
|---|---|---|
| | 1984-85 ரூ. | 1985-86 ரூ. |
| சாதாரணம் | 137 | 142 |
| சன்னம் | 141 | 146 |
| மிகச் சன்னம் | 145 | 150 |

*1985ஆம் ஆண்டு குறுவையில் 3.75 இலட்சம் விவசாயிகளும் 1986ம் ஆண்டு சம்பா பருவத்தில், 15.2.1986 முடிய 1.80 இலட்சம் விவசாயிகளும் இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 11.62 கோடியும், சம்பாவில் இதுவரை அளிக்கப்பட்ட இடு பொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 5.50 கோடியும் ஆகும்.*

## ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்

*வேளாண்மை விளை பொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் 264 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டன. சென்ற ஆண்டு வேளாண் விளை பொருட்கள் வரத்துகள் 518680 டன்கள். அதன்மூலம் வருமானம் ரூ. 4.50 கோடியாகும். மேலும் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருட்களுக்குத் தமிழகமெங்கும் உள்ள 36 அக்மார்க் ஆய்வு கூடங்கள் மூலம் தரம் பிரிக்கப்பட்டன சுமார் 45 ஆயிரம் டன்கள் உணவுப் பண்டம் மற்றும் பருத்தி ரகங்கள் தரம் பிரிக்கப்பட்டன.*

## நிர்வாக முறைகள் மாற்றம்,<br>நீரை பயன்படுத்த புதிய முறைகள்

*பழைய நிர்நிர்வாக முறைகளை மாற்றி தற்போதைய தேவைகளுக்கேற்ப புதிய முறைகளைப் புகுத்திட வேண்டும் என்பதற்காக ஆற்றுநீர்ப் பாசனப் பகுதிகளிலும் கூட புதிய நீர்நிர்வாக முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.*

*வைகை ஆற்றுப்பாசனப் பகுதியில் உலக வங்கியின் துணையுடன் ஒரு புதிய திட்டத்தை நீர் நிர்வாகத்திற்காக வைகைச் சீரமைப்பு என்ற பெயரில் செயல்படுத்தப் பட்டது. அதேபோல லோயர் பவானி திட்டம், காவிரி திட்டம், பி.ஏ.பி திட்டம் இவற்றிலும் கூட நீர்நிர்வாகத் திற்காக இ. இ. சி, திட்டத்தில் பணம் பெற்று குளங்களின் தண்ணீர் தேக்கத்தை அதிகப்படுத்துவதற்காகவும். தேங்கிய நீரை நல்ல முறையில் பயன்படுத்துவதற்காகவும் பணிகள் தொடங்கப்பட்டன. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காகப் புதிய முறைகளான சொட்டு மற்றும் சுழல் நீர்ப்பாசனம் என்ற நவீன முறைகளையும் மக்கள் மத்தியில் பரவலாகப் புகுத்தியதோடு, புதிய முறையை கடைபிடிப்பதற்காக மக்களுக்கு மானியம் வழங்கப்பட்டது.*

*இந்த ஆண்டில் 7 ஆயிரம் எக்டேர் பரப்பளவு நிலத்தை சமன் செய்யவும், நிலத்தை பல எக்டேர் பரப்பில் இயந்திரங்களைக் கொண்டு பயிரிடவும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.*

## ஆயிரக்கணக்கான குழாய் கிணறுகள்

*மேலும் 4850 குழாய்க் கிணறு, 1920 வடிமுனைக்குழாய் கிணறு, 2433 கிணறுகளில் தூர்வாருதல் 3010 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன.*

*கடும் வெள்ளத்தினால் செங்கை, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் விவசாய நிலங்கள் மணலால் மூடப்பட்டு பாழாகியது. எம்.ஜி.ஆர். அரசு போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றியது. சுமார் ரூ. 20 இலட்சம் செலவில் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 1500ம் மற்ற உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 750 ம் மானியமாக வழங்கப்பட்டது. செங்கை மாவட்டத்தில் சுமார் 500*

*ஏக்கரிலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலங்களும் பாதிக்கப்பட்டன. மணல் அகற்றும் பணி செயல்படுத்தப்பட்டு மிகக்குறைந்த செலவிலேயே முடிக்கப்பட்டது. இதனால் விவசாய நிலங்களில் அடுத்த பருவத்திலேயே பயிர் செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.*

*பின்தங்கிய பகுதிகளாகிய நிலம் பாதிக்கின்ற பகுதிகளுக்கு டி.பி.ஏ.பி என்ற திட்டத்தையும், மலைவாழ் மக்களுக்கு "உதவி டெவலப்மென்ட்" என்ற திட்டத்தையும் எம்.ஜி.ஆர். அரசு செயல்படுத்தியது. இவ்வாறு வளரும் தமிழகத்தின் தேவைக்கேற்ப பல பணிகளைச் செய்வதற்காக வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, எண்ணெய்வித்து துறை, விதை சான்றளிப்புத்துறை, வேளாண்மை பொறியியல்துறை என்று பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டது.*

## வேளாண்மை பல்கலைகழகம்

*வேளாண்மைக்காக புதிய கல்லூரியையும் கால் நடைக்காக ஒரு புதிய கல்லூரியையும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அமைத்துள்ளது.*

*இவ்வாறு தமிழகத்தின் தேவையறிந்து அந்தத் தேவைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு எத்தகைய பணிகளைத் தொடங்கவேண்டும் என்று ஆராய்ந்தறிந்து, அத்தகையப் பணிகளைத் துவக்கி, அந்தப் பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை அமர்த்தி, அந்தப் பணிகளை திறம்பட வேளாண் மக்கள் செய்திட வழிவகுக்கப்பட்டது.*

*உதவிகளைக் காலத்தே வழங்கி, அவர்களுடைய உழைப்பின் பலனாக கிடைக்கும் விளைபொருளுக்குத் தகுந்த விலை கிடைக்கச் செய்து, தமிழகத்தில்*

*வேளாண்மைத் தலைசிறக்கும் வகையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டது.*

*விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார். இது பட்டினி கிடந்த விவசாயிகளின் வயிற்றில் பால் வார்ப்பதாக அமைந்தது.*

## விவசாயிகளுக்கு 194 கோடி கடன்தள்ளுபடி

*தேசிய அளவில் ஒப்பிடும்போது, தமிழகத்தில்தான் 194 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.*

## லாப இடைத்தரகர்கள் சுரண்டல் ஒழிப்பு

*விவசாயம் செய்யும் உழவனுக்கு கோவணமே மிஞ்சும் என்ற நிலையில் அவர்களின் தரத்தை உயர்த்த ஒவ்வொரு துறையாக ஆய்வு செய்து பல திட்டங்களை செயல்படுத்தியவர் எம்.ஜி.ஆர்.! வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, சேற்றில் புரண்டு வேலை பார்த்து மாதக்கணக்கில் காத்திருந்து உற்பத்தி செய்யும் மரவள்ளிக் கிழங்கை சொற்ப லாபத்துக்கு விற்று வந்தனர் விவசாயிகள். இடைத் தரகர்களோ எவ்வித உழைப்பும் இன்றி, முதலீடும் இன்றி கொள்ளை லாபம் அடித்து வந்தனர்.*

*அவர்களது அவல நிலையை உணர்ந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் சேலத்தில் தொழிற் கூட்டுறவு சங்கம் தொடங்கி, அங்கு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வழிவகை செய்தார். விவசாயிகளின் கடன் மற்றுமுள்ள பிரச்சனைகள் பற்றி பரிசீலிக்க உச்சமட்டக் குழு அமைத்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அறிவிப்பு வெளியிட்டார்.*

## அவசர சட்டம்

*தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் அனுபோகத்தி லுள்ள குத்தகை நிலங்களின் குத்தகை கால அளவை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்கவும், தேவையற்ற நிலைங்களைச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பியளிக்கவும் வகை செய்யும் அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது.*

## உழவர்களின் உயிர் எம்.ஜி.ஆர்.

- *காவிரி ஆற்றுப் படுகை உழவர்களின் உற்பத்தி முயற்சியை ஊக்குவிக்க சுமார் 30 கோடி ரூபாய் மான்யம் வழங்கப்பட்டது.*
- *உயர் விளைச்சல் தரவல்ல சான்றிதழ் பெற்ற நெல்விதைகளை ஆண்டுதோறும் 8,000 டன்கள் என்ற அளவிற்கு விநியோகம் உயர்த்தப்பட்டுள்ளது.*
- *நெல் குறுத்துப் புழுவைக் கட்டுப்படுத்த, ஆண்டு தோறும் சுமார் 45 லட்சம் ரூபாய் வீதம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் சுமார் 405 லட்சம் செலவழித்து 3.60 லட்சம் எக்டரில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.*
- *நெல்லில் புகையானை ஒழிக்க ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் வீதம் 225 லட்சம் ரூபாய் செலவில் பரந்த அளவில் மருந்து தெளிக்கப்பட்டது.*
- *நெல்லில் தோன்றும் துங்ரோ நோயைப் பரப்பும் பச்சைத் தத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த 60 லட்சம் ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டது.*
- *வயல் எலிகளைக் கட்டுப்படுத்த 8 லட்சம் ரூபாய் செலவில் வலிகொல்லி மருந்துகள் மான்யமாக வழங்கப்பட்டன.*

- *இச்சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயல் படுத்தியதன் விளைவாக உணவுப் பற்றாக்குறை யுடன் இருந்த தமிழகம் இன்று தன்னிறைவு அடைவ தோடல்லாமல் பிற மாநிலங்களுக்கும் வழங்கும் அளவிற்கு உயர்ந்துள்ளது.*

- *தமிழகத்தில் நெல்லிற்கு அடுத்தபடியாக சிறு தானியங்கள் 18 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு, சுமார் 16 லட்சம் டன் விளைச்சல் கிடைக்கிறது. இவற்றில் சுமார் 85 சதம் மானாவாரியாகப் பயிராகிறது.வறட்சி தாங்கும் குறைந்த வயதும் உயர்விளைச்சல் தரவல்லதுமான 10 புதிய இரகங்கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன.*

- *முன்னேறிய தொழில் நுட்ப உத்திகளையும், உயர் விளைச்சல் உரங்களையும் கையாண்டு எக்டர் சிறுதானிய உற்பத்தித்திறன் 986 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.*

- *மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழக மெங்கும் 316 ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்து முன்னேறிய தொழில்நுட்ப முறைகளைக் கடைபிடித்து சிறுதானிய உற்பத்திக்கு வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் இலட்சம் எக்டரில் மானாவாரிச் சாகுபடி முறை கடைப்பிடிக்கப்பட்டன.*

- *மானாவாரிச் சாகுபடியில்... உபயோகத்தினை அதிகப்படுத்தி உற்பத்தியை பெருக்க வகைச் செய்யப்பட்டது.*

- *இயற்கையில் உள்ள தழைச் சத்தினைக் கிரகித்துப் பயிற்சி அளிக்கவல்லவிதையுடன் கலக்கும் அசோஸ்பிரில்லம் நுண்ணுயிரிப் பொட்டலங்கள் ஆண்டுதோறும் 2 இலட்சம் வழங்கப்பட்டது.*

**2. பயறு வகை உற்பத்தியை பெருக்கிய அரசு!**

**3. பயறுவகைகளில் உற்பத்தியை பெருக்க தனிப் பயிராக கலப்பு பயிராக, ஊடு பயிராக மற்றும் நெல் தரிசுகளில் விளைவிக்கப்பட்டது.**

- *1976—77ம் ஆண்டில் 4..லட்சம் எக்டராக இருந்த பயறு வகைகள் பரப்பளவு 9.67 லட்சம் எக்டராக உயர்த்தப் பட்டது.*
- *1976—77ம் ஆண்டில்1.. லட்சம் டன்களாக இருந்த பயறு உற்பத்தி 3.67 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டது.*
- *அதேபோல் பயறுவகையில் உற்பத்தித்திறன் எக்டருக்கு 21... கிலோவிலிருந்து 386 கிலோவாக உயர்த்தப்பட்டது.*
- *விதை விநியோகம் 800 டன்களிலிருந்து 2700 டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.*

**4. உயிரியல் உரமான விதையும்.. நல்கும் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் ஆண்டு தோறும் விநியோகம் செய்யப்பட்டது.**

- *1976—77ல் 2.98 லட்சம் டன்களாக இருந்த உர உபயோகம், 1985—86ல் 668 லட்சம் டன்களாக உயர்த்தப்பட்டுள்ளது.*
- *அதேபோல் 12,000 இருந்த உர விற்பனை நிலையங்கள், 16,500 நிலையங்களாக உயர்த்தப்பட்டு, கிராம விவசாயிகளுக்கு உரம் எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*
- *ஆண்டுதோறும் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்பாதுகாப்பு மருந்துகள் வாங்கி 772 வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது.*

- *'வாரந்தோறும் மாநிலம் முழுவதும் 7,116 இடங்களில் பூச்சி நோய் புலனாய்வு செய்து விவசாயிகளுக்கு முன்னறிவிப்புச் செய்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது.*

- *ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்ப முறைகளை விவசாயிகளுக்குச் செயல்விளக்கம் செய்து காட்ட 40 எக்டேர் கொண்ட 158 தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

- *களைக்கொல்லி மருந்து உபயோகம் விவசாயி களிடையே பரவிட மான்ய விலையில் களைக் கொல்லிகள் வழங்க ஆண்டு தோறும் சுமார் ரூ.10 லட்சம் செலவிடப்பட்டது.*

- *இவை மூலம் உரச்சத்தினை அளித்து உற்பத்தியைப் பெருக்க ஆண்டுதோறும் ஒரு லட்சம் எக்டரில் டிஏபி தெளிக்கப்படுகிறது.*

- *1976—77ம் ஆண்டில் கரும்புப் பயிரான 1.54 லட்சம் எக்டர் பரப்பு 1985—86ல் 2.05 லட்சம் எக்டருக்கு உயர்த்தப்பட்டுள்ளது.*

- *அதேபோல் 16.36 லட்சம் டன்னாக இருந்த வெல்ல உற்பத்தி 22.75 லட்சம் டன்னாக உயர்த்தப் பட்டுள்ளது.*

- *எக்டருக்கு 107 டன் கரும்பு மகசூல் விளைவித்து இந்தியாவில் முதலிடத்தைத் தமிழகம் வகிக்கிறது.*

- *3.47 லட்சம் பொதிகளாக இருந்த பஞ்சு உற்பத்தி, சென்ற ஆண்டு சுமார் 6 லட்சம் பொதிகளாக உயர்ந்துள்ளது.*

- *அதேபோல் உற்பத்தித் திறனில் எக்டருக்கு 246 கிலோவாக இருந்தது 358 கிலோவாக உயர்ந்துள்ளது.*

***5. இலவசமாக விவசாயிகளுக்கு 10 கோடி கன்றுகள்***

***6. சாகுபடிக்குத் தகுதியற்ற நிலங்களை பயன் படுத்தும் நோக்குடன் சிறு—குறு விவசாயி களுக்கு இலவச மாக ரூ.242 லட்சம் மதிப்புள்ள 10 கோடி பழ, எரிபொருள், மற்றும் தீவனக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.***

- *சிறு—குறு விவசாயிகளிடையே பயறு வகைகளின் புதிய ரகங்களைப் பரவிடச் செய்ய ரூ.208 லட்சம் மதிப்புள்ள 4.61 லட்சம் மினிகிட்டுகள் இலவசமாக வழங்கப் பட்டுள்ளன.*

- *அதேபோல் நெல் மற்றும் சிறு தானியங்களின் புதிய ரகங்களை எல்லா உழவர்களிடையே பரவிடச் செய்ய ரூ. 88 லட்சம் மதிப்புள்ள 7.60 லட்சம் மினிகிட்டுக்களை இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.*

## ரூ.36 கோடியில் நவீன தொழிற் நுட்பம்

***5. அணுகுமுறை என்ற புதிய திட்டம் இவ்வாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் நெல் விளைச்சலில் எக்டருக்குச் சுமார் 570 கிலோ அதிக மகசூல் கிடைத்தது.***

- *விவசாயிகளுக்கு முன்னேறிய தொழில் நுட்பங்கள் காலத்தே கிடைத்திட உலகவங்கி நிதிஉதவியுடன் பயிற்சி வழித்தொடர்பு திட்டம் ரூ.36 கோடி செலவில் 1981—82 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

- *1000 பண்ணைக் குடும்பங்களுக்கு ஒரு விரிவாக்கப் பணியாளர் நியமித்து எல்லா தொழில் நுட்பங்களும் செயல்விளக்கம் மூலம் செய்து காட்டப்படும்.*

- *நாளும் பெருகிவரும் சமையல் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்யவும், எண்ணெய் வித்து*

பயிரிடும் உழவர்கள் நல்விளைச்சல் கண்டிடவும் எண்ணைய் வித்துக்கெனப் புதிய துறை ஒன்று 1979—80 ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

- இத்துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்தியதால் 1976—77ம் ஆண்டில் 9.50 லட்சம் டன்கள் உற்பத்தியிலிருந்து 1985—86ம் ஆண்டில் 15.51 லட்சம் டன்கள் உற்பத்தி காணப்பட்டது.

- விதை விநியோகம் 2,500 டன்களிலிருந்து 11,620 டன் அளவிற்கு உயர்த்தப்பட்டது.

- 12 லட்சம் தென்னங்கன்றுகள் விநியோகத்திலிருந்து, 25 லட்சம் நெட்டை, குட்டை மற்றும் குட்டை நெட்டை தென்னங்கன்றுகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- தமிழக அரசு 1979—80ம் ஆண்டு முதல் தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்களுக்கெனத் தனியே தோட்டக் கலைத்துறை என்ற புதிய துறையைத் தோற்றுவித்தது. இதன் மூலம் உழவர் வாழ்வு மலரப் பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்புடன் செயலாக்கி வருகிறது.

- 1977—76ம் ஆண்டு 9 மாதிரி பழம் மற்றும் நாற்றுப் பண்ணைகளே நடைபெற்று வந்தன. இன்று இது விரிவடைந்து 54 பண்ணைகளாகப் பெருகியுள்ளன.

## 7. காய்கனி விதைவிநியோகம் இமாலய உயர்வு

- உழவர்களிடையே 8 லட்சம் பழக்கன்றுகளே விநியோகம் செய்திருந்த நிலைமாறி 30 லட்சம் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- அதேபோன்று 16 டன்களாக இருந்த காய்கறி விதை விநியோகம் இன்று 80 டன் அளவை எட்டியுள்ளது.

- *ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புக்காகக் கட்டப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள் 1,719. செலவு ரூ.1,435 இலட்சம்.*

- *உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு 89 லட்சம் மனித நாட்கள்.*

## 8. வேளாண்மைக்கு புதிய கல்லூரிகள்

- *இது தவிர 1986—87ம் ஆண்டு தஞ்சையில் உள்ள காட்டுத் தோட்டத்தில் ஓர் புதிய வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.*

- *இப்பல்கலைக் கழகத்தின் கீழ் இரண்டு கால் நடை கல்லூரிகள் சென்னையிலும் நாமக்கல்லிலும் நடைபெற்று வருகின்றன. இது தவிர தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஒன்றும் செயல்படுகிறது.*

## 9. கூட்டுறவு இயக்கங்களின் விவசாயப்பணிகள்

*தமிழகத்தில் தழைத்து வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்கம், கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் அரிய பங்கை ஆற்றி வருகின்றது. மாநிலத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், அவர்களுக்கு பணி செய்து வருகின்றன.*

*தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சுமார் மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற வீதத்தில் 4,655 விவசாயச் சேவை கூட்டுறவுச் சங்கங்களும், வட்டம் மற்றும் வட்டார அளவிலுமான 183 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.*

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதலாகப் பங்கு தொகை செலுத்துவதற்கு ஏதுவாக, 1985—86ம் ஆண்டில் நபர் ஒருவருக்கு 250 ரூபாய் வீதம் 1000 பேருக்கு 2.50 இலட்சம் ரூபாய்க்கு வட்டியில்லாக் கடன்களை அரசு வழங்கியுள்ளது. 1986—87ம் ஆண்டில், இவ்வகை உறுப்பினர்கள் 1250 பேர், இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவர்.

## விவசாய கடன்

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிற் செலவிற்காகவும், ஆடு, பால்மாடு வளர்த்தல் மற்றும் கோழி வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை ஏற்று நடத்துவதற்காகவும், விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன.

நடப்பு ஆண்டில் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களை 18 கோடி ரூபாய் அளவிற்கும், நீண்டகாலக் கடன்களை 20 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கி சாதனை புரிந்துள்ளது. தேவையான குறுகிய கால மற்றும் மத்தியகாலக் கடன்களைப் வழங்குவதற்கு ஏதுவாகும் பொருட்டு கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உள்நிதி களைப் பெருக்குவதில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1976—77ம் ஆண்டு இறுதியில் 156.89 கோடி ரூபாய்க்கு நிலுவையாக இருந்த, அவற்றின் மொத்த வைப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு கணிசமாகப் பெருகி 1985—86—ஆம் ஆண்டின் இறுதியில் 668.80 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்து கடந்த ஒன்பது ஆண்டுகளில் 326 சதவீதப் பெருக்கத்தை அடைந்துள்ளன.

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் 1979—80ம் ஆண்டிலிருந்து வட்டி தள்ளுபடி செய்த அல்லது திருப்பித்தந்த வகையில் 42

கோடி ரூபாயும், சிறுவிவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்தியகாலக் கடனாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீட்டித்துத் தரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் ..கோடி ரூபாய் அளவிற்கு ஆண்டு நிதி உதவி அளித்துள்ளது.

1984ம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியில் தவணை நின்ற கடன் பாக்கி முழுவதையும் 1985ம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள் திருப்பிச் செலுத்திய பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் கடன்தாரர்களுக்குத் தவனை தவறிய தொகை மீதி வட்டியையும் அபராத வட்டியையும் அரசு தள்ளுபடி செய்தது. இச்சலுகையை 93.3 கடன் தாரர்கள் 3.71 கோடி ரூபாய் அளவிற்குப் பெற்றுள்ளனர்.

## வட்டித்தள்ளுபடி

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் குறித்த காலத்திற்குள் கடன்களைத் திருப்பி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் உரிய காலத்தில் திரும்பி செலுத்துகிற சிறு விவசாயிகளுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடியை அரசு 1981—82 ஆண்டிலிருந்து அளித்து வருகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் 88.32 கோடி ரூபாய் அளவில் குறுகிய காலக் கடன் மத்திய காலக்கடன்களை மாற்றி யமைக்கப்பட்ட இந்தக் காலத்தில் 33.1. கோடி ரூபாய் அளவிற்கு மத்திய கால கடன்கள் மொத்தம் ஐந்து ஆண்டு களில் திருப்பிச் செலுத்தும் வகையில் மாற்றியமைக்கப் பட்டன. நீண்டகாலக் கடன்களைப் பொறத்தவரையில் இயற்கை பேரிடர்களினால் பாதிக்கப்பட்டபகுதிகளில் நிலவளவங்கிக் கடன்தாரர்களின் கடன் தவணைகள் 45.90 கோடி ரூபாய் அளவிற்கு மாற்றியமைக்கப்பட்டன. அல்லது தள்ளிப்போடப்பட்டன.

*1981—82ம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2.95 லட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு நெல், பருப்பு வகைகள், தானிய வகைகள், குளிர் பருத்தி, நிலகடலை மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவைகள் பயிரிடுவதற்குச் சலுகை விலையில் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் செலவாக, 303.94 இலட்சம் ரூபாய் அரசு மானியம், ஒரு வறட்சி நிவாரண நடவடிக்கையாக வழங்கப்பட்டது.*

*அதுபோலவே 1983—84ஆம் ஆண்டில் 3.33 இலட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு சலுகை விலையில் உரவிநியோகம் செய்வதற்காக 360 இலட்சம் ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கியுள்ளது.*

## மானியத்தில் உரம்,பூச்சிகொல்லி மருந்து.

*அரசு நிர்ணயித்த அதிக பட்ச அளவிற்குட்பட்டும், பரிந்துரை செய்யப்பட்ட உர அளவிற்குட்பட்டும், சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையில் 25% வரையிலும் மிகச் சிறு விவசாயிகளுக்கு $33^1/_3$ சதவீதம் வரையிலும் அரசு மானியம் வழங்கப்பட்டது.*

*1983 டிசம்பர் மற்றும் 1984 பிப்ரவரி மார்ச் ஆகிய காலத்தில் மாநிலத்தில் பெரும்பான்மையான பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரங்களை விநியோகம் செய்ததில் 36.39 இலட்சம் ரூபாய்க்கு அரசு மான்யம் வழங்கியுள்ளது.*

*முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 14 பருவங்களுக்கு 89.785 ஏக்கர் அளவிற்கு 47.459 விவசாயிகளுக்கு 747.57 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பயிர் ஈட்டுறுதி செய்யப்பட்டது.*

*விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் தமிழ்நாட்டில் நெற்பயிர் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1.4.85 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பொது ஆயுள்காப்பீட்டுக் கழகமும் தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதித் திட்ட நிதியும், பிரிமியம் மற்றும் ஈட்டுறுதி தொகையினை 2:1 என்ற விகிதத்தில் பங்கேற் கின்றன. மத்திய அரசும் மாநில அரசும் மேற்கண்ட நிதிக்குத் தலா ஒரு கோடி ரூபாயை ஆரம்பக்கட்ட நிதி உதவியாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.*

*விவசாய கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்கடன்களின் ஒரு பகுதிக்கும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் ரொக்கத்திற்கும் தொடர்ந்து விநியோகித்து வருகின்றன. 1985—86ம் ஆண்டில் 73.38 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1986—87ம் ஆண்டில் 82 கோடி ரூபாய் மதிப்புள்ள உரங்களை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.*

*கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 1985 சம்பா பருவத்தில் 4.57 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் 1985 குறுவைப் பருவத்தில் 11.46 கோடி ரூாய் மதிப்புடைய உரங்களையும், 1986 சம்பா பருவத்தில் (7.6.86 வரை) 8.54 கோடி ரூபாய் மதிப்புடைய உரங்களையும் விநியோகம் செய்துள்ளன.*

## பூச்சிகளைத் திசை திருப்பப் புதிய தந்திரம்

*பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஏமாற்றித் திசைத் திருப்புவதற்கு, மின் சிக்னல்களைப் பயன்படுத்தும் நவின முறை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி யுள்ளனர்.*

*பூச்சிகளைப்பிடித்து, அவற்றின் உடம்பில் சிறிய மின் பொறிகளை வைத்துப் பறக்க விட்டனர். பூச்சிகள் பறந்து*

*செல்லும் இடங்களைப் பற்றிய விவரங்களை இந்த மின் சிக்னல்கள் மூலம் தெரிந்து கொண்டனர். பூச்சிகள் விரும்பும் வாசனைகள், விரும்பாத வாசனைகளின் விவரம் கிடைத்தது. அதைப் பயன்படுத்தி, பூச்சிகள் வெறுக்கும் வாசனைகளைப் பயிர்கள் மேல் தெளித்தனர். பூச்சிகள் அந்தப் பக்கமே தலைக்காட்டாமல், வேறு பக்கம் பறந்துவிட்டன. இந்த வாசனைப் பொருளால் மனிதர்களுக்குக் கேடு உண்டாவது இல்லை.*

## விளைபொருள் விற்பனைக்கு 114 சங்கங்கள்

*மாநிலத்தில் 114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை தம் விற்பனை விளைப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக, அவர்கள் நியாயமான வருமானம் பெற தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாய விலைப்பொருட்களை விற்பனை செய்ததில் 1980—81ம் ஆண்டிலிருந்து அடைந்துள்ள முன்னேற்றங்கள் பின்வருமாறு :*

| ஆண்டு | விற்பனைசெய்யப்பட்ட விவசாய விளைப்பொருட்களின் மதிப்பு (கோடி ரூபாயில்) |
|---|---|
| 1980-81 | 86.87 |
| 1981-82 | 89.98 |
| 1982-83 | 121.30 |
| 1983-84 | 99.76 |
| 1984-85 | 117.16 |
| 1985-86 | 149.29 |

*காய்கறி பயிரிடுவோருக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோருக்குத் தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில் வழங்கப்பட வேண்டும் என்ற*

*நோக்கத்துடனும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையிலும் காய்கறி பயிரிடுவோருக்கெனத் தனியே, ஒவ்வொரு வட்டாரத் திற்கும் குறைந்தபட்சம் ஒரு சங்கமென மாநிலத்தில் 544 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 1985—86ம் ஆண்டில் 5.78 கோடி ரூபாய் அளவிற்கு இச்சங்கங்கள் மூலம் காய்கறிகள் விற்பனைச் செய்யப்பட்டுள்ளன.*

*மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 43694 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. முதலாவது பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 1977—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அமைக்கப் பட்டது. 1984—85ம் ஆண்டு வரை இச்சங்கங்கள் பயிரிடு வதற்கும், உற்பத்திக் காரியங்களுக்கும் ஆண்டொன்றுக்கு 4 சதவீ சலுகை வட்டியில் கடன் களையும் இதர சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கப்பட்டது.*

## பசுமை புரட்சியில் முன்னோடி தமிழகம்

*தமிழகத்தில் பயிர் வகைகள் பலவிருந்தாலும் நெற்பயிரே நமது மாநிலத்தில் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. சுமாராக ஆண்டு ஒன்றிற்கு 67 இலட்சம் ஏக்கரிலே நெல் பயிர் செய்யப்பட்டது, புதிய இரகங்களைப் புகுத்தி அவற்றிற்கு வேணடிய உரங்களைத் தந்து காலத்தே அவற்றைப் பூச்சி, பூஞ்சாளங்களிலிருந்து காத்து தந்ததால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே பயிர் விளைச்சலில் குறிப்பாக நெல் விளைச்சலில் முதலமைச்சர் எம். ஜி. ஆர் ஆட்சிக்காலத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.*

*அமோக விளைச்சல் ரகங்கள் அறிமுகம், புதிய தொழில் நுட்பங்கள், காலத்தே வழங்கும் இடுபொருட்கள் என்று, தேவையான நடவடிக்கைகளாலும் அரசு எடுத்துக் கொண்ட போர்க்கால வேகத்தாலும் உழவர்களின்*

அயராத உழைப்பு ஆகியவைகளினாலும் எக்டேருக்கு 10 டன்களுக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. ஐம்பது சதவீத உழவர்கள் எக்டேருக்கு 5 டன்களும், அதற்கு மேலும் விளைச்சல் பெற்றனர்.

## கரும்பு விளைச்சலில் உலக சாதனை

கரும்பு தமிழகத்தில் சுமார் 12 இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. உலகத்திலேயே அதிகமாக கரும்பு விளைச்சல் கண்ட மாநிலம் நமது மாநிலம்தான். ஒரு எக்டேருக்கு 100 மெட்ரிக் டன் என்ற அளவில் நமது விவசாயப் பெருமக்கள் கரும்பை உற்பத்தி செய்து வருகின்றார்கள். இத்தகைய வியத்தகு சாதனையை விவசாயிகள் நிகழ்த்தியுள்ளதற்கு எம்.ஜி.ஆர். அரசு கரும்பு விவசாயிகளுக்கு செய்த வசதிகளே காரணம்.

இவ்வாண்டு (1985=86) 18 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டு 20 இலட்சம் டன்கள் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்பட்டது. பயறு வகைகளின் சாகுபடிக்கான உத்திகளைக் கையாண்டதில் நல்ல பலன்கிட்டியுள்ளது. இவ்வாண்டு (1985=86) 10.10 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் பயிராக 4 இலட்சம் டன்கள் உற்பத்தியானது. பருவ மழை பொய்த்துப்போன இந்த ஆண்டில் இத்தகைய விளைச்சல் என்பது பெரும் சாதனையாகவே கருதப்படுகிறது.



# அத்தியாவசிய மின்சாரத் தேவையை அவசரமாக தீர்த்த எம்.ஜி.ஆர். அரசு

## கூடங்குளம் அணுமின் நிலையம்

*நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று அப்போதைய பிரதமரிடம் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கோரிக்கையை முன் வைத்தார். அந்த திட்டம் தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது.*

## எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு மேலும் பெருமை சேர்த்த அனல் மின்நிலையங்கள்

*நீலகிரி மாவட்டம், மேட்டூரை அடுத்த சின்னக்காவூரில் 1185 ஏக்கர் பரப்பளவில் 384 கோடி ரூபாய் செலவில் அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டது. இதன் முதல் மின் பிரிவுத் துவக்க விழா 08.03.1987 அன்று நடைபெற்றது.*

*மாண்புமிகு மத்திய மின்துறைத் துணை அமைச்சர். திருமதி. சுசீலா ரோத்தகி தலைமையில் மாண்புமிகு*

*முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த மின்நிலையத்தின் இரண்டாவது யூனிட் ஆகஸ்ட் மாதமும், மூன்றாவது யூனிட் 1988ம் ஆண்டு டிசம்பர் மாதமும், நான்காவது யூனிட் 1989 டிசம்பர் மாதமும் தொடக்கி வைக்கப்பட்டது.*

*இந்த மின் நிலையம் நான்கே ஆண்டில் கட்டிமுடிக்கப் பட்ட சாதனையாகும். தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிப்பதோடு, சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தப் பாதிப்பும் வராதபடி தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதல்கட்டமாக இது 210 மெகாவாட் உற்பத்தி செய்தது. அடுத்த 22 மாதத்தில் 635 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி மேம்பாடானது.*

## முதல்வர் எம்.ஜி.ஆ.ருக்கு பாராட்டு

*மின்நிலைய தொடக்கவிழாவுக்கு தலைமையேற்ற மாண்புமிகு. மத்திய மின்துறைத் துணையமைச்சர் திருமதி. சுசீலா ரோத்தகி தனது தலைமையுரையில், "இந்தியாவில், மின் உற்பத்தியில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் சராசரி மின் உற்பத்தியைவிட தூத்துக்குடி, எண்ணூர் அனல்மின் நிலையங்கள் அதிகமாக மின்சார உற்பத்தி செயல்படுகின்றன. இந்த மேட்டூர் அனல்மின் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே முடிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றை அரும்பாடு பட்டுவருகிற—லட்சோப லட்சம் மக்களால் கொண்டாடப்படுகிற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். எம். ஜி. ஆர் அவர்களை நான் மிகவும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு அரசு பல மின் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் கூடுதலாக 1416 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தின் கிராமங்களில் மின்சார*

*விநியோகத் திட்டம் மிக நல்ல முறையில் நடந்துள்ளது” என்றார்.*

## எம். ஜி. ஆரின் நேர்மை உணர்வு

*எம்.ஜி.ஆர். அவர்கள், தனது ஆட்சிகாலத்தில் பல திட்டங் களை நிறைவேற்றும்போது, அதில் எவ்வித முறைகேடும் நடைபெற்றுவிடாமல் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். அதன்படி. ஓய்வுப் பெற்ற மூத்த இரண்டு ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமித்துப் பலகோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் இந்த திட்டத்தை கண்காணிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். “முதல்வர் எம். ஜி. ஆரின் இந்த எச்சரிக்கை நடவடிக்கையை இந்தியாவே வியந்து பாராட்டுகிறது“ என்றும் மத்திய அமைச்சர் சுசிலா ரோத்தகி தன் உரையில் குறிப்பிட்டார்.*

*சுற்றுலா மதுவிலக்கு மற்றும் உள்துறை அமைச்சர் திரு.வி.வி.சுவாமிநாதன் அவர்கள் விழா மலரை வெளியிட்டு பேசினார்.*

*தமிழகச் சரித்திரத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் காலத்திலேதான் மின் உற்பத்திக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே வேளாண்மையின் நலம் கருதி, 11 இலட்சம் பம்பு செட்டுகள் மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது; 11 இலட்சம் ஏழைகளுக்கு இலவசமாக ஒளிவிளக்குத் திட்டம் அமல் செய்யப்பட்டிருக்கிறது என்றார்.*

## நிலம் வழங்கியோருக்கு உதவி

*முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் விருப்பப்படி, இந்த அனல் மின் நிலையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் குடியிருந்தோர் 175 பேருக்கு 3 சென்ட் வீதம்*

*நிலம் தரப்பட்டது. அப்பகுதியில் குடியிருந்த 229 பேருக்கு இங்கே வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பணியாற்றும் 800 பேருக்கும் ஒரு மாத சம்பளம் ஊக்கத்தொகையாகத் தரப்பட்டது.*

*தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இரண்டாவது அலகு இந்த ஆண்டு தொடங்கப்பட்டது. மேட்டூர் அனல் மின் நிலையத்தையும், கீழ் மேட்டூர் புனல் மின் நிலையத்தையும் நிறுவும் பணி இந்த ஆண்டு தொடங்கப் பட்டது.*

## வடசென்னை அனல் மின் நிலையம் தொடங்கப்பட்டது

*புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தி கணிசமாக உயர்ந்தது. 1976—77ம் ஆண்டுகளில் 2 ஆயிரத்து 364 மெ. வா—ஆக இருந்த மின்சாரம் 87—ம் ஆண்டில் 3 ஆயிரத்து 987 மெகா வாட்டாக அதிகரித்தது. அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி பெருக்கமே இதற்கு காரணமாகும்.*

*1976——77 ம் ஆண்டு தமிழ்நாடு மின்வாரியத்தில் அனல் மின் நிலையங்களின் சராசரி மின் சுமைக்காரணி 46 விழுக்காடு என்ற அளவில் இருந்தது. 1986=—87ம் ஆண்டில் எப்பொழுதும் நிகழாத சாதனையாக 64.61 விழுக்காட்டினை எட்டியது. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலுள்ள மின்வாரியங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாடு மின் வாரியம் 3—வது இடத்தை வகித்தது.*

*மின் உற்பத்தியில் சிறந்த திறன்பாட்டிற்கான மத்திய அரசின் உற்பத்தி திறனுக்கான சிறந்த பரிசை, தமிழகம் இரண்டு முறை பெற்றுள்ளது. எண்ணூர் அனல் மின் நிலைம் சிறந்த செயல்பாட்டிற்காக 1985—ம் ஆண்டு 3. 6 லட்சம் ரூபாயும், 1986—ம் ஆண்டில் ரூபாய் 5.4 லட்சமும் பெற்றது.*

*இதேபோல், ஊரக மின் மயமாக்குதலில் தமிழ்நாடு மின்வாரியம் முன்னோடியாகத் திகழ்ந்தது. மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும், அனைத்து ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் மின் வசதியை அளித்து வாரியம் தனிச் சிறப்பை பெற்றது.*

## மின் உற்பத்தியில் தன்னிறைவு

### அட்டவணை – 1

| விவரம் | 1976–77 | 1985–86 |
|---|---|---|
| நிறுவுத்திறன் (மெ. வா) | 2364 | 3809 |
| மின் உற்பத்தியும் கொள்முதலும் (மி.யூ.) | 8350 | 13273 |
| தனிநபர் பயன்படுத்தும் அளவு (யூ) | 146 | 203 |
| நுகர்வோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3223 | 62 |
| துணைமின் நிலையங்கள் (எண்களில்) | 304 | 461 |
| மின்பங்கீட்டு நிலையங்கள் (எண்களில்) | 42499 | 64960 |
| மொத்த கம்பித்தொடர் (கி.மீ.) | 285508 | 373825 |
| மின்வசதி பெற்ற கிராமங்கள் (எண்களில்) | 15516 | 15715 |
| மின்வசதி பெற்ற ஆதிதிராவிடர் குடியிருப்புகள் (எண்களில்) | 24608 | 26211 |
| மின்வசதி பெற்ற பம்பு செட்டுகள் (எண்களில்) | 784643 | 1074184 |

### அட்டவணை – 2

| திட்டத்தின் பெயர் | நிறுவுத்திறன் (மெ.வா.) | இயக்கி வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| குந்தா புனல்மின் திட்டம் 3ஆம் நிலை 3-ஆம் பிரிவு | 30 | 1978 பிப்ரவரி |
| சுருளியாறு புனல் மின்திட்டம் | 35 | 1978 ஆகஸ்ட் |

| | | |
|---|---|---|
| குந்தா புனல் மின்திட்டம் 4ம் நிலை விரிவாக்கம் | 50 | 1978 அக்டோபர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலையம் முதல் பிரிவு | 210 | 1979 ஜூலை |
| தூத்துக்குடி அனல் மின்நிலையம் 2ம் பிரிவு | 210 | 1980 டிசம்பர் |
| தூத்துக்குடி அனல்மின் நிலையம் 3ம் பிரிவு | 210 | 1982 ஏப்ரல் |
| சேர்வலாறு புனல் மின்திட்டம் | 20 | 1986 மார்ச் |
| மொத்தம் | 795 | |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் முதல்பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1983 ஜூலை |
| கல்பாக்கம் அணுமின்நிலையம் இரண்டாம் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 235 | 1985 செப்டம்பர் |
| நெய்வேலி இரண்டாவது அனல் மின்திட்டம் முதல் பிரிவு (மத்திய அரசுத்துறை) | 210 | 1986 ஏப்ரல் |
| ஆக மொத்தம் | 1475 | |

*ஆசியாவிலேயே இரண்டாவதாக, கோவை அருகே ரூ. 3 கோடி செலவில் செயற்கை நூல்தொழிற்சாலை தொடங்கப்பட்டது.*

*தமிழ்நாட்டில் கோவை உள்பட 75 நகரங்களின் வளர்ச்சிக்காக உலகவங்கி உதவியுடன் 125 கோடி செலவில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.*

*ஆதி திராவிட மக்கள் அதிகம் வாழும் கிராமங்களில் குறைந்தது இரண்டு கிராமங்களையாவது ஆலயங்கள்*

*தத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு ஆணையிட்டது.*

*தமிழகத்தில் 12 கோவில்களில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சம் ரூபாய் எடுத்து, அதில் ஏழை—எளிய ஆதிதிராவிட மக்களுக்கு திருமணம் செய்து வைக்க உத்தரவிடப்பட்டதும் இந்த எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான். ஆதி திராவிட மாணவர்கள் மற்றும் பின் தங்கிய மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான வருமான வரம்பை தமிழக அரசு உயர்த்தி உத்தரவிட்டது. மலைவாசிகளுக்கு உதவி செய்வதற்காக சிறு தொழில்கள் தொடங்கும் தனித்திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.*

## இலவச இதய கருவி

*ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு மேலும் ஒரு புதிய சலுகையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அறிவித்தார். அதன்படி, இருதய நோயாளிகளுக்கு இருதயத் துடிப்பை சீர் செய்யும் “பேஸ் மேக்கர்” கருவி வழங்கப்படும் என்று அறிவித்தார். எதிர்க்கட்சிகள் கூட இந்த திட்டத்தை வியந்து பாராட்டின.*

## போக்குவரத்து துறையில் புரட்சிகர முன்னேற்றம்

*தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 13 அரசு போக்குவரத்து கழகங்கள் தனித்தனி கம்பெனிகளாக இயங்கி வந்தன. அண்ணா மாவட்டத்தில் திண்டு கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய போக்குவரத்து கழகம் அமைககப்பட்டது. அனைத்து போக்குவரத்து கழகங்களும் சேர்ந்து 9850 பேருந்துகளை நாளொன்றுக்கு சுமார் 31 லட்சம் கிலோ மீட்டர்கள் இயக்கி சுமார் 90 லட்சம் பயணிகளை ஏற்றி சென்றன. இப்பணியில் சுமார் 70 ஆயிரம் பணியாளர்கள் அல்லும் பகலும்*

*கடுமையாக உழைத்தனர். 8 ஆண்டுகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் எவ்வளவு வளர்ச்சி யடைந்திருக்கின்றது என்பதை கீழே காணலாம்.*

| | 1977ல் | 1985ல் |
|---|---|---|
| போக்குவரத்துக் கழகங்கள் | 07 | 13 |
| 13 பேருந்து கழகங்களின் பேரூந்து எண்ணிக்கை | 4953 | 9850 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 36000 | 70000 |

*ஆண்டுதோறும் சுமார் 1200 முதல் 1500 வரை புதிய பேருந்துகளை வாங்கி பழைய பேருந்துகளை களையவும் புதிய வழித்தடங்களில் இயக்கவும் நடவடிக்கை எடுத்து வரப்பட்டிருக்கிறது. பேருந்துகளின் சராசரி வயது, 1975 ஆண்டுகளில் 6.5 ஆக இருந்தது எம்.ஜி.ஆர் ஆட்சிகாலத்தில் 4 ஆக குறைந்தது, 1985—1986ல் சுமார் 2,200 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டது. 87ம் ஆண்டு 40 கோடிரூபாய்க்கு 500 புதிய பேரூந்துகள் வாங்கப்பட்டது.*

*வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், தருமபுரி, தஞ்சை போன்ற இடங்களில் முதலில் 44 மினி பஸ்கள் விடப்பட்டன. அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் விடப்பட்ட மொத்த மினிபஸ்கள் 700 மினி பஸ்கள் ஆகும்.*

*போக்குவரத்துக் கழகங்களில் உபரி நிதி கொண்டு ஈரோட்டில் சாலைப் போக்குவரத்து சம்பந்தமான ஒரு பொறியியற் கல்லூரி அமைக்கப்பட்டது. நெடுஞ்சாலை களில் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து சுமார் 60 சாலையோர விடுதிகள் அமைக்கப்பட்டது*

*சென்ற 1984ஆம் ஆண்டில் தேசீய உற்பத்திக்கழகம் இந்தியாவிலுள்ள அனைத்து போக்குவரத்து கழகங்களின்*

*உற்பத்தித்திறனை ஆராய்ந்து, "பல்லவன்" என்ற பெயரில் இயங்கிவந்த போக்குவரத்து பணிகளுக்கும் புறநகர்ப் பணிகளில் ஏனைய அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் முதல் பரிசை அளித்திருக்கிறது.*

*1985 நவம்பர் முதல் தேதி நமது பாரதப் பிரதமர் பரிசை அளித்தார்கள். மத்திய திட்டக் கமிஷனும் தமிழ்நாட்டு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மெச்சியிருக் கிறார்கள்.*

## நேசமணி, ஜீவா பெயரில் புதிய போக்குவரத்துக் கழகங்கள்

*தமிழகத்தில் சுதந்திர போராட்ட தியாகிகளையும், மொழிப்போர் தியாகிகளையும் கவுரவித்து போற்றி வந்தவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.! போலி வேடதாரிகள் மத்தியில் அவர் மறைந்த தலைவர்களின் எண்ணம் மறக்காமலிருக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டார். அதன்படி போக்குவரத்துக் கழகங்களுக்கு தலைவர்கள் பெயர் சூட்டி மகிழ்ந்தார். நேசமணி— ஜீவா ஆகியோரது பெயர்களில் புதிய போக்குவரத்துக் கழகங்கள் 1981 ல் தொடங்கப்பட்டன.*

## புதிய பேருந்து வழித்தடங்கள்

*பேருந்து வழித்தட ஏற்புத் திட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டிலிருந்து 1983—84ம் ஆண்டின் இறுதி வரை 10, 694 கி. மீ. நீளமுள்ள பேருந்து வழித்தடங்களை மேம்பாடு செய்யப்பட்டது. இதில் 31.3.1985 இறுதிவரை 7500கி. மீ. நீளச்சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ரூ.10.00 கோடி வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் 1985—86ம் ஆண்டில் சுமார் 860 கி.மீ. நீளச்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டன.*

## முன்னாள் படை வீரர்கள், மற்றும் குடும்பங்களுக்கு உதவி இந்தியாவிலேயே தமிழகம் சாதனை

*போரின்போது உயிர் நீத்த குடும்பங்களின் மேம்பாட்டுக்காக கொடி நாள் வசூல் செய்யப் படுகிறது. கொடிநாள் வசூல் 1977ம் ஆண்டு ரூ. 17 லட்சம் என்ற நிலையில் இருந்து 1986ம் ஆண்டு கொடி நாள் வசூல் ரூ. 69.99 லட்சமாக உயர்ந்து அகில இந்திய அளவில் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. கொடிநாள் வசூலில் அதிகமாக வசூல் செய்யும் மாநிலங்களுக்கு வெற்றிச் சின்னத்தை அளிப்பதற்கு மத்திய அரசு முன் வந்த 1985ம் ஆண்டுலேயே அந்தச் சின்னத்தை பெற்ற பெருமை தமிழகத்திற்கு உண்டு. தொடர்ந்து 1986ம் ஆண்டும் இதனை தமிழகம் தக்க வைத்துள்ளது.*

*மேலும் கொடி நாள் வசூலுக்கு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்படுகின்ற வெற்றிச் சின்னத்தையும் மற்றும் அதிகப்பட்ச வசூலுக்காக அளிக்கப்படுகிற வெற்றிச் சின்னத்தையும், தமிழகம் பெற்றுள்ளது.*

*முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒவ்வொரு ஆண்டும் கொடி நாள் வசூலுக்காக ரூ. 5 ஆயிரம் நன்கொடை வழங்கி வசூலைத் தொடங்கி வைத்தது, நாடு முழுவதும் தமிழகத்திற்கு பெருமையைத் தேடித்தந்தது.*

## போர்வீரர்களின் விதவை மனைவிக்கு ஓய்வூதியம்

*ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்கள் உயிரிழந்து விட்டால் அவர்களது குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் இல்லாமலிருந்தது.*

*ஆனால் மறைந்த படைவீரர்களின் விதவை மனைவிகளுக்கு மாந்தோறும் ரூ. 50 வீதம் அவர்களது வாழ்நாள் முழுவதும் வழங்க முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.*

உத்தரவிட்டார். இந்த திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முறையாக செயல்படுத்தப் பட்டது. உயிரிழந்த வீரர்களின் மனைவி ஓய்வூதியம் பெற மறுமணம் செய்யக் கூடாது என்ற விதியை தளர்த்தி, மறுமணம் செய்து கொண்டாலும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

## விடுதலைப் போராட்ட வீரர்கள் நலன்

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று 3 மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்த வீரர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வங்கப்படும் என்ற நிலையை மாற்றி, 3 வாரங்கள் சிறையில் இருந்தவர்களுக்கும் வழங்கும் புதிய திட்டத்தை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் கொண்டு வந்தார்.

ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தவுடன் அவர்களின் மனைவியார் உடனடியாக தொடர் ஓய்வூதியம் பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர்களே ஆணை வெளியிடுவதற்கு வழிவகை செய்தவர் புரட்சித் தலைவர்.

75 ரூபாயாக இருந்த ஓய்வூதியத் தொகையை படிப்படியாக உயர்த்தி 250 ரூபாயாக உயர்த்தியவர் புரட்சித் தலைவர்.

பெருந்தலைவர் காமராஜரின் சகோதரி நாகம்மாள், கக்கன் மனைவி சொர்ணம் பார்வதி கக்கன், வாஞ்சிநாதன் சகோதரர் ஆர். கோபாலகிருஷ்ணன், வி. சீனிவாசராவ் அவர்களின் மனைவி நாச்சாரம்மாள், திருப்பூர் குமரனின் துணைவியார் ராமாயி, தியாகி தூக்கு மேடை ராஜகோபாலன், அமரர் ஜீவா துணைவியார் ஏ.எஸ். பத்மாவதி, அவர்களது புதல்வர் மணிக்குமார், வ.உ.சி

பேத்தி சேதுலட்சுமி ஆகியோருக்கு பல சலுகைகளை அறிவித்து அரசாரணை வெளியிட்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

மருதுபாண்டியரின் வழித்தோன்றல்கள் 202 பேருக்கு அரசு ஒய்வூதியம் அளித்தவர் வள்ளல் எம்.ஜி.ஆர்.

சுதந்திரபோராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு சித்த மற்றும் ஆங்கில மருத்துவ படிப்பில் இடம் வழங்கி கவுரவித்தார்.

## சுயவேலை வாய்ப்புக்கு உதவி

இதேபோல் முன்னாள் படை வீரர்களின் நலனுக்காகவும் புரட்சித் தலைவர் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன்படி தேர்தல் பாதுகாப்புப் பணியில் முன்னாள் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இரவு சுற்றுக் காவல் பணியையும் முன்னாள் படை வீரர்கள் செய்து வந்தனர்.

முன்னாள் படை வீரர்களை சுய வேலை வாய்ப்பில் ஊக்கமளிக்கும் வகையில் வங்கிக் கடன், வட்டிதள்ளுபடி, மானியம் போன்ற உதவித் திட்டங்கள் 1978—ம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

சென்னையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான வாகன கட்டண வசூல் இதற்கு முன் மாநகராட்சியிடம் இருந்தது. இதனை முன்னாள் படை வீரர் நல இயக்குநரகத்திடம் ஒப்படைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

மாநிலம் முழுவதும் முக்கிய வணிக இடங்களில் 13.85 லட்சத்திற்கு 277 ஜெய் ஜவான் பெட்டிக்கடைகள் நிறுவப்பட்டு, வறிய நிலையில் உள்ள முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு வியாபாரம் செய்து பொருளீட்ட வழங்கப்பட்டது.

*முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெற்றிடும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, 1985ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது.*

*மாவட்ட முன்னாள் படை வீரர் வாரியங்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பட்டன.*

## சிறையிலும் சீர்திருத்தம்

*1978ம் ஆண்டு பரீட்சார்த்தமான முறையில் சேலம் சிறைச்சாலையில் தொடங்கப்பட்ட ஊதிய ஈட்டுறுதித் திட்டம் பின்னர் மாநிலத்தில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளுக்கும் மாற்றப்பட்டது.*

*சிறைவாசிகள் குறைகளைத் தெரிவிக்க சிறைச்சாலை களில் புகார் பெட்டி வைக்கும் திட்டம் 1982ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*1977ம் ஆண்டு முதல் தமிழகத்தில் இலசச் சட்ட உதவு மற்றும் அறிவுரைக்கான சங்கம் செயல்படத் தொடங்கியது. பொதுமக்களின் வழக்குகள் மட்டுமின்றி, சிறைவாசிகளின் வழக்குகளையும் இச்சங்கம் கவனித்து வருகிறது.*

## சிறைவாசிகள் பஞ்யாயத்து

*மதுரை மத்திய சிறையில், 27.12.79 முதல் சிறைவாசிகளின் நன்மைக்காக சிறைவாசிகள் பஞ்சாயத்து முதன் முதலில் தொடங்கப்பட்டது. 1982 முதல் இந்த திட்டம் அனைத்து மத்திய சிறைகளுக்கும், மாநில மகளிர் சிறை வேலூருக்கும் விரிவு படுத்தப்பட்டது.*

*1982ம் ஆண்டு முதல் சிறைவாசிகளுக்கு ஆழ் நிலை தியானம் மற்றும் யோகா பயிற்றுவிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. பெண் சிறைவாசிகளின் குழந்தை*

*களுக்கு அரை லிட்டர் பால் வழங்கும் திட்டத்தையும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் செயல்படுத்தினார்.*

*சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி திட்டத்தின் மூலம் கல்வி வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியவர் புரட்சித் தலைவர்.*

*1978ல் அனைத்து மத்திய சிறைகளின் அளவில் மாநில சிறை விளையாட்டுப் போட்டி, கோவை மத்திய சிறையில் நடத்தப்பட்டது.*

*இதேபோல், தீ தடுப்பு பிரிவான தீயணைப்புத் துறைக்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.*

## பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம்

*பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் தருவதற்கு வகை செய்யும் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. எம். ஜி. ஆரால் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், தற்போது பத்திரிகையாளர்கள் மாத ஓய்வூதியமாக தற்போது 10 ஆயிரம் ரூபாய் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.*

## முன்னுரிமை

*தங்க கட்டுப்பாடு சட்டத்தினால் வேலை இழந்த தொழிலாளி அல்லது அவர் மகன்கள் அல்லது திருமண மாகாத பெண்களுக்கு வேலை வாய்ப்பு நிறுவனத்தில் முன்னுரிமை கொடுக்கும் சலுகை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்பட்டது.*

## இறந்து போனாலும் உதவி

*சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் 4—ம் பிரிவு ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் பணி*

*செய்கிற காலத்தில் இறந்தால் ரூ. 10 ஆயிரம் கொடுக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டது.*

*500 வீடுகளுக்கு ஒரு நுகர்பொருள் வாணிபக் கழக கடை அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டது.*

*வேலையில்லாமல் இருக்கும் பொறியாளர்கள் சொந்தமாக தொழில் நடத்த பொறியாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது.*

## கட்டணம் செலுத்தும் முறையில் மாற்றம்

*மின்சார மீட்டரைப் பார்த்துக் குறிப்பு எழுதி அலுவலகத்துக்குப் போய் பில் போடும் முறை இல்லாமல் மீட்டரைப் பார்த்த உடன் அதே இடத்தில் அதற்கான கட்டண பில் போடும் முறை இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15—ந் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. அதுவரை, மின்சார அலுவலம் சென்றே மின் கட்டணம் எவ்வளவு? என்று கேட்ட, அந்த தொகையை செலுத்த வேண்டிய நிலை இருந்தது. இந்த புதிய திட்டத்தின் மூலம் மின் கட்டணத்தை அவ்வப்போது தெரிந்து கொள்ள வசதி செய்யப்பட்டது.*



# திரைப்படங்களுக்கு வரிவிலக்கு கலைஞர்களுக்கு கௌரவம்

## முதல்வரின் அறிவிப்பு

**நா**ட்டின் ஒருமைப்பாட்டையும், கலாச்சாரத்தையும் ஒழுங்கையும் மொழி, நாடு ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவு முறையையும் வலியுறுத்தக் கூடிய நல்ல திரைப்படங்களை எடுக்க முன் வந்தால், அத்தகையபடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கதமிழக அரசு சார்பில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

திரைப்படங்கள் தயாரிக்க போதுமான தகுதிகள் இருந்தும், நிதி வசதி இல்லாதிருந்தால், அத்தகைய தயாரிப்பாளர்களுக்கு நிதியுதவி செய்ய திரைப்பட நிதியுதவிக்கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

## தியாகராயருக்கு பெருமை சேர்த்த எம்.ஜி.ஆர்.

தியாகராயரின் தெலுங்கு கீர்த்தனைகளை தமிழில் மொழிபெயர்த்து கேசட்டில் வெளியிட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உத்தரவிட்டார்.

*இசைமேதை தியாகராய நகரில் பிறந்தவர். அவர் சுந்தரத் தெலுங்கில் சாகாவரம் பெற்ற சாகித்யங்களை உருவாக்கி ஒவ்வொன்றையும், தனித்தனி இராகத்தில் பாடியவர். தமிழ்நாட்டில்தான் ராகமே தோன்றியது. கர்நாடக சங்கீதம் என்பது கர்நாடக மாநிலத்தில் தோன்றியது என்பது பொருள் அல்ல. கர்நாடக சங்கீதம் என்றால் காதுக்கு இனிய சங்கீதம் என்றுதான் பொருள். பொருள் நயமும், ஓசை நயமும், சொற்சுவையும் குன்றாமல் தியாகராயரின் கீர்த்தனங்களைத் இசை சக்கரவர்த்தி பாலமுரளி கிருஷ்ணாவும், அவரது துணைவியாரும் மொழி பெயர்த்தனர். முதல் தடவையாக தமிழ் அன்னைக்கு 12 அல்லது 13 பாடல்களை இரண்டு கேசட்டுகளின் மூலம் காணிக்கையாக தந்தனர்*

*திரைப்படத்தின் மூலம் ஆட்சியில் மறுமலர்ச்சியையும், புரட்சியையும் தோற்றுவித்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களது அந்த கேசட்டுகளை வெளியிட்டு கர்நாடக சங்கீதத்துக்கு பெருமைக்கு சிறப்பு சேர்த்தார்.*

## புதிய மாநகராட்சிகள்

*நகராட்சிகளின் வளர்ச்சிப் பணிக்கு பணம் பெரும் தடையாக இருந்த நிலையைப் போக்கவும், நகராட்சிப் பணிகள் தடங்கலின்றி நடைபெறவும் நிதிக் கழகம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை மேலப்பாளையம் ஆகிய நகராட்சி களை ஒன்றாக இணைத்து திருநெல்வேலி மாநகராட்சி யாக்குவதற்கான பரிசீலனைகள் தொடங்கப்பட்டு, அதன்படி அவை மாநகராட்சிகள் ஆக்கப்பட்டன.*

## அறநிலையத்துறை மேம்பாடு

*தமிழகத்தில் உள்ள 4 கோடியே 880 லட்சம் மக்களுக்கு உடல் ஆரோக்கிய நிலையை பரிசோதித்து, அதுபற்றிய*

குறிப்புகளை பதிவு செய்து புத்தகங்களை அவரவரிடம் வழங்க அரசு உத்தரவிட்டது.

இந்து சமய நிறுவனங்களுக்கு 39 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. திருப்பரங்குன்றம் மலை மீது ஆறுபடைவீடு அமைக்கும் பணி 10 லட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது.

## வசதியற்றோருக்கு ஆலயங்களில் இலவச திருமணம்

வசதியற்றோருக்கு ஆலயங்களில் இலவச திருமண திட்டம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் ஆட்சிக்காலத்தில், 1981ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. அதன்படி 1981ம் ஆண்டு முதல் 1986ம் ஆண்டு வரை 6 ஆண்டு காலங்களில் ஆயிரத்து 858 திருமணங்கள் நடத்தி வைக்கப் பட்டன.

1977க்குப் பிறகு கோவில்களில் திருக்குட நீராட்டு விழாக்களின் எண்ணிக்கையும் அதிகமாகும் அதன்படி 1986ம் ஆண்டு வரை 536 கோவில்களில் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.



# சாலவும் சிறந்த ஆலயப் பணிகள்

**ந**ம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே கல்வி நிலையங்களாக விளங்கின. கலைவளர்க்கும் கழகங் களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்க்கு உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன. மருத்துவ மனைகளாகப் பணிபுரிந்தன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரிந்தும் நிதி நிலையங்களாக இயங்கின. இவ்வாறு நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டு மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்து வந்த திருக் கோயில்கள் “சமுதாய நல நிலையங்கள்” ஆகத் திகழ்ந்த வரலாற்றை நமக்கு இலக்கியங்கள் படம் பிடித்து’ காட்டியுள்ளன.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையின் கீழ் 34,340 சமய நிறுவனங்கள் தற்போது உள்ளன. இதில் திருமடங்கள் 56ம் சேரும். இவற்றில் ஆண்டு வருமானம்

ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட 186 நிறுவனங்கள், ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு மேற்பட்டவை 1,612 நிறுவனங்கள், ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு கீழ்ப்பட்டவை 32,542 நிறுவனங்கள். இந்நிறுவனங்கள் அனைத்திலிருந்தும் பெறப்படும் ஆண்டு வருமானம் சுமார் 22.88 கோடி ரூபாய்.

ரூபாய் பத்தாயிரத்திற்குக் குறைவான ஆண்டு வருமானம் உடையவையாய் விளங்கும் ஆலயங்களில் சில ஒரு வேளை பூசை செய்வதற்குக்கூட வழியில்லாமல் இருக்கும் சிறுமை நிலையைப் போக்கி, அறநிலையத்துறை கொண்டு வந்து நிறைவேற்றி நடத்திக்கொண்டிருக்கும் ஒப்பற்ற திட்டமே ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனப்படும் எழுச்சிமிகு ஏழு கோடி ரூபாய்த் திட்டமாகும்.

வருவாய் அற்ற ஆலயங்களின் வழிபாட்டிற்கென வைக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாய் வைப்பு நிதி கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கென வைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி, ஆலயப் பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக அமைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஆகிய இம்மூன்று திட்டங்களுமே ஒரு சேர ஆலய மேம்பாட்டுத் திட்டம் அல்லது ஏழுகோடி ரூபாய் வைப்புநிதித் திட்டமேன அழைக்கப்படுகிறது. ஆன்மீகத் தலைவர்களாலும் ஆன்றோர்களாலும் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்பட்ட இத்திட்டம் 15.08.1984ஆம் நாளன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களால் திருச்சி சமயபுரத்தில் தொடங்கி வைக்கப்பெற்றது. ஆலயங்களில் உபரித் தொகை 4½ கோடியிலிருந்து கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் 28 கோடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்த்தப்பட்ட 28 கோடி ரூபாய்களில் ஏழு கோடி ரூபாய்கள் முப்பெரும் திட்டங்களுக்காக வங்கிகளில்

*வைப்புத் தொகையாக வைக்கப் பெற்றுள்ளன. அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் மட்டும் இம்மூன்று திட்டங்களுக்காக 2½ கோடி ரூபாயை வைப்பு நிதியாக வழங்கியுள்ளது. எஞ்சிய 4½ கோடி ரூபாய்களை, இலட்ச ரூபாய்களுக்கு மேலே ஆண்டு வருமானம் பெற்று விளங்கும் இதர 69 ஆலயங்கள் வழங்கியுள்ளன. வங்கிகளில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளன இவ்வேழு கோடி ரூபாய்கள் கரையாது கட்டாகப் பேணப்படுகிறது. அத்தொகையிலிருந்து வட்டியாக ஆண்டொன்றுக்குப் பெறப்படும் சுமார் எழுபத்தைந்து லட்ச ரூபாய் மட்டுமே ஆலய மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.*

*இப்புதுமையான திட்டம் அறிவிக்கப்பட்ட ஓராண்டிற்குள்ளாகவே இத்திட்டங்களின் செயல்முறை துவக்க விழாவும் 20.7.1985 அன்று தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கிராமப்புறக் கோயில் திருப்பணிக்காக பழநி அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயிலின் நிதியினின்றும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூபாய் ஒரு கோடியில் கிடைத்துள்ள வட்டி வருவாயினின்றும் அண்மையில் 13.3.1986ஆம் நாளன்று சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில் நடைபெற்ற விழாவில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 150 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ. 10,000 வீதம் ரூ. 15 லட்சம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் நிதி வழங்கப்பட்டது.*

*ஒரு வேளை பூசைக்குக்கூட வருமானம் இல்லாத 32 ஆலயங்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பூசைச் செலவிற்காக வழங்கப்பட்டன. ஆலயப் பணியாளர் களுக்கு மருத்துவ நிதி தலா ரூ. 100 வீதம் பலருக்கும், கல்வி நிதி தலா ரூ. 100 வீதம் பலருக்கும் வழங்கி இத்திட்டம்*

முதல் கட்டமாகச் செயல்படுத்தப்பட்டிருப்பது மட்டும் அல்லாமல், வரும் ஆண்டுகளில் மேலும் இத்திட்டங்களால் மிக அதிகமாக ஆலயங்கள் பயன்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட 20.7.85 ஆம் நாளன்றே இத்திட்டங்களில் குறிப்பிடப்படாத மற்றுமொரு திட்டமும் செயல்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பளம் கூட தரமுடியாத நிலையில் தஞ்சையிலும் திருநெல்வேலியிலும் பல கோவில்கள் உள்ளன. இக்கோயிலுக்கு நிலங்கள் ஏராளமாக இருந்தபோதிலும், அவற்றை பயிர் செய்யும் குத்தகைதாரர்கள் பலர் விளைவில் 25 சதவீதம் விதிக்கப்பட்டுள்ள குத்தகையை ஆலயங்களுக்குச் சரிவரச் செலுத்துவதில்லை. குத்தகையை முறையாக செலுத்தாத குத்தகைதாரர்களை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப் போகவும் முடியாமல், அவர்களை வெளியேற்றவும் முடியாமல் மோரடோரியம் (Moratorium) என்ற பாதுகாப்புச் சட்டமும் அமலில் இருந்தபடியால், 1392 ஆம் பசலி முடிய வரவேண்டிய குத்தகைப் பாக்கி வேறு ரூ. 31.5 கோடியாக உயர்ந்துவிட்டது. இதனால் தஞ்சையிலும் திருநெல்வேலியிலும் ஆலயப் பணியாளர்கள் 930 பேருக்குச் சம்பள பாக்கி வழங்கப்படாமல், அவர்கள் பரிதவித்த நிலையையும் அறநிலையத்துறை பரிவுடன் பரிசீலித்து, 930 பேருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள பாக்கி ரூ. 5,64,856 மற்றும் 41 காசுகளையும் இவ்வேழு கோடி ரூபாய்த் திட்டத்தின் துணை கொண்டு ஆலயப்பணியாயர்களின் சம்பள பாக்கியையும் 20.07.1985ல் தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுச் செயல் முறைத் தொடக்க விழாவில் தீர்த்து வைத்ததும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த மோரடோரியம் என்ற பாதுகாப்புச் சட்டமும், 1985 ஜனவரி மாதத்தோடு காலாவதியாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பல ஆண்டுகளாகக் குத்தகை தாரர்கள் சேர்த்து வைத்துள்ள குத்தகை பாக்கிகளை 1987 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவதற்குள் ஐந்து தவணைகளில் பாக்கியைச் செலுத்தவில்லையானால், உடனடியாக அத்தகையவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அறநிலையத் துறை, வழிவகை செய்து, நிலுவைகளை வேகமாக வசூலிக்க ஆவன செய்திருப்பது குறிப்பிடத்தக்கது ஆலய நிர்வாக அதிகாரிகள், உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் ஒவ்வொருவர்க்கும் நிலுவைகளை வசூலிக்க குறியீடு நிர்ணயம் செய்து, அறநிலையத்துறை வேகமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை எண்ணற்ற சமுதாய நலப்பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்தி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது அறநிலையத்துறையின் கீழ் தற்போது கல்வி நிறுவனங்கள் 44. பெண்கள் தொழில் நுட்பப் பயிற்சி பள்ளி 1, அன்பு இல்லங்கள் 35, மருத்துவமனைகள் 20, நூலகங்கள் 201 ஆகியவை இயங்கிவருகின்றன. இவை மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கு அறநிலையத்துறை மேலும் பல பணிகளை நிகழ்த்தி வருகின்றது அவற்றில் ஒன்றுதான் சுதந்திர திருநாளில் ஆண்டுதோறும் நடத்தப்படும் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்சிகள்.

“எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள்” என்று பாடிய மகாகவி பாரதியார், “சாதிகள் இல்லையடி பாப்பா” என சாற்றினார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலரும், “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று அறிவுறுத்தியிருக்கிறார். உலக பொதுமறை தந்த

*திருவள்ளுவரும் “ பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும்” என்று பாடியிருக்கிறார். இறைவன் ஆலயத்தில் அரிசனரும் அந்தணரும் சரிநிகர் சமமானவர்களே என்பதை வற்புறுத்தும் பொருட்டு 1981 ஆம் ஆண்டு முதல், ஆகஸ்ட் 15ம் நாளில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சிகள் அறநிலையத்துறையால் சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன. 1981 ஆம் ஆண்டு 3847 ஆலயங்களில் 7 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து, ரூ. 8.59 லட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1982 ஆம் ஆண்டு 3900 திருக்கோவில்களில் 9 லட்சம் மக்கள் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 10.76 லட்சம் செலவில் நடத்தப்பட்டது. 1984 ஆம் ஆண்டு 2700 திருக்கோயில்களில் 7 லட்சம் கலந்து கொண்ட பொது விருந்து ரூ. 13 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளது. 1985ம் ஆண்டு 2600 திருக்கோயில்களில் ரூ. 9,14,000 செலவில் பொது விருந்து நடத்தப்பட்டுள்ளது. 1983ம் ஆண்டு மட்டும் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அனுதாபம் தெரிவித்து விருந்து நிகழ்ச்சி நடத்தப்படவில்லை.*

*பொது விருந்து திட்டம் தொடங்கப்பட்ட அதே 1981 ஆம் ஆண்டு முதல் வசதி மிக்க ஆலயங்களில் அறநிலையத் துறையால் தொடங்கி நடத்தப்படுவதே சிறப்பு திருமணங்கள் எனும் இச் சீரிய திட்டமாகும். ஏழைகள் பலர் வயது வந்த தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து பார்க்க முடியாமல் அதற்கு குறைந்த பட்சச் செலவாகத் தேவைப்படும் ஒரு ஆயிரம் ரூபாய் கூட இல்லாமல் வாடி நிற்கிறார்கள். எண்ணற்ற விதவைத் தாய்மார்கள், வயது முதிர்ந்த வறுமையில் வாடும் பெற்றோர்கள் படும் துன்பத்தைத் துடைக்க, அறநிலையத்துறை கண்ட திட்டமே சிறப்புத் திருமணத்திட்டமாகும். மாண்புமிகு அமைச்சர்கள், ஆன்மீகத் தலைவர்கள் சட்டமன்ற, நாடாளுமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மடாதி*

பதிகள், பொது மக்கள் ஆகிய அனைவரும் ஒரு சேர வாழ்ந்த இத்தகு திருமணங்கள் நடத்தப்பெறுவதால், இவற்றை இலவசத் திருமணங்கள் என்று கூறாமல், சிறப்புத் திருமணங்கள் என்றே குறிப்பிடல் வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். 1981 ஆம் ஆண்டில் 220, 1982ல் 622, 1983ல் 162, 1984ல் 112, 1985ல் 109 ஆக இதுவரை மொத்தம் 1245 திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் பயன்பெற்றவர்கள் 979 ஜோடி, ஆதிதிராவிடர் மணமக்கள், 209 ஜோடி பிற்பட்ட மணமக்கள், 44 ஜோடி கலப்புத் திருமணங்கள் மணமக்கள் 13 ஜோடி இதர வகுப்பைச் சேர்ந்த மணமக்கள் ஆவர். ஒரு திருமணத்திற்கு சுமார் ரூ. 750 லிருந்து ரூ. 1,000 வரை அந்தந்தத் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. இதுவரை இத்திருமணங்களுக்காக ரூ. 9,61,200 வசதிமிக்க அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் போன்ற ஆலயங்களில் இருந்து செலவிடப்பட்டன.

இவ்வாறு வசதியற்றவர்க்குச் சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுவதுடன் வசதி குறைந்தவர்கள் திருமணங்கள் திருமணங்கள் நடத்திக் கொள்ளத் திருமண மண்டபங்கள் தேவைப்படுவதையும் அறநிலையத்துறை உணர்ந்து, இதுவரை 109 திருமண மண்டபங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அறநிலையத் துறையின் திருமண மண்டபங்களே, நடுத்தர, கடைத்தர மக்களுக்கு வரப்பிரசாதம் போல் குறைந்த வாடகையில் கிடைக்கப் பயன்பட்டு வருகின்றன.

தல தரிசனம் காண வேண்டிப் புறப்பட்டு வரும் தமிழக மக்களுக்கும் இதர மாநில மக்களுக்கும் தங்குமிட வசதிகளைச் செய்து தருவதிலும் சிறப்பிடம் வகிக்கிறது. தம்முடைய அறநிலையத்துறை, திருக்கோயில்களில்

*இதுவரை 58 ஒய்வு விடுதிகளும், 231 குடில்களும், 951 அறைகளும் யாத்திரிகர்களும் வசதிகளுக்காக அமைத்திருக் கின்றது. மேலும் திருச்செந்தூர் ஜெயந்திநாதர் விடுதியில் முதல் மாடி, இரண்டாவது மாடி கட்ட ரூ. 18.36 இலட்சம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் 24 அறைகள் கொண்ட ஒய்வு விடுதி கட்ட ரூ. 5.60 இலட்சமும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் இப்போதுள்ள தங்கும் வசதிகளுடன் மேலும் 40 ஒற்றை அறைகள் கட்ட ரூ. 17 இலட்சமும் அனுமதிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தனியார் தங்குமிடங்களில் வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் மிக அதிகமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அறநிலையத்துறை அமைந்துள்ள தங்குமிடங்களில் வசதிகள் மிகக் குறைவான கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன.*

*பழமையான கோயில்களைப் பழுது பார்ப்பது, திருக்குளங்களைச் சீரமைப்பது, தேர்களைச் செப்பனிடு வது போன்ற பல கோயில் திருப்பணிகளையும் அற நிலையத் துறை முனைப்போடு செயல்படுத்தி வருகின்றது. அரசாங்கமும் இப்பணிகளில் ஆர்வம் கொண்டு ஆண்டு தோறும் மானியம் வழங்கி வருகின்றது.*

*1981—82ம் ஆண்டிற்கு ரூ.12 இலட்சமும்,*

*1982—83ம் ஆண்டிற்கு ரூ.20 இலட்சமும்,*

*1983—84ம் ஆண்டிற்கு ரூ. 23 இலட்சமும்,*

*1984—85ம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சமும்*

*கோயில் திருப்பணிக்காக அரசு மானியம் வழங்கப் பட்டிருக்கின்றன. இவ்வரசு மானியங்களோடு அறநிலையத்துறையும் ஆலய நிதியிலிருந்து பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்து திருப்பணிகள் செய்யப்பட்டன.*

உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாக 13 நிலைகளுடன் அமைக்கப்பட்டு வரும் திருவரங்கம் கோபுரத்தில் 13வது நிலை கோபுரக்கட்டுமானப் பணிக்கு ரூ. 7 இலட்சம் தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டு திருப்பணி நடந்து வருகின்றது. அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி ஆலய இராசகோபுரத் திருப்பணி 90 இலட்ச ரூபாய், அருள்மிகு சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் திருப்பணி 90 இலட்ச ரூபாய், அருள்மிகு சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் திருப்பணி 38 இலட்ச ரூபாய், அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் கோயில் திருப்பணி 8 இலட்ச ரூபாய், சேலம் கோட்டை மாரியம்மன் ஆலயத் திருப்பணி 17 இலட்ச ரூபாய், ஸ்ரீரங்கம் ரெங்கநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ஒரு கோடி ரூபாய், திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி ரூ. 11.57 இலட்ச ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு மலை மீது அமைந் துள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வர் திருக்கோயிலுக்கு வாகனங்கள் மூலம் மலை மீது பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு வசதியாக மலைப்பாதை ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க, மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்படி மலைப்பாதை அமைக்கும் வேலைத் துரிதமாகச் செய்யப்பட்டது. அரசு மானியமாக ரூ. 5 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது. இதுபோன்ற பல திருப்பணிகளும் அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்று வருகின்ற எண்ணற்ற திருப்பணிகளில் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

திருக்கோயில்களில் உள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் விலை மதிப்பற்றவை. அவற்றைப் பாதுகாக்க தக்க பாதுகாப்புப் பணிகளையும் அறநிலையத்துறை சிறப்பாகச் செய்து வருகின்றது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 2000 உலோகத்திருமேனிகள் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க

அருள்மிகு திருவாரூர் தியாகராஜசுவாமி ஆலயத்தில் ரூ.12,90,000 மதிப்பீட்டில் ஒரு சிலைபாதுகாப்புக் கூடம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது. வங்கி லாக்கர் போன்ற பாதுகாப்பான கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட்டு அறைகளும் உறுதியான தளமும் உள்ள பலமான கட்டடம் கட்டப்பட்டது. திருநெல்வேலி மற்றும் திருவானைக்காவல் ஆகிய இரு இடங்களிலும் இதே போன்று பாதுகாப்பான சிலை பாதுகாப்புக் கூடம் ஏற்படுத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அரசு மான்யம் வழங்கப்பட்டு வேலை முடிக்கப்பட்டது.

இவ்வாறு அறநிலையத்துறையின் சீரிய முயற்சியால், எண்ணற்ற திருப்பணிகள் நடந்து முடிந்தன. நாளும் தமிழ் இன்னிசையால் சமயம் வளர்த்த ஞானசம்பந்தர் வாழ்ந்த நாட்டில் தற்போது நாளும் கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. 1981ல் 88 கோயில்களிலும், 1982ல் 69 கோயில்களிலும், 1983ல் 114 கோயில்களிலும், 1984ல் 84 கோயில்களிலும், 1985ல் 117 கோயில்களிலும் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் திருப்பணிகள் முடிந்து கும்பாபிஷேகங்கள் நடந்தேறியுள்ளன. கடந்த 8 ஆண்டு காலத்தில் மட்டும் ஏழு தங்கத் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கரன் கோயில், சங்கர நாராயனார் ஆலயத்தில் அறநிலையத்துறையின் பத்தாவது தங்கத் திருத்தேர் 15.12.1985ல் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

ஆலயங்கள் வளர்ந்தால் மட்டும் போதாது, ஆலயப் பணியாளர்கள் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்தால் மட்டும் போதாது. பல கோடி மக்களை நெறிப்படுத்த, ஆலயங்கள் தூய்மையுடன் பராமரிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். திருநாவுக்கரசர் பெருமான் உழவாரத் திருப்பணி புரிந்து, ஆலயத் தூய்மையைப் பராமரித்த அருங்குணச் செல்வர் ஆவார். அவர்தம்

வழியில் ஆலயங்களில் தூய்மையைப் பராமரிக்க அண்மையில் அறநிலையத்துறை மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வர் ஆலயத்தில் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியைத் தொடங்கி வைத்து, அத்தகைய பணியில் அனைத்து ஆலயங்களும் ஈடுபட ஆவன செய்துவருகிறது.

## கோவில்களுக்கு வைப்பு நிதித் திட்டம்

வருவாய் இல்லாத ஆலயங்களின் வழிபாட்டுச் செலவிற்காக ஐந்து கோடி ரூபாயும், கிராமப்புற கோவில்களின் திருப்பணிக்காக ரூ. ஒரு கோடியும், ஆலய பணியாளர் மருத்துவம் மற்றும் அவர்தம் பிள்ளைகள் கல்வி நிதிக்காக ரூபாய் ஒரு கோடியும் ஆக மொத்தம் 7 கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டது. இத்திட்டம் வைப்பு நிதித்திட்டம் எனவும், ஆலய மேம்பாட்டுத் திட்டம் என்றும் அழைக்கப்பட்டது.

சமயத் தலைவர்கள் அனைவரும் இந்த ஏழு கோடி ரூபாய் வைப்பு நிதித் திட்டத்தை மிகவும் போற்றி வரவேற்றனர். இத்திட்டத்தின் மூலம் வருவாய் அற்ற ஆலயங்களின் வருடாந்திர பூஜை செலவிற்காக ரூ. 5 ஆயிரம் வழங்கப்பட்டது. அதன்படி ஆயிரத்து 335 ஆலயங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றன.

புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பாக தமிழகத்தில் பழனி அருள்மிகு தண்டாயுத பாணி திருக்கோவில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் திருக்கோவில் ஆகியவற்றில் மட்டுமே திருத்தேர்கள் இருந்தன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக பொறுப்பேற்ற 1977ம் ஆண்டிற்குப் பிறகு, சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோவில், சமயபுரம்

*அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில், சென்னை அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோவில், சென்னை அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோவில், சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசாமி திருக்கோவில் ஆகியவற்றில் தங்கத்தேர் உருவாக்கப்பட்டு அந்தந்த ஆலயங்களில் ஒப்படைக்கப்பட்டன.*

*இவை தவிர ஏராளமான கோவில் ஆலயங்களில் திருக்குள பணிகளும் சிறப்பாக செய்யப்பட்டன.*

*பழனியில் படிக்கட்டில் ஏறிச் சென்று இறைவனை தரிசிக்க முடியாத பக்தர்களின் பயன்பாட்டுக்காக மேலும் இரண்டு இழுவை ரயில்கள் விடப்பட்டன. பல கோவில் களில் ஓடாமல் இருந்த திருத்தேர்கள், புரட்சித் தலைவர் உத்தரவின்பேரில் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் ஓடின. 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருவாரூர் தியாகராாசர் கோவில், அறுபடை வீடுகளான பழனி முருகன் கோவில், திருப்பரங்குன்றம் கோவில் ஆகிய வற்றுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டது.*

*குடமுழுக்கு நடத்தி முடிக்க நாள் குறித்து முதல்வர் எம். ஜி. ஆர் உத்தரவிட்டார்.*

*உடல் ஊனமுற்றோருக்கு மருத்துவக் கல்லூரியில் மேலும் 30 இடங்கள் ஒதுக்கப்படும் என்று அறிவிப்பு இந்த ஆண்டு வெளியிடப்பட்டது.*

## தனியாரின் கொள்ளை லாபம் ஒழிப்பு

*வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், சொந்த ஊர் அல்லது தமிழகத்தின் பிற பகுதிகளில் வீடுகள் கட்டிக்*

*கொடுக்க தனியார் கட்டுமான நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தன. இதனை தடுத்து நிறுத்தும் வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் குறித்து அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொண்டது.*

## சிறந்த முழுநீளத் திரைப்படங்களுக்கும் நாடகங்களுக்கும் பரிசுகள் வழங்கும் திட்டம்

*மூலம் முழு நீளத் திரைப்படம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ‘சிறுகுடும்பக் கோட்பாடு’ அல்லது ‘திட்டமிட்ட குடும்பக் கோட்பாடு’ ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களைத் தயாரிக்க ஊக்கமளிப்பதெனத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகக் கீழ்கண்டவாறு பரிசுகள் வழங்குவதன் மூலம் மேற்சொன்ன கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் நாடகங்கள் தயாரிக்க நாடகக் குழுக்களை ஊக்குவிப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.*

### சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுகள்

| | | |
|---|---|---|
| அ) | சிறந்த திரைப்படத்திற்கான பரிசு | ரூ. 1,00,000 |
| ஆ) | இரண்டாவது சிறந்த திரைப்படத் திற்க்கான பரிசு | ரூ. 50,000 |
| இ) | மூன்றாவது சிறந்த திரைப்படத் திற்கான பரிசு | ரூ. 25,000 |
| | மொத்தம் | ரூ. 1,75,000 |

### சிறந்த நாடங்களுக்கான பரிசுகள்

| | | |
|---|---|---|
| அ) | சிறந்த நாடகத்திற்கான பரிசு | ரூ.15,000 |

ஆ) இரண்டாவது சிறந்த நாடகத்
திற்கான பரிசு ரூ.10,000

மொத்தம் ரூ.25,000

தொடங்கி செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் 1986 ஏப்ரல் 14ல் இக்கிளையைத் தோற்றுவித்தார்கள்.

## ஏழைகளுக்கு உதவ கூட்டுறவு சங்கங்கள்

கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலமெங்கும், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் நகையீட்டின் பேரில், குடும்பச் செலவிற்காக கடன்களை வழங்கி வருகின்றன. சவரன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு 6,000 க்கு மேற்படாமல் இக்கடன்கள் வழங்கி வாங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களின் பேரில் வசூலிக்கும் வட்டி ஆண்டொன்றுக்கு 16 சதவீதமாகும். 1980—81ம் ஆண்டிலிருந்து, இக்கடன்களை வழங்கியதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

1985—86ம் ஆண்டில் துவங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 1981—82ம் ஆண்டிலிருந்து நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள சலுகை வட்டியில் அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும் இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாத்தை அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. ஆண்டு வருவாய் கிராமப்புறங்களில் 2500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும் 3,000 ரூபாய்க்கும் அதிகமாகாமல் உள்ளவர்களுக்கு நபர் ஜாமீன் பேரில்

*7,000 ரூபாய் வரையில் இவ்வகைக் கடன்கள் வழங்கப் படுகின்றன. 1981—82ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இவ்வகைக் கடன்களின் விவரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.*

| **ஆண்டு** | **வழங்கப்பட்ட கடன் (இலட்சம் ரூபாயில்)** |
|---|---|
| 1981-82 | 85.74 |
| 1982-83 | 108.00 |
| 1983-84 | 130.57 |
| 1984-85 | 135.37 |
| 1985-86 | 191.98 |

*நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு 1984—85ம் ஆண்டில் 285 கோடி ரூபாயில் கனிசமாகப் பெருகி 1985—86ம் ஆண்டில் 605 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது.*

*இன்றியமையாத பொருட்களை விற்பனை செய்ய ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை துவக்கி நடத்த 1978ம் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கென ஒதுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் 11,159 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப் பட்டன.*

*தற்போது 12596 நியாய விலைக்கடைகள் ஊரகப்பகுதி களில் நடத்தப்படுகின்றன. அவை ஊரகப்பகுதி மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தாராளமாக கிடைப்பதை உறுதி செய்யப்பட்டன.*



# மீனவர்களுக்கு பொற்காலம் மீன்பிடி துறைமுகங்கள்

**மீனவ நண்பன்**

**எம்.**ஜி.ஆரின் ஆட்சிகாலம் முழுவதும் மீனவர்களின் பொற்காலம் என்று சொன்னால் அது, மிகையல்ல. த்தான் நடித்த ஒரு திரைப்படங்களுக்கு "மீனவ நண்பன்", "படகோட்டி" என்றெல்லாம் பெயர்வைத்துக் கொண்டதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அது அவர் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடு. படகோட்டில் அவர் பாடும், "தரைமேல் பிறக்க வைத்தான், எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்" என்ற பாடல், மீனவர்களின் அன்றாட வாழ்க்கையின் அவலங்களை அவர் நன்றாக புரிந்து வைத்திருப்பதின் வெளிப்பாடு. இப்படிப்பட்ட அவரது மன உணர்வு, அவரை மீனவர்கள் மேல் தனிகவனம் செலுத்த வைத்தது. அதில் மீன்பிடித்தொழில் மேம்பட எம்.ஜி.ஆர். அத்தொழிலுக்கு செய்த சேவைகளும் மீனவர்களுக்கு அவர் செய்த நன்மைகளும் ஏராளம், ஏராளம்.

*தமிழகத்தில் சின்ன முட்டம், வாலிநோக்கம் ஆகிய இடங்களில் மீன் பிடி துறைமுக கட்டுமானப் பணிகள் 1981ம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சியில் தொடங்கப்பட்டது.*

*மேலும் பழையாறு, தொண்டி ஆகிய இடங்களில் துறைமுகங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டு, அதற்கான அனுமதியோடு மேற்கண்ட இடங்களிலும் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்பட்டது*

*இதேபோல், புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்தில் 18.50 லட்சம் செலவில் மீன்பிடி படகுகள் தங்குதுறை வசதிகள் செய்யவும் எம்.ஜி.ஆர். ஆணை பிறப்பித்திருந்தார்.*

## மீனவர்களுக்கு விசைப்படகு

*கடலோர மீனவ இளைஞர்கள் பயன்பெறும் வகையில், 1.06 கோடி செலவில் எந்திரப்படகுகளை வாங்கி மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் படகுகள் பங்கு அடிப் படையில் விநியோகிக்கும் திட்டம் இந்த ஆண்டு செயல் படுத்தப்பட்டது.*

## மீனவர்களுக்கு உதவித்தொகை

*மீன்பிடி இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணமாக நிதி வழங்கும் திட்டம் 1982ம் ஆண்டு உருவாக்கப்பட்டு செயல் வடிவம் பெற்றது. இத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வருவாய் கிடைக்கும் 9 மாதங்களிலும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்தும் மீனவர்களுக்கு அந்த பணத்தோடு தலா 90 ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்யும்.*

*இவ்வாறு சேமிக்கப்படும் பணம் ரூ. 180, முறையாக வருவாயில்லாத 3 மாதங்களுக்கும், ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும்.*

*இந்தத் தொகை மீன்துறை உதவி இயக்குநர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு வைக்கப்படும். இந்த திட்டம் மீனவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் அதில்மிகையல்ல*

## மீனவர்களுக்கு நைலான் நூல்

*மீன்பிடித்தலை பரம்பரைத் தொழிலாய் கொண்டிருக்கும் மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்கு வதற்காக மானியத்துடன் கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. இதன்படி 80 சதவீதம் கடனாகவும், 20 சதவீத மானியமாகவும் வழங்கப்பட்டது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான். 48 மாதங்களுக்குள் 40 தவணைகளாக இந்தத் தொகையை திருப்பிச் செலுத்த எம். ஜி. ஆர் அரசு ஆணை பிறப்பித்தது. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது.*

## வாரிசுகளுக்கு வேலை

*மீன்துறையில் உள்ள புதிய காலிப்பணியிடங்கள், மீன்பிடிக்கையில் உயிரிழந்த குடும்பத்தினரின் வாரிசு களுக்கு வழங்கும் திட்டமும் இந்த ஆண்டு செயல்படுத்தப் பட்டது.*



# ஈழத்தமிழர் நலன்காக்க இந்தியா இலங்கை ஒப்பந்தம்

***1987*** *புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் ஆட்சிக் காலத்தில்தான் இந்தியா — இலங்கை இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. பிரதமர் ராஜீவ்காந்தி இந்தியா சார்பில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் விளைவாக இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட்டு அமைதி நிலவியது.*

*தமிழகத்தில் 9 கோடி மரக்கன்றுகளைப் பள்ளி மாணவியர்களைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நடப்பட்டது.*

*இந்தியா சுதந்திரம் அடைந்த 40 ஆண்டான 1981ம் ஆண்டில், தமிழகத்தில் 20 இடங்களில் ரூ. ஒரு கோடி செலவில், வனத்தோட்டங்கள் அமைக்கப்பட்டது. வனத்துறை பணிகளை சிறப்பாக செய்திருப்பாக பிரதமர் ராஜீவ்காந்தி பாராட்டு தெரிவித்துள்ளார்.*

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்

*தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி பாரதியார். அவர் பாடிச்சென்ற இந்த தனி மனிதன் தனிக்குடும்பத்தின் பொருளாதார நிலையை வளப்படுத்தும் இலட்சியத்தைக் கொண்டதுதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்!*

*வறுமை கோட்டுக்கு கீழே வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வில் வளமையைத் தோற்றுவிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின்கீழ், 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதாவது 1985 மார்ச் திங்கள் முடிய 11.30,100 குடும்பங்களுக்கு உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மிஞ்சி மொத்தம் 13,96,015 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.*

*4,62,828 குடும்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதி வகுப்பினைச் சார்ந்தவர்கள் ஆகும். இந்த செய்தி சமுதாயத்தில் அடித்தளத்தினர் வளம் பெறுவதில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் அக்கறையும் ஆர்வமும் தெளிவாக புரிந்துகொள்ள முடியும்.*

*கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் 18 முதல் 35 வயது வரை கிராமப்புற இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் எண்ணற்ற கிராமப்புறத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் பலனாக தங்களுக்குத் தங்களே வேலைவாய்ப்பைத் தேட வழி கிடைத்தது. இத்திட்டத்தின் கீழ் 166102 இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு இந்தப் பயிற்சியின் அடிப்படையில் 94 ஆயிரம் பேர்கள் தக்க வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டனர். 44471 பேர்கள் ஊதிய அடிப்படையில் வேலைவாய்ப்பைப் பெற்றனர்.*

## அகதிகளுக்கு மறுவாழ்வு

*1983ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் இனக்கலவரம் மூண்டது முதல் இந்திய வம்சாவழியினர் இந்தியாவுக்குப் புகலிடம் தேடி வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் இராமேஸ்வரம் துறைமுகத்திலும் சிலர் விமானம் மூலம் திருச்சி, சென்னை, திருவனந்தபுரம் விமான நிலையங்களிலும் வந்த சேர்ந்தனர். இராமேஸ்வரத்தில் அவர்கள் வந்தவுடன் வருவாய்த்துறை அலுவலர்கள் அவர்களை வரவேற்று உடனே காப்பி, டீ, குழந்தைகளுக்கு பால் முதலியவைகளை இலவச மாக வழங்கினர். நோய் தடுப்பு ஊசியும் போடப் படுகிறது. சுங்கத்துறை அலுவலர்களின் பரிசோதனை நடந்து முடிந்தவுடன் அவர்களுக்கு இலவசச் சிற்றுண்டி, சாப்பாடு முதலியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் இராமேஸ் வரத்தில் சத்திரங்களில் தங்க வைக்கப்படு கின்றனர். பிறகு ஒன்று அல்லது இரண்டு நாட்களில் இராமேஸ்வரத்திலிருந்து இரயில் மூலம் மண்டபம் முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.*

*முகாம்களில் சேர்க்கப்படும் எல்லா அகதி குடும்பங் களுக்கும் கீழ்கண்ட நிவார்ண உதவிகள் வழங்கப் படுகின்றன.*

*(அ) இலவச தங்குமிடம், மின்வசதி, குடிநீர் வசதி.*

*(ஆ) குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து குடும்ப பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.110 முதல் ரூ.357.50 வரை.*

*(இ) கிலோ ஒன்றுக்கு 57 காசு என்ற முறையில் மலிவு விலையில் அரிசி வழங்கல்.*

*(ஈ) குடும்பத்திலுள்ள எல்லா நபர்களுக்கும் ஒரு ஜதை உடுப்புகள்.*

(உ) பெரியவர்கள் எல்லோருக்கும் பாய், போர்வை வழங்கல்.

(ஊ) சமையல் பாத்திரங்கள், உடைகள் சராசரி மதிப்பு ரூ.620 வரையில் கொடுக்கப்படுகின்றன.

24.7.1983 முதல் இந்தியாவிற்கு வரும் ஆதரவற்ற அகதிகள் எல்லோருக்கும் இந்த உதவிகள் வழங்க மைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கான செலவுத் தொகை முழுவதையும் மைய அரசே ஏற்கிறது. இதுவரை இலங்கையி லிருந்து இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியா வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 22.5.86 நிலவரப்படி,

1. மொத்த அகதிகள் வந்தவர்கள் 1,26,277
2. அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் 32,142
3. வெளியிடங்களில் தங்கியுள்ளவர்கள் 94,136

வன்செயலில் பாதிக்கப்பட்டு வரும் இலங்கை பிரஜா உரிமை பெற்ற இந்த அகதிகள் இலங்கையில் நிலைமை சீரடைந்தவுந்தவுடன் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதால் இவர்களில் திக்கற்றவர்களை மட்டும் அகதிகள் முகாம்களில் சேர்த்துக் கொண்டு பத்தி (2) கூறப்பட்ட நிவாரண உதவிகள் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றன. 5.2.85 முதல் இலங்கையிலிருந்து படகுகள் மூலம் அகதிகளின் வருகை அதிகரித்துள்ளதால் மாவட்ட அளவிலும் அகதிகள் மையங்கள் ஏற்படுத்தப் பட்டு நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மண்டபம் முகாம், கொட்டப்பட்டு முகாம் ஆகிய இரண்டு இடைதங்கல் முகாம்களுடன் மாவட்ட அளவிலும் சேர்த்து சுமார் 170 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு இதுவரை 8,482 குடும்பங்கள் அடங்கிய 32,142 நபர்கள் குடியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

*அகதிகளுக்கு வீடுகள் கட்டும் பணி இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்தில் உள்ள இடைத்தங்கல் முகாம் இந்தியா இலங்கை ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் இந்திய வம்சா வழியினர் தற்காலிகமாக சிறிது தங்கியிருக்க உதவும் நோக்கத்துடன் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட முகாம் பெருமளவில் அகதிகள் வந்ததால் இந்த முகாமில் இட நெருக்கடி ஏற்பட்டு கூடுதல் இடவசதித் தேவைகளைச் சமாளிப்பதற்கு, கீழ்கண்ட விவரப்படி கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*(அ) மண்டபம் முகாமில் ரூ. 9.065 இலட்சம் செலவில் புதிதாக 200 வீடுகள் மாநில பொதப்பணித்துறையால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*

*(ஆ) மண்டபம் முகாமிலேயே மேலும் கூடுதலாக ரூ. 92.50 இலட்சம் செலவில் 500 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.*

*(இ) இதேபோல் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாகவே மேலும் 700 புதிய வீடுகள் ரூ. 112 இலட்சம் செலவில் மண்டபம் முகாமில் கட்டப்பட்டது.*

*(ஈ) மண்டபம் முகாமில் ஏற்கெனவே உள்ள 141 பழைய வீடுகள் பழுதுபார்க்க ரூ. 8 இலட்சமும், 150 பழைய வீடுகளைப் பழுது பார்க்க ரூ. 5.30 இலட்சமும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி முடிவடைந்து விட்டது.*

*(உ) இதே போல் திருச்சி மாவட்டத்தில் உள்ள கொட்டப் பட்ட அகதிகள் முகாமிலும் ரூ. 6. 23 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி*

*வழங்கப்பட்டு, கட்டுமானப்பணி 31—8—1985ல் முடிந்தது. இது பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டது. இவற்றில் அகதிகள் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுவிட்டன.*

*(ஊ) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகில் மாப்பிள்ளை ஊரணி என்னும் இடத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 100 புதிய வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்தது. மாநிலப் பொதுப்பணித் துறையினரால் வீடுகள் முடிக்கப்பட்டு அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.*

*(எ) மதுரை மாவட்டம் விளாங்குடியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டிய 792 வீடுகள் இலங்கை அகதிகளின் உபயோகத்திற்கு அரசு விலைக்கு வாங்க உத்தரவிடப்பட்டது. இந்த வீடுகளைக் கிரயம் பெற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் நடவடிக்கை யுள்ளது.*

*(ஏ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யம், நாகப்பட்டினம், பிள்ளையார்பட்டி கிராமங்களில் 1000 குடிசைகள் அமைத்து இலங்கை அகதிகளைக் குடியமர்த்த ரூ. 10 இலட்சம் அரசினரால் வழங்கப் பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*6. அரசு செயல்பாட்டுடன் ஒத்துழைத்து கூடுதல் உதவிகள் வழங்க சில சமூக சேவை நிறுவனங்கள் முன் வந்தன.*

*(அ) சென்னையில் உள்ள கிறிஸ்துவ திருச்சபையின் தொழில் பயிற்சிப்பிரிவு, மண்டபம் மகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு தச்சு வேலை, மின்சாரம், தையல் போன்ற பயிற்சிகள் அளித்தது.*

*(ஆ) மைத்திரி என்ற தனியார் நிறுவனம், மண்டபம் முகாமில் பள்ளி ஒன்று நடத்தி வந்தது.*

*(இ) இராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமம், மண்டபம் முகாமில் உள்ள அகதி குழந்தைகளுக்கு காலையில் சிற்றுண்டி, பிரசாதம் போன்ற உணவுகள் வழங்குகிறது. திருச்சி கொட்டப்பட்டு முகாமில் அகதிகள் குழந்தைகளுக்குத் தனியாகப் பள்ளி ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.*

*மண்டபம் முகாமில் அகதி குழந்தைகளுக்கு விளை யாட்டுப் பொருள்கள் வழங்கி தேக ஆரோக்கியத்தை வளர்க்கப்பாடுபட்டு வருகிறது. மேற்கண்ட சமூக சேவை சங்கங்களைத் தவிர, தொண்டு இயக்கங்களும் மாவட்ட அளவிலுள்ள முகாம்களின் குடும்பங்களுக்கு உடைகள், உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்குகின்றன.*

*(உ) பம்பாய் மற்றும் சென்னை நூற்பாலைக் குழுவின் மூலம் அகதிக் குடும்பங்களில் பெரியோர்களுக்கு 30,190 ஆடைகள் வழங்கப்பட்டன.*

*(7) அகதிகளுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகளுக்கும் மற்றும் அவர்கள் தங்குவதற்காக தற்காலிக கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆகும் செலவு மழுவதையும் மைய அரசு ஏற்கிறது. 24.7.83 முதல் 1986 மார்ச் மாதம் வரை நிவாரண உதவிகளுக்காக ரூ. 326.81 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.683.47 இலட்சம் மாநில அரசு செலவு செய்துள்ளது. இதற்காக மைய அரசு கொடுத்துள்ள தொகை ரூ. 651.36 இலட்சமாகும்.*



# ஊரக வேலைவாய்ப்புத்திட்டம்

**தே**சிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் கிராமப்புறங் களில் வேலைவாய்ப்புகளை கூடுதலாக உருவாக்கி, வருவாயை அதிகரித்து, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, நாட்டின் நல்ல கிராமப்புற பொருளாதார வளர்ச்சிக்காக வேலைகள் செய்து முடிப்பதற்காள நோக்கங்களை கொண்டது இத்திட்டம்.

*1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழ் நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றது, இந்த திட்டம். இத்திட்டத்தின் கீழ், கடந்த மார்ச் மாதம் வரை 1,73,265 வேலைகள் திறம்படச் செய்து முடிக்கப் பட்டன. ஏறத்தாழ 68 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்குத் தமிழகக் கிராமங்களில் பல்வேறு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பலசாலைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் 164 லட்சம்.*

*இத்திட்டத்தின் கீழ்ப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ. 6.15*

*கூலியாகவும் வழங்கப்பட்டது. 1.12.1985 முதல் 2 கிலோ கோதுமை, ஒரு கிலோ அரிசி வழங்கப்பட்டது. அத்துடன் ரூ. 3.15 பணமாகவும் அளிக்கப்பட்டது.*

மாவட்டவாரியாக விவரம்
மாவட்டங்கள் -

| | |
|---|---|
| செங்கல்பட்டு பயன்பெற்றவர்கள் - | 88,096 பேர்கள் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - | 2,088 |
| முடிக்கப்பட்ட வேலைகள் - | 1,243 |
| முடிக்கப்பட்டுள்ள வேலையின் மதிப்பு - | 28.35 இலட்சம் ரூபாய் |
| வழங்கப்பட்ட அரிசி, மெட்ரிக் டன்னில் - | 1,719 |
| வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - | ரூ. 27.51 இலட்சம் |
| உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் - | 4.17 இலட்சம் |
| வட ஆற்காடு பயன்பெற்றவர்கள் - | 30,005 பேர்கள் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - | 1,498 |
| முடிக்கப்பட்ட வேலைகள் - | 238 |
| முடிக்கப்பட்டுள்ள வேலையின் மதிப்பு - | ரூ.33 இலட்சம் |
| வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் - | 1,825 |
| வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - | ரூ. 29.20 இலட்சம் |

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் - 2.14 இலட்சம்

தென் ஆற்காடு பயன்பெற்றவர்கள் - 61,198 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 1,700

முடிக்கப்பட்ட வேலைகள் - 913

முடிந்துள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 23.90 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் - 1,269

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ. 19.3 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் - 3.68 இலட்சம்

சேலம் மாவட்டம் பயன்பெற்றவர்கள்-39.309 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 2,558

முடிக்கப்பட்ட வேலைகள் - 502

முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு - ரூ. 24.16 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் - 1,321

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ.19.81 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் - 3.71 இலட்சம்

தருமபுரி பயன்பெற்றவர்கள் - 2,11,455 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 2,688

முடிக்கப்பட்ட வேலைகள் - 1,903

முடித்துள்ள வேலையின் மதிப்பு - ரூ. 21.57 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 1,136

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ.29.32 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாட்கள் - 3.82 இலட்சம்

கோயம்புத்தூர் பயன்பெற்றவர்கள் - 10,564 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 1,345

முடிக்கப்பட்ட வேலைகள் - 105

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 9.52 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 299

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 4.49 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாடகள் - 150 இலட்சம்

நீலகிரி பயன்பெற்றவர்கள் - 1,791 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 674

முடிக்கப்பட்ட வேலைகள் - 116

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 1.35 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 143

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 2.27 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாட்கள்- 0.13 இலட்சம்

திருச்சிராப்பள்ளி பயன்பெற்றவர்கள் -3,01,675 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 5,711

முடிக்கப்பட்ட வேலைகள் - 4,112

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 69.74 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 4,318

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 69.8 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் - 12.36
நாட்கள் இலட்சம்

மதுரை பயன்பெற்றவர்கள் - 71,416 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 4,272

முடிக்கப்பட்ட வேலைகள் - 1,721

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 70 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 3,900

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 59.50 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாட்கள் - 8.73 இலட்சம்

புதுக்கோட்டை பயன்பெற்றவர்கள் - 65,713 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 989

முடிக்கப்பட்ட வேலைகள் - 384

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 12.68 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 800

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் - 2.14 இலட்சம்

இராமநாதபுரம் பயன்பெற்றவர்கள்- 1,44,748 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 3,587

முடிக்கப்பட்ட வேலைகள் - 1,043

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 48.15 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 3,210

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 48.15 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாட்கள்- 8. 45 இலட்சம்

| | |
|---|---|
| பெரியார் மாவட்டம்<br>பயன்பெற்றவர்கள்- | 7,349 பேர்கள் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - | 625 |
| முடிக்கப்பட்ட வேலைகள் - | 307 |
| முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - | ரூ. 6.44<br>இலட்சம் |
| வழங்கப்பட்ட அரிசியின் அளவு,<br>மெட்ரிக் டன்னில் - | 160 |
| வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - | ரூ. 2.40 இலட்சம் |
| உருவாக்கப்பட்ட மனித<br>உழைப்பின் நாட்கள் - | 38,000 |
| தஞ்சாவூர் பயன்பெற்றவர்கள் - | 2,88,000 பேர்கள் |
| எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - | 5,343 |
| முடிக்கப்பட்ட வேலைகள் - | 4,210 |
| முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - | ரூ. 88.28<br>இலட்சம் |
| வழங்கப்பட்ட அரிசியின் அளவு,<br>மெட்ரிக் டன்னில் - | 5,346 |
| வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - | ரூ. 80.19<br>இலட்சம் |
| உருவாக்கப்பட்ட மனித<br>உழைப்பின் நாட்கள்- | 14.39<br>இலட்சம் |

திருநெல்வேலி பயன்பெற்றவர்கள் - 15,500 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 3,585

முடிக்கப்பட்ட வேலைகள் - 553

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 47.98 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 2,615

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 39.22 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின்
நாட்கள்- 7. 28 இலட்சம்

கன்னியாகுமரி பயன்பெற்றவர்கள் - 7,718 பேர்கள்

எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் - 870

முடிக்கப்பட்ட வேலைகள் - 462

முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு - ரூ. 9.78 இலட்சம்

வழங்கப்பட்ட அரிசியின் அளவு,
மெட்ரிக் டன்னில் - 269

வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு - ரூ. 3.86 இலட்சம்

உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள்-99,000

*மொத்தம் 13,49,432 பேர்களுக்கு வேலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதுபோக, எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 37,973; முடிந்திருக்கும் வேலைகள் 17,242; முடித்துவிடும் வேலைகளின் மொத்த மதிப்பு 492.90*

*இலட்சம் ரூபாய் மெட்ரிக் டன் 283.30; இலட்சத்தில் 433.93; ஆட்களின் உழைப்பு 73.88 நாட்கள்.*

*1977—1978 நிதி ஒதுக்கீடு ரூ. 400 இலட்சம், அரசு ஆணையிட்டத் தொகை ரூ. 717.30 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 3,712, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,888, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 14,590, செலவழித்த தொகை ரூ.675.69 இலட்சம்.*

*1978—1979 நிதி ஒதுக்கீடு ரூ. 600 இலட்சம், அரசு ஆணையிட்டத் தொகை, ரூ. 1,316.87 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 1,921, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 1,404, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 7,440, செலவழித்த தொகை ரூ.860.30 இலட்சம்.*

*1979—1980 நிதி ஒதுக்கீடு ரூ.1,200 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூ.600 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 900, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 282, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 850, செலவழித்த தொகை ரூ.317.61 இலட்சம்.*

## நிலமற்றோர் வேலைவாய்ப்புத்திட்டம்

*நிலமற்ற ஏழை கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் திட்டம்தான் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம். நிலமற்றவர்களின் குடும்பத்தில் ஒரு நபருக்கு ஓராண்டில் குறைந்தபட்சம் 100 நாட்களாவது வேலைவாய்ப்பு அளிப்பதைக் குறிக்கோளாக கொண்டது இத்திட்டம். ஒரு ஆண்டில் ஏறத்தாள ரூ.57 கோடியே 25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தின் கீழ் 1984—85ல் 298.16 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது, இந்த இலக்கையும் மிஞ்சி எம்.ஜி.ஆர். அரசு 314.43 லட்சம் மனித உழைப்பு நாட்களை உருவாக்கி மத்திய அரசின் பாராட்டைப் பெற்றது.*

## கிராமங்களுக்கு வானொலி, தொலைக்காட்சி

*சமூகக் கல்வி கிராம மக்களின் அறிவாற்றலைப் பெருக்கவும் வளர்ந்துவரும் கிராம சமுதாயத்தில் பொது அறிவினைப் பெருக்கவும் மன மகிழ்ச்சி அளிக்கவும் கிராம சமுதாய வானொலிகள். தொலைக்காட்சிப் பெட்டிகளும். செயல்படுகின்றன. எல்லா கிராமங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர், அவர்களின் அறிவிப்பு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டது.*

*இவ்வாராக ஊரக வளர்ச்சிப் பணியில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர் அவர்களின் அரசு முத்திரை பதித்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984—85 ஆம் ஆண்டில் 44 பேரூராட்சிகளிலும் மற்றும் கன்னியாகுமரி நகரியத்தில் மூன்றாம் கட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.*

*ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூ. 2.92 இலட்சம் வீதம் ரூ.131.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.*

## குடிநீர்

*மூன்றாம் கட்டத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 19 பாதுகாக்கப்பட்ட குடிநீர்ப் பணிகளும் பேரூராட்சிகள் மூலம் 75 பணிகளும் நிறைவேற்றப் பட்டுள்ளன. 358*

இணைப்புச் சாலை பணிகளும்,92 சிறுபாலங்கள் கட்டும் பணியும் நடைபெற்றது. கழிவுநீர் வடிகால்கள் (சாக்கடைகள்) 137 பணிகளும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்த மயானத்திற்குச் செல்லும் பாதைப் பணிகள் 5ம், சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைத்துறை பணிகள் 2ம், செய்யப்பட்டுள்ளன.

இவ்வாராக 689 பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்காக அரசு மானியம் 119.81 லட்சம் செலவிடப்பட்டது.

## பேரூராட்சிக்கு நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், திட்ட அலுவலகம் மூலம் செலவு செய்யப்படும் தேசீய வேலைவாய்ப்புத் திட்ட நிதியில் 15 சதவீதம் பேரூராட்சிப் பகுதிகளுக்கென்று ஒதுக்கீடு செய்து, அங்கு ஆக்கப்பணிகள் நடைபெற்றன.

## வேலைவாய்ப்பு திட்டம் விரிவு

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985—86ம் ஆண்டு தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் கீழ்கண்ட பேரூராட்சி களுக்கு விரிவாக்கப்பட்டது.

கொட்டாரம் பேரூராட்சி — (அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்) கணபதிபுரம் — (ராஜாக்க மங்கலம் ஒன்றியம்) மண்டைக்காடு — (குலிந்தங்கோடு ஒன்றியம்) முளகுமூடு — (தக்கலை ஒன்றியம்) பேச்சிப்பாறை — (திருவட்டார் ஒன்றியம்) நல்லூர் — (மேல்புறம் ஒன்றியம்)

## அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள்!

இத்திட்டத்தின் கீழ் சொந்த அலுவலக் கட்டடம் இல்லாத மேற்கண்ட ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு அலுவலக கட்டடமும். மேலும் சமூக நலக் காடுகள்

*திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள். நாற்றங்கால்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டது. இம்மாவட்டத்திற்கு இந்த திட்டத்துக்காக அரசு ரூ. 11 இலட்சம் செலவிட்டது.*

*மேலே கண்ட 7 பேரூராட்சிகளிலும் குளக்கரை. பாதை மற்றும் பேரூராட்சி புறம்போக்கு நிலங்களில் சமூகநலக்காடுகள் வளர்க்க 133,25 எக்டேர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ. 215250 ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*மேற்படி தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிப் பகுதிகளில் சமூக நலக்காடுகள் திட்டத்தில் 13454 மனித வேலை நாட்கள் கொடுக்கப்பட்டது. மேலும் பேரூராட்சிகளில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படுவதன் மூலம் 1985=86ல் 50 ஆயிரம் மனித வேலை நாட்கள் கொடுக்கப்பட்டது.*

## ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

*ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1985—86 ஆண்டுக்கு பூதப்பாண்டி பேரூராட்சியில் ரூ.20 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் செய்யப் பட்டன. சந்தை விரிவாக்கம் கடைகள் கட்டி பேரூந்து நிலையம் அமைத்துக்*

## வடஆற்காடு மாவட்டத்தில்<br>கூட்டுறவு துறையில் தன்னிகரற்ற பணி

## விவசாயிகளுக்கு கடன்

*வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி கடந்த 68 ஆண்டுகளாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் கடன் தேவைகளையும் பூர்த்தி செய்து உழவுக்கும் தொழிலுக்கும் சிறப்பாக உதவிசெய்து, தன்னிகரற்ற பணியினை ஆற்றி வந்தது.*

*வட ஆற்காடு மாவட்டத்தில் 43 கிளைகள் உள்ளன. 35528 விவசாயிகளுக்கு 1.4.85 முதல் 15.10.85 முடிய 6 மாதக் காலத்தில் குறுகிய காலக் கடனாக மட்டும் 704.97 இலட்சம் வழங்கியுள்ளது. சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் விவசாய வேலையற்ற நாட்களில் அவர்களது வருமானத்தைப் பெருக்கிகொள்ளும் வகையில் விவசாயத்துடன் இணைந்த உப தொழில்களான ஆடு வளர்த்தல், பால் உற்பத்தி போன்ற தொழில்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசு மானியத்துடன் கடன்கள் வழங்கப்பட்டன.*

*தேசிய பெருக்க நிதியுதவித் திட்டத்தின்கீழ் 1983 ஆம் ஆண்டு முதல் கடன் வழங்கப்பட்டன, இதன்மூலம் புதிய கிணறு வெட்டுதல், கிணறு ஆழப்படுத்துதல். சுற்றுச்சுவர் கட்டுதல், பம்புசெட் அமைத்தல் போன்ற வேலைகளுக்கு கடன் வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட கடன்களில் அக்டோபர் 1985ல் நிலுவை ரூ. 121.09 இலட்சமாகும்,*

*அரசின் கொள்கைக்கேற்ப பணம் தேவைப்படும் விவசாயிகள், கிராமியத் தொழில் கைவினைஞர்களுக்கு நகையீட்டின் பேரில் 4161 உறுப்பினர்களுக்கு ரூ. 78.96 இலட்சங்கள் மைய வங்கிக் கிளைகள் மூலமாகவும் 10140 உறுப்பினர்களுக்கு ரூ. 183.38 இலட்சங்கள் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 4690 உறுப்பினர்களுக்கு ரூ. 578.66 இலட்சங்கள் கடனாக வழங்கப்பட்டுள்ளன.*

## நெசவாளர்களுக்கு கடன்

*120 நெசவாளர் கூட்டுறவுச் சங்களுக்கு 12876 தறிகளுக்காக ரூ. 432.65 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.*

## கிராமக்கடைகள் திட்டம்

*கிராமத்திற்கு ஒரு கடைத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் 1827 கிராமக் கடைகள் தொடங்கப்பட்டது*

*1985—86ம் ஆண்டு பயிர் ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வட்டாரங்களில் மொத்தம் 8503 உறுப்பினர்களை சேர்த்து ரூ. 257.84 இலட்சங்கள் ஈட்டுறுதி செய்யப் பட்டுள்ளது.*

## கிராமிய வங்கிகள்

*கிராமிய வங்கியானது, 1984—85ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த கேட்புத் தொகை ரூ. 1785.16 இலட்சங்களில் ரூ.1288.66 இலட்சங்கள் வசூல் செய்தது. கேட்பின் நிலுவை 27.8 சதவீதத்திற்குக் கொண்டுவந்து தேசிய கிராமிய வங்கிகளிடமிருந்து கடன் பெற்று வழங்கும் தகுதி பெற்று தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டது.*

## கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடியின் சாதனை

*கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி தனது விற்பனையில் தமிழகத்திலேயே முதலிடம் பெறுவதோடு அல்லாமல் இந்திய அளவில் 3வது சிறப்பிடத்தைப் பெறுகின்றது, இந்த அளவிற்கு விற்பனையில் சிறந்த இடத்தைப் பெற்று பீடுநடை போடுகிறது.*

*27.11.1947ல் ஆரம்பிக்கப்பட்ட வட ஆற்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, மொத்தம் 50547 அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தினர்களின் பங்குத்தொகை ரூ. 29.51 இலட்சமாகும்.*

*மாவட்ட அளவில் பெரியதும் சிறியதுமான 144 விற்பனை நிலையங்களும் ஒரு பெட்ரோல் பங்கும் அரிசி மற்றும் மாவு ஆலை ஒன்றும், உணவுப் பொருள்கள் தர*

*ஆய்வு நிலையம் ஒன்றும், காய்கறி விற்பனை நிலையங்கள் நான்கும், விநியோக மையங்கள் பதிமூன்றும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன.*

*இந்தப் பண்டக சாலையின் நடைமுறை மூலதனம் ரூ. 391.29 இலட்சம். இதற்கென இருக்கக்கூடிய மொத்தக் கிடங்கு 13.*

*1983—84ல் 2962.49 இலட்சமும், 1984—85ல் ரூ. 3589.66 இலட்சமும், 1985—86ல் செப்டம்பர் வரை 1113.49 இலட்சமும் விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது.*

*இதன் மாத சராசரி விற்பனை ரூ. 371.16 இலட்சம். ஒரு நாளைய சராசரி விற்பனை ரூ. 14.85 இலட்சம்.*

*1985—86ல் ரூ. 3979.92 இலட்சம் மதிப்பு நுகர்வோர் பண்டங்கள் விற்பனை செய்யக் குறியீடு நிர்ணயித்துச் செயல்பட்டு வந்தது.*

*பண்டக சாலையின் 42 ஆண்டுக்கால வரலாற்றில் 1985 ஜுலைத் திங்களில் ரூ. 412.64 இலட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இது, பொன் எழுத்துக்களில் பொறிக்க வேண்டிய சாதனையாகும்.*

## நியாயவிலைகடைகளில் மாற்றம்

*ஏற்கெனவே இயங்கிவரும் நியாயவிலைக் கடைகளை மற்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் நியாயவிலைக் கடைகளாக மாற்றி அமைக்கப்பட்டது. அந்தந்தக் கிராமங்களிலே நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில், புதிய கடைகளைப் படிப்படியாகத் திறந்து வைக்கப்பட்டது; முதற்கட்டமாக, ஏற்கெனவே இயங்கி வந்து கொண்டிருக்கும் சுமார் 5,200 கடைகள் பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன.*

## விற்பனைவரி இல்லை

*மருந்துகள் விற்பனையின் பேரில் விற்பனை வரி செய்யப்படுவதில்லை. காலணிகள் விற்பனையிலும் விற்பனை வரி இல்லை. அரசு ஊழியர்களுக்கெனத் தனி நியாய விலைக்கடைகள் நடத்தப்பட்டது.*

*கைத்தறித் துணிகளுக்குப் பண்டிகைக் காலங்களில் விற்பனைவிலையில் இருந்து, சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டது.*

## பொதுமக்களுக்கு வட்டி வருமானம்

*பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி பெறப்பட்டு 12.5 சதவீத வட்டி வழங்கப்பட்டது.*

*வேலூரில் சுய வேலைப்பிரிவு தொடங்கப்பட்டது. கற்பகம் சிறப்பங்காடிக்கு ரூ. 14 இலட்சத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டது.*

## ஏழைகள் வாழ எண்ணற்ற இல்லங்கள்

*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1971ல் தொடங்கப்பட்டு கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வந்தது.*

*1) வீட்டு வசதி*

*2) குடியிருப்புகள் கட்டும் திட்டம்*

## நகர்ப்புற வளர்ச்சி

*விரைவுபடுத்தபட்ட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி திட்டம், சென்னை பெருநகர் மேம்பாட்டு திட்டம் கொண்டு வரப்பட்டது.*

*1983—84ம் ஆண்டில் இருந்து குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகளை மாநிலத்தின் பிற நகரங்களுக்கும்*

*படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டது. 1985—1986ல் 43 நகரங்களுக்குப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.*

## குடியிருப்புகள் கட்டும் திட்டம்

*1984—85 முடிய குடிசைப் பகுதி மாற்று வாரியம் 45980 குடியிருப்புகளை ரூ. 4168.69 இலட்சம் செலவில் சென்னை நகரிலும், ஈரோட்டிலும் கட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு மானியம் வழங்கியது. அட்கோ கடன் உதவியும் பெறப்பட்டது. 1984—85 வரை ரூ. 557.19 இலட்சம் அட்கோவிடம் இருந்து கடனாகப் பெறப்பட்டது.*

*1985—86 ஆம் ஆண்டு ரூ. 150 இலட்சம் அரசு நிதி உதவியுடனும் ரூ. 188 இலட்சங்கள் அட்கோ கடனுதவியுடனும் 512 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டது.*

*1986—87ல் ரூ. 200 இலட்சம் அரசு மானியம் பெற்றும் ரூ. 585 இலட்சம் அட்கோ கடனுதவி பெற்றும் 3570 குடியிருப்புகள் கட்டும் பணி துவங்கப்பட்டு 1250 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டது. ரூ. 100 இலட்சம் கடன் தொகை அட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தப் பட்டது.*

## நலிந்த பிரிவினருக்கான வீடு கட்டும் திட்டம்

*நலிந்த பிரிவினருக்கான வீடுகட்டும் திட்டம் கொண்டவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள குடிசைவாசி களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டது. அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் விலை குறைந்த தரமான கட்டுமானப் பொருட்களைக் கொண்டு வீடுகள் கட்டப்பட்டது. இக்குடியிருப்புகள் வாடகை மற்றும் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

*1985—86ல் மதுரை பெரியார் நகரில் ரூ. 231.931 இலட்சம் அட்கோ கடன் உதவியுடன் 2010 வீடுகள் கட்டப்பட்டது.*

*1986—87ல் ரூ. 10.76 கோடி செலவில் 34.22 வீடுகள் கட்டப் பட்டது.*

## மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கும் திட்டம்

*மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கும் திட்டம் கொண்டுவந்ததும் எம்.ஜி.ஆர். அரசுதான். இத்திட்டம் குடிசை மாற்றுவாரியத்திற்குச் சொந்தமான காலி இடங்களில் செயல்படுத்தப்பட்டது. 1985—86ல் ரூ. 86.49 இலட்சம் அட்கோ கடனுதவி பெற்று 1842 மனைகள் மேம்படுத்தப்பட்டது. இதன்மூலம் 900 குடும்பங்கள் பயனடைந்தது. 1985—87ல் ரூ. 46.49 இலட்சம் செலவில் 1042 குடும்பங்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது*

## விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டமும் அதனால் விளைந்த பயன்களும்

*சாலைகள், குடிநீர் தெருவிளக்குகள் கழிப்பறை வசதிகள் போன்ற வசதிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் பட்டன. வாழ்வதற்கு ஒவ்வாத பகுதிகள், குடிசைப் பகுதிகளாக இருந்தும் நிதிநிலை காரணமாக அவற்றை அகற்ற முடியாத நிலை இருந்தது. அவ்வாறான பகுதிகளில் இத்திட்டம் இடைக்கால நிவாரணமாக மேற்கொள்ளப் பட்டு வந்தது. 1977ல் இத்திட்டம் தொடங்கப்பட்டது.*

*1984—85 வரை 64,448 குடும்பங்கள் 425.04 இலட்சம் செலவில் இத்திட்டத்தினால் பயன் பெற்றன.*

*1985—87 ஆம் ஆண்டு ரூ. 70 இலட்சம் செலவில் 7250 குடும்பங்கள் பயன்பெற்றன.*

*1986—87 ஆம் ஆண்டு சென்னையிலும், மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிப் பகுதிகளிலும்*

*8 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலும் ரூ. 100 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.*

## சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

*புதிய 20 அம்ச திட்டத்தின் கீழ் ஊக்குவிப்பு மானியத் தொகை திட்டத்தின் கீழ் 1983—84 ஆம் ஆண்டிலிருந்த குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய, மத்திய அரசு முன்வந்ததன் பேரில். 1984—85 ஆம் ஆண்டு முடிய ரூ. 72.94 இலட்சங்கள் பெறப்பட்டன. ரூ. 56.05 இலட்சம் செலவில் 34324 மக்கள் பயனடைந்தனர். 1985—86ல் ரூ. 16.89 இலட்சம் செலவில் 7255 பேர் பயனடைந்தனர்.*

## சென்னை பெருநகர் மேம்பாட்டுத் திட்டமும் பயன்பெற்ற பல்லாயிரம் குடும்பங்களும்

*சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தில் குடிசைப் பகுதிகள் உலக வங்கி உதவியுடன் செயலாற்றியது. இத்திட்டத்தின் கீழ் சுற்றுப்புற மேம் பாடுகள் அல்லாது நில உரிமை மற்றும் வருமானத்திறகு ஏற்றாற்போல் ரூ. 1500 ரூ. 2500 மற்றும் ரூ. 3500 என வீடு கட்டுவதற்குக் கடன் தொகையும் கொடுக்கப்பட்டது. பகுதி 1ல் சென்னை மாநகராட்சி 12 குடிசைப் பகுதிகளையும், குடிசைப்பகுதி மாற்றுவாரியம் 63 குடிசைப் பகுதிகளையும் எடுத்து ரூ. 443.65 இலட்சம் செலவு செய்து 24,862 குடும்பங்கள் பயன்பெறுமாறு மேம்பாட்டுப் பணிகளை முடித்துள்ளன. 1977ம் ஆண்டு தொடங்கப் பட்ட இத்திட்டம் 1982ல் முடிவுற்றது. 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பகுதி 2ன் மதிப்பீட்டுத் தொகை ரூ,27.80 கோடியாகும். 50 ஆயிரம் குடும்பங்கள் இதன் மூலம் பயன் பெற்றது. 1984—85 ஆம் ஆண்டு வரை 32 ஆயிரம் குடும்பங்கள் ரூ. 1415.77 இலட்சம் செலவில் பயன் பெற்றுள்ளன.*

*1985—86 ஆம் ஆண்டு 10 ஆயிரம் குடும்பங்கள் ரூ. 500 இலட்சம் செலவில் பயன்பெற்றன.*

*1984—85 ஆம் ஆண்டு வரை 33,573 குடும்பங்கள் நில உரிமைபெற விற்பனை ஒப்பந்தப் பத்திரங்களில் கையொப்பமிட்டனர். 23.145 குடும்பங்கள் ரூ. 477,169 இலட்சம் கடனாகப் பெற்றனர். 1985—86 ஆம் ஆண்டு 5 ஆயிரம் குடும்பங்கள் நில உரிமை பெற்றன. ரூ. 250 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.*

*1986—87 நிதி நிலையில் ரூ. 10 இலட்சம் கடன் வழங்க நிதி வழங்கப்பட்டது.*

*குடிசைப் பகுதிகளில் வெள்ள காலத்தில் ஏற்படும் நீர்தேக்கத்தைத் தவிர்க்கும் வகையில் பிரதான கால்வாய்களைப் பொதுப்பணித்துறையும், துணைக் கால்வாய்களை மாநகராட்சியும் குடிசைப் பகுதி மாற்றுவாரியமும் ஏற்பாடுகளைச்செய்தன, இதற்காக 1985—ஆம் ஆண்டு ரூ, 411 இலட்சம் செலவிடப்பட்டது. 1985—86 ஆம் ஆண்டு ரூ. 11 இலட்சம் செலவிடப்பட்டது.*

*பகுதி 1ல் பாலர் பள்ளிகள் பகுதி 2ல் 140 பாலர் பள்ளிகளும் கட்டிமுடிக்கப்பட்டன.*

## நகர்ப்புற சமுதாய வளர்ச்சி திட்டம்

*“யுனிசெப்” உதவியுடன் ரூ, 39.98 இலட்சம் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் உள்ள 2,50 ஆயிரம் நபர்கள் பயன்பெறும் வகையில் நகர்புற சமுதாய வளர்ச்சித்திட்டம் மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் தலையாய நோக்கம் குடிசைவாழ் மக்கள் தங்களது சுற்றுப்புறங்களைத் தாங்களாக சுகாதாரமாக வைத்துக்கொள்ளத் தயார் படுத்தும் ஊக்கப் பயிற்சியையும் உதவித் தொகையையும் அளிப்பதுமாகும்.*

*குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சமுதாய வளர்ச்சிப் பிரிவின் மூலம் குடிசை வாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மூலம் குடிசை வாழ் இளைஞர் மற்றும் மகளிர் வேலைகளைப் பெறவும், சிறு தொழில்கள் ஆரம்பித்துக் கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. திரைப்படங்கள் தெருக்கூத்து, வில்லுபாட்டு மூலம் குடிசை வாழ் மக்களுக்கு சுகாதார மற்றும் சமூகக் கல்வியும் போதிக்கப்பட்டது.*

## நலிந்தோர்க்கு நிதியுதவி

*பொருளாதார வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களில் இரு அம்சங்கள் இணைந்துள்ளன. ஒன்று அரசுத்துறைகள் அளிக்கும் மானியம், மற்றொன்று வங்கிகள் அளிக்கும் கடனுதவி. அரசுக்கும் வங்கிகளுக்குமிடையே சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குத் தலைமைச் செயலகத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் "நிறுவன நிதித்துறை" ஏற்படுத்தப்பட்டது. முதன்மை வங்கிகள் மாவட்டங்களுக்கும் மாநிலம் முழுவதற்கும் நீண்டகாலக் கடன், ஆண்டுக் கடன் வழங்கும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தும் பணியை இத்துறை கண்காணிக்கிறது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவுவதற்காக வங்கிக் கடன்களைத் திரட்டுவதில் இத்துறை உறுதுணையாக உள்ளது.*

## முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படும் நிறுவன நிதி உதவி

*கீழ்க்கண்ட வகைகளுக்குக் கடன்கள் அளிப்பதற்கான ஆண்டுச் செயல் திட்டங்கள் மாவட்டத்திலும் தயாரிக்கப் பட்டன.*

- *பயிர்க்கடன்கள், பண்ணைக் கருவிகள், நிலமேம்பாடு, கிணறு, பம்புசெட் போன்ற சிறு பாசனங்கள்.*
- *பால்பண்ணை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் புழு வளர்ப்பு, செம்மறி ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு.*
- *சிறு தொழில் துறை, கிராமக் கைவினைஞர்கள், கைத்தறி ஏனையவை.*
- *தொழில் செய்வோர், சுயவேலை செய்வோர், சிறு வியாபாரம், சைக்கிள் ரிக்ஷா ஆட்டோ, டாக்சி போன்ற சிறிய அளவிலான பேருந்து வண்டிகள், வீட்டு வசதி, கல்வி.*

*மேற்கண்ட முன்னுரிமைப் பிரிவுகளுக்காக ஒதுக்கப் படும் கடன் தொகை ஆண்டிற்காண்டு கீழ்க்கண்டவாறு அதிகரித்துள்ளது.*

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1982 | 547.00 |
| 1983 | 572.00 |
| 1984 | 753.00 |
| 1985 | 1024.65 |

*1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் மாநிலத்திலுள்ள முன்னுரிமைத் துறைகளுக்கு வணிக வங்கிகள் கொடுத்த கடன் நிறுவனத் தொகை ரூ. 1,902 கோடியாக இருந்தது. இது 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இறுதியில் இருந்ததைக் காட்டிலும் 32 சதவீதம் அதிகரித்ததாகத் தெரிகிறது. இதில் வேளாண்மைக்கு நேரடியாக வழங்கியது ரூ. 738 கோடியாகும். நலிந்த பிரிவினருக்கு வழங்கியது சுமார் ரூ. 471 கோடியாகும்.*

*மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களும், ஆண்டுச் செயல் திட்டங்களும்*

*வளர்ச்சிப் பணிகளில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வணிகக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் திட்டங்களைப் பிரதிபலிக்கக் கூடிய மாவட்டக் கடன் வழங்கு திட்டங்களைத் தயாரிக்கும் திட்டப் பணி, 1978 ஆம் ஆண்டிலிருந்தே செயற்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டம் பெருநகர்ப்பகுதியாக இருப்பதால் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. கடன் வழங்கு திட்டம் நீண்ட காலத்திற்குத் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுச் செயல் திட்டம் ஒவ்வொராண்டும் தயாரிக்கப் படுகிறது. ஆண்டுச் செயல் திட்டத்தின் கீழ் வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் செயல்திறன் பாராட்டத்தக்க வகையிலுள்ளது. நிதி ஒதுக்கீடுகள் ஆண்டிற்காண்டு அதிகரித்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:*

| துறை | ஆண்டுச் செயல்திட்ட ஒதுக்கீடுகள் 1984 (ரூபாய் கோடியில்) | 1985 | 1986 |
|---|---|---|---|
| வேளாண்மைத் துறை | 401 | 484 | 611 |
| தொழில்துறை | 93 | 150 | 188 |
| பணி வசதிகள் துறை | 72 | 116 | 165 |
| மொத்தம் | 566 | 750 | 964 |

*1985 ஆம் ஆண்டு திட்ட இலக்கு விஞ்சப்பட்டது. மேலும் முன்னுரிமைத் துறைகளுக்கு 1,025 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 1983ல் வங்கிகள் வழங்கிய முன்னுரிமைப் பிரிவுக்கான கடன் தொகையில் இரண்டு*

*பங்காகும். 1986ம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல்திட்டம் 1985ம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தை விட கணிசமாக உயர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் செயல் திட்டத்தின் திட்டவாரியான மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் இணைப்பில் கொடுக்கப் பட்டள்ளது.*

## சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் கடன்கள்

*சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குக் குறைந்த வட்டிக்கு, நீண்ட காலத் தவணைகளில் கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவும் பொறுப்பு, வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

*வங்கி வழங்கும் மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 10 சதவீதமாவது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறை நியதியினை வகுத்துள்ளது. வங்கிகள் வழங்கும் மொத்தக்கடன் தொகையில் குறைந்தது ஒரு சதவீதக் கடன் தொகையில் குறைந்தது ஒரு சதவீதக் கடன் தொகையானது குறைந்த வட்டி வீதத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடப் பழங்குடியினருக்கும் கிராமப் பகுதிகளில் ஆண்டு வருமானம் 2,000 ரூபாய்க்கும் நகர்ப்பகுதிகளில் 3,000 ரூபாய்க்கும் குறைவான வருமானம் பெறும் ஏனைய நலிந்த பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது மற்றொரு விதிமுறை நியதியாகும், அவ்விதம் ஒதுக்கப்பட்ட கடன் தொகை பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படு வதை உறுதி செய்யக் கடன் தேவைப்படும் நபர்கள் யார் என்று கண்டறிந்து, வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு உதவ வேண்டியது அவசியமாகும். இது நிறுவன நிதித்துறையின் முக்கியப் பணியாகும்.*

*சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் சுய வேலையில் ஈடுபடுவதற்கு உதவும் வண்ணம் குறைந்த வட்டிக்கு*

*நீண்ட காலத் தவணைகளில் கடன்கள் அளிக்கப்படு கின்றன. சில குறிப்பிட்ட இனங்களுக்கு மானியமும் அளிக்கப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நலிந்த பிரிவினர் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு ஆண்டும் அளிக்கப்படும் கடனுதவி மென்மேலும் அதிகரித்து வருகிறது. குறைந்த பட்சம் ரூ. 500ல் இருந்து உயர்ந்த பட்சம் ரூ. 5000 வரை சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் வாழ்வு நலம் பெறக் கடன் வழங்கப்படுகிறது.*

*விவரம் கீழ் வருமாறு:*

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | கடன் தொகை (ரூபாய், கோடியில்) |
|---|---|---|
| 1983-84 | 3.76 | 93.76 |
| 1984-85 | 8.31 | 240.00 |
| 1985-86 | 9.93 | 300.00 |

## வெள்ள நிவாரணம்

*1985 ஆம் ஆண்டில் சென்னை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பிரிவினருக்கு உதவுவதற்காகவும், அவர்கள் மீண்டும் அவர்களது பணியைத் தொடங்கி மறுவாழ்வு பெறவும் நகரிலுள்ள அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் கடன் உதவி அளித்துள்ளன.*

*1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 24,003 பேருக்கு ரூ. 2.44 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டது.*

*கடன் வழங்கு திட்டங்களில் பலவற்றில் இத்துறை ஆற்றி வரும் பணிகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உதாரணமாக முன்னுரிமைப் பிரிவுகளுக்கான 1982 ஆம்*

*ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 547 கோடி படிப்படியாக முன்னேறி 1985 ஆம் ஆண்டு ரூ. 1,024 கோடி கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இது போன்றே மாவட்டக் கடன் வழங்கும் திட்டங்களில் பல துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியீடு 1984 ஆம் ஆண்டு ரூ. 566 கோடியாகும். 1986 ஆம் ஆண்டு இத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு ரூ. 964 கோடியாக உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் நலிவுற்றோருக்குக் கடன் வழங்குவதில் 1983—84ம் ஆண்டில் 3. 76 லட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 93.76 கோடியாகும். 1985—86ல் ரூ. 300 கோடி கடன் வழங்கப்பட்டு 9.93 இலட்சம் நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இந்த முன்னேற்றம் 1983 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடும்போது 200 சதம் உயர்ந்துள்ளது.*

## இலங்கை இனப் பிரச்சனை தீர பெங்களூரில் பேச்சுவார்த்தை

*தெற்காசிய கண்டத்தில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, பூடான், நேபாளம், மாலத்தீவு ஆகிய நாடுகள் இணைந்து தெற்காசிய வட்டார ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ளக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. இக் கூட்டமைப்பின் முதல் மாநாடு வங்க தேசத்தில் நடந்தது. இரண்டாவது உச்சி மாநாடு 16.11.85, 17.11.86 ஆகிய நாட்களில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்றது.*

*இக்கூட்டமைப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மாண்புமிகு இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.*

*மேற்கு பூடான் மன்னர் ஜிக்மே சிங்கே வாஞ்சுக், மேற்கு வங்கதேச அதிபர் எச்.எம்.எர்ஷாத், மேற்கு மாலத்தீவு அதிபர் மம்மூன் அப்துல் கயூம், மேற்கு நேபாள மன்னர்*

பீரேந்திரா, மாண்புமிகு பாகிஸ்தான் பிரதமர் முகமது கான் ஜீனே ஜேர், மேற்கு இலங்கை அதிபர் ஜெய வர்த்தனர் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு, வளர்ச்சித் திட்டங்கள், குழந்தைகள் நலம், போதை மருந்துகளால் ஏற்படும் விளைவுகள், வன்முறை ஒழிப்பு போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள பெங்களூர் வந்திருந்த இலங்கை அதிபருடன் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்கள் 15.11.86 அன்று இலங்கை இனப் பிரச்னை குறித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழர் பிரச்னையில் இலங்கை மேற்கொண்டுள்ள நிலைக்கும் தமிழர் குழுக்களின் விருப்பத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்ப இந்தியப் பிரதமரும் இலங்கை அதிபரும் 16.11.86 அன்றும் விவாதித்தனர்.

பேச்சு வார்த்தைகள் முக்கியமானதொரு கட்டத்தை அடைந்த நிலையில் இலங்கை அரசின் சமீபத்திய பிரேரணைகள் தொடர்பாகத் தமிழர் குழுக்களின் நிலையை விளக்குவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் அழைப்பின் பேரில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 16.11.86 அன்று பெங்களூர் சென்றார்.

மாண்புமிகு இந்திய வெளி விவகாரத்தறைத் துணை அமைச்சர் திரு நட்வர் சிங்கும் மாண்புமிகு முதல்வர்

டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களும் இருமுறை சந்தித்து இலங்கைப் பிரச்னை குறித்து விவாதித்தனர்.

இச்சந்திப்புகளின் போது மாண்புமிகு இந்திய உள்துறைத் துணை அமைச்சர் திரு.ப.சிதம்பரம், இந்திய அரசின் வெளியுறவுச் செயலர் திரு.ஏ.பி.வெங்கடேசுவரன், இலங்கையில் இந்தியத்தூதர் திரு ஜே.என்.தீட்சித், மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு.ச. இராமச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

இப்பிரச்னையில் தொடர்ந்து அரசியல் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய, பெங்களூர் விமான நிலையத்தில் இரு நாட்டின் தலைவர்களும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கை அதிபர் நமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னர், பெங்களூர் விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வருடன் மாண்புமிகு இந்திய பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்கள் சுமார் அரை மணி நேரம் ஆலோசனை நடத்தினார். மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு.ச.இராமச்சந்திரன் அவர்கள் உடன் இருந்தார்.

இந்தியப் பிரதமர் பின் செய்தியாளர்களிடம், ‘இலங்கை அரசின் புதிய சமரசப் பிரேரணைகள் அடங்கிய திட்டம் நல்ல திட்டமாகும். இலங்கை அரசுக்கும் தமிழனப் போராளிகளுக்கும் இடையே நேரிடையாகப் பேச்சு வார்த்தை நடைபெற இதுவே அடிப்படையாக அமைய வேண்டும்’ என்று கூறினார்.

இந்தப் புதிய சமரசப் பிரேரணைகள் மூலம் தமிழர்கள் இலங்கையில் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்

*நான்காவது நாளாக 18.11.86 அன்று இந்தியாவும் இலங்கையும் இப்பிரச்னை குறித்த தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தின. டெல்லியில் இப்பேச்சுவார்த்தை களை மேலும் தொடர்ந்து நடத்தப்பட்டது.*



# அருந்தமிழ் நாட்டில் அற்புதத் தொழில்வளர்ச்சி

### 7 நிறுவனங்கள் அமைப்பு

**தொ**ழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தும் சீரிய நோக்குடன் கீழ்க்கண்ட அரசு சார்பு நிறுவனங்களை இவ்வரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் துறையின் நேரடிப் பார்வையில் இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அனைத்து வகைத் தொழிற்சாலைகளும் பெருகி வளமுறப் பாராட்டத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றன.

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

(2) தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்.

(3) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

(5) தமிழ்நாடு அச்சுத்தாள் காகித நிறுவனம்.

(6) தமிழ்நாடு கனிம நிறுவனம்.

(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம்.

(8) தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்.

தமிழ்நாட்டின் புதிய தொழில்களை அமைக்க முன்வருவோர்க்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தங்கு தடையின்றி இவ்வரசு செய்து வருகிறது. புதிய விண்ணப்பங்களை பரிந்துரை செய்து, இசைவுக் கடிதம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட பின் அதைத் தொழில் உரிமங்களாக மாற்ற உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1977 முதல் 1986 மார்ச் மாதம் வரை 819 விண்ணப்பங்களைப் புதிய தொழில்கள் துவங்குவதற்காகப் பரிந்துரை செய்து இவ்வரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்றுள் 468 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசால் அனுமதியளிக்கப்பட்டும் 255 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன.

1985ம் ஆண்டில் (டிசம்பர் வரையில்) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்கத் தொழில் முனைவோருக்கு 97 இசைவுக் கடிதங்களும், 155 தொழில் உரிம மாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. 1985—ஆம் ஆண்டில் 35 எஸ். ஐ. ஏ. பதிவுகளும், 163 டி.ஜி.டி.டி. பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வரசு எடுத்த தீவிர நடவடிக்கை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனாக 1977 முதல் 1986 வரை தமிழ் நாட்டில் ரூ. 1, 600 கோடிக்கு மேலாக முதலீடு செய்து புதிய தொழிற்சாலைகள்/விரிவாக்கப்பணிகள் மைய அரசைச் சார்ந்த நிறுவனங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. முன்னணியில் உள்ள முதல் நான்கு மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது.

பம்பாயிலுள்ள இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆய்வு மையம் என்ற நிறுவனம், 1985 செப்டம்பர் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பொதுவாகத் தொழில் வளர்ச்சியை நிர்ணயிக்கும் கீழ்க்கண்ட ஐந்து அம்சங்களில் தமிழகம் முதல் நான்கு இடங்களுள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்:

1. புதிய தொழில்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கும் குறிப்பு: இதில் தமிழகம் மூன்றாவது இடத்திலுள்ளது.

2. தொழிற்சாலைகளில் உற்பத்தி மதிப்பு: இதில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது.

3. 1960—61 முதல் 1980—81 வரையிலான காலத்தில் ஆலைகளில் சேர்க்கப்பட்ட மதிப்பீட்டை ஒப்பிடுதல்: இதில் தமிழகம் நான்காவது இடத்திலுள்ளது.

4. தொழில்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி பற்றிய ஒப்பீடு: தொழிற்சாலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காவது இடத்திலும், தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தமிழகம் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

5. தொழிற்சாலைத் துறையில் மதிப்பு பெருக்கம்: (தேசியவருமான உற்பத்தி அடிப்படையில்)

அகில இந்திய நிதி நிறுவனங்களிலிருந்து உதவித்தொகை பெறும் இனத்தின் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதையும் பெருமையுடன் குறிப்பிடலாம்.

*தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965—ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருமை வாய்ந்த நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 60 கோடியாகும். இதில் ரூ. 59.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.*

*டிட்கோ இது வரையில் பொதுத் துறையிலும் கூட்டுத் துறையிலும் 45 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது.*

*டிட்கோவினால் நிறுவப்பட்ட 45 தொழிற் திட்டங்களில் 38 திட்டங்கள் இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.*

*தொடக்கத்தில் டிட்கோவின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம், 3.4.1984 முதல் டிட்கோவின் ஒரு கிளை நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.*

*3.4.1984 முதல் மீள் உருளை ஆலையும் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் திட்டச் செலவு ரூ. 782.10 இலட்சமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 25,000 டன்கள் ஆகும். இது 109 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது.*

*தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட் லிமிடெட் டிட்கோ வினுடைய ஒரு நிறுவனமாகும். இத்தொழிற்சாலை காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 756 இலட்சமாகும். இது சுமார் 271 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. இலாபத்தில் இயங்கி வரும் இந்நிறுவனம் 30.9.1985 வரை ரூ. 83.10 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.*

*தமிழ்நாடு தொழிலியல் மருந்து நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 2,350 இலட்சமாகும். இத்திட்டத்தினால் சுமார் 450 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ஏறக்குறை 100 பேருக்கு*

நேரடி அல்லாத வேலைவாய்ப்பும் கிடைக்கும். இத்திட்டம் தன் வணிக அளவிலான உற்பத்தியை 9.2.1986 முதல் தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு அரசு பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (டான்சம்) நிறுவனமானது தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினரால் (டிட்கோ) முழுவதும் உடைமை ஆக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபாய் 12.36 கோடி இது வரையில் செலுத்தப்பட்டு உள்ளது. இந்நிறுவனம் 1.4.1976 முதல் செயல் படத் தொடங்கியது.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 666 இலட்சமாகும். இந்த ஆலை 1970ம் ஆண்டு முதல் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

இவ்வாலை, இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் மற்றும் மூலப் பொருட்கள் உற்பத்திப் பொருட்களின் போக்கு வரவு வகையினில் கணிசமான அளவில் நேரடி இல்லாத வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது.

அரியலூர் சிமெண்ட் ஆலை உவர் செய்முறை ஆலை ஆகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன். இதன் திட்டச் செலவு ரூ. 2,876 இலட்சம். வணிக அளவிலான உற்பத்தி 1977ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கியது.

இவ்வாலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் மூலப்பொருட்கள், செய் பொருட்கள்

முதலியவற்றின் போக்குவரத்து வகையில் கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரி' டன்கள் அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை திருச்சி மாவட்டம் மாயலூரில் அமைக்கப்பட்டது. இதன் திட்டச் செலவு ரூபாய் 945 இலட்சம்.

1984—85ம் ஆண்டில் இதன் ஆறுமாத கால உற்பத்தியில் 8,427 மெ. டன். ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் 10,886 மெ. டன். குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளான திட்ட அறிக்கை, வளர்ச்சி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து முதலீட்டுக் கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் மாநில அரசு வழங்கும் உதவிகளைத் தொழில்களுக்கு முறைப்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) ஏற்றுச் செயல்பட்டு வருகின்றது.

வட்டியில்லா விற்பனையில் கடன் வழங்கும் ஊக்கச் சலுகை திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1985ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 250 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 29.15.49 இலட்சம் ஒப்புதல் அளித்து, அதில் ரூபாய் 25.07.46 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

*மாநில அரசின் மானியம் (உதவித்தொகை) வழங்கும் திட்டத்தின்கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன்பெறுகின்றன.*

*இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி திட்டத்தின் கீழ் சிப்காட் நிறுவனம் ஒப்புதல் அளித்தது மற்றும் வழங்கியது 31.3.1985 முடிய முறையே ரூ. 519.24 இலட்சம் மற்றும் ரூ. 382.61 இலட்சம் ஆகும்.*

*1984—85ம் நிதியாண்டில் எல்லாச் செலவினங்களும் தேய்மானங்களும் போக நிகர லாபம் ரூபாய் 116.56 இலட்சம், 1983—84ம் ஆண்டு இலாபம் ரூ. 124.42 இலட்சமாகும்.*

## வேலைவாய்ப்பு

*1985ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31—ஆம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.*

## தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

*உலக வங்கியிடமிருந்து ரூ105 கோடி உதவியுடன், கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக்கொண்டு இயங்கும் ஒரு பெருமை வாய்ந்த காகித ஆலை திட்டத்தை நிறுவும் நோக்கத்துடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவத்தைத் தமிழக அரசு உறுவாக்கியது. இந்த ஆலை நாளொான்றுக்கு செய்தித்தாள் காகிதமும், 240 டன்கள் அச்சிடும்/எழுதும் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாம்.*

*1.4.1985லிருந்து 31.12.85 முடிய உள்ள காலக்கட்டத்தில் இந்நிறுவனம் 39,535 டன்கள் செய்தித்தாள் காகிதமும் 6,797 டன்கள் எழுதுதாள் அச்சிடும் தாள் காகிதமும் உற்பத்தி செய்து, தனது உற்பத்தித் திறனின் 70*

*சதவிகிதத்தை எட்டியுள்ளது. ரூ. 40 கோடி மதிப்புள்ள அந்நியச்செலாவணியை மிச்சப்படுத்த உதவியுள்ளது.*

*1,500 பேருக்கு நேர்முக வேலைவாய்ப்பும் 5,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பும் இந்த நிறுவன ஆலை 24.5.86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.*

*மாநில் அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனத்தைச் சார்ந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கும் அதன் விரைவான முன்னேற்றத்திற்கும் நிதியுதவி அளிக்கும் தனது பணிகளுடன் இருபது அம்சத்திட்டம் உள்ளிட்ட அரசின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்து வதிலும் முக்கியப் பங்கு அளித்து வருகிறது.*

*கடன் தொகைக்கு அனுமதித்தல், வழங்குதல், வசூலித்தல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், இந்நிறு வனத்தின் பணி கணிசமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.*

*தமிழ்நாடு உப்பு நிறுவனம் ரூபாய் 200 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூபாய் 200 இலட்சம், ரூ. 145 இலட்சமாகும்.*

*மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ள இத்திட்டம் 1975ம் ஆண்டு திட்டப் பணிகள் தொடங்கப் பட்டு 1976ம் ஆண்டு முதல் உப்பு உற்பத்தியைத் தொடங்கியது.*

*இத்திட்டம் 1984ம் ஆண்டு இரசாயனத் தொழிற் சாலைக்கு தரமான 33,600 டன் உப்பு உற்பத்தி செய்தது.*

*31.12.1985 முடிய 27,202 மெட்ரிக் டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.*

*உப்பு உற்பத்திக் காலத்தில் 70 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் 150 பேர்களுக்குப் பருவகால வேலை வாய்ப்பும் அளிப்பதுடன், ஒப்பந்தக் காரர்கள் மூலமாகச் சுமார் 200 பேர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டது. தற்பொழுது 32 நபர்கள் அலுவலக வேலையில் அமர்த்தப்பட்டனர்.*

## சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சி

*தற்போது கூட்டுறவுத்துறையில் 11 சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலையும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலையும் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன.*

*ஒவ்வொரு சர்க்கரை ஆலையும், தான் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றன. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங்களுக்குச் செலவழிக்கப்படுகின்றது. 1985—86ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

## தஞ்சையில் சர்க்கரை ஆலை

*தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டமும், மேலும் 2 மினி சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டமும் செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து, அத்திட்டத்தை நிறைவேற்றியது,*

*தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் எலக்ட்ரானிக்ஸ் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்*

*பட்டாலும் 10 சதவீத மானியம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்து, அத்தொழில் செய்ய விரும்புவோரை ஊக்குவித்தது.*

## 100 கோடி செலவில் கலர்பிலிம்

*இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் 100 கோடி ரூபாய் செலவில், கலர் பிலிம் தொழிற் சாலையாக மாற்றப்பட்டது.*

## 100 தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

*தருமபுரி மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகளையும் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் வகையில், பொம்மிடி பகுதியில் கிராம கைத்தொழில் திட்டத்தின் கீழ் 100 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், 30 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன.*

## வெடிமருந்து தொழிற்சாலை

*வட ஆற்க்காடு மாவட்டத்தில் வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டது.*

*தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் எம். ஜி. ஆர் ஆட்சிக் காலத்தில்தான் கொண்டு வரப்பபட்டது.*

## புகலூரில் காகித தொழிற்சாலை

*கரும்பு சக்கைகள் வெறும் மது தயாரிப்புக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையை மாற்றி, காகித உற்பத்திக்கு வித்திட்டது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசு. அதன் அடிப்படையில் 80 கோடி செலவில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை திருச்சி மாவட்டம் புகழூரில் அமைக்க அரசு அறிவிப்பு வெளியிட்டது. 1984ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த*

*தொழிற்சாலை இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இயற்கை சீற்றங்களில் இருந்து தமிழகத்தை பாதுகாக்கும் வகையில் தமிழகத்தில் 107 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டன*

## 5 கோடி மரங்கள் வளர்ப்பு

*ரூ. 45 கோடி செலவில்,5 கோடி புது மரங்கள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வளர்க்கும் திட்டம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இதன் மூலம் 5 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்றனர்.*

## தையல்தொழில் செய்ய கடன்

*புத்தகங்களை வெளியிட மலிவு விலையில் காகிதங் களை பழங்குவதற்கான திட்டம் தொடங்கப்பட்டது. கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை வழங்கும் திட்டத்தின் கீழ் தையல் தொழில் தொடங்க அரசு மான்யம் மற்றும் கடனுதவி வழங்கும் திட்டத்தை எம்.ஜி.ஆர். அரசு செயல்படுத்தியது.*

*1.70 கோடி செலவில் புதிய நூற்பாலைக்கு அரசு அனுமதி வழங்கி தொடங்கப்பட்டது.*

*தமிழகத்தில் 6 சதவீதமாக இருந்த தொழிற்சாலைகளின் உற்பத்தி புரட்சித் தலைவர் ஆட்சியில் 10 சதவீதமாக அதிகரித்தது.*

## வேலைவாய்ப்பு

*1985ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ம் தேதி முடிய சுமார் 88,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.*

## கூலிநிர்ணயம்

*தொழிற்சாலைகளில் சட்டத்திற்கு உட்பட்டநிலையில் பணியாற்றும் சிறுவர்கள் மற்றும் சிலவகை தொழிலாளர்*

*களின் உழைப்பு சுரண்டப்பட்ட அவல நிலை இருந்து வந்தது. அதை பல்வேறு சோதனைகள்மூலம் கண்டறிந்து மேற்கொண்டோருக்கு தகுந்த கூலி நிர்ணயமும், வேலை நேர வரையறையும் வகுத்து எம்.ஜி.ஆர். அரசு உத்தரவு களை பிறப்பித்தது*

## கனிமவளத்தை நாட்டுடமையாக்கி தமிழகத்திற்கு வருவாய் குவித்த எம்.ஜி.ஆர்

*தென்னாற்காடு மாவட்டத்திலும் தர்மபுரி மாவட்டத்திலும் பூமிக்குள் கறுப்புக்கல் நிறைய இருக்கிறது. இந்த கற்கள் எந்தவித அனுமதியும் இல்லாமல் முறைகேடாக பலர் வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துவந்தனர். இதன் மூலம் அந்த முறைகேடு செய்பவர்களுக்கு கோடிகோடியாக லாபம் கிடைத்து வந்தது. இதை அறிந்த எம்.ஜி.ஆர். அரசு, பூமிக்கு அடியில் கிடைக்கும் அந்த கல்லை தேசிய உடமையாக்கி அறிவித்து, பூமிக்கு அடியில் இருந்த அந்த கருப்புகற்களை அரசாங்கமே வெட்டி எடுப்பது என்று திட்டம் கொண்டு வந்தது. தமிழ்நாட்டில் கனிம வளங்கள் மிக அதிகம். அவை ஒரு காலத்தில் தனியார் உடமையாக இருந்தன.*

*தொழில்களுக்குப் பயன்படும் சிலமுக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கருமபாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் தற்போது ரூ. 300 இலட்சம் ஆகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 207.50 இலட்சம் ஆகும்.*

*தனியாரின் பிடியிலிருந்த தனிம வளத்தை இந்த அரசு, அரசுடைமையாக்கியதுடன் டாமின் என்னும் கனிம வள நிறுவனத்தை 1978ல் உருவாக்கி உள்ளது. அதன் தொடர்பாக கருங்கல் பாறை மெருகேற்றும் தொழிற்*

*சாலை மணலியில் ரூ. 6 கோடியே 40 இலட்சம் மூலதனத்துடன் 25.3.86ல் தொடங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 266 இலட்ச ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும். அடுத்து வரும் ஆண்டுகளில் இந்தத் தொகை மேன்மேலும் அதிகரிக்கும்.*

## உலகில் அதிக விலை!

*உலகிலேயே அதிக விலை தரப்படுவது இந்த கரும்பாறைக்குத் தான். இதன் விலை மதிப்பு, ஒரு கன அடி 1032 டாலர் ஆகும்.*

## முதலாளிகளின் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைத்த எம்.ஜி.ஆர்.

*தனிப்பட்ட முதலாளிகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பவள பாறைகளை வெட்டி எடுத்து, மெருகூட்டி, வெளிநாடுகளுக்கு அனுப்புவதன்மூலம் பல லட்ச ரூபாய் வருமானம் பெற்று வந்தார்கள். அதுமட்டுமல்ல பணம் சேர்ப்பதையே குறிக்கோளாக கொண்டிருந்தார்களே தவிர, நாட்டின் நலனையோ தொழிலாளர்களின் நலனையோ கருதவில்லை.*

*கனிம வளத்தின் மூலம் நல்ல வருவாய் வருவதையும், தனியார்கள் அளவுக்கு மீறி வெட்டி எடுத்து, பல கேடுகளை உருவாக்கி வந்தனர் என்பதையும் அறிந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், தமிழ்நாட்டின் கனிம வளத்தைப் பாதுகாக்க முற்பட்டார். அதனால் கனிம வளங்கள் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானவை என்று அறிவித்து, அதற்குரிய சட்டங்களையும் உருவாக்கினார்.*

## “டாமின்” நிறுவனம் உதயம்

*தன்மூலம் தமிழ்நாடு கனிம நிறுவனம் “டாமின்” 1978ல் தோற்றுவிக்கப்பட்டது. தமிழகத்தின் ஆண்டு வருவாயைப்*

*அத்திட்டம், பெருக்க உதவியது. ஆண்டுதோறும் அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித் தந்தது.*

*1985—86ம் ஆண்டு பிப்ரவரி வரை 5 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாறைகளும் பல வண்ணக் கற்களும் மேற்கு ஜெர்மனி, ஜப்பான, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.*

## தொழிற்சாலைகள் உருவாக்கம்

*பாறைகளை வெட்டி எடுத்து அப்படியே ஏற்றுமதி செய்வதை விட, அறுத்து மெருகேற்றி அனுப்பினால் பல மடங்கு விலை கிடைக்கும் என்பதை உணர்ந்து, பாறைகளை அறுத்து மெருகிடும் தொழிற்சாலையை உருவாக்கும் முயற்சியில் டாமின் ஈடுபட்டது. வெளிநாட்டு இறக்குமதியாளர்கள் டாமின் உற்பத்தி செய்யும் — அறுத்து மெருகிடும் பாறைகளை வாங்குவதற்கு பேரார்வம் காண்பித்ததன் காரணமாக பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை அமைக்கும் பணி விரைவுபடுத்தப்பட்டது.*

*நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்கமுள்ள தொழில்களுக்கு மத்திய அரசு அளித்து வரும் ஊக்கத் திட்டமும் இத்தொழிற்சாலை அமைவதற்கு மற்றொரு காரணமாகும்.*

*சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு பெரிய தொழில் மையமாக உருவாகியுள்ள மணலியில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அத்தொழிற்சாலை அமைக்க அரசு 23 ஏக்கர் நிலத்ததை ஒதுக்கீடு செய்தது. தமிழ்நாடு அரசு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து. தொழிற்சாலை அமைப்போரின் மூலதனப் பங்குத் தொகையாக ரூ. 80 லட்சம் வழங்கியது. மத்திய அரசு தொழிற்சாலை அமைக்க அனுமதி அளித்தது, தொழிற்சாலையில் பொருத்தப்*

*படுவதற்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கும் உள்நாட்டில் வாங்கப்பட்ட இயந்திரங்களுக்கும் சுங்கவரி விலக்களிக்கப்பட்டது.*

## அதிநவீன அறுவை எந்திரங்கள்

*தொழிற்சாலையில் நிறுவியுள்ள "கேங் சா" எனப்படும் பாறை அறுக்கும் இயந்திரங்கள் பெரிய பாறைகளை 2 சென்டி மீட்டர் குறைந்த கனத்தில் அறுக்கும் திறனுள்ளவை. இவை ஒரே நேரத்தில் சுமார் 240 கற்பலகைகளை அறுக்கக்கூடியவை. கட்டடங்களின் முகப்புகளில் பதிக்கக்கூடிய கற்பலகைகளுக்குப் பெருகி வரும் உலகச் சந்தையைக் கருதி மேற்கண்ட தொழிற் சாலையில் இவ்வகை "கேங் சா" பொருத்தப்பட்டுள்ளன.*

*"பிளாக் சர்குலர் ஷா" எனப்படும் மற்றொரு வகை அறுவை இயந்திரம் 10 முதல் 15 சென்டி மீட்டர் கனமுள்ள அளவுக் கற்றகளை அறுக்கக் கூடியவை. இந்த எந்திரம் சுமார் 49 கற்களை நிற்காமல் தொடர்ந்து அறுக்கக்கூடிய திறன் கொண்டதாகும்.*

*அறுத்து முடித்த பாறைகளைப்பளிங்கு போல் மெருகிடும் இயந்திரங்கள் நவீனமானவை. உற்பத்தி திறன் மிக்கவையாகும்.*

*முனைகளை அறுக்கும் இயந்திரங்கள் மூன்று இங்கே உள்ளன. அவை அறுவைகளை ஒரே நேரத்தில் துல்லியமாக பிசிறில்லாமல் செய்யக்கூடியவை. இந்த இயந்திரங்கள் தேவைக்கு ஏற்ப இடைவெளி விட்டுப் பாறைகளின் முனைகளை அறுக்கவல்லவை. அறுக்கப் பட்ட முனைகளை மெருகிடும் திறனும்மிக்கவை.*

## சிறந்த கட்டிடங்கள்

*மற்றொரு சிறந்த அம்சம் தொழிற்சாலைக் கட்டடங் களாகும். இயந்திரங்களின் இயக்கத்திற்குத் தக்க வகையில்*

*நேர்த்தியாகவும் உறுதியாகவும் கட்டடங்கள் கட்டப் பட்டன. கட்டடத்தின் வளைந்த கூரை அமைப்பு, இயந்திரங்கள் எழுப்பும் இரைச்சலைக் குறைத்து அவற்றை இயக்குவோருக்கு இணக்கமான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது, உலகப் புகழ் பெற்ற "லார்சன் அண்டு டியூப்ரோ" நிறுவனத்தைச் சேர்ந்த இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன் தனது கட்டடத் திறனைக் காட்டி, குறித்த காலத்தில் உறுதியாகவும் அழகாகவும் விளங்கக்கூடிய வகையில் கட்டடங்களைக் கட்டி முடித்தது.*

*முன்னரே உருவாக்கி பொருத்தப்பட்ட கான்கிரீட் கூரை அமைப்பு இந்தியாவில் முதல் முறையாக அப்போதுதான் கட்டப்பட்டுள்ளது. இவ்வகை கட்டட அமைப்பில் செலவு குறைவு. அத்துடன் விரைவாகவும் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன.*

## வேகமாக நடைபெற்ற பணிகள்

*இயந்திரங்களை பொருத்தும் பணிகள் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்டு 1986 பிப்ரவரியில் மாதிரி ஓட்டம் செய்யப்பட்டது.*

*தொழிற்சாலையின் மூலதனம் ரூ640 இலட்சமாகும். இந்த அரசு ரூ. 50 இலட்சம் அளித்துள்ளது. இந்திய தொழில்வளர்ச்சி வங்கி இந்திய தொழில் முதலீட்டுக் கழகம் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகிய நிறுவனங்கள் எல்லா இனங்களையும் ஆய்ந்து பார்த்து 5,325 இலட்சம் கடனுதவி அளித்தன.*

## ஆசியாவிலேயே பெரியதொழிற்சாலை

*இத்தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் சதுர மீட்டர் மெருகிட்ட கற்பலகைகளையும் 10 ஆயிரம் சதுர மீட்டர் மெருகிட்ட நினைவு கற்பலகைகளையும் தயாரிக்கும் திறன் கொண்டது. ஆசியாவில் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது,*

*இதுதொடக்கத்தில் 50 விழுக்காடு பயன்படுத்தும் திறனுடன் விளங்கும் இத்தொழிற்சாலை முற்றிலும் ஏற்றுமதி நோக்குடையது. முதலாண்டு விற்பனை வருவாய் 5,266 இலட்சம். இது மூன்றாம் ஆண்டில் ரூ. 450 இலட்சத்திற்கு உயரக்கூடும்.*

*இத்தொழிற்சாலை பொறியியல் வல்லுநர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழில்களை உள்ளடக்கி சுமார் 123 பேர்களுக்கு வேலைவாய்ப்பளித்தது. மேலும் மறைமுகமாக சுமார் 500 பேர் இத்தொழிற்சாலையால் வேலைவாய்ப்பு பெற்றனர்.*

*தமிழ்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை மிக அதிக அளவில் ஈட்டித் தரும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இந்தத் தொழிற்சாலை 1986 பிப்ரவரி 25 ஆம் நாளன்று முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.*

## ரஷியப் புரட்சியும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் புரட்சியும்

*கனிமவள நிறுவனத்தின் தலைவரும் மேலாண் இயக்குநருமான டாக்டர் சரவணன் பேசுகையில், "கனிம வளத்தில் சூழ்ந்திருந்த இருளை நீக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால் இந்த இடத்தில் இவ்வளவு பெரிய தொழிற்சாலை உருவாகியுள்ளது. இதற்கு மூலகாரணமாக வித்தாக இருந்தவர் பொன்மனச் செம்மல் நமது முதல்வர் ஆவார்.*

*ரஷிய நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர் மக்கள் ஆட்சியை அமைத்த மாவீரர் லெனின், ஆன்றோர் களையும் சான்றோர்களையும் அழைத்து கணிதம், கனிமம் ஆகிய இரு துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்தார்.*

*அதேபோல நாடு முன்னேற வேண்டுமானால் கனிமத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஆக*

வேண்டும் என்று எண்ணி கனிம வளத்துக்கு என ஒரு நிறுவனத்தை உருவாக்கினார், நமது முதல்வர். அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம், மேற்கு வங்கம் அங்கெல்லாம் கூட, தமிழ்நாட்டில் அமைந்திருப்பது போல நிறுவனம் கிடையாது" என்று முதல்வர் எம். ஜி. ஆருக்கு புகழாரம்சூட்டினார்.

## எம்.ஜி.ஆ.ரை மனமார புகழ்ந்து வாழ்த்திய குடியரசுத்தலைவர்

இந்தத் தொழிற்சாலை தொடக்க விழாவைப் பாராட்டி மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் முதல்வர் எம். ஜி. ஆருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். அதில், கடவுளுக்கும் மனசாட்சிக்கும் பயந்து, மக்களை மதித்து ஆட்சி நடத்துகிறீர்கள் என்று புகழாரம்சூட்டிய அவர், உங்கள் நல்ல திட்டங்களை நாடு பின்பற்ற வேண்டும் என்று வாழ்த்தி இருந்தார். மற்றும் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு பிரதமர் ராஜீவ்காந்தி, மத்திய அரசின் மாண்புமிகு தொழில் அமைச்சர் திவாரி, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எஸ். குரானா ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் உரை நிகழ்த்தினார். அப்போது, "சில தனியார்களின் வேட்டைக்காடாக விளங்கிக் கொண்டிருந்த தொழில்களை அரசு தொழில்களாக மாற்றியுள்ளார், தளநாயகர். தான் உழைத்து சம்பாதித்த சொத்துக்களை பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற உள்ளத்துக்குச் சொந்தக்காரரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்" என்று புகழாரம் சூட்டினார்.



# நீதி நிர்வாகத்தில் எம்.ஜி.ஆர் அரசின் ஒழுக்கம்

## 25 நீதிபதிகளுக்கு ஒப்புதல்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்.

அரசின் செயற்பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவினின்றும் இது தனித்துச் செயல்படுகின்றது. இம் மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதிமன்றம் உயர்நீதி மன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

பதிவாளர், உயர்நீதிமன்ற அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாகப் பல அதிகாரிகள் அதாவது, கூடுதல் பதிவாளர், மாஸ்டர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப்

*பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அதிகாரி ஆகியோர் உள்ளனர். உயர்நீதி மன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது.*

*நீதி வழங்குவதோடு, மாநில நீதித்துறையில் நிருவாகத் திற்கும் உயர்நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.*

*குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்குடன், ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றத்திற்கும், அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர் (நிலை) ஒருவரை அரசு நியமித்துள்ளது.*

*பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வது போன்ற குற்றங்கள் குறித்து இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்து தீர்ப்பளிப்பதாக எழும்பூர் இரயில்வே நிலையத்தில் ஒன்றும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் ஒன்றுமாக இரு இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன.*

## இம்மாநிலத்தில் 66 சார்நிலை நீதிமன்றங்கள் உள்ளன

*மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 127 உள்ளன. அத்துடன் மாவட்ட முன்சீப் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் 6ம் மாவட்ட முன்சீப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 2ம் உள்ளன.*

*தொழிலாளர் நல நீதிமன்றங்கள் சென்னையில் நான்கும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது.*

*இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன், பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமாரி*

*மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.*

*மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காக கூடுதல் நீதிமன்றங்கள் 22, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதி மன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம் 58 நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 144 உள்ளன.*

*“தீர்ப்புத் திரட்டு” என்னும் சட்டத்தமிழ் (திங்கள்) இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.*

*ஏழை எளியவர்களுக்கு சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு 1977 ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக்குழுக்கள் இருப்பதுடன் மாநகரிலும், மாவட்டங் களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளிலும் அமைக்கப் பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள 34 சட்ட உதவிமையங் களுடன் 18 மாவட்டக்குழுக்களும், 85 வட்டக் குழுக்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.*

*இக்குழு ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.*



# குடும்ப நலத்திட்டத்தின் வளர்ச்சி

**கு**டும்பநலத் திட்டத்தை, மக்கள் இயக்கமாகக் கொண்டு அரசியல் கட்சிகள், மதச் சார்புள்ள அமைப்புகள் ஆகியவற்றின் முழு அதரவுடன் அனைவரும் முன்வந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழக அரசு, 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் பலவும் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டம் எம்.ஜி.ஆர். ஆட்சிகாலத்தில் வெற்றிகரமாகச் செயல்படுவதை பிறப்பு, இறப்பு பற்றிய பின்வரும் புள்ளிவிவரங்கள் தெளிவு படுத்தியது.

| மக்கள் தொகை வளர்ச்சி | சதவீதம் |
|---|---|
| வீதம் | 1971-81 |
| இந்தியா | 25.00 |
| தமிழ்நாடு | 17.50 |

## தம்பதியினர் குடும்பநலக்காப்பு வீதம்

குடும்பநலத் திட்டத்தின் வாயிலாக தம்பதியனர் நலக்காப்பு வீதம் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. இதனைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

| | |
|---|---|
| 1981-82 | 28.9 % |
| 1982-83 | 30.2 % |
| 1983-84 | 34.2 % |
| 1984-85 | 39.0 % |
| 1985-86 | 43.5 % |

குடும்ப நலஅறுவைச் சிகிச்சைக்குரிய தம்பதியினர் நலத்தைப் பாதுகாத்து அத்தகையோர் சதவீதத்தைப் பெருக்கி மக்கள் தொகை பெருக்கத்தைக் குறைப்பதே இதன் நோக்கமாகும். அதே சமயத்தில் பிறப்புவீதம், இறப்புவீதம், குழந்தை இறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் தேசிய சுகாதாரக் கொள்கையாக இந்நாட்டில் கி.பி. 2000க்குத் திட்டமிடப்பட்ட இலக்குக்கு மாறாக 1990 ஆண்டில் 1000 பேருக்கு பிறப்பு இறப்பு வீதத்தை முறையே 2119 ஆகக் குறைப்பதே நம் திட்டங்களின் நோக்கமாகும்.

## குடும்பநலக்கல்வி

## குடும்பநலப் பிரச்சாரக்கல்வி தகவலளிக்கும் திட்டம்

மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தகுதியுள்ள தம்பதியர், “திட்டமிட்டக் குடும்பம்” என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுவது குறித்து அவர்களுக்கு விளக்கி அவர்கள் அதனைப் பின்பற்றச் செய்வதில் மேற்சொன்ன பிரிவு முக்கியப் பங்காற்றுகிறது. இவ்வமைப்பு வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் போன்றவற்றின் மூலமாக குடும்பநலத் திட்டத்தைக்

குறித்து இடைவிடாது பிரச்சாரம் செய்கிறது. மேலும் கட்டுமான விளம்பரங்கள், போக்குவரத்து வண்டிகளில் சுவரொட்டிகள், சுவரோவியங்கள் மூலமாக விளம்பரப்படுத்துவதன் மூலமாகவும் மேற்சொன்ன திட்டத்தைப் பிரச்சாரம் செய்வதோடு திரையரங்குகளில் (Slides) சருக்காடிகள் மூலமாகவும் பிரச்சாரப் பணியைச் செய்கிறது. மேலும் பிறப்பு விதத்தைப் பெருமளவில் கட்டுப்படுத்த வேண்டும். என்ற அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தற்காலிக குடும்பநலத் திட்ட முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை இளம் வயதினரிடையே போதிப்பதில் தனிக்கவனத்தைச் செலுத்துகிறது. பொருட்காட்சிகள், தெருக்கூத்துகள், நாடகங்கள், சிறப்புத் திரைப்படங்கள் ஆகியவற்றை நடத்துவது போன்றவை பொது மக்களிடையே தொடர்பு கொள்ளும் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். திட்டமிட்டக் குடும்பம் என்னும் கோட்பாட்டைச் செயற்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்படுகிறது.

தகுதியான தம்பதியரிடம் ‘திட்டமிட்ட குடும்பம்’ என்ற கோட்பாட்டை நயம்பட எடுத்துரைப்பதற்காக, அவர்களுடன் அவர் கருத்துருவாக்கும் தலைவர்களை (Opinion Leader) நேரடித் தொடர்பு கொள்ளவைத்து மேற்சொன்ன திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். கடந்த ஒன்பது ஆண்டுகளில் கிராம தலைவர்களுக்கான ஒன்பதாயிரம் குடும்பநலப் பயிற்சி முகாம்கள் தனியாக நடத்தப்பட்டன.

## குடும்பநலன் குறித்த இளைஞர் சங்கங்கள்

1985ஆம் ஆண்டு அனைத்து நாட்டு இளைஞர் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. எனவே ‘திட்டமிட்ட குடும்பம்’ என்ற கோட்பாட்டை மக்களிடையே

*பரப்புவதற்காக இளைஞர்களை ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமுடையதாகும். என்று அரசு கருதியது. அதன் படி மாவட்டங்களில் 160 குடும்பநல இளைஞர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.2000 என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மாநிலம் முழுவதற்கும் ரூ3.20 இலட்சம் செலவிடப் படுகிறது. இந்த இளைஞர் சங்கங்கள் வழக்கமாகக் கிராமங்களில் அமைந்திருக்கின்றன அவற்றில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுடன் குடும்பநலத் தலைவர் முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்ட உள்ளூர்த் தலைவர் களும் உறுப்பினர்களாவர். தினசரிப் பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் விளையாட்டுப் பொருட்கள் முதலியவையும் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. சங்க உறுப்பினர் களின் பயனுக்காக அருகிலுள்ள தொடக்க சுகாதார நிலையத்தின் மருத்துவ அதிகாரி—வட்டார விரிவாக்கப் பயிற்சியாசிரியர், மகப்பேறு குழந்தை நலம்—சத்துணவு, சுற்றுப்புற சுகாதாரம், குடும்பநலத்திட்டம், ஏனைய பொருள்கள் குறித்து வாராந்திர மாதாந்திரக் கூட்டங்களை நடத்துகிறார். கிராமப்புற மக்களிடையே திட்டமிட்டக் குடும்பத்தின் முக்கியத்தவத்தை எடுத்துக் கூறுவதில் இந்த இளைஞர் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.*

## புதிய முறையிலான விளம்பரம்

*குடும்பநலத்திட்டம் குறித்த பொன்மொழி முழக்கங்கள் சிமிட்டிப் பலகைகளிலும் பெரிய கட்டுமான விளம்பரங் களிலும் எழுதப்பட்டு வருகின்றன. இத்தகைய விளம்பரங் களை அமைப்பதில் பல துறைகளின்—குறிப்பாக பால்வள நிறுவனம், வேளாண்மைத்துறை, குடும்பநலத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்பு நன்கு வெளிப்படுகிறது. மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிக்காப்டரைப் பயன்படுத்தி நகர்புற குடிசைப் பகுதிகளில் குடும்பநலம் பற்றிய*

*தகவலடங்கிய துண்டு பிரசுரங்களை வீசியதால் பொது மக்களிடம் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதேபோல மாவட்டங்களிலும் மாநிலத் தலைமையிடங் களிலும் வெவ்வேறு பணிச்சங்கங்கள் நடத்திய ஊர்வலங் களும், திட்டமிட்ட குடும்ப நலம் தொடர்பான, பல்வேறு காட்சி விளம்பரங்களையும் அமைத்து மிகச்சிறந்த பயனை அளித்துள்ளது. பெண்கள் தொண்டு நிறுவனம் ஒன்று சேர்ந்து தேவையில்லாமல் குழந்தைகள் பெறுவதிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்று கோரி சென்னை மாநகரில் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தி, பெறும் வெற்றி கண்டனர்.*

*மருத்துவ மனைகளில்— மகப்பேறுக்குப்பின் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைப் பிரிவுகளைப் பொழுது போக்குக் கல்விமையமாக உருவாக்கிப் பல தனியார் தொழில் நிலையங்களும் தொண்டு நிறுவனங்களும் முன்வந்திருப்பது அதனை ஊக்கப்படுத்துவதாகியது. ஒவ்வொரு மருத்துவமனையிலும் மகப்பேற்றுக்குப்பின் செய்யும் கருத்தடை அறுவைசிகிச்சை வார்டின் பொது வான சூழ்நிலையை மேம்படுத்துவதற்குத் தனி பராமரிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்த வார்டு மருத்துவமனையில் சிறந்த மிகவும் வசதியான இடத்தில் அமைக்கப்பட வேண்டும். என்றும் பொதுப் பணித்துறைகளுக்கு மாநில அரசு உத்தரவுகள் பிறப்பித் துள்ளது. அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறவர்கள் வார்டில் இருக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக பொழுது போக்க முடியும் என்ற எண்ணத்தில் மகப்பேறுக்குப்பின் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்யும் மையங்களில் வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள், வீடியோ காசெட் ரெக்கார்டர்கள், மின்விசிறிகள், சுவர் அலங்காரப் பொருட்கள் கொண்டதாக அமைந்திருக்கும் வகையில் தனியாரிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன.*

## பொதுமக்களுக்கான தனி அறிவுரைச் செய்திகள்

இம்மாநிலத்தில் பல்வேறு திட்ட இலக்கில் தனி அறிவுரைச் செய்திகளைப் பொதுமக்களுக்குப் பரப்புவதில் 1984—85ம் ஆண்டில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப் பதைக் காணலாம். மாநிலத்தில் நில உடைமையாளர் களிடையே 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரிசு' என்ற கருத்தைப் பரப்புவதற்குப் பெரியார் மாவட்டத்திலுள்ள அய்யம் புதூர் கிராமம் ஒரு முன் மாதிரியாக விளங்கி வருகிறது. அய்யம்புதூர் கிராமம் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப் பாளையம் பேரூராட்சியில் அமைந்திருக்கிறது. இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் குறைந்தது இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிட்ட குடும்பநலக் கோட்பாட்டை முறையாகப் பின்பற்றி வருகின்றனர். அதன் பலனாக ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரிசு என்ற நடைமுறையை அவர்கள் பின்பற்றத் தொடங்கியதி லிருந்து அவர்களிடையே அரசு செய்திப் படங்கள் தயாரித்து வெளியிட்டதன் மூலம் அதிகக் குழந்தைகள் பிறப்பதால் அவர்களிடையே நில உடைமைகள் துண்டாடப்படும் என்பதையும் அதனால் அவர்களது நிலஉடைமை பெருமளவு குறையும் என்பதையும் கிராம விவசாயிகளிடையே எடுத்துக் கூறுவதில் பெருமளவு வெற்றி ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு வெவ்வேறு மாநில அரசுப் பணியாளர் சங்கங்கள் 1984 ஆம் ஆண்டை கருத்தரிக்காத ஆண்டாக, 1985 ஆம் ஆண்டினைக் குழந்தைகள் பிறக்காத ஆண்டாகவும் எடுத்துக் கொள்ள உறுதி எடுத்துக் கொண்டனர். 58 வயதில் ஓய்வு பெறும் நிலையில் உள்ள அரசுப்பணியாளர்கள் அவர்களுடைய 33 ஆம் வயதுக்குப் பின் குழந்தைகளைப் பெற்றெடுக்கக் கூடாது. அவ்வாறு

பெற்றெடுப்பதனால் அவர்கள் பணியிலிருந்து ஓய்வடையும் முன் கடைசியாகப் பிறந்த குழந்தைக்குச் சரியான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது என்ற அறிவுரையை அறிந்து அவர்கள் பாராட்டினர். அவ்வாறே பணிபுரியும் மகளிர் குழந்தை களைப் பெற்றெடுப்பதற்கு ஏற்ற வயது 20 முதல் 25 வயது வரையாகும் என்றும், ஒரு பெண் 25 வயதில் அல்லது 25 வயது வாக்கில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்த கொள்வாரேயானால் பிறந்த குழந்தைக்காக கண்விழித்து சொல்லலொணாத் துன்பம் அடைவதிலிருந்து தப்பித்து அவருடைய பணியில் முழுகவனம் செலுத்த முடியும் என்றும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பொதுமக்களுக் கான இத்தகைய தனி அறிவுரைச் செய்திகள் வெவ்வேறு வகைத் தொழிலாளர்களிடையே பேரார்வத்தை ஏற்படுத்தியதோடு திட்டமிட்ட குடும்பநல கோட்பாடு களை ஏற்றுக் கொள்ளுவதற்கு ஒரு தூண்டுகோலாய் அமையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## திரைப்படங்கள் தயாரித்தல்

குடும்பநலம் தொடர்பான பல்வேறு தலைப்புகளில் 15.15 இலட்சம் ரூபாய் செலவில் 12 வண்ணத் திரைப் படங்கள் மாநில அரசு தயாரித்து, வர்த்தக ரீதியான திரைப்படக் கொட்டகைகள் மூலம் திரையிடப்படு வதற்காக வெளியிட்டுள்ளது. திரைப்படம் காண்போரிடம் நன்மை பயக்கும் பழக்க வழக்கங்களை உருவாக்கத் திரைப்படம் பெருமளவில் துணை புரிந்துள்ளது என்பதையும் அதனால் பொது மக்களிடையே திட்ட மிட்ட குடும்பக் கோட்பாட்டை வளர்க்கும் வாய்ப்பு பெற்றுள்ளது என்பதையும் அரசு உணர்ந்துள்ள காரணத் தால் இவ்வாறு செய்கிறது.

**கொண்டு சீரான முறையில் செயற்படுத்தப்படுகிறது**

*1. தகவல் தொடர்பு*

*2. குடும்பநலக் கல்வி*

*3. பணிகள்*

*4. தொடர் திட்டங்கள்*

*5. மகப்பேறு குழந்தை நலத் திட்டங்கள்*

*இம்மாநில மக்களிடையே தகவல் தொடர்பு அமைப்பை உருவாக்க இந்த சீரான நடைமுறை வழி வகுக்கிறது. இத்திட்டத்தின் நடைமுறை வழி வகுக்கிறது. இத்திட்டத்தின் குடும்ப நலக் கல்வியம்சத்தில் கருத்தடைச் சாதனம் முதலியவற்றின் உபயோகம் குறித்துப் போதிப்பதற்கான பயிற்சி சாதனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதே சமயத்தில் பல்வேறு குடும்பநலச் சேவைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளவர்களுக்கு நிறுவன அடிப்படையிலான வசதிகளைச் செய்து கொடுப்பதும் இச் சேவைகளில் அடங்கும்.*

## ஒன்று பெற்றால் ஒளி மயம்
## அதிகம் பெற்றால் அல்லல் மயம்

*தொண்டு பணி நிறுவனங்களின் உறுப்பினர்கள் (மகளிர்) மருத்துவமனைகளுக்கு குறிப்பாகப் பிந்திய அறுவைச் சிகிச்சை நிலையங்களில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள தயாராக உள்ளவர்களைக் கண்டு அவசியமான உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளனர். சமூகத்தின் இத்தகைய நடுத்தர மேல்நிலை மக்களின் புதிய அணுகுமுறை சமூகத்தின் நலிந்த பிரிவினர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளப் பெருமளவில் ஊக்கமளிக்க உதவுகிறது.*

*கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் இல்லங்களுக்கு இம்மகளிர் தொண்டர் தொடர்ந்து சேவை புரியச் செல்கின்றனர். கருத்தடை அறுவை சிகிச்சைக்கும் பிந்திய அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட வர்களுக்கும் மருத்துவ நிலையத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றனர். இது ஒரு புதுமைத் திட்டமாகும். இத்திட்டம் சென்னை மாநகரிலுள்ள அரசின் பெரிய மகப்பேறு மருத்துவமனைகள் சிலவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய திட்டம் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் நலன் மட்டுமின்றி அவர்களின் குழந்தை குறைந்த பட்சம் ஐந்து வயதேனும் அமையும் வரை அவர்களுடைய தேவைகளையும் கவனித்து கொள்கிறது. மகப்பேறு குழந்தை நலத் திட்டமானது. குடும்பநலத் திட்டத்தின் துணைத் திட்டமாகும். அதை ஒழுங்காகச் செயல்படுத்தி னால் குடும்பநலத்திட்டம் வெற்றி பெறுவது உறுதி.*

## நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளில் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலப்பணிகள் தீவிரப்படுத்தும் திட்டம்.

*நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளில் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலப் பணிகளைத் தீவிரப்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 15 நகராட்சிகளும் 3 மாநகராட்சி களும் மற்றும் 3 நகரியங்களும் சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்படுவதற்குத் தகுதி பெற்றுள்ளன. இதுவரையிலும் 6 நகராட்சிகளிலும் மற்றும் சென்னை நகரின் ஒரு புதிய பகுதியிலும் ஆக மொத்தம் 53 சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.*

*பல்வேறு வகையிலும் குடும்ப நலத் திட்டத்தின் வெற்றிக்கு உழைத்து வரும் தமிழக அரசு 1986 ஆம்*

*ஆண்டினைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக அறிவித்துத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் முதல் பரிசாக ரூ.2.5 கோடி 1984—85 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் குடும்பநலத்திட்ட சாதனைக்காக வழங்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு இரண்டாவது முறையும் முதலிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தொடர் வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்து வரும் ஆலோசனைகளும் ஊக்கமும், ஈடுபாடுமே ஆகும்.*

*இம்மாநிலத்தில் குடும்பநலத் திட்டம் கீழ்க்காணும் ஐந்து அடிப்படைகளைக் தொடங்கி செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் 1986 ஏப்ரல் 14ல் இக்கிளையைத் தோற்றுவித்தார்கள்.*

## இலக்கை மிஞ்சிய சாதனைகள்

*1977—78 முதல் 1985—86 வரையிலான கால அளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கிணங்க கருத்தடை அறுவைச் சிகிச்சையின் கீழ் எய்திய சாதனையைப் பின்வரும் விவர அறிக்கை காட்டுகிறது.*

*தமிழ்நாடு 1981—82, 1983—84, 1984—85. 1985—86ம் ஆண்டு களில் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு நிர்ணயித்த இலக்கைக் காட்டிலும் அதிக அளவு சாதனையை எய்தியுள்ளது என்பதை இவ்விவர அறிக்கைகளிலிருந்து காணலாம்.*

*பல்வேறு வகையிலும் குடும்ப நலத்திட்டத்தின் வெற்றிக்கு உழைத்து வரும் தமிழக அரசு 1986 ம் ஆண்டினைத் திட்டமிட்ட குடும்ப நல ஆண்டாக அறிவித்துத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மத்திய அரசின் முதல் பரிசாக ரூ. 2.5 கோடி 1984—85ம் ஆண்டு தமிழ்நாட்டில் குடும்பநலத்திட்டச் சாதனைக்காக*

வழங்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு இரண்டாவது முறையும் முதலிடம் பெற்றுள்ளது. இத்தொடர் வெற்றிக்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் அளித்து வரும் ஆலோசனைகளும் ஊக்கமும் ஈடுபாடுமே ஆகும்.

| ஆண்டு | இலக்கு | சாதனை | சாதனை விகிதம் |
|---|---|---|---|
| 1977-78 | 3,50,000 | 1,11,587 | 31.9% |
| 1978-79 | 2,76,700 | 2,16,478 | 78.2% |
| 1979-80 | 2,82,000 | 1,57,642 | 55.9% |
| 1980-81 | 1,82,000 | 1,38,831 | 76.2% |
| 1981-82 | 1,82,000 | 1,88,828 | 103.4% |
| 1982-83 | 2,92,000 | 2,66,279 | 91.2% |
| 1983-84 | 3,99,000 | 4,96,780 | 124.5% |
| 1984-85 | 4,75,000 | 5,25,431 | 110.6% |
| 1985-86 | 4,75,000 | | |



# சித்தமருத்துவக் கல்வி சிகரத்தைதொட்ட வளர்ச்சி

## சித்தா, ஆயுர்வேதா, யுனானி சிகிச்சை மறுமலர்ச்சி

**சி**த்த மற்றும் ஆயுர்வேத மருத்துவங்களும் தலைமுறை தலைமுறையாக தமிழகத்தில் சாதனைபுரிந்த வரலாறு இருக்கத்தான் செய்கிறது. ஆங்கில மருத்துவ மோகத்தாலும் அதன் வளர்ச்சி வேகத்தாலும் புதிய தலைமுறையினருக்கு நாட்டுவைத்தியங்கள் என்று சொல்லப்படும் சித்தா, ஆயுர்வேதம், யூனானி, போன்ற வைத்திய முறையின் மகத்துவம் தெரியாமல் போய்க்கொண்டிருந்தது. ஆங்கில மருத்துவத்தின் அடிப்படையே சித்த வைத்தியம் அதாவது மூலிகை வைத்தியம்தான். கடந்த காலகட்டத்தில் அந்த வைத்தியம் அளப்பறிய அதிசயங்களை நிகழ்த்திக் காட்டியிருப்பதை மறுக்க முடியாது. இப்போது அந்த வைத்தியத்தை நம்புவோரும் நாடுவோரும் பயனடைந்து வருவோரும் ஏராளமாக உள்ளனர். அவர்களால்தான் அந்த மருத்துவத்தால் பயன்அடைந்தும் வருகிறார்கள்.

இந்த நிலையில் எம். ஜி. ஆர் அரசு, பாரம்பரியமான மூலிகை மருத்துவங்களில் ஓரளவு நிலைத்த நிற்கிறது. மேலும்மேலும் அதன்மூலம் மக்கள் பயன்பெற வேண்டும், அந்த பாரம்பரிய மருத்துவ முறைகள் பேணப்பட வேண்டும் என்ற சிறப்பான நோக்கத்தோடு சித்த மருத்துவத்துறைக்கு பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியது, எம்.ஜி.ஆர். அரசு!

1977—78ம் கல்வியாண்டில் பி. எஸ். எம். எஸ் என்னும் பட்டப்படிப்பு இந்திய மருத்துவ மையக் கழகத்தால் அனுமதியளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1978—79ம் ஆண்டு முதல் பி. எஸ். எம். எஸ். படிப்புக்கு ஆண்டு தோறும் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40லிருந்து 44க்கு உயர்த்தப்பட்டது. 1980—81ம் ஆண்டு முதல் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. மேற்கொண்டு 1984—85ம் ஆண்டு 77லிருந்து 100 ஆக பி. எஸ். எம். எஸ். மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது மூன்றாண்டு பயற்சிக் காலமுள்ள சித்த மருத்துவம், சித்த குணபாடம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்ட சித்தா மேற்பட்ட படிப்பு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் பயிற்சி பெறத் தேர்ந்து எடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேற்கண்ட இருபிரிவுகளுக்கும் சேர்த்துப் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை 21ஆக 1983—84ல் உயர்த்தப்பட்டது.

1985—86ம் ஆண்டு அரசு பட்ட மேற்படிப்பில் சிறப்பு மருத்துவம். பாலர் மருத்துவம் ஆகிய மேலும் இரு பிரிவுகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பட்ட மேற்படிப்புப் பயிற்சியாளர்களுக்கு அதிகபடியான உதவித் தொகை 20.10.1981 முதல் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவை வருமாறு.

*5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடித்த பணியிலுள்ளவர்கள் மற்றும் அவர்களின் தகுதி காண் பருவம் முடிந்திருந்தால் மாதம் ஒன்றிற்கு ரூ. 650 பெறுவார்கள்.*

*5 ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்ட பணி முடிந்த பணியிலுள்ளவர்கள் மாதம் ஒன்றிற்கு ரூ. 525 பெறுவார்கள்.*

*தற்காலிக நியமனங்களிலுள்ளவர்களும் பணியில்லாதவர்களும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 பெறுவார்கள் மருந்தாளுநர் பட்டயப்படிப்புப் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையிலும் நடத்தப்பட்டு வருகிறது. 1981/82க்கு முன் ஆண்டுதோறும் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் சித்தாவில் 7 பேர்களும் ஆயுர் வேதாவில் 5 பேர்களும், யுனானியில் 5 பேர்களும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தாவில் 8 பேர்களும் தேர்ந்து எடுக்கப் பட்டார்கள். 1981—82 முதல் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் 8லிருந்து 25 மாணவர்களாகவும் சென்னை அரசினர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் 7லிருந்து 25 சித்தா மாணவர்களாகவும் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. 1983—84ம் ஆண்டு முதல் ஆயுர்வேதம், மற்றும் யுனானிக்கான பட்டயப்படிப்பு (டிப்ளமா இன் ஃபார்மசி) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றிற்கான அனுமதிக்கப்பட்ட தலா 5 இடங்களை சித்தா மருந்தாளுநர் படிப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு எண்ணிக்கை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் 30 இடங்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னையில் 30 இடங்களும் ஆக மாற்றப்பட்டன.*

*1984—85ஆம் ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிற்சி நிலையங்களிலும் 50ஆக உயர்த்தப்பட்டது. மே 1982—ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (சித்தா) என்ற பெயர் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது. பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் கீழ்கண்ட சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.*

*உடல் கூற்றியியல் பிரிவுக் கட்டடம் கட்டுதல் (1979—80).*

*ஆண், பெண் மாணவர்களுக்கு தனித்தனி மாணவர் இல்லம் கட்டுதல் (1979—80).*

*பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி கட்டுதல் (1979—80).*

*பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி கட்டுதல் (1979—80)*

*உடற்கூற்றியியல் பிரிவுக்கான தளவாடங்கள் வாங்குவதற்காக 1981—82ல் அனுமதி வழங்கப்பட்டு வாங்கப்பட்டன. 1983—84ம் ஆண்டு பட்ட மேற் படிப்புகான தனிக்கட்டடும், விலங்கின* (Animal House) *கூடத்திற்கான கட்டடமும் கட்ட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.*

*1984—85ல் பட்டப்படிப்பில் குணப்பாடம் உடற்கூறுகள், உடல் தத்துவம், நோய் நாடல் ஆகிய நான்கு பிரிவுகளின் வளர்ச்சிக்காக, பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பிற பணியாளர்களும் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.*

*1985—86ம் ஆண்டு பட்டப்படிப்பில் (1) மருத்துவம் (2) அறுவை மருத்துவம் (3) சூல் மருத்துவம் மகளிர் மருத்துவம், மற்றும் பிள்ளைப்பிணி மருத்துவம் (4) நஞ்சு நூல், மருத்துவ நிதி நூல் ஆகிய நான்கு துறைகளின் மேம்பாட்டிற்கான*

*கூடுதல் பணியாளர்கள் நியமிக்க ஆணை வழங்கப்பட்டது.*

## இணையற்ற இந்தியமுறை மருத்துவம்

*இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி முறை மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக அரசு தீவிரமாக முயற்சிகள் மேற்கொண்டது என்பதை 1977—78 முதல் 1986—87 வரை அத்துறைக்காக அரசு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொகை ஒதுக்கீடு செய்துள்ளதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.*

*நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வருவதைப் பின்வரும் விவர அட்டவணையிலிருந்து காணலாம்.*

| ஆண்டு | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு |
|---|---|
| 1977-78 | ரூ. 63.88 லட்சம் |
| 1978-79 | ரூ. 64.72 லட்சம் |
| 1979-80 | ரூ. 113.70 லட்சம் |
| 1980-81 | ரூ. 129.45 லட்சம் |
| 1981-82 | ரூ. 231.20 லட்சம் |
| 1982-83 | ரூ. 235.72 லட்சம் |
| 1983-84 | ரூ. 243.09 லட்சம் |
| 1984-85 | ரூ. 266.57 லட்சம் |
| 1985-86 | ரூ. 330.47 லட்சம் |
| 1986-87 | ரூ. 348.82 லட்சம் |

*15.11.1985 அன்று அண்ணா மாவட்டம் பழனியில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 50 மாணவர்கள் பி. எஸ். எம். எஸ். பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதற்குரிய பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*1979—80ம் ஆண்டு அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி (யுனானி) சென்னையில் 15 மாணவர்களுடன் ஆரம்பிக்கப் பட்டது. நவம்பர் 1982ல் அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி (யுனானி) என்ற பெயர் அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரி என்று மாற்றப்பட்டது.*

*இந்திய முறை மருத்துவ நிலையங்களில் செவிலியர் பணிகளைக் கவனித்து கொள்ள அலோபதி முறைப் பயிற்சி பெற்ற செவிலியர் தற்போது பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இந்திய முறை வைத்தியத்தில் பயிற்சி தரும் திட்டத்தை 1980—81ல் அரசு அனுமதித்துள்ளது.*

*1982—83ல் அரசு யோக முறையை ஒரு வைத்திய முறையாக ஏற்றுக் கொண்டுள்ளது.*

*கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகத்தில் இருந்த ஓமியோபதி மருத்துவக் கல்லூரி 28.8. 1985—ல் சென்னையிலிருந்து மதுரை மாவட்டம் திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. 1983—84—ஆம் ஆண்டு ஒரு இடம் அதிகரிக்கப்பட்டு மொத்த இடங்கள் 22—ஆக உயர்த்தப்பட்டது. 1985—86 ஆம் ஆண்டு ஓமியோபதி மருத்துவ பட்டயப்படிப்புக்காக (பி. எச். எம். எஸ்) மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது.*

## சித்த மருத்துவமனைகள்

*1977க்குப் பிறகு சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகள் பின்வருமாறு.*

*சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் அரசிதழ் பதிவில்லா ஊழியர்களுக்கு என்று தனி வெளிநோயாளிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.*

*1979—80ல் நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.*

*மருந்து செய் நிலையம் இயந்திரமயமாக்கும் பணி 1979—80ல் ஆரம்பிக்கப்பட்டது*

*1982—83ல் ஆம் ஆண்டில் நோய்க் குறியியல் ஆய்வகம், உயிர் வேதியியல் ஆய்வகம் ஆகியவற்றிற்குப் பணி யாளர்கள் நியமிக்கவும் சாதனங்கள் வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டப்பிரிவுகள் 19.4.1982 முதல் இயங்கி வருகிறன.*

*1983—84ம் ஆண்டு மருத்துவ ஆவணப்பிரிவு (மெடிக்கல் ரெகார்டு செக்ஷன்) ஏற்படுத்தப்பட்டது.*

*1977க்கு பிறகு பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனையில் செய்யப் பட்ட சாதனைகள் பின் வருமாறு.*

*ஒரு புதிய புற நோயாளர் பிரிவு டிசம்பர் 1978—ல் திறக்கப் பட்டது.*

*1980—81ல் நவீன வசதிகளோடு கூடிய சமையற்கூடம் அனுமதிக்கப்பட்டது.*

*இயந்திரமாக்கப்பட்ட மருந்து செய் நிலையம் 1980—81 லும், 1982—83ம் அனுமதிக்கப்பட்டது.*

*ஊடு கதிர்ப் பிரிவுக்கான கட்டடம் கட்ட 1982—83ல் அனுமதிக்கப்பட்டது.*

*1982—83ல் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவின் கட்டடம் கட்ட அரசு அனுமதித்துள்ளது.*

*1983—84ம் ஆண்டு ஊடுகதிர் சாதனம் வாங்கவும். அதற்குரிய பணியாளர்களை நியமிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.*

*1984—85ம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்தொட்டி கட்ட அனுமதி வழங்கப்பட்டது.*

*1986—87ம் ஆண்டு மருத்துவமனையின் படுக்கைகளின் எண்ணிக்கை 232லிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டது.*

*1979—80ல் தாலூகா, மற்றும் தாலூகா அல்லாத மருத்துவ மனைகளில் 15 சித்தா பிரிவுகளும், 1980—81ல் 15 சித்தர் பிரிவுகளும் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. தற்போது மாவட்டத்தலைமை, தாலுக்கா மற்றும் தாலூகா அல்லாத மருத்துவமனைகளில் 103 சித்தர் பிரிவுகள் இயங்குகின்றன.*

*தமிழ்நாட்டில், 8 அரசினர் சித்த மருந்தகங்களும் 5 ஆயுர்வேத மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. 1984—85—ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1985—86 ஆம் ஆண்டு சென்னை பட்டினப்பாக்கத்தில் ஒரு மருந்தகம் தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய ம—ருத்துவமனையுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும், பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக்கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மருந்து செய் நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.*

*25 படுக்கைகள் கொண்ட அரசினர் ஓமியோபதி மருத்துவக்கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனை இயங்கி வருகிறது.*

*1975—76ம் ஆண்டு அரசின் மாவட்ட தலைமை மருத்துவமனை திண்டுக்கல்லில் ஒரு ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. 1978—79ம் ஆண்டு சேலம் மாவட்டத்தலைமை மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்*

பட்டுள்ளது. 1980—81ம் அண்டு ஆறு மாவட்டத்தலைமை மருத்துவமனைகளின் ஓமியோபதிப் பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1981—82ம் ஆண்டு 7 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் ஓமியோபதி பிரிவு தொடங்க ஆணை வழங்கப்பட்டது. 1984—85 ஆம் ஆண்டு சென்னையில் இரண்டு அரசினர் ஓமியோபதி மருந்தகங்கள் தொடங்க ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட அனைத்து ஓமியோபதி பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் 1983ம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்கீழ் இயங்கி வரும் விற்பனைப் பிரிவு மூலம், சித்தா ஆயுர்வேதம், யுனானி தொடர்பான நூல்கள் வெளியிடப்படுகின்றன.

சித்த மருத்துவ வாரியத்தால் நாட்டு மருந்துகள் குறித்து பன்னாட்டு மாநாடு ஒன்று 1986 சனவரி 23 முதல் 25ம் நாள் வரையில் சென்னையில் நடத்தப்பட்டது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு மருந்துச் செடிப் பண்ணைகள் மூலிகை மருந்துக்கழகம் 1.8.1984 முதல் இயங்கி வருகிறது. மூலிகைத் கூந்தல் தைலத்தைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

மூலிகைத் தேயிலை, மூலிகை பால்பெருக்கி, மூலிகைப் பற்பொடி கண் சொட்டு மருந்து, ஏனைய இந்திய மூல மருந்துகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.



# உணவுத்துறையின் ஒப்பற்ற பணிகள்

## ஆய்வுக்குழுவின் அறிக்கையும் அரசின் வேகமும்

***1981****ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஐந்து தடவை விலையை உயத்தியுள்ள போதிலும், தமிழக அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலையை மாற்றி அமைக்கவில்லை.*

*இம்மாநிலத்தில் 20,723 நியாய விலைக்கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன இவற்றில் 15,648 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும் 5011 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தாலும், 64 கடைகள் மலைத்தோட்ட நிர்வாகங்கள், தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நியாயவிலை கடைகள் மூலமாக 119.65 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.*

*தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாயவிலைக் கடைகள்*

அனைத்தையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசு ஆணைக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இது குறித்து மற்றொரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விரைவில் உச்ச நீதி மன்றத்தின் ஆணைகள் பெறத்தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலை பற்றி ஆராய மாநில கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரை தலைவராகக் கொண்டு அரசு அமைத்த குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இதை எம்.ஜி.ஆர். அரசு உடனடியாக பரிசீலனை செய்து செயல்படுத்தியது.

## அரிசி விநியோகத்தில் மாபெரும் சாதனை

1985—86ம் ஆண்டில், இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 28—2—1986 வரையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 9.98 லட்சம் டன்களாகும். ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாதமொன்றுக்கு 1.03 லட்சம் டன்களாக இருந்த அரிசின் விநியோக அளவு, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அளவைக் குறைத்தாலும், போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதை தீவிரப்படுத்திய தாலும், ஆண்டின் கடைசி நான்கு மாதங்களில் மாத மொன்றுக்கு சுமார் 70,000 டன்களாகக் குறைந்துள்ளது.

## கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள்.

மத்திய அரசு முன்பு போலவே இந்த ஆண்டும் மாத மொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை இம்மாநிலத் திற்கு ஒதுக்கீடு செய்தது. ஆனால் பொது விநியோக முறையின் கீழ் கோதுமை வாங்குவது தொடர்ந்து குறைவாகவே உள்ளது. மத்திய அரசின் மொத்த

ஒதுக்கீடான 3,30,000 வரையிலான காலத்தில் 57,702 டன் கோதுமைதான் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1.2.1986 முதல் கோதுமை விற்பனை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்த்தியது. இதன் காரணமாக மாநில அரசு கோதுமையில் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 2.05 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

## சர்க்கரை விலை உயர்வதை தடுத்த அரசு

நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கப்படும் லெவி சர்க்கரை நியாயவிலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 450 கிராம் என்ற அளவில் விநியோகிக்கப் படுகிறது. கிலோ ஒன்றுக்கு 4 ரூபாயாக இருந்த லெவி சர்க்கரையின் விலை 1.4.1985 முதல் 4.40 ரூபாயாகவும் 1.12.1985 முதல் 4.80 ரூபாயாகவும் மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 1985ம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட் முதல் சனவரி 1986 முடியவும், கார்டிற்கு மாதமொன்றுக்குக் கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது.

1985 ஜூன் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் வெளி அங்காடியில் சர்க்கரை விலை உயர ஆரம்பித்த போது வழக்கமாக இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் 21. 292 டன்களும், கூடுதலாக மாதமொன்றுக்கு 3,402 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கப்பட்டதால் வெளிச் சந்தைவிலை கட்டுபடுத்தப்பட்டது. இதைத் தவிர, விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்டது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த வெளிச்சந்தை சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்தி, சர்க்கரை விலை வெளிச்சந்தையில் உயர்வதை இந்த அரசு தடுத்தது.

*மாதம் ஒன்றுக்கு இம் மாநிலத்துக்குதேவைப்படும் 60,000 கிலோ லிட்டரில், மத்திய அரசு 47,000 கிலோ லிட்டரைத் தான் ஒதுக்கீடு செய்கிறது, வெள்ளநேரத்தில் அதிகபடியாக 1,000 டன் மண்ணெண்ணெய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குடும்ப அட்டை தாரர்களுக்கு, அதை வழங்க மாவட்ட ஆட்சி தலைவருக்கு அதிகாரம் வழங்கப் பட்டள்ளது. பெட்ரோலியம் பொருட்களின் விலையை மத்திய அரசு ஏற்றிய காரணத்தால், மண்ணெண் ணெய்யின் விற்பனை விலை சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் லிட்டர் ஒன்றுக்கு 2. 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.*

## சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாடு

*மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு மாதமொன்றுக்கு 3,600 டன்கள் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகத்தின் மூலம் மாதமொன்றுக்கு 1,000 டன்கள், டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெயைச் சீராக விநியோகம் செய்வதற்குத் தேவையான உள்ளமைப்பை இம்மாநிலம் —ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. 1.4.1985 மதல் 28.2.1986 வரையிலான காலத்தில் 56,645 டன்கள் சமையல் எண்ணெய் பொது விநியோக முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட அளவை விட இந்த ஆண்டு சமையல் எண்ணெய் விலை கட்டப்பாட்டிலேயே உள்ளது. மத்திய அரசு பாமாலின் விலையை டன்னுக்கு 1000 ரூபாய் ஏற்றியதால், சில்லறை விலையை கிலோ ஒன்றுக்கு 11.85 ரூபாயாக இவ்வரசு நிர்ணயித்துள்ளது.*

## அனைத்து நலிவுற்றோருக்கான துணி

*மத்திய அரசு, 1985 ஏப்ரல் மாதம் கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்றோருக்குச் சென்றடையும் வகையில்*

*கட்டுப்பாட்டுத் துணியின் விநியோகம் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டது கட்டுப்பாட்டுத்துணி அனைத்து நலிவுற்றோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வரசு கிராமப் பகுதிகளிலும் நகர்புறங்களிலும் மாதம் 1,000 ரூபாய்க்குக் குறைவான வருவாய் உள்ள கட்டுப்பாட்டுத் துணி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. 1985—86ம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப் பாட்டுத்துணி இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகளோடு காலமுறைக் கட்டங்கள் நடத்தி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் கட்டுப்பாட்டுத் துணி வழங்கப்படுவதை கண்காணித்து வருகிறார்.*

## நுகர்பொருள் வாணிபக்கழகம் ஏற்பு

*1985—86ம் ஆண்டில் 28.2.1986 வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் 2.02 இலட்சம் டன்கள் அரிசியையும், 28,710 டன்கள் பருப்பு வகைகளையும் 6,179 டன்கள் சமையல் எண்ணெயையும், 66,504 சத்துணவு மையங்களுக்கு வழங்கியது. இதனால் 86,88 இலட்சம் குழந்தைகளும் 1,99,794 முதியோர் உதவித்தொகை பெறு வோரும், 112 முன்னாள் படைவீரர்களும், பயனடை கிறார்கள். சென்ற ஆண்டு கொள்கை விளக்க குறிப்பில் அறிவித்தபடி, இம்மாநிலத்தின் எல்லா சத்துணவு மையங்களுக்கும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களைக் கொண்டு செல்லும் பணியைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்று நடத்துகிறது.*

## நவீன அரிசி அரைப்பு ஆலைகள்

*அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குவதன் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு, இதுவரை 10 கருத்*

*தரங்குகள் நடத்தப்பட்டன. 15 செயல்முறை விளக்க மையங்களில் பொருத்துவதற்குத் தேவையான இயந்திரங் களை வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.*

*தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதை கிடங்குகளில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்களைப் பொது விநியோகத்திற்கு வழங்குதல் அகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1985—86ம் ஆண்டில் இக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.20 கோடியிலிருந்து ரூ. 30 கோடிக்கு உயர்த்தப் பட்டுள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடியாகும்.*

## “லெவி” சேகரிப்பு நிலையங்கள்

*தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டை தாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல் அரிசியை தமிழக அரசின் முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1985—86ம் ஆண்டில், சம்பாவில் 15.3.1986 வரை இக்கழகம் 4.68 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம் 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளது.*

## சேமிப்பு கிடங்குகள் அதிகரிப்பு

*இக்கழகம் 1985—86ம் ஆண்டில், இதன் 3.20 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியுடன் மேலும் 30,4000 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியைப் பெருக்கியுள்ளது.*

அரசால் அனுமதியளிக்கப்பட்ட 5 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சேமிப்பு' கிடங்குகள், நேரடி கொள்மதல் நிலையங்கள் மற்றும் லெவி கொள்மதல் நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி செலவில் கட்டுவதற்காக திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது. வரும் நிதியாண்டில் நேரடிக்கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்காக ரூ. 10 லட்சமும், செயல்முறை சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சமும் அரசு அனுமதி அளித்துள்ளது.

1985—86ம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் 13 நவீன அரிசி ஆலைகளின் அரைவைத் திறனை ஆண்டுக்கு மேலும் 60.000 டன்கள் அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்தது. இதைப் போன்று ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை, 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் சேமிப்பு கிடங்கு வசதியை அளிக்கிறது. விவசாய விலைப் பொருட்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருள்களுக்குப் பூச்சிமருந்து அடிக்கும் பணியையும் மேற்கொள்ளுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனக் தொகை ரூ. 6 கோடியாகும். 1985ம் ஆண்டு மார்ச் 31ம் நாள் முடிய இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ. 5.01 கோடியாக இருந்தது. 1985—86ம் ஆண்டு, அரசு

*இந்நிறுவனத்திற்கு ரூ. 20 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதே போன்று மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் அதன் பங்கான ரூ.20 லட்சத்தை இந்நிறுவனத் திற்கு வழங்கியுள்ளது. 1986—87ம் ஆண்டு, இந்நிறுவனம் இதன் பங்குத் தொகையை ரூ. 60 லட்சமாக உயர்த்தக் கருதியுள்ளது.*

## தொடர்ந்து லாபம் ஈட்டிய நிர்வாகம்

*1985ம் ஆண்டு மார்ச் திங்கள் 321—ம் நாள் முடிய, இந்நிறுவனம் 43 இடங்களில் 123 கிடங்குகளை நடத்தி வந்தது. இவற்றின் கொள்திறன் 3,37 லட்சம் டன்களாக இருந்தது. 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 2,52 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை, ரூ. 12,86 கோடி செலவில் ஏற்படுத்த இந்நிறுவனம் திட்ட மிட்டுள்ளது. 1985—86ம் ஆண்டிற்கு, கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 டன்கள் மட்டுமேயாகும். இந்நிறுவனம்,75,000 டன்கள் கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்தி இந்த இலக்கைத் தாண்டியுள்ளது.*

*இந்நிறுவனம், தொடர்ந்து பல ஆண்டுகளாக லாபத்தையே ஈட்டி வருகிறது.*

*கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு*

| ஆண்டு | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980-81 | 24.62 |
| 1981-82 | 69.31 |
| 1982-83 | 84.58 |
| 1983-84 | 100.10 |
| 1984-85 | 125.23 |

*1985—86ம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உயவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984ம் ஆண்டு குறுவை மற்றும் 1985ம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்ததால் வெளி சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985ம் ஆண்டு ஜுலை ஆகஸ்டு, செப்டம்பர் அக்டோபர் மாதங்களில், பொதுவிநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ. டன்களுக்கும் மேல் கூடியது.*



# வருவாய் ஈட்டித்தருவதில் வணிகவரித்துறை சாதனை

## 4 மடங்கு அதிகரித்த வருவாய்

*மக்களாட்சியில் சமுதாயப் பணிகளுக்கான செலவினங்களுக்கு வருவாய் திரட்டுவதில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய், பெரும்பங்கு வகிக்கிறது. வணிக வரிகளுள் முதன்மையானது விற்பனை வரியே, இவ்வரி விதிப்பு மிகச் சிறிய அளவில் அதாவது விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு காசு (1/192) என்ற விகிதத்தில் 1939ம் ஆண்டு முதல் தொடங்கப் பட்டது.*

*மாநிலங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட இந்த வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருவாய் வழிவகுத்ததில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரிகள் உள் மாநில இடைமாநில விற்பனையின் மேல் விதிக்கப்படுகிறது. வெளிநாட்டு மது, உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள்*

*உள்நாட்டு மதுவான சாராயம் ஆகியவற்றிற்கு அதிகபட்ச வரியாக 50,30 மற்றும் 20 விழுக்காடு விதிக்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்களுக்கு 15% வரியும் மற்றப் பொருட் களுக்கு அவற்றின் உற்பத்தி தேவை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இந்த அரசினால் வரி விகிதம் நிர்ணயிக்கப் படுகிறது. மொத்த வரி வசூலில் தமிழ்நாடு அனைத்திந்திய அளவில் மகராஷ்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்று வருகிறது. 1976—77ம் ஆண்டில் வணிக வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ255.58 கோடியாக இருந்தது. 1985—86ம் ஆண்டில் ரூ. 1035.08 கோடி. அதாவது நான்கு மடங்காக உயர்ந்துள்ளது.*

## கள்ளத்தனங்களை கண்டறிந்து களைந்த அரசு

*இத்துறையின் மற்றுமோர் சாதனை 1976—77ம் ஆண்டில் 55,683 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனைத்தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டு அரசுக்கு ரூ. 1 கோடி 74 இலட்சம் அதிகவரி கிடைக்க வழி செய்யப்பட்டது. 1984—85ம் ஆண்டில் 96,746 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 245 கோடி விற்பனைத்தொகை மறைப்பு வெளிக் கொணரப்பட்டு, அரசுக்கு ரூ. 21 கோடி 57 இலட்சம் அதிகவரி கிடைக்க வழி செய்யப்பட்டது.*

## எம்.ஜி.ஆ.ரின் கருணையால் வரிவிலக்கு

*இம்மாநிலத்தில் வரி விதிப்பின் மூலம் ஏழை, எளிய நடுத்தர மக்களைப் பாதிக்காமல் இருக்க, அம்மக்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் பொருட்களின் விற்பனையின் மேல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவையான விறகின் மேல் முழு வரி விலக்குள்ளது.*

*உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவுப் பொருட் களுக்கும், பன், பொறை, ரொட்டி முதலியவற்றிற்கும் முழு*

*வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. அப்பளம், சேமியா பொருட்களின் மேலும் 1981ம் ஆண்டிலிருந்து வரி விலக்க மளிக்கப்பட்டுள்ளது. முதியோரின் நலன் காக்கும் பொருட்டு மூக்கு கண்ணாடிகளுக்கு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. கையினால் செய்யப்படும் செங்கற்கள், மண்பாண்டங்கள் ஆகியவைகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நோட்டு புத்தகங்கள், கரும்பலகைகள், எழுது பொருட்கள் அகிய வற்றிற்கும் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் அனைத்திற்கும் வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. கால் நடைகள் மற்றும் விலங்கினங்கள் விற்பனையின் மேலும், கால்நடைகளுக்கு இரையாக உள்ள புல், வைக்கோல், தாழ், தவிடு முதலியவற்றிற்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் சக்தி மூலம் இயக்கப்படும் விவசாயத் துணைப் பொருட்கள் மேலும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை உரத்திற்கு முழு வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. ஆனால் இரசாயன உரங்கள் மீதும், பூச்சி, காளான், வேர்க் கொல்லி மீதும், குறைந்த வரியாக மூன்றரைச் சதவீதம் விதிக்கப்படுகிறது.*

## வரிவிதிப்பில் சலுகை

*நடுத்தர மக்களுக்கும் வரி விதிப்பில் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தயார் செய்யப் படும் மின்னணுக் கருவிகளுக்கு வரிவிதிப்பு 6 சதவிகித மாகவும் பிற இடங்களில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருட்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப் பட்டுள்ளது. சைக்கிள்கள் அவற்றின் டயர் டியூபுகள் கையால் செய்யப்படும் சோப்புகளுக்கு வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இயற்கை சக்திகளான சூரிய ஒளி,*

*காற்று, தழை மற்றும் சாணம் ஆகியவற்றை மக்களுக்குப் பயன்படும் எரிபொருள் மற்றும், மற்றச் சக்திகளாக மாற்றிவிடும் கருவிகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. உயிர்காக்கும் 41 மருந்து வகைகளுக்கு வரி 8 சதவிகிதத்தி லிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.*

*பலமுனை வரிக்குட்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவு செய்து கொள் வதற்கான விற்பனைத் தொகை வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 75,000 இந்நிதியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் இப்பொருட்களில் வாணிபம் செய்யும் சிறு வணிகர்களுக்கு, ஆண்டொன்றிற்கு விற்பனைத்தொகை ஒரு லட்சம் ரூபாய்க்குள் இருந்தால் வரி விதிப்பு இல்லை. இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய்க்குள் இருந்தால் சலுகை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.*

## வரிஏய்ப்புக்கு வழியே இல்லாமல் செய்த அரசு யாரும் வரிஏய்ப்பு செய்யமுடியாமல் தடுத்த அரசு

*கேளிக்கை வரி விதிப்பு இம்மாநிலத்தில் 1926ம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. இதன் மூலம் கிடைக்கும். வருவாய் பெரும் பகுதி உள்ளாட்சி ஊராட்சி ஒன்றியங் களுக்கே அளிக்கப்பட்டாலும், வணிகவரித்துறையே இவ்வரியையும் வசூலித்து வருகிறது. 1939ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தில் 77ம் ஆண்டிலிருந்து, முழு அளவில் நகராட்சி மற்றும் பஞ்சாயத்து எல்லை களுக்குட்பட்ட திரையரங்குகள் இணக்கத் தொகையான வரி செலுத்தும் முறை அமல் செய்யப்பட்டு வரி ஏய்ப்பு எண்ணம் ஏற்படாத வண்ணம் அரசு காத்துள்ளது.*

*பந்தய வரி, சென்னை மற்றும் ஊட்டியில் நடக்கும் குதிரை பந்தயங்களின் மேல் 1935ம் ஆண்டு முதல் விதிக்கப்*

*பட்டு வருகிறது. இவ்வரியும் இத்துறை மூலமே வசூலிக்கப் படுகிறது. மேலும் ஓட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 13.11.80லிருந்து இத்துறை மூலம் வசூலிக்கப்படுகிறது.*

## வணிகர்கள் நலனுக்காக ஆலோனைக்குழு

*வணிகர்களின் நலனுக்காக வணிகர் நல ஆலோசனைக் குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுக்கு வரி விதிப்பு ஆலோசனை கூறவும், வணிகர்களின் பொதுக் குறைகளைக் களைவதற்கும் மாநில அளவில் வணிகவரித்துறை அமைச்சரின் தலைமையில், மாநில விற்பனை வரி ஆலோசனைக்குழு செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும், துறை அலுவலர்கள், வணிகர்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பின ராகவும் கொண்ட மாவட்ட விற்பனை ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டன.*

*வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்புகள் அளிப்பவர்களுக்குத் துறையின் மூலம் தகுந்த பரிசு வழங்கப்படுகிறது. அது போன்றே, வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்பினை ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. தமிழகத்தைப் பின்பற்றி, பிற மாநிலங்களும் இம்முறைகளைக் கடைபிடிக்கின்றன.*

## புகார்கள் பற்றி விசாரிக்க ஏற்பாடு

*வணிகர்களின் குறிப்பிட்ட புகார்களை விசாரித்து நட வடிக்கை எடுக்க வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு*

வருகிறது. அக்குழுவினிடம் தெரிவிக்கப்படும் புகார்களின் மேல், உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம்

இத்திட்டம், சென்னை நகரம், மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்க உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை அரசுச் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும், வாரியம், கட்டி முடித்த வீடுகளைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் அரசுக்குச் சொந்தமாகும். 1985ம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை வாரியம் 15,464 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. 1986ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் இறுதிவரை 1962 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1986—87ம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 800 இலட்சம், 2,788 குடியிருப்புகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



# பிற்படுத்தப்பட்டோர்க்குப் பேருதவி

*பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு துறை "பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை" 1969ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையின் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்த 1975ம் ஆண்டிலிருந்து துணை ஆட்சியர் நிலையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப்பார்வையில் செயல்பட்டு வருகின்றனர்.*

*இத்துறையின் மூலம், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

## உதவித் தொகை

*பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் அவர்களை ஊக்குவிக்க உதவித்தொகைகள் வழங்கப் படுகின்றன. பள்ளிப் படிப்பு உபகாரச் சம்பளத்திற்கு*

*சீர் மரபினருக்கு நான்காம் வகுப்பிலிருந்தும், பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு 'ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் புத்தகமாகவும் சிறப்புக்கட்டணம் ஈடுசெய்தும், தேர்வுக் கட்டணம் ஈடு செய்தும், தரப்படுகின்றது. +2, பட்டப்படிப்பு, மற்றும் பட்ட மேற்படிப்புக்கான உதவித் தொகை பணமாக வழங்கப்படுகிறது.*

## விடுதிகள்

*1977—78ம் ஆண்டில் 284 விடுதிகளில் சுமார் 19,000 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். 1985—86ம் ஆண்டில் 543 விடுதிகளில் சுமார் 32,500 மாணவர்கள் பயன் பெற்றனர். நடப்பாண்டில், மேலும் 15 புதிய விடுதிகள் திறக்கப்படும். விடுதிகளைப் பராமரிக்க ரூ. 411.89 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 49 விடுதிகள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் உள்ளன. மற்ற விடுதிகளுக்கு, சொந்தக்கட்டடங்கள், கட்டப்பட்டு வருகின்றன. 1986—87ஆம் ஆண்டில் சுமார் 10 விடுதிகள் கட்ட ரூ. 54 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

## புத்தகங்கள் மற்றும் சீருடை வழங்கள்

*சீர் மரபினர் பள்ளிகளில் 1 மதல் 8ம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும், புத்தகங்களும், இரண்டு செட் சீருடைகளும் வழங்கப்படுகின்றன. இதே போன்று விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1977—78ம் ஆண்டில் ரூ. 15.10 லட்சம் செலவிடப்பட்டது. இத்தொகை தற்போது மும்மடங்காகப் பெருக்கி, இவ்வாண்டு ரூ. 48.27 இலட்சம் செலவில் இவை வழங்கப்படும்.*

## இலவசத் தொழிற் கருவிகள் வழங்கல்

*சலவை மற்றும் சவரத்தொழிலாளர்கள், கல்லுடைப் போருக்கு இலவசமாகக் கருவிகள், முறையே ரூ. 443.10*

*ரூ. 137.15, ரூ. 200 மதிப்பில் தங்கள் தொழிலைச் செய்ய ஏதுவாக வழங்கப்படுகின்றன. 1977—78ம் ஆண்டில் 4095 நபர்களுக்கு ரூ. 7 இலட்சம் செலவில் கருவிகள் வழங்கப்பட்டன. 1986—87ம் ஆண்டு, ரூ. 15.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

## சலவைத்துறை கட்டுதல்

*சலவைத் தொழிலாளர்களுக்கு செய்து தரப்படும் முக்கிய வசதி சலவைத்துறை கட்டித் தருவதாகும் இதற்காக அரசு 75% மானியம் வழங்குகிறது. மீதியில் 20% உள்ளாட்சி களின் பங்காகவும் 5% பயனாளிகளின் பங்காகவும் செலுத்தப்படுகிறது. 1977—78ம் ஆண்டு ஒரு சலவைத் துறை ரூ. 8,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1986—87) ரூ. 2 லட்சம் செலவில் சுமார் 6 சலவைத் துறைகள் கட்டப்படும்.*

## இலவச வீட்டுமனை

*நரிக்குறவர், நாவிதர், ஒட்டர், வண்ணார் இனத்தைச் சார்ந்த மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களில் வீட்டுமனை இல்லாத நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கும் சிறப்பு திட்டமொன்றை அரசு 1981—82லிருந்து செயல்படுத்தி வருகிறது. 1981—82 முதல் இதுவரை ரூ. 81.65 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 1986—87ம் ஆண்டு ரூ. 10 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.*

## சட்டக் கல்வி பயின்ற இளம் பட்டதாரிகளுக்குப் பயிற்சி

*அரசியல், சட்டம் போன்ற சட்டத்தின் பல்வேறு தனித் துறைகளில் திறமை பெற்ற பிரபல வழக்கறிஞர்களிடம், இளம் சட்டப்பட்டதாரிகள் 20 பேர்களைத் தேர்ந்தெடுத்து மூன்றாண்டுப் பயிற்சிக்கு அனுப்ப ரூ. 1.88 இலட்சம், 1986—87ம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.*

## வேலைவாய்ப்பிற்கான குறுகியகாலப் பயிற்சி

*இத்திட்டத்தின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினருக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கோடு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் எழுதப் பயிற்சியும், கம்ப்பியூட்டர் புரோகிராமிங், விற்பனையாளர் போன்ற துறைகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்கு விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. 1986—87 ஆம் ஆண்டு 600 மாணவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கு ரூ. 697 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

## சிறப்புப் பயிற்சி நிலையம்

*பிற்படுத்தப்பட்ட வகுப்பு சீர் மரபினர், இந்திய ஆட்சிப் பணி இந்தியக்காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதப் பயிற்சியளிக்கும் சிறப்புப் பயிற்சி நிலையம் சென்னையில் 1971ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர 1983ம் ஆண்டிலிருந்து டெல்லியில் உள்ள டாக்டர் ராவ் ஐ.ஏ.எஸ்., பயிற்சி மையத்தில் ஆண்டுதோறும் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக்காவல் பணி போன்ற தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கப்படுகிறது.*

*தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்ட இரண்டாம் உயர் ஆணைக்குழு 1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு 28.2.1985 ஆம் நாளன்று அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து அதனடிப்படையில், பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்த 50% இட ஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க அரசு வகை செய்து ஆணை பிறப்பித்தது. அரசு தனது 31.7.85 தேதியிட்ட ஆணையில்*

*தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியலை அறிவித்துள்ளது.*

## மதம் மாறிய கிருத்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

*பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறியவர்களையும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு எனக் கருதிச் சலுகைகளை வழங்கலாம் என அரசாணை 558 (சமூக நலத்துறை) நாள் : 24.2.86ல் உத்தரவிட்டுள்ளது.*

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம்

*பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைந்து வாழ்க்கையில் முன்னேற்றம் பெற உதவும் பொருட்டு இக்கழகம் 1981—ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இக்கழகம் பிற்படுத்தப்பட்டோர் தொழில் தொடங்குவதற்காக ஆரம்ப மூலதனத் தொகையை, குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தரவும் உதவுகிறது.*

## இதர திட்டங்கள்

*பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மேம்பாட்டுக்காகத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பொதுநோக்குத் தொழில் பட்டறைகள், கிணறு மான்யம், வீடு கட்டித் தருதல், பரிசுப் புத்தகம் வழங்கல் போன்ற பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*மேற்கூறிய பல்வேறு முன்னேற்றத் திட்டங்களுக்காக 1986—87—ஆம் ஆண்டு ரூ. 12.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 1967—68ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 1.61 கோடியை விட 8 மடங்குக்கும் அதிகமாகும். இவ்வுயர்வு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தீவிரமாகச் செயல்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.*



# முதியோர் உதவித் தொகைத்திட்டம்

*முதியோர் உதவித்தொகைத்திட்டம் 31.3.79 வரை மாதம் ரூ.20 கொடுக்கப்பட்டது. 1.4.79 முதல் இத்தொகை மாதம் ரூ.25 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் மீண்டும் 1.4.82 முதல் இத்தொகை மாதம் ரூ.35ஆக உயர்த்தப்பட்டது.*

*முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 1976—ஆம் ஆண்டு முடியப் பயன்பெற்ற முதியோர் 50,663 பேர். 1977 முதல் 1986 வரை முதியோர் உதவித்தொகைத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 3,31,058 ஆகும்.*



# சிறப்பிடம் வகிக்கும் கதர் கிராமத் தொழில்கள்

இந்தியத் திருநாட்டின் உயிர்நாடி கிராமங்களில் இருக்கிறது. என்பதைக் கண்ட அண்ணல் காந்தியடிகள் அவற்றின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களை வகுத்து தந்தார். அவற்றில் ஒன்றுதான் கதர் கிராமத் தொழில் திட்டம்

தமிழ்நாட்டில் இத்திட்டங்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றி வளர்த்தார்கள் அண்ணா வழியில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977— ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டது. முதல் கதர் கிராமத்தொழில் திட்டங்கள் சீரும் சிறப்புமாக வளர்வதற்கு வழிவகைகளை வகுத்துத் தந்துள்ளார்கள்.

புரட்சித்தலைவர் அவர்களின் 10 ஆண்டுப் பொற்கால ஆட்சியில் அகில இந்திய அளவில் மத்திய அரசும், கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவும் பாராட்டும் வகையில்

*இவ்வாரியம் வளர்ச்சி அடைந்துள்ளது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் திட்டங்களை நேரடி நிர்வாகத்தில் செயல்படுத்திக் கொண்டு வருவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.*

*தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்திய அளவில் கீழ்க் கண்ட கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்திகளில் முதலிடம் வகிக்கின்றது.*

*எண்ணெய்த் தொழில், பனைத்தொழில், குளியல் சோப்பு தயாரிப்பு, சலவை சோப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, பாலியஸ்டர் துணி தயாரிப்பு.*

*1977—78ல் வாரியத்தின் கதர் கிராமத்தொழில் பெருட்கள் மொத்த உற்பத்தி ரூ. 44 கோடியாக இருந்தது. 1985—86—ல் ரூ. 121 கோடியாக உயர்ந்துள்ளது. 10 ஆண்டுகளில் வாரியத்தின் வளர்ச்சி 275 சதவிகிதம் அதிகரித்துள்ளது.*

*அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தையும், கிராமத்தொழில் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் தமிழ்நாடு வகிக்கிறது.*

*புரட்சித் தலைவர் 1977ஆம் ஆண்டு பதவி ஏற்றுக்கொண்ட போது இவ்வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை 3,33,157. 1985—86ல் வேலைவாய்ப்புப் பெறுவோர் எண்ணிக்கை 7,17,750 ஆகும்.*

**மேற்படி வேலைவாய்ப்புப் பெறுவோர் விபரம்.**

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 93,710 |
| மலைவாழ் மக்கள் | 9,355 |

| | |
|---|---|
| பெண்கள் | 2,04,873 |
| மற்றவர்கள் | 4,09,812 |
| மொத்தம் | 7,17,750 |

*கதர்த் திட்டத்தின் மூலம் பெண்களுக்குத் தான் அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 588 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒரு கிராமிய நூற்பு நிலையத்திற்கு 30 நபர்கள் வீதம் சுமார் 17,000 பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இவற்றின் மூலம் உற்பத்தியாகும் நூலைக் கொண்டு சுமார் 6000 பரம்பரை நெசவாளர்கள் கதர்த்துணிகளை உற்பத்தி செய்து நிரந்தர வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தில் 281 கதர் உற்பத்தி அலகுகள் செயல் படுகின்றன.*

*ஆதிதிராவிட மக்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்கள் ஆகியோரை கதர் நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மாற்றுத் தொழிலாக அமையும் வகையில் நேபாளித் தறிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பல்வேறு அரசுத் திட்டங்கள் கதர் ஆணைக்குழுத் திட்டங்கள் மூலம் 68 நேபாளித் தறி அலகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த 68 அலகுகள் மூலம் 5280 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.*

*கிராமிய நூற்பு நிலையங்கள், கதர் உற்பத்தி நிலையங்கள் காதிகிராப்ட்டுகள், தையல் அலகுகள் சாயமிடும்—அச்சிடும் நிலையங்கள், பட்டு உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்தம் 882 அலகுகள் செயல்படுகின்றன.*

*கதர்த்துறையில் பாலியஸ்டர் உற்பத்தி ஒரு புதிய முற்போக்குத் திட்டமாகும். மக்களின் நாகரிகத்*

தேவைகளுக்கு ஏற்பத் தரமான பாலியஸ்டர் துணி வகைகள் வாரியத்தால் தயாரிக்கப்படுகின்றன. வாரியத்தில் மொத்தம் 38 பாலியஸ்டர் நூல் உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

1985—86ல் மொத்தம் ரூ. 75.50 இலட்சத்திற்கு கதர் பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம் எஸ். பாலம் கிராமத்தில் பாலியஸ்டர் மற்றும் பஞ்சுக்கலவை அலகு ரூ. 55 இலட்சம் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பாலியஸ்டர் துணி ரகங்களைச் சாயமிட்டு அச்சிடுவதற்குப் பிரத்தியேகமாக பவானிசாகரில் தனித்தொழில்கூடம் துவக்கப்பட்டுள்ளது. கதர் உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் தான் கதர் பாலியஸ்டர் துணிகளைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது. தரமுள்ள நவீன ரகப்பட்டுப் புடவைகள் கதர் வாரியத்தில் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 17 பட்டு அலகுகள் செயல்படுகின்றன. 1977ஆம் ஆண்டு கதர் பட்டு உற்பத்தி மதிப்பு ரூ. 61 இலட்சமாக இருந்தது. 1985—86ல் ரூ. 322.92 இலட்சத்திற்கு உற்பத்தி உயர்ந்துள்ளது. இவற்றின் மூலம் 1200 பட்டு நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. பட்டு நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.600 முதல் ரூ.700 வரை வருவாய் கிடைக்கிறது.

வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் கிராமத்தொழில் களில் சோப்புத்தொழில் மிக முக்கியமான ஒன்று. வாரியத்தில் தயாரிக்கப்படும் வேம்பு, குறிஞ்சி சோப்பு, சந்தனசோப்பு, ஆயுர்வேத மூலிகை சோப்பு ஆகிய குளியல் சோப்புகள் சுகாதாரத்திற்கு ஏற்றவை. நல்ல தரமுள்ளவை.

*இன்று மக்கள் மத்தியில் அவை மிகவும் பிரபலமடைந் துள்ளன. திருக்கழுக்குன்றத்தில் உள்ள குளியல் சோப்பு அலகில் இவை தயாரிக்கப்படுகின்றன.*

*வாரியத்தில் 37 சலவைசோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் சுமார் 200 நபர்கள் நிரந்தர வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். வாரியத்தின் மூலம் உற்பத்தியாகும் சலவை சோப்பிற்கு “கோபுரம் மார்க்” சலவை சோப்புகள் என்று பெயர். அரசின் துறைகளான மருத்துவமனைகள் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கும், இந்த சோப்புகள் அனுப்பப்படுகின்றன. முதன் முதலாக குளியல் சோப்புகள் இந்தியப் பாதுகாப்புத்துறைக்கு அனுப்பப்படுகின்றன. சுற்றுலாத் துறையின் தேவைக்கான குளியல்சோப்பு முழுவதையும் வாரியம் தயாரித்துக் கொடுக்கிறது. வாரியத்தின் சலவை சோப்பிற்குக் கேரள மாநிலத்தில் அமோக வரவேற்புள்ளது.*

*தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததிய சமுதாயத்தினர் வாழ்வு வளம்பெற வாரியம் பற்பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவர்களுக்கு நிதியுதவியும், தொழில் நுட்பஉதவியும், பொதுப்பணிக்கூட உதவியும் வேலைவாய்ப்பும் வாரியம் அளித்து வருகிறது.*

*வாரியத்தில் 25 காலணிஅலகுகள். 26 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றில் தயாராகும். தரமிகு காலணிகள், பெட்டிகள், பணப் பைகள் யாவும் காவல்துறை, போக்குவரத்துத்துறை, நகராட்சிகள், பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைத் துறை ஆகிய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படு கின்றன. தரமிக்க வாரிய காலணிகளுக்குப் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. 1977ல் ரூ. 124 இலட்சமாக இருந்த உற்பத்தி 1985—86ல் ரூ. 723 இலட்சமாக உயர்ந்துள்ளது.*

கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், நாள் முழுவதும் சாலை ஓரங்களில் துன்பப்படும் காலணித் தொழிலாளர்களின் துயர் துடைக்கப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நிழல் தரும் காலணித் தொழில் கூடங்களை இந்தியாவிலேயே முன்னோடி திட்டமாக தயாரித்து வழங்கி வருகிறது.

ஒவ்வொன்றும் ரூ. 8500 மதிப்புள்ள காலணித் தொழில்கூடம், கருவிகள், தையல் இயந்திரம் உட்பட காலணித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படு கின்றன. இவ்விதம் தமிழகம் முழுவதும் 1000 பணிக் கூடங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 750 பணிக்கூடங்களை வழங்கத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது.

தோல் பதனிடுவோர் மற்றும் காலணித் தொழிலாளர் களுக்கு கடன், மானியமாக வாரியம் நேரடியாக நிதியுதவி செய்து வருகிறது. இதுவரை தோல் பதனிடுவோர் சுமார் 5500 நபர்களுக்கும் காலணித் தொழில் செய்வோருக்கும் கடனும் மானியமும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1608 பனைத் தொழிலாளர் கூட்டுறவு சார்ந்தவர்களும், 6 மாவட்ட பனை வெள்ள சம்மேளனங் களும் சென்னை மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு மேளனமும் செயல்பட்டு வருகின்றன.

1977—78ல் பனைப்பொருள் உற்பத்தி ரூ. 1018 இலட்சத்தில் இருந்தது. 1985—86ல் பட்டு பொருட்களின் மொத்த உற்பத்தி ரூ. 3475 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. பனஞ்சீனி, பனஞ்சோலை கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் “பாம்டா, பாம்கூ” போன்ற பானங்கள் உடல் நலத்திற்கு இன்றியமையாதவை. மக்களிடத்தில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. இத்தொழிலில் 1977—78ம்

ஆண்டில் வேலைவாய்ப்பு பெற்றோர் சுமார் 2,60,00 நபர்களாவர். 1985—86ல் வேலைவாய்ப்புப் பெற்றோர் 5 லட்சத்திற்கு மேல் ஆகும். சுமார் 2,14,000 பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

பனைத்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஆண்டு தோறும் ரூ. 75 இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பனைத்தொழிலாளர்கள், தச்சு தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு நிவாரணம் வழங்கி வருகிறது. சிறு விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ரூ. 100ம் பெரும் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 500ம், மரணமுற்றவரின் குடும்பத்திற்கு ரூ. 1000ம் நிவாரணமாக வழங்கி வந்தது. புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் மரணமடைந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ. 5000 நிவாரணமாக உயர்த்தப் பட்டுள்ளது. இதுவரையில் 1065 நபர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

உடல் நலத்திற்கு ஒரு அருமருந்து தேன், தமிழகத்தில் 4,286 கிராமங்களில் இத் தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலில் 44,581 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு 12 இலட்சம் கிலோ தேன் உற்பத்தியாகிறது. அக்மார்க் செய்யப்பட்ட சுத்தமான தேன், தரக் கட்டுப் பாட்டுடன் சீசாக்களில் அடைக்கப்பட்டு, சென்னை குறளகம் கதர் அங்காடியிலும், தமிழகத்திலுள்ள அனைத்து கதர் அங்காடிகளிலும் விற்பனை செய்யப்படு கின்றது. தேனீத் தொழிலில் பல தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களையும், தேனீ வளர்ப்பு உபகிளை, தேனீ பண்ணை முதலியவற்றையும் வாரியம் துவக்கி செயல்படுத்தி வருகின்றது.

*ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜவ்வாது மலை, கல்ராயன் மலை, கொல்லிமலை ஆகிய மலைப்பிரதேசங்களில் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களில், தேனீ வளர்ப்பு உபகிளைகள் துவங்கப்பட்டுள்ளன. இதுவரை 19.400 தேனீ பெட்டிகள் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கன்னியாக்குமரி மாவட்டத்திலுள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அதிக அளவில் தேனை உற்பத்தி செய்து வருகின்றது.*

*பரம்பரையாக இயங்கி வந்த பட்டுச் செக்குத் தொழிலில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தி மின்விசைச் செக்கினை வாரியம் தமிழகத்தில் அறிமுகம் செய்தது. மாட்டுச் செக்கினை இயக்குவதில் ஆகும் செலவினத்தை விட மின்னிசைச் செக்கினை இயக்கிட செலவினம் மிகவும் குறைவாகும். இதுகாறும் தமிழகத்தில் 3728 மின்விசைச் செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. எளிதில் இடம் விட்டு இடம் மாற்றிக் கொள்ள ஏதுவான நவீன மின்விசைச் செக்குகள் வாரியத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் 36 எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எண்ணெய் உற்பத்தியில் அகில இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. 1977—78ல் எண்ணெய் உற்பத்தி ரூ. 351 இலட்சமாகும். 1985—86ல் ரூ. 3468 இலட்சம் மதிப்பு உற்பத்தியை அடைந்துள்ளன. இது சுமார் 10 மடங்கு அதிக வளர்ச்சியாகும்.*

*தமிழ்நாட்டில் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவரின் ஆட்சியில் பல்வேறு நன்மைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. பல கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய நிதியுதவி தடையில்லாமல் அளிக்கப்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாட்டில் 66 மட்பாண்டக் கூட்டுறவுச்*

*சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. வாரியத்தின் 3 அலகுகளை நடத்தி வருகிறது. இவை தவிர 6420 மட்பாண்டத் தொரிலாளர்களுக்கு வாரியம் நேரடியாக நிதியுதவி அளித்து அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற வழிகாட்டியுள்ளது.*

*தச்சுக் கருமாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 8964 நபர்களுக்கு வாரியம் கடன், மான்யமாக நிதியுதவியும் அவர்களுக்குத் தொழில் கருவிகளும் வாங்கி வழங்கியுள்ளது. வாரிய நிர்வாகத்தில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 38 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும்,4 அலகுகளும் இயங்கி வருகின்றன.*

*இத்தொழிலில் 15920 கை வினைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றார்கள். 1977—78ம் ஆண்டில் இத்தொழிலில் உற்பத்தி ரூ. 54 இலட்சமாக இருந்தது. 1985—86ல் ரூ. 793 இலட்சமாக உயர்ந்துள்ளது.*

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சாதனைகள்

ஆண்டு வாரியாக முன்னேற்ற விவரம்

| ஆண்டு | வேலை வாய்ப்புப் பெறுவோர் | உற்பத்தி ரூ. இலட்சத்தில் | விற்பனை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1977-78 | 333132 | 4433.12 | 4627.17 |
| 1978-79 | 357691 | 4654.78 | 4919.43 |
| 1979-80 | 382590 | 5027.16 | 5260.49 |
| 1980-81 | 410561 | 5580.15 | 5663.38 |
| 1981-82 | 442065 | 6305.57 | 6636.36 |
| 1982-83 | 482860 | 7251.30 | 8054.60 |
| 1983-84 | 527195 | 8454.72 | 10079.21 |
| 1984-85 | 582265 | 10096.82 | 10580.00 |
| 1985-86 | 717750 | | |

*பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு உகந்த தொழில் கைமுறைக் காகிதத் தொழிலாகும். வாரியத்தில் 11 அலகுகளும்,5 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. 1977—78ம் ஆண்டில் ரூ. 13 இலட்சமாக இருந்த உற்பத்தி, 1985—86ல் ரூ. 37½ இலட்சமாக உயர்ந்துள்ளது. சுமார் 1500 நபர்கள் இதன் மூலம் நிரந்தரமான வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.*



# போக்குவரத்துக் கழகங்களின் ஒன்பது ஆண்டு வளர்ச்சி

## வளர்ந்து வரும் போக்குவரத்துத்துறை

*பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் தமிழகத்தில் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் பல்வேறு நலப் பணியில் ஈடுபட்டார். மக்களின் குரலுக்கு மதிப்பளித்து வந்த அண்ணா அவர்கள், தனியாரின் ஆதிக்கத்திலிருந்து வந்த பேருந்துகளை நாட்டுடைமை யாக்கும் மாபெரும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார். பேருந்துகள் ஏழை, எளிய மக்களுக்கு நல்லவிதத்தில் பயனளிக்க வேண்டும் என்பதற்காகவும், பேருந்துகளின் மூலம் வருகின்ற வருமானம் நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவும் தான் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதில் அண்ணா அதிக ஆர்வம் காட்டினார். பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்குவதற்கும் அவர் திட்டமிட்டிருந்தார்.*

*அவரது கொள்கைகளை அப்படியே கடைபிடித்து வரும் அண்ணாவின் அரசு, போக்குவரத்துக் கழகங்களை*

*அதிக அளவில் உரவாக்கி, பொது மக்களுக்கு ஏராளமான வசதிகளைச் செய்து தருகிறது. குக்கிராமங்களில் கூட பேருந்துகளைச் செலுத்தி அங்கு வாழும் மக்கள் பயணம் செய்வதற்கு வழி வகைகளை செய்த வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், ஒரு நாளின் எந்த நேரத்திலும் தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. மக்கள் நலனையே கருத்தில் கொண்டு இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பணியாற்றுகின்றன.*

## போக்குவரத்துக் கழகங்கள்

| 1977 | 1986 |
|---|---|
| பல்லவன் | பல்லவன் |
| பாண்டியன் | பாண்டியன் |
| சேரன் | சேரன் |
| சோழன் | சோழன் |
| அண்ணா | அண்ணா |
| கட்டபொம்மன் | கட்டபொம்மன் |
| தந்தை பெரியார் | தந்தைபெரியார் |
| | பட்டுக்கோட்டை அழகிரி |
| | மருதுபாண்டியர் |
| | ஜீவா |
| | தீரன்சின்னமலை |
| | நேசமணி |
| | திருவள்ளுவர் |
| | இராணிமங்கம்மாள் |

| | 1977 | 1986 |
|---|---|---|
| 2.டெப்போக்களின் எண்ணிக்கை | 106 | 187 |
| 3. பேருந்துகளின் எண்ணிக்கை | 4,974 | 10,201 |
| 4. அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் (சதவீதம்) | 51 | 66 |

| | | |
|---|---|---|
| 5. வழித்தடங்கள் எண்ணிக்கை | 2,045 | 5230 |
| 6. நாளொன்றுக்கு ஓடிய கிலோ மீட்டர்கள் (இலட்சத்தில்) | 12 | 32 |
| 7. நாளொன்றுக்கு ஏற்றிச் சென்ற பயணிகள் (இலட்சத்தில்) | 37 | 92 |
| 8. பணியாளர்களின் எண்ணிக்கை | 40,904 | 75,700 |
| 9. ஒரு பணியாளரின் சராசரி மாத வருமானம் | ரூ. 534 | ரூ. 1370 |
| 10. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் உள்ள வைப்புத் தொகை (ரூ. கோடியில்) | 3.11 | 69.11 |
| 11. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் ஓராண்டிற்கு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு அளித்த கடனுதவி (ரூ. கோடியில்) | 6.05 | 62.44 |
| 12. இக்கடனுதவியாலும், சொந்த ரொக்க உற்பத்தியாலும் ஓராண்டில் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் | 674 | 2,200 |

## போக்குவரத்துத் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுப் பணிகள்

*1. சாலைப்போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் திரு.பட்டாபிராமன் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் 236 பரிந்துரைகளையும் விரைவில் ஆராய்ந்து, அதன் பேரில் நடவடிக்கைகளை எடுத்துச் சாதனை புரிந்தது.*

2. *1979ல் மாநிலம் முழுவதும் பெருமளவில் சாலைப் போக்குவரத்து ஆய்வு கணக்கீட்டுப் பொறியியல் செய்தது.*

3. *மாநிலத்தில் ஏழு போக்குவரத்துக் கழகங்களாக இருந்ததை மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகமாக 14 போக்குவரத்துக் கழகங்களை அமைத்தது. சிறுசிறு பொறியியற் கழகங்களை அதன் தாய்க்கழங்களோடு இணைத்தது.*

4. *1981—82ம் ஆண்டு முதல் பேருந்துகள் வாங்குவதற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து சுலபக் கடன் வாங்கி தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் மூலம் விநியோகம் செய்தது.*

5. *முதன் முதலாக தூங்கும் வசதி கொண்ட சீர்வளிப் பேருந்து இயக்கியது.*

6. *டீசல் எண்ணெய் மிச்சப்படுத்தும் வகையில் ஆகாய விமானம் போன்ற வடிவமைப்பிங் ஜுவா ஜெட் பேருந்து இயக்கியது.*

7. *அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக ஆர்டிகுலேட் பஸ் இயக்கியது.*

8. *கிராமப் பகுதிகளில் சாமான் ஏற்றிச் செல்ல வசதியாக அங்காடிப் பேருந்துகள் இயக்கியது.*

9. *சாலைப் பயணிகள் வசதிக்காக சாலையோர விடுதிகள் அமைத்தது.*

10. *முக்கிய இடங்களில் போக்குவரத்துக் கழகங்களால் அனைத்து வசதிகளுடன் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டன.*

11. உலகெங்கிலும் உள்ள சாலைப்போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பரிந்துரை கூற பல்லவன் போக்குவரத்து பரிந்தரைப் பணிக்குழு அமைத்தது.

12. கடந்த 9 ஆண்டுகளில் சுமார் 13,000 புதிய பேருந்துகள் ரூ. 400 கோடிக்கு வாங்கி பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றியமைத்தும், பழைய வழித்தடங்களில் கூடுதலாகவும் புதிய வழித்தடங்களிலும் ஓடவிடப்பட்டிருக்கின்றன.

13. நகர்புறப் பேருந்து வழித்தடங்களின் நீளத்தை 25 கி. மீட்டரிலிருந்து 30 ஆக மாற்றியது.

14. இந்தியாவிலுள்ள மற்ற பெரும்பாலான மாநிலங் களை விட நமது மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

15. பேருந்துக் கூடு கட்டுவதில் தன்னிறைவு அடைந்தது. மட்டுமல்லாமல், அந்தமான், டில்லி, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய பிற மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்து கூடு கட்டிக் கொடுத்தது.

16. அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்வதற்காக நவீன கப்பல் வாங்கி மிக அதிக அளவில் குறைந்த செலவில் நிலக்கரி கொண்டு சென்று சாதனை புரிந்தது.

17. கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவுச் சின்னத்திற்கு ஓடப் போக்குவரத்து ஏற்றுக் கொண்டது.

18. அரசு கட்டுமானக் கழகம் துவங்கியது.

## தலைவர்கள் பெயரில் போக்குவரத்து

*மாற்று கட்சியில் உள்ள தலைவர்களையும் கவுரவிக்கும் உயர்ந்த எண்ணம் கொண்டவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.! அதனால்தான் போக்குவரத்துத் துறைகளுக்கு தலைவர்களின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார். அந்த வகையில், அவர் விருப்பப்படி அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது.*



# “ரிக்ஷாக்காரன்”தந்த ரிக்ஷாக்கள்

*சைக்கிள் ரிக்ஷாக்கள், மோட்டார் பொருத்தி கொள்ள உதவும் திட்டம் 1982—83 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் செலவில் 25 சதவீத அளவிற்கு 1125 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்குகிறது. மீதி செலவை மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதன் மூலம் கூட்டுறவு சங்கங்களால் ஏற்கப்படுகிறது. இவ்வுதவி உரிமம் பெற்ற சொந்தக்காரர்கள் ஓட்டும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. 1982—83லிருந்து 1984—85 வரை தென்சென்னை வடசென்னை மற்றும் திண்டுக்கல் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் 217 பேர்களும் அவர்களின் சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக்கொள்ள 2.15 இலட்சம் ரூபாய்க்கு அரசு மான்யம் வழங்கப்பட்டது.*

## “ரிக்ஷாக்காரன்” வழங்கிய ரிக்ஷாக்கள்

*1981—82ம் நிதியாண்டு முதல் மாநிலத்தின் முக்கிய நகரங்களில் மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள்*

*ரிக்ஷா ஓட்டுநர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. மோட்டார் பொருத்தப்பட்ட 1000 சைக்கிள் ரிக்ஷாக் களை வாங்குவதற்கு ஆயிரம் உறுப்பினர்களுக்கு நிதியுதவியும் கடனும்வழங்கப்பட்டது.*



# சுற்றுலா

இந்தியாவின் பேரெழில் தமிழகம் என்று வருணிக்கிறது. “போடாரின்” இந்திய வழிகாட்டி என்னும் நூல் தமிழகத்தின் குன்றாத சுற்றுலா வளம் ஆண்டுதோறும் தமிழக அரசால் அதிகரிக்கப்பட்டு வருகிறது. 1984—ஆம் ஆண்டைக் காட்டிலும் 1985—ல் தமிழ்நாட்டில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 30.4 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

அளவிற்குத் திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் திறந்தவெளி அரும் பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் நட்சத்திர விடுதிகள் முக்கிய நகரங்களில் அமைக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் ஏஜெண்டுகள்முறை எம்.ஜி.ஆர் ஆட்சியில் அமைக்கப்பட்டது

*இவ்வாறு ஏஜெண்டுகளை அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது.*

## மாவட்டந்தோறும் அரசு பொருட்காட்சி

*தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அரசு பொருட்காட்சி நடத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான்.*



# தமிழக அரசுக்கு "மத்திய திட்டக்குழு" பாராட்டு

**சொல்லுதல் யாருக்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல். – குறள்**

*எதையும் எளிதாக சொல்லிவிடலாம். ஆனால் அதை செயல்படுத்திக் காட்டுவது மிகவும் கடினம் என்கிறார் திருவள்ளுவர். ஆனால் எம்.ஜி.ஆர். அறிவித்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக்காட்டினார்.*

*திட்டங்களை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையில் தமிழக அரசு செயல்படுவதாக மத்திய திட்டக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது. மற்ற மாநிலங்களில் இல்லாத கிராமப்புற குடிநீர் திட்டத்தை இக்குழு வெகுவாக பாராட்டியது. 1984ம் ஆண்டுக்குள் எந்தவொரு குடியிருப்பிலும் குடிநீர் வசதி இல்லை என்ற நிலை இருக்காத அளவு தமிழக அரசு செயல்படுவதாகவும் இக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது.*

**(முதல் பாகம் முற்றுபெறுகிறது)**